தா-ம்—அடேராவண! உலகத்தில் தடுக்கமுடியாத ரௌத்திரவீரியத்தால் பிராணிஹிம்ஸை செய்து பயங்கரனாய் விளங்கிவருகிற பாபியானவன் தான் தீர்க்காலோசனையின்றிச்செய்த துஷ்கிருத்தியங்களுடைய பலனால் விநாசமடைவதைக்கண்டு அகிலஜனங்களும் ஸந்தோஷிக்கிறார்கள். அதுபோலவே உன்னுடைய ஹிம்ஸையைப் பொறுக்கமுடியாது கதறுகிற திரிலோகவாஸிகளும் உனக்கு தெய்வஸங்கல்பத்தால் சீக்கிரத்தில்நேரிடப்போகிற கொடுந்தண்டத்தைப் பார்த்தானந்தங்கொண்டு ஸர்வலோகபீடிதனான அந்தகாது கன் மடிந்தானு! தசகண்டங்களுமறுந்து மண்ணின்மேல்வீழ்ந்தானு! வென்று சொல்லிக்கொண்டே மஹோத்ஸவங்கொண்டாடப் போகிறார்கள்.

౧౫. శక్యా లోభయితుం నాహమైశ్వర్యేణ ధనేన వా ॥ అనన్యా రాఘవేణాహం భాస్కరేణ ప్రభా యథా ।

க௫. ஶக்யா லோபயிதும் நாஹமைஶ்வர்யேண தநேந வா ॥
அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா ।

க௫. ஶக்யாலோபயிதும்நாஹமைஶ்வர்யேணதநேநவா ॥
அநந்யாராகவேணாஹம்பாஸ்கரேணப்ரபாயதா ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
அஹம்	நான் [ஞுலாவது	பாஸ்கரேண	ஸூரியனிடத்திலிருந்தும்
ஐஶ்வர்யேண	(அந்தப்புரஸ்திரீளுக்கு)ஈசவரத்வத்தி	ப்ரபாயதா	காந்திபோல்
தநேநவா	ஆபரணதிதனங்களிருலாவது	ராகவேண	ஸ்ரீராகவனிடத்திலிருந்து
லோபயிதும்	வஞ்சிப்பதற்கு	அஹம்	நான்
நஶக்யா	சக்கியமானவளன்று (ஏனெனில்)	அநந்யா	அந்யையாகேன் (பிரியேன்.)

தா-ம்—மண்டோதரிப் பிரபிருதிகளுக்குள் அக்கிரமஹிஷியாய் ஸகலதனராஜ்ஜிய ஸம்பத்துக்களையடைந்து ஸுகியென்று சொன்ன இராவணவாக்கியத்திற்குப் பதிலுரைக்கிறாள். அடேராவண! உன்னுடைய ராஜ்ஜியத்தையும் தனவிசேஷத்தையு மிச்சித்துனக்கு ஸ்வாதீனையாய் விடக்கூடிய ஸாமான்னியஸ்திரீயென் றென்னையெண்ணுதே. உன்னுடையமஹிஷிகளுக்குள் அக்கிர மஹிஷியாயிருந்து உன்னுடைய ஐசுவரியத்தைப்புஜிப்பது எனக்கொருதிருணமடா. அட அல்பபுத்தே! இந்தவினயங்களா லென்பாதிவிருத்தியத்தை அசைக்கமுடியாது. ஸர்வலோகபாவனனான ஸூரியபகவானுக்கு இயல்பாயுள்ளபிரபைபோல் நான் அந்த ஸர்வலோக சரண்ணியனான ஸ்ரீராகவனுக்கேயுரிய தர்மபத்தினீ. அந்தமஹாபுருஷனையல்லது வேறொருவனையானடையேன். பிரபையைப் பிரபாவானிடத்திலிருந்து பிரிக்கமுடியாதுபோல் ஸ்ரீராகவாசிருதமான வென்மனதை அம்மஹாபுருஷனிடத்தினின்று பிரிக்கமுடியாது.

౧౬. ఉపధాయ భుజం తస్య లోకనాథస్య సత్కృతమ్ । కథం నామోపధాస్యామి భుజమన్యస్య కస్యచిత్ ॥

க௬. உபதாய புஜம் தஸ்ய லோகநாதஸ்ய ஸத்க்ருதம் ॥
கதம் நாமோபதாஸ்யாமி புஜமந்யஸ்ய கஸ்யசித் ।

க௬. உபதாயபுஜம்தஸ்யலோகநாதஸ்யஸ்த்க்ருதம் ॥
கதம்நாமோபதாஸ்யாமிபுஜமந்யஸ்யகஸ்யசித் ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
(அஹம்)	(நான்)	அந்யஸ்ய	இதரனான
லோகநாதஸ்ய	லோகநாயகனான	கஸ்யசித்	ஓராளொருவனுடைய
தஸ்ய	அந்தராமனுடைய	புஜம்	தோளை
ஸ்த்க்ருதம்	பூஜிக்கத்தக்கின	கதம்நாம	எப்படிதான்
புஜம்	வலதுதோளை	உபதாஸ்யாமி	திண்டாகச்செய்துகொள்வேன்.
உபதாயா	திண்டாகச்செய்துகொண்டு		

தா-ம்—ஸர்வலோக ரக்ஷணத்வதவகித்த அதனாலதிபூஜ்ஜியதையான ஸ்ரீராகவனுடைய வலதுதிருத்தோளையடைந்து ஸுகித்த யான் வேறுபுருஷனுடைய தோளையடைந்து என்னவிதம ஸுகமுறக்கூடும். பராக்கிரமத்திலும், ஔதாரியத்திலும், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்திலும் அந்த தீரனுடைய தோள்களுக் கிவ்வுலகிலிணையுண்டோ. பிரம்மாதிஸ்தாவராந்தத்திற்கும் நாதனான அந்தபுருஷோத்தமனுடைய புஜஸம்ச்லேஷத்தா லின்புற்றவெனக்கு மற்றபிராகிருத புருஷனுடையதோள் என்னஸுகம் தரக்கூடியது.

౧౭. అహమౌపయికీ భార్యా తస్యైవ వసుధాపతేః ॥ వ్రతస్నాతస్య విప్రస్య విద్యేవ విదితాత్మనః ।

க௭. அஹமௌபயிகீ பார்யா தஸ்யைவ வஸுதாபதே꞉ ॥
வ்ரதஸ்நாதஸ்ய விப்ரஸ்ய வித்யேவ விதிதாத்மந꞉ ।

க௭. அஹமௌபயிகீபார்யாதஸ்யைவவஸுதாபதே꞉ ॥
வ்ரதஸ்நாதஸ்யவிப்ரஸ்யவித்யேவவிதிதாத்மந꞉ ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
வ்ரதஸ்நாதஸ்ய	வித்தியாவிருத ஸ்நானம் செய்தவனும்	தஸ்ய-வஸுதாபதேரேவ -	அந்தபூபதியான (இராமனுக்கே)
விதிதாத்மந꞉	ஆத்மஜ்ஞானமுமுடைய	அஹம்	நான்
விப்ரஸ்ய	பிராம்ஹணனுக்கு	ஔபயிகீ	தகுதியான
வித்யேவ	யோகாப்யாஸரூபவித்தைபோல்	பார்யா	மனைவி.

தா-ம்—வேதவேதாங்க சாஸ்திரார்த்தங்களை நன்றாயுணர்ந்து அவ்வேதங்களுக்குப்பரனானபரமாத்மாவின்ஸ்வரூபத்தையறிந்த பிராம்மணோத்தமருக்குரிய யோகவித்தைபோல், சிலவயோவிருத்தியால் துல்லியராய் பூமாதேவிக்குப் பதியாயிருக்கிற ஸ்ரீராகவனுக்கே நான் உசிதையானபாரியை. அதாவது "ஹ்ரீஶ்சதேலக்ஷ்மீஶ்சபத்ந்யௌ" என்கிற வேதவாக்கியத்திற்கிணங்க, பூதேவியைப் பத்தினியாயடைந்துள்ள ஸ்ரீமந்நாராயணனுக்கேயுரிய இலக்ஷ்மீதேவி நானென்று கூடமாகத்தெரிவிக்கிறாள்.

௨௰. సాధు రావణ రామేణ మాం సమానయ దుఃఖితాం। వనే వాశితయా సార్ధం కరేణ్వేవ గజాధిపం॥

கஅ. ஸாதுராவணராமேணமாம்ஸமாநயது:கிதாம்॥
வநேவாஸிதயாஸார்த்தம்கரேண்வேவகஜாதிபம்।

கஅ. ஸா துராவணராமேணமாம்ஸமாநய து:கிதாம்॥
வநேவாஸிதயாஸார்த்தம்கரேண்வேவகஜாதிபம்।

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே) ராவண	வாராய் இராவணனே	கரேண்வா (கரேணும்)	பெண்யானையை
து:கிதாம்	துக்கத்தையடைந்த	கஜாதிபமிவ (கஜாதிபே நேவ)	கஜராஜாவோடுபோல்
மாம்	என்னை	ராமேண-ஸார்த்தம்	ஸ்ரீராகவனோடுகூட
வநே	அரணியத்தில்	ஸாது ஸமாநய	நன்றாக சேர்ப்பி.
வாஸிதயா	யௌவனமுடைய		

தா-ம்—அரணியத்திற் பதியின்மையால் துக்கப்படுகிற பெண்யானையை புருஷகஜத்தோடு சேர்ப்பது போல் நாதனையிழந்து துக்கபீடிதையாய் தீனவதனையாய் அன்னபானமின்றிவருந்துகிற வென்னோடு என் பிராணதாரகனை ஸ்ரீராகவனைச்சேர்க்கிற பரமோபகாரத்தைப்பண்ணு.

முன்சுலோகத்தால் ஸீதாராமாள் இலக்ஷ்மீநாராயணனென்றுதெரிவித்து இந்தசுலோகத்தால் தன்னை ஸ்ரீராகவனோடு சேர்ப்பித்து பகவத்சரணங்களைப்பற்றி ஸேவித்தால் அபராதக்ஷமங்கிடைத்து க்ஷேமமுண்டாகுமென்கிறாள்.

௨௧. * మిత్రమౌపయికం కర్తుం రామః స్థానం పరీప్సతా। వధం చానిచ్ఛతా ఘోరం త్వయాఽసౌ పురుషర్షభః॥

கக. மித்ரமௌபயிகம்கர்த்தும்ராமஸ்தாநம்பரீப்ஸதா॥
வதம்சாநிச்சதாகோரம்த்வயாஸௌபுருஷர்ஷப:।

கக. மித்ரமௌபயிகம்கர்த்தும்ராமஸ்தாநம்பரீப்ஸதா।
வதம்சாநிச்சதாகோரம்த்வயாஸௌபுருஷர்ஷப:।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸ்தாநம்	(வாஸயோக்கியமானஇலங்கையின்) ஸ்தானத்தை	த்வயா	உன்னால்
		புருஷர்ஷப:	புருஷசிரேஷ்டனை
பரீப்ஸதா	கோருகிறவனும்	அஸௌ-ராம:	இந்த ஸ்ரீராகவன்
கோரம்	பயங்கரமான	மித்ரம்	ஸ்நேகதனை
வதம்	கொலையை	கர்த்தும்	செய்துகொள்வதற்கு
அநிச்சதாச	இச்சியாதவனுமான	ஔபயிகம்	யுக்தமானவர்.

தா-ம்—அடேராவண! நீ ஸ்ரீராகவனுக்கு மஹாபராதஞ்செய்துவிட்டாய். அந்த இரகுவீரனையெதிர்த்து நீ ஜீவியாய். நீ இத்தனைகாலம் பெருமையோடாண்டுவந்த இவ்விலங்காநகரத்தில் நீடூழிவாழ விரும்பினாயாகில், யுத்தகளத்தில் கோரமானமரணத்தையடையாது ஜீவிக்கவிரும்பினாயாகில், உடனே அந்த சரண்ணியனை ஸ்நேகம்செய்துகொள். மஹாபராதிகளாயினும் சரணமடைந்த சத்துருக்களையிரக்ஷிக்கிற குணமுள்ளவர். அபராதங்களைக் கொஞ்சமேனும் ஸ்பரியாததயாளு. அவரை நீயேபோய் வணங்கினாயாகிலுனக்கு மங்களமுண்டாகும். இல்லாவிடில் புத்திரமித்திர பாந்தவாளோடு ஒருமிக்க மாண்டுபோவாய். மரிப்பதிலும் வீரமரணங் கிடைக்குமென்றெண்ணாதே. உன்னைச் சித்திரவதம்பண்ணி படுகொலைசெய்வார். இந்தகோரத்தை விரும்பாயாகில் அவரைச் சரணமடைந்து ஜீவிக்கக்கடவாய்.

தனிஸ்லோகியிநு விஶேஷார்த்தம்.

அஶோகவநிகையிலே எழுந்தருளியிருக்கிற பிராட்டி ஸந்நிதியிலே ராவணன்சென்று தன்னுடைய வஹிஜநவிக்ரமாதிகளில் நாட்டாரில்காட்டில் தனக்குள்ளமிலுக்கத்தைச்சொல்லியும் ஸஹாவியரா நகேதந்ரு யநயாநந்த ரத்ந வஸ்த்ர ஸுவர்ண வஸ்திகாரவாஸிவஸ்த தாஸதாஸிகளைத் தருகிறேனென்றும் பிராட்டியை நிலைபோக்கலாமோவென்று ஏத்தி வார்த்தைசொல்லி பிராட்டியுமிவன்சொல்லுகிறவை யொன்றையும்பாராதே இவனுடைய ஸத்துக்குணத்தையேபார்த்து இவனுக்கொரு நல்வார்த்தைசொல்லுவாரில்லாமையிறே இவனிப்படி பிதற்றுகிறதென்று ஆத்மஹிதமவலோகனமயாய் வாத்ஸல்யாத்மஹிதயாகையாலே இவனுக்கு ஹிதஞ்சொல்லுகிறாள். சொல்லுகிறவிடத்தில் - த்ருணமந்தரதஃக்ருத்வா-என்று வாக்வரூஷநஸ்வம் பார்த்து வார்த்தைசொல்லக்கடவதல்லவென்றும் ஸ்வதர்மத்தாலேயாதல்- த்ருணத்தோபாதியும் அவனை மதியாமையாலேயாதல் - அபௌருஷமான விந்துரும்பு வ்யாக்ருதிபண்ணினாலன்றோ நான்சொன்ன வார்த்தையை யிவன் வ்யாகிபத்திபண்ணுவதென்றும் நினைவாலேயாதல் - யங்கைமடி நிரீக்ஷ்யவ - ஸகலஜீநஸ்ஸவுந்ஸமனென்று தான்பார்த்தவர்கள் ஸ்வந்தயந்தர்களாவார்களென்றும் நினைவாலேயாதல்-பெருமாள் துரும்பைக்கொண்டு காகத்தையோட்டினாப்போலே இவளு மித்துரும்பைக்கொண்

டிவனை யோட்டவேணுமென்றும் நினைவாலேயாதல். ஸுமாத்ரஸம்போலே வஶம்ப்ராப்யனை யுனக்கு ஹோமத்ரவ்யமிதுவன்றோவென்றும் நினைவாலேயாதல் - ஸமிதாஹவஹநஸ்யைகம் - என்று தாஹகமான அக்நியை ஸீதலமாகப்பண்ணப் புகுகிறாப்போலே அசேதநமான துரும்பை சேதநமாகப் பண்ணுவோமென்கிற ஸங்கல்பத்தாலேயாதல் - ஆவஶனுமாயிருக்கிற இவனுக்கும் நமக்குமொரு வ்யவதாநம் வேணுமென்று நினைவாலேயாதல்-துரும்பைத் தூணாக்கி யித்தூணில் நின்றும் ராவணவதத்தைப் புறப்படவிக்கவேணுமென்றும் நினைவாலேயாதல். த்ருணமந்தரத: க்ருத்வா-சொல்லப்புகுகிறவிவள் வீரபத்நியாகையாலே இப்புல்லைக்கவ்வி அவ்வாண்பிள்ளை காலிலேவிழாயென்று நினைவாலேயாதல்-என்னைப்போரப்பொலியச்சொன்ன வுன்னையும் நீயடிக்கின்ற யநயாநர்த்தவஸ்த்ராதிகளையு மித்துரும்போபாதிகாண் நினைத்திருப்பதென்றும் நினைவாலேயாதல் - துரும்பைமுன்னேபோகட்டு நாஹமௌபயிகீ பார்யா பரபார்யா ஸதீ தவ - என்றிந்த அர்த்தபஞ்சகமுனக்காகாதுகாண். ஸாதுதர்மமவேக்ஷஸ்வ ஸாது ஸாதுவ்ரதம் சர - உனக்கு வகுத்த பெண்டுகள் வயறெரியாதபடி யவர்களோடேபொருந்தி வர்த்திக்கப் பாராயென்றுசொல்லி - இஹ ஸந்தோ ந வா ஸந்தீ - பள்ளரும்பறையருமாய்ப் பெரும்பரப்பான யித்தேசத்துக்குள்ளே ஒருவன் அநுஷ்டிப்பட்டானின்றால் இங்ஙனே செய்யலாகாதுகாணென்று ஹிதஞ்சொல்லி மீழ்கைக்கு ஒருநன்மனிதரில்லையாகாதே. வாஸந்தி - ஸ்ரீவிபீஷணாழ்வான் தொடக்கமான ஸஜ்ஜநருண்டாகையாலே ஸத்துக்களில்லையென்னவொண்ணாது. உண்டு; ஸதோ வா நாநுவர்த்ஸே-ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா உபதேக்ஷ்யந்தி - என்று தங்கள் காலிலேகுனிந்து அநுவர்த்திக்கிறவர்களுக்கிறே அவர்கள் நல்லதுசொல்லுவது-அப்படிக் கவர்கள் காலிலேகுனிந்தறியாயோ-அடியேதுடங்கி நீ யிவ்வூரிலிருந்தவளல்ல. சேர்த்துவந்த நீ குனியேனோவென்றறிந்தபடியென்னென்ன - ததா ஹி விபரீதா தே புத்தி: - உன் புத்தியின் பொல்லாங்குதானே அதைச் சொல்லுகிறதுகாணென்ன புத்தியின்பொல்லாங்கு அறிகைக்கு நீ யதைப்பார்த்தியன்றேயென்ன - ஆசாரவர்ஜிதா - உன்னுடைய வர்த்தநத்தாலே அநுமித்தேன்காணென்று ஹிதஞ்சொல்லுமவர்கள் சொல்லாதபடியானவிவனுடைய துராசாரத்தைக்கண்டு வெறுத்து இனியொருவரையும் அநுவர்த்திக்கவேண்டா - அநுவர்த்தநநிரபேக்ஷமாக நானுனக்கு ஹிதஞ்சொல்லுகிறேன். நான் சொன்னபடியே அநுஷ்டிக்கப் பாராயென்கிறாள் - ஆமாகில் அநுஷ்டிக்கிறேன், அந்த ஹிதந்தன்னைச் சொல்லலாகாதோவென்ன - மித்ரமௌபயிகங்கர்த்தும் ராம: - பெருமாளோடே வுனக்கு விரோதம்பண்ணினால் ஜயியாது, அவரோடே உறவுபண்ணக்காண வடுப்பதென்கிறாள். மித்ரங்கர்த்துமௌபயிகம் - தீரக்கழிய வபராதம் பண்ணின வுனக்கு அவர்திருவடிகளிலே ஶரணம்புகவேணுங்காண் - மித்ரமென்றாகிற்கச்செய்தே ஶரணமென்பானென்னென்னில் - மேல்ஶ்லோகத்திலே - விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: ஶரணாகதவத்ஸல: - தேந மைத்ரீ பவது தே - என்று அவர் ஶரணாகதவத்ஸலர்காண். ஆனபின்பு நீயும் ஶரணம்புகாயென்று அநந்தரத்திலே மைத்ரீஸம்பந்தம் பண்ணுகையாலே ஶரணாகதியை ப்ராப்யமாக்கக்கடவது. அபயப்ரதாநம் ஸர்வபூதேப்யோ ததாமி ஏதத் வ்ரதம் மம - என்று வ்ருத்தத்தை ஶ்ரீராமாயணமாகவுஞ் சொல்லித்திறே - ஆகையாலே அவரை ஶரணம் புகாயென்கிறாள். தமேவம் ஶரணம் ஸர்வே ஸமாஸாத்ய ஸநாதநம் - என்று பிராட்டியைப்போலே யாதிக்காரரிருப்பார் வேறேசிலரு மிப்பாசுரஞ்சொன்னார்களிறே. ஆனால் நேர்கோடுநேரே ஶரணமென்னாதே மித்ரமென்பானென்னென்னில் அநுபூதியைப்போலே தக்தாமையுயரவைத்துப் பிறரைத்தண்ணிதாகச் சொல்லும்படியான புன்மையில்லாத பிராட்டி நீர்மையாலே சொல்லுகிறாள். இவரோயன்றி யிப்படிசொன்னார். பெருமாள் தாமும் ராக்ஷஸனை மித்ரபாவேந-என்றும், ஒருகுரங்கை ஸகா ஸஹ - என்றும், ஓரோட்டை யோடககாரனை ஆத்மஸமஸ்ஸகா-என்றும் உகந்ததோழன் நீயென்றும் அருளிச்செய்தாரிறே. இன்னமொரு ஆகாரத்தாலே மித்ரஶப்தம் சொல்லுகிறாள். அதென்னென்னில்; நமஸ்யேயமென்றுவணங்கவிலக்கனாய் அஹங்காரியான இவனை ஶரணம்புகாயென்றால் இசையானென்றும் அத்தாலே தோழமைக்கொள்ளாயென்கிறாள். மித்ரங்கர்த்துமௌபயிகம்-மித்ரமுபாயத உக்தி மித்ரமென்று, மித்ரமௌபயிகம் - என்கிற யாதார்த்திலேயாய் பெருமாளுக்கு த்வேஷவிஷயமாகாதே ஸ்நேஹவிஷயமாகை யழகியதுகாண். கோரகவிவருக்கு ஶத்ருத்வமாய் ப்ரஸந்நனுமாயிருக்கிற நான் ஸாபேக்ஷனாய் பெருமாளுக்கு த்வேஷவிஷயமாகாதே இவர்பக்க அறவுகொண்டாடப் புகுகிறேனோவென்ன மித்ரங்கர்த்துமௌபயிகம் - இப்படி ப்ராதிகூல்யம்பண்ணின வுனக்கு பத்தும்பத்தாகவுறவுசெய்யவேணுங்காண். இதுபண்ணினால் ப்ரயோஜநமென்னென்ன - மித்ரங்கர்த்துமௌபயிகம் - உன் ப்ராணரக்ஷணத்தில் விநியோகங்கொள்ளலாம். ஔபயிகம் - உபாயே ஸாதுகாரணம்-உன்னுடைய உஜ்ஜீவநத்துக்கு உபாயம் - உபாயேஹநஸ்ய - என்கிற ஸூத்ரத்தாலே உபாயஶப்தம் உபேயஶப்தமாய் ஸ்வார்த்தே தத்தத்ஸ்மாய் ஐகாதேஶமாய் ஆதிவ்ருத்தியாய் அகாரலோபமாய் ஔபயிகமென்று ஸித்தமாகிறது. இப்படிக்கு இது உபாயமென்றுமிடம் - ஸ்தாநம் பரீப்ஸதா வதம் சாநிச்சதா - வென்று மேலே ஹேதுஞ்சொல்லுகையாலே ஸ்பஷ்டமிறே. ஆனால் நான் உறவுக்கிசையக்கொள்ள முகந்தாராதே ப்ரதாவிகளாயுதரிகிலோவென்ன - ராம: - ஸ்வரையா

தே பொருந்தும்படியான நீர்மையுடையவர்காண். ராம: - கைவர்த்தரோடும் காகத்தோடும் குரங்கோடும் உறவுசெய்கிறவ ரித்தனை யௌதார்யத்தையுடைய வுன்னைவிடுகிறாரோ. ராம: - நீயல்லேனென்னிலும் - யதிவா ராவணஸ்ஸ்வயம்-ஆநயைநம் - என்று அழைத்துவிடுவது ஆபத்துமுடிகினவாறே - ஸக்ருதேவென்று விட்டடிப்பதாகிற பெருமாளித்தனை - நீ யிசைவாயுமாகில் விடுகிறாரோ - ராமோஹி த்ரம் கதக்ருபேளவயிகம்-தர்மஜ்ஞயாய் தர்மவேதிஷாக்களுமான ப்ரஹ்மாதிகளைவிட்டு ஸர்வஜ்ஞம் ஸர்வஸ்ய தாநாமென்றும் நிவாஸவ்ருக்ஷம் ஸாதூநாம் - என்றுஞ்சொல்லுகிற ஸர்வஸுலபனான பெருமாளோடே வுறவுசெய்யப்பார் - ராம:-ராம இதி ராம:-ப்ரயதோபூத்வா-ஶரணம்கதா-ப்ரயச்ச நமராவண:-என்று உன்னைவிட்டகன்று நிற்கிற உன்னுடைய வுறவுமுறையும் உன்னுயிருமுண்டாக்கவிலே பழையபடியே பொருந்தும்படிபண்ண வல்லர்காண் - பண்டே என்றுதாயிருக்கிறவத்தை இவர்பொருந்தும்படி தரிக்கப்பண்ணவேணுமோவென்ன-ஸ்தாநம்பரீப்ஸதா - வதஞ்சாநிச்சதா - இதுக்குமுன்பு உன்னுதேயாகிலும் உன்குடியிருப்பும் ப்ராணனும் மேலும் வேண்டியிருந்தாயாகி லவரைப்பற்றவடுக்கும் - ஸ்தாநம்பரீப்ஸதா - ஸ்தாநம் - ஆவாஸ: - அபிஷிச்யஶங்காயாம்ராக்ஷஸேந்த்ரம்விபீஷணம் - என்று உன்தம்பிக்கு இப்படைவீடுகுடுக்கவாய்த்துப்போகிறார் அதுசெய்யாதபடி நீயேயிப்படைவிடாளவேண்டியிருந்தாயாகிலென்றுமாம். ஸ்தாநம்பரீப்ஸதா-ஸ்தாநஸ்ஸ்திதி: - ஸ்திரநிவாஸஸம்பரிக்ரஹ: - என்று காக்கைபோலே கண்டவிடமெங்கும் பறந்து திரியாதே நிலை கொள்ளவேண்டியிருந்தாயாகிலென்றுமாம்: ஸ்தாநம் - ஸஸ்தாநம் - அதாவது அதர்மமான வரிகாமும் நீயும் கோப்புங்குலையாமலிருக்கவேண்டியிருந்தாயாகிலென்றுமாம். ஸ்தாநம்பரீப்ஸதா-ஸ்தாநம்- அபிஷேசநமாய் ஸ்நாத்வாதர்ஶஸம்ஹ்ருஷ்டசித்ரகேசாதியாகிற ப்ரஹ்லாதிவிலம்த்ரவஶக்ருதம் அம்ஸுகணேந்த்ரஜிதப்ரதீபவரான ஸ்ரார்த்ரவத்ராதிவஶக்ருதம் நீதேடிப்படைத்த வஸ்த்ரமும இது நெடுங்காலம் குடியாக்கின படைவீடுமாகிற அபிஷேசநம் குலையாமேயிருக்கவேண்டியிருந்தாயாகிலென்றுமாம். படைவீடும் அபிஷேசநமும் பார்த்திருக்கிறேனே வேறேவோரிடத்திலேபோயிருக்கிறேனென்ன ஸ்தாநம்பரீப்ஸதா - பரிதஸ்ஸ்தாநமீப்ஸதா - ரஸாதலம்வாப்ரவிஶேஸ்வாதாளம்வாபிராவண:-பிதாமஹஸக்ரஶம்வா நமேஜீவநுமோக்ஷ்யதே - என்று ஸ்வர்க்கம் தன்னிலும் மலைமொழிஞ்சில்களிலேயாகிலுமாம் - உனக்கு ஜந்மஸித்தியான பாதாளத்திலே போகிலுமாம் - உன்னை யிப்படி வரந்தந்து வாழ்வித்த ப்ரஹ்மலோகத்திலேபோகிலுமாம் - அவ்வோவிடங்களி லுனக்குயிர்கொண்டு நிற்கவொண்ணாது, சுற்றிலே போயிருக்கப் பார்த்தாயாகிலு மவருறவாகவேணுங்காண். ப்ரவிஶஸ்தலங்களிலே போயிருக்கிறபோதன்றோ அவர்வேண்டுவது. அஜ்ஞாதவாஸமாக ஒருவிடத்திலே மறையவிருக்கிறேனென்ன - வதஞ்சாநிச்சதா - உன்னை உயிரோடே விடிலன்றோ நீயொளித்திருப்பது, அப்படி சாகாமலிருக்கைக்கு வேண்டியிருந்தாயாகிலு மவரைப்பற்றவேணும். வதநிச்சதா -ஒரு வ்யாதாதிகளாற்பிறக்கிற மரணமொழிய ஒருஶத்ருவஶத்திலே புகந்து தலையறுப்புண்டா யென்கிற வரிஹவம் வாராதே யொழியவேண்டியிருந்தாயாகிலென்றுமாம். வீரனுக்கு ஶத்ருவின் கையிலே படுகையன்றோ தாமென்கிறாயாகில் கோரம்வதநிச்சதா - காட்டாளைப்போலே சாமாறு சாம்போது மவரைப் பற்றவேணுங்காண். கோரம்வதம் - உன்னைக்கொல்லும்போது மெளிதாகவிடுவரோ. ஆளைவரவிட்டு நிலைகாட்டி அந்த தூதனைக்கொண்டு தறைக்கீடாகத் தோப்பைமுறித்து உன்பசலைத்திருகி வுன்னோலக்கத்திலே மதியாதேபுகந்து தன்னையன்பெருமையையு முன்தாழ்மையையும்சொல்லி யுன்படைவீடு பொறியும் புகையு மெழும்பும்படி சுட்டுக் கரிக்கூடாக்கி மீண்டுவந்து விசேஷம்சொல்லும்படிபண்ணி அநந்யபரிகரத்தை யுடைத்து காண்பாரைக்காண்பித்துக்கொண்டு உன்னுழியநெஞ்சிலே கல்லிட்டாபோலே யுனக்கு நீர் சிறையானகடலிலே கல்லிட்டடைத்துப்பெருவழியாக்கிக் குரங்குகளை கால்நடையே யக்கரைப்படுத்தி வுன்படைவீட்டை யடைய மதிட்படுத்தி நீயாண்டபரிகரமடைய வெறுந்தரையாக்கி யுன்னுறவுமுறையாரை மூக்கை யரிவது, தோளைத்துணிப்பது, காலைத்தறிப்பது, தலையையறுப்பதாய் பனங்கனியுதிர்த்தாப்போலே யுன்தலைகளை யுதிர்ப்பது தோள்களைக்கழிப்பது வுடலைகதுளைப்பது இவ்வுதிரக்குறையை உன் பெண்டுகளுக்குக் காட்டுவதாக ஸக்ரு - என்றுவிட்டடிப்பதாய் இப்படி விஶ்வயம் பண்ணிக்கா னுன்னை யவர்கொல்லுவது. இப்படிக்குக்கொடுங்கொலைவேண்டித்தில்லையாகி லவரைப்பற்றென்றாகவுமாம். இவர் வெறுத்தமனிதரி லிதுக்குமுன் னிப்படிப்பட்டாருண்டோவென்ன; ஸ்வயா - இப்படி வேறொருவ ரித்தனை யவராயம் பண்ணினருமில்லை—இப்படிப்பட்டவர்களுமில்லை. ஆதராயியாய் அஸஹ்யாபசாரம் பண்ணி விஶ்வயப்ராப்தனான வுனக்கித்தனையும் வேணும். ஸ்தாநம்பரீப்ஸதா வதஞ்சாநிச்சதாத்வயா - நீயிருக்குமாறிருக்கும்போது மவர்வேணும் - நீசாமாறுசாம்போது மவர்வேணும். அவர்தாமிங்கே ஸந்நிஹிதராகவே வேண்டாவோவென்ன; இத்தாலிங்கேநிற்கிறாரென்கிறாள். அஸௌராமேணோ தேவபஶ்யதி - என்றும், ராமேதிராமேதிஸதைவபுத்த்யாவிசிந்த்ய- என்றும், எப்போதும் பெருமாளையே பாவிக்கையாலே யுருவெளிப்பாடாய் தனக்கெப்பொழுதும் ஸந்நிஹிதராயிருக்கையாலே இவரென்றுகாட்டுகிறாள். இவனுக்கிதுக்குமுன் அவரோடு வாஸனையில்லாமையாலும் ஸ்நேஹபூர்வகாநுஸந்தாந மில்லாமையாலும் அந்யபரனாகையாலு தோற்றுகிறதே. ப்ரதிகூலனை ராவணனுக்குட்பட வாஸனையுண்டாகையாலே வ்ருக்ஷேவ்ருக்ஷேஹிபஶ்யாமி - என்று பார்த்த பார்த்த விட

மெங்கும் பெருமாளாய்த்தோற்றித்திறே - ராவணன் தானும் பூசலிலே வாசனைப்பண்ணின பின்பு திருச்சரங்கள் நெஞ்சிலேபட்டு ஸாநுராகவஸாநா மென்று நினைத்துக்கொண்டுபட்டானிறே. அஸௌ - ஸஹிதமெளவநம் காலஸம்ஸம்யமையிறே - அயமென்பது. இங்கு வாலியில் அபராதத்தாலும் ஸேநாவிபக்ஷத்தாலும் அபராதவிபக்ஷவாலியான அஸ்ஸுப்தத்தாலே சொல்லுகிறாள். அவர் அஸ்ஸ்ரௌஷ்வ்ரோ நக்ஷத்ரோ அஸ்வாஸ்வாஸ்வாஸித்தம் என்றும் "உன்னைக்கொண்டென்றுள்வைத்தே னென்னையுமுன்னிலிட்டேன்" என்றும் சொல்லுகிறபடியே யிவர்திருவுள்ள மவர்பக்கலிலே தட்டுமாறிக்கிடைக்கையாலே பிராட்டிக் கொருபோகியாகத் தோற்றக்குறையில்லையிறே. அஸௌ-ஆஸநராக்கி யவனைப் பெறும்போது நான் பண்ணின விரோயங்களை நினைத்து விக்ருதராயிருக்கிறவர் என்னைக் கைக்கொள்ளுவரோவென்ன வாத்ஸல்யம் - செய்தார்செய்த குற்றங்களை நினைத்திருக்குமவரல்லர் - பிழையறியாத பெருமாள்காண் - வாத்ஸல்யம் அவிஜ்ஞாதாவென்றும், நக்ஷத்ரவசாராணாம் ஸுகவேத்ரா தவதயா - என்றும் - அவராயா நஹிஜ்ஞாநு ஸமெளவகாரதெதயாம் - என்றும், அவிபாட்டுக்கொண்டவர்காண். வாத்ஸல்யம் - பிழையறியாத வளவேயல்ல, தோஷாயத்ரவிதஸ்ஸ்வாஸ - என்றும், குன்றனையக்குற்றஞ்செயினுமென்றும் செய்தகுற்றம் நற்றமாகவே கொள்ளும்படியான உத்தவாத்ஸல்யர்காண். வாத்ஸல்யம்-யதிவாராவணஸ்வயம் - என்றும் ஸ்வாநாஜாநாதி - என்றும் ப்ரதிகூலதெளஷயிலே யகப்படவுன்னை ரக்ஷிக்கைக்கு அழைத்துவிடுவது போகவிடுவதாகப் புகுகிறவர் நீயுமறுகூலித்தால் விடுவரோ - வாத்ஸல்யம் - நீ வாத்ஸல்யர்களில் அயதேனுயிருக்குமாப்போலேகாண் அவரும் வாத்ஸல்யர்களில் உத்தமராயிருக்கும்படி. வாத்ஸல்யம் - வாத்ஸல்யதாத்மம் - என்கிறபடியே அயதேனுகிறுன் செய்தகுற்றத்தை நினைத்திருக்குமவன் - தேனுகிறுன் குற்றத்தை காளோட்டத்தோடே பொறுக்குமவன் - உத்தமனுகிறுன் குற்றங் காண்பானேன் மறப்பானேன் என்று முதலுக்குக்காணுதவன். வாத்ஸல்யம் - இப்படி அநந்யவியாதவகுத்தில் அவருடைய ஸாஹவ்ராவாரத்தாலே யுனக்கு வ்ராவாதநமென்று நினைத்திரு. வாத்ஸல்யம் - அவருடைய கொம்பாலே வுனக்குக் கொலையென்று நினைத்திரு. இத்தாலிவனுக்கிப்படி உபதேசம் பண்ணும்படியான பிராட்டியினுடைய நீர்மையினேற்றமும், இப்படிப்பட்ட விந்நீர்மையை யகப்படக் கைதப்பும்படியான ராவணனுடைய வரவவ்ராவ்யமுஞ் சொல்லிற்றாயிற்று.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

---

౨౦. విదితస్స హి ధర్మజ్ఞశ్శరణాగతవత్సలః। తేన మైత్రీ భవతు తే యది జీవితుమిచ్ఛసి।

౨౧. ప్రసాదయస్వ త్వం చైనం శరణాగతవత్సలమ్। మాం చాస్మై ప్రయతో భూత్వా నిర్యాతయితుమర్హసి।

௨௦. விதிதஸ்ஸஹி தர்மஜ்ஞஶ்ஶரணாகதவத்ஸல:॥
தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி।

௨௧. ப்ரஸாதயஸ்வ த்வம் சைநம் ஶரணாகதவத்ஸலம்॥
மாம் சாஸ்மை ப்ரயதோ பூத்வா நிர்யாதயிதுமர்ஹஸி।

௨௦. விதிதஸ்ஸஹி தர்மஜ்ஞஶ்ஶரணாகதவத்ஸல:॥
தேநமைத்ரீபவதுதேயதிஜீவிதுமிச்சஸி।

௨௧. ப்ரஸாதயஸ்வத்வம்சைநம்ஶரணாகதவத்ஸலம்॥
மாம்சாஸ்மைப்ரயதோபூத்வாநிர்யாதயிதுமர்ஹஸி।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸ:	அந்த ஸ்ரீராகவன்	த்வம்ச	நீயும்
தர்மஜ்ஞ:	நியாயமுணர்ந்தவர்	ஏநம்	இந்த
ஶரணாகதவத்ஸல:	சரணம் புகுந்தவரிடத்தி லன்புடையவர் (என்று எல்லோர்களாலும்)	ஶரணாகதவத்ஸலம்	சரணமடைந்தோரிடத்தில் வாத்ஸல்யமுள்ள ஸ்ரீராகவனை
விதிதோஹி	அறியப்பட்டவரன்றோ (ஆகையால்)	ப்ரஸாதயஸ்வ	அநுக்கிரகமுடையவராகச்செய்து
ஜீவிதும்	பிழைப்பதற்கு	ப்ரயத:	நியாயத்தையடைந்தவனுக[க்] கொள்
இச்சஸியதி	(நீ) கோருவாயாகில்	பூத்வா	ஆகி
தே	உனக்கு	மாம்ச	என்னையும்
தேந	அந்த ஸ்ரீராகவனோடு	அஸ்மை	இந்த இராகவனையும்பொருட்டு
மைத்ரீ	சிநேகம்	நிர்யாதயிதும்	திருப்பிக்கொடுப்பதற்கு
பவது	உண்டாகட்டும்	அர்ஹஸி	யோக்கியனுகிறாய்.

தா.ம்—ஹேராவண! என்னுடையநாதன் ஸகலதர்மங்களுமுணர்ந்தவர். சரணமடைந்தோ ரிடத்தில் மிகுந்தவாத்ஸல்யமுள்ளவர். அவருடைய அனந்தகல்யாண குணங்களுக்குள் இவ்விரண்டும் மஹாப்பிரஸித்தமானவை. எக்காலத்திலும் தர்மநெறியினின்றுதவறார். சரணமடைந்தவனைக்கைவிடார். ஆகையால், ஹேராக்ஷஸ! இவ்வைசுவரியத்திலும் வைபோகத்திலும் விருப்புற்று ஜீவதாரணஞ்செய்யக் கோருவாயாகில்

அந்த சரணாகதவத்ஸலனுடைய ஸ்னேகமுனக்கத்தியந்தமாவசியகம். மஹாபராதியான நீ அவரையடுத்தாலல்லது அவருடையபாணத்திற்குத்தப்பாய். சரணாகதி பண்ணினாயாகில் ஸமஸ்த வபராதங்களு மறைபட்டுப்போம்; உனக்கு மங்களமுண்டாகும். உனதுக்ஷேமார்த்தம் ஸ்ரீராகவனிடத்தில்ஸ்நேகம்பாராட்டி அவருடைய அநுக்கிரகப் பிரஸாதத்திற்குப் பாத்திரபூதனாயமைந்து அந்தரங்கமான விநீதபாவத்தோடு என்னை மறுபடியும் அந்த சரண்ணியனிடத்தில் சேர்க்கக்கடவாய்.

౨౨. ఏవంహి తేభవేత్స్వస్తి సంప్రదాయ రఘూత్తమే। అన్యథాత్వంహి కుర్వాణో వధం ప్రాప్స్యసి రావణ।

௨௨. 𑌏𑌵𑌂𑌹𑌿𑌤𑍇𑌭𑌵𑍇𑌤𑍍𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌰𑌘𑍂𑌤𑍍𑌤𑌮𑍇॥
𑌅𑌨𑍍𑌯𑌥𑌾𑌤𑍍𑌵𑌂𑌹𑌿𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑍋𑌵𑌧𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿𑌰𑌾𑌵𑌣।

௨௨. ஏவம்ஹிதேபவேத்ஸ்வஸ்திஸம்ப்ரதாயரகூத்தமே॥
அந்யதாத்வம்ஹிகுர்வாணோவதம்ப்ராப்ஸ்யஸிராவண।

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே) ராவண	அடே இராவண	ஸ்வஸ்தி-பவேத்	மங்களம் உண்டாகும்
ஏவம்	நான்சொன்னபடி	அந்யதா	வேறுவிதமாக
ரகூத்தமே	ஸ்ரீராகவனிடத்தில்	குர்வாண:	செய்கிற
ஸம்ப்ரதாய	(என்னைக்) கொடுத்து	த்வம்ஹி	நீயோவென்றால்
(ஸ்திதாய)	(நிற்கிற) இருக்கிற	வதம்	கொலையை
தே	உன்பொருட்டு	ப்ராப்ஸ்யஸி	அடைவாய்.

தா-ம்—ஹேராக்ஷஸாதிப! யானுபதேசித்தவண்ணம் அந்த ரகுகுலதிலகனான ஸ்ரீராமனிடத்தில் என்னை மறுபடியுங்கொண்டு சேர்த்து அவரது ஸந்நிதியில் வணங்கிநிற்பாயாகில் அந்த காருண்ணியன் நீ செய்த வபராத சதங்களையும்க்ஷமித்து புத்திரமித்திர களத்திரபாந்தவரோடு சிரகாலவாழ்க்கையை யுனக்கனுக்கிரகிப்பார். அப்படிசெய்யாது விபரீதபுத்திகொண்டாயாகில் அந்தகோதண்ட தீக்ஷாகுரு, நீர்க்காவல்கொண்ட உன் அரணைக்கிட்டித் தன்னுடைய திருச்சரங்களா லுன்மந்திரிமக்கள் சகோதரரனைவரு முன்கண்முன் மடியச்செய்து, உன் அங்கனாசதம்மயிர்விரித்தழ, மண்டோதரிவயிறெரியப்பதற, உனதுதசசிரஸ்ஸுகளைக் கிரீடகுண்டலங்களோடு பனங்காய்போலறுத்துத்தள்ளுவார். இப்படிப்பட்டவதம் நீயடைவது நிச்சயம்.

౨౩. వర్జయేద్వజ్రముత్సృష్టం వర్జయేదంతకశ్చిరమ్॥ త్వద్విధం నతు సంక్రుద్ధో లోకనాథస్స రాఘవః।

௨௩. 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌦𑍍𑌵𑌜𑍍𑌰𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑌂𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌦𑌨𑍍𑌤𑌕𑌶𑍍𑌚𑌿𑌰𑌮𑍍॥
𑌤𑍍𑌵𑌦𑍍𑌵𑌿𑌧𑌂𑌨𑌤𑍁𑌸𑌂𑌕𑍍𑌰𑍁𑌦𑍍𑌧𑍋𑌲𑍋𑌕𑌨𑌾𑌥𑌸𑍍𑌸𑌰𑌾𑌘𑌵𑌃।

௨௩. வர்ஜயேத்வஜ்ரமுத்ஸ்ருஷ்டம்வர்ஜயேதந்தகஸ்சிரம்॥
த்வத்விதம்நுதுஸம்க்ருத்தோலோகநாதஸ்ஸராகவ:।

பதம்.	உரை.	பதம்.	உரை.
உத்ஸ்ருஷ்டம்	(இந்திரனால்) விடப்பட்ட	வர்ஜயேத்	விடுவான்
வஜ்ரம்	வஜ்ஜிராயுதமானது	லோகநாத:	ஜகந்நாதனான
(த்வத்விதம்)	(உன்போலொத்தவனை)	ஸ:	அந்த
வர்ஜயேத்	விடும்	ராகவஸ்து	ஸ்ரீராகவனோவென்றால்
அந்தக:	இயமன்	ஸம்க்ருத்த:	கோபித்தவராக
(த்வத்விதம்)	(உன்போலொத்தவனை)	த்வத்விதம்	உன்னைப்போன்றவனை
சிரம்	வெகுகாலம்	ந (வர்ஜயேத்)	(விடமாட்டார்.)

தா-ம்—அடேராவண! ஸ்ரீராமாபராதியானபிறகு ஸ்ரீராமபாணத்திற்குத் தப்பிப்பிழைக்கலாமென்றெண்ணுகிறாயோ? திக்பாலகரைவென்றனம், திக்கஜங்களையிடித்தனம், திரைலோக்கிய ஜயத்தையடைந்தனம், நமக்கிம்மானுஷவைஷம்மிய மெவ்வளவென் றுநினைக்கிறாயோ? அடமந்தபுத்தே! உனக்குத்தெரியாதோ ஸ்ரீராகவவீரியம். இட்டகுறியைத்தவறுதடிக்கிற இந்திரவஜ்ஜிரமும் உன்மீது பிரயோகிக்கப்பட்டால் உனது விக்கிரமத்திற்கஞ்சி உன்னைவிட்டுவிடலாம். உனதாயுள்முடிந்தும் உனது தௌஷ்டியத்திற்கஞ்சி உனது பிராணனைக் கொண்டுபோகாது அந்தகனும் சிரகாலம்விட்டுவிடலாம். ஸ்ரீராகவ கோபமுண்டாகில் க்ஷணகாலமாவதுதக்குமோ உனதுசிரஸு. உத்தரக்ஷணத்தில் நீ மடிந்துபோவது நிச்சயமென்றறியக்கடவாய்.

౨౪. రామస్యధనుషశ్శబ్దం శ్రోష్యసి త్వం మహాస్వనమ్॥ శతక్రతువిసృష్టస్య నిర్ఘోషమశనేరివ॥

௨௪. 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯𑌧𑌨𑍁𑌷𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌂𑌶𑍍𑌰𑍋𑌷𑍍𑌯𑌸𑌿𑌤𑍍𑌵𑌂𑌮𑌹𑌾𑌸𑍍𑌵𑌨𑌮𑍍॥
𑌶𑌤𑌕𑍍𑌰𑌤𑍁𑌵𑌿𑌸𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌯𑌨𑌿𑌰𑍍𑌘𑍋𑌷𑌮𑌶𑌨𑍇𑌰𑌿𑌵।

௨௪. ராமஸ்யதநுஷஶ்ஶப்தம்ஶ்ரோஷ்யஸித்வம்மஹாஸ்வநம்॥
ஶதக்ரதுவிஸ்ருஷ்டஸ்யநிர்கோஷமஶநேரிவ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே ராவண)	(அடே இராவண)	மஹாஸ்வநம்	பெருநாதமுடைய
த்வம்	நீ	ராமஸ்ய	ஸ்ரீராமனுடைய
ஸ்ருஷ்டஸ்ய-இந்திரனால்விடப்பட்ட		தநுஷ:-ஸப்தம்	வில்லினுடைய-டங்காரநாதத்தை
அஸநே:	இடியினுடைய	ஸ்ரோஷ்யஸி	கேழ்க்கப்போகிறாய்.
நிர்க்கோஷமிவ	சப்தத்தைப்போல்		

தா-ம்—ஸ்ரீராகவனிடத்தில் விநீதபுத்தியை யடையாத ஹேராக்ஷஸாதம! இந்திரனாலேவப்பட்ட இடி-முழக்கம்போல் பயங்கரத்வனியோடுகோஷிக்கிற ஸ்ரீராகவ தனுஷ்டங்காரத்தை நீ சீக்கிரத்திலிக்நகரில் கேழ்க்கப்போகிறாய்.

౨౫. ఇహ శీఘ్రం సుపర్వాణో జ్వలితాస్యా ఇవోరగాః॥ ఇషవో నిపతిష్యంతి రామలక్ష్మణలక్షణాః।

౨౬. రక్షాంసి పరినిఘ్నంతః పుర్యామస్యాం సమంతతః॥ అసంపాతం కరిష్యంతి పతంతః కంకవాససః।

౨౭. రాక్షసేంద్రమహాసర్పాన్ స రామగరుడో మహాన్॥ ఉద్ధరిష్యతి వేగేన వైనతేయ ఇవోరగాన్।

௨௫. 𑌇𑌹𑌶𑍀𑌘𑍍𑌰𑌂𑌸𑍁𑌪𑌰𑍍𑌵𑌾𑌣𑍋𑌜𑍍𑌵𑌲𑌿𑌤𑌾𑌸𑍍𑌯𑌾𑌇𑌵𑍋𑌰𑌗𑌾𑌃॥
𑌇𑌷𑌵𑍋𑌨𑌿𑌪𑌤𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌰𑌾𑌮𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌃।

௨௬. 𑌰𑌕𑍍𑌷𑌾𑌂𑌸𑌿𑌪𑌰𑌿𑌨𑌿𑌘𑍍𑌨𑌨𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑍍𑌯𑌾𑌮𑌸𑍍𑌯𑌾𑌂𑌸𑌮𑌨𑍍𑌤𑌤𑌃॥
𑌅𑌸𑌂𑌪𑌾𑌤𑌂𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌪𑌤𑌨𑍍𑌤𑌃𑌕𑌙𑍍𑌕𑌵𑌾𑌸𑌸𑌃।

௨௭. 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌹𑌾𑌸𑌰𑍍𑌪𑌾𑌨𑍍𑌸𑌰𑌾𑌮𑌗𑌰𑍁𑌡𑍋𑌮𑌹𑌾𑌨𑍍॥
𑌉𑌦𑍍𑌧𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿𑌵𑍇𑌗𑍇𑌨𑌵𑍈𑌨𑌤𑍇𑌯𑌇𑌵𑍋𑌰𑌗𑌾𑌨𑍍।

௨௫. இஹஸீக்ரம்ஸுபர்வாணோஜ்வலிதாஸ்யாஇவோரகா:॥
இஷவோநிபதிஷ்யந்திராமலக்ஷ்மணலக்ஷணா:।

௨௬. ரக்ஷாம்ஸிபரிநிக்நந்த:புர்யாமஸ்யாம்ஸமந்தத:॥
அஸம்பாதம்கரிஷ்யந்திபதந்த:கங்கவாஸஸ:।

௨௭. ராக்ஷஸேந்த்ரமஹாஸர்ப்பாந்ஸராமகருடோமஹாந்॥
உத்தரிஷ்யதிவேகேநவைநதேயஇவோரகாந்।

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹேராவண)	(அடே இராவண)	பதந்த:	விழுந்தனவாக
ஸுபர்வாண:	சிறந்தகணுக்களையுடையதும்	ரக்ஷாம்ஸி	இராக்கதரை
ராமலக்ஷ்மணலக்ஷணா:	ஸ்ரீராகவ லக்ஷ்மணர்களின்பெயரை யடையாளமாயுமுடைய	பரிநிக்நந்த:	ஹிம்ஸித்துக்கொண்டு
இஷவ:	பாணங்கள்	அஸம்பாதம்	அவகாசமில்லாததை
ஜ்வலிதாஸ்யா:	விஷாக்கினியால் எரிகிற முகங்களையு[டைய	கரிஷ்யந்தி	செய்யப்போகின்றன
உரகாஇவ	ஸர்ப்பங்கள்போல்	மஹாந்	பெரியவரான (சிறந்தவரான)
இஹ	இந்த (இலங்கையில்)	ஸ:-ராம:	அந்த-ஸ்ரீராகவன்
ஸீக்ரம்-நிபதிஷ்யந்தி	த்வரையாக-விழப்போகின்றன	ராக்ஷஸேந்த்ரமஹாஸர்ப்பாந்-	இராக்கதமுக்கியாளாகிறபெரு[ஸர்ப்பங்களை
கங்கவாஸஸ:	கழுகுஇறக்கைகயைவஸ்திரமாயுடைய (பாணங்கள்)	ராமகருட:	இராமனாகிறகருடன்
அஸ்யாம்-புர்யாம்	இந்த-பட்டணத்தில்	வைநதேய:	கருத்மானனவர்
ஸமந்தத:	நாற்புறத்திலும்	உரகாநிவ	ஸர்ப்பங்களைப்போல்
		வேகேந	வேகத்தோடே
		உத்தரிஷ்யதி	மேலெடுத்தெறியப்போகிறார்.

தா-ம்—ஹேராக்ஷஸேந்திர! உனது துர்ப்புத்தியாலிந்நகருக்குக்கொஞ்சகாலத்தில்கேரிடப்போகிற பிரளயத்தைச் சொல்லுகிறேன்கேள். அந்தரகுவீரன் இவ்விடம் வந்தவுடன் தனது உக்கிரகோதண்டத்தை வளைத்து, தங்கக்கட்டுகெட்டி இராமலக்ஷ்மண நாமாங்கிதங்களைவகித்துக் காலகோடிவிஷத்தைக்கக்குகிற ஸர்ப்பங்கள்போல் ஜ்வலிக்கிற தேஜஸ்ஸுடைய திவ்வியசரங்களை வர்ஷிக்கப்போகிறார். கழுகுறக்கைகள்போன்ற இரக்கைகளையுடைய அந்ததிடங்கொண்ட ராமபாணங்கள் இலங்காநகரமுழுது மிடைவெளியில்லாமல் வியாபித்து இராக்கதருடைய மார்பைப்பிளந்து கண்டங்களைச்சேதித்துப் பரமஹிம்ஸை செய்யப்போகின்றன. மஹாவேகவானன வைனதேயனுடைய மூக்கிற்சிக்கியஸர்ப்பங்கள் வதைபடுவதுபோல் நீங்களெல்லோரு மந்தவிஜயராகவனுடைய விக்கிரமவேகத்தா லாகாயத்திலெடுத்தெறியப்பட்டு நசிக்கப்போகிறீர்கள்.

(அவதாரிகை) தன்னிடத்திலிருந்து ஸீதையையொருக்காலும் இராமன் அடையமாட்டானென்றுசொன்ன இராவண வசனத்திற்குபதிலுத்தரம் சொல்லப்படுகிறது.

౨౮. అపనేష్యతి మాం భర్తా త్వత్తః శీఘ్రమరిందమః॥ అసురేభ్యః శ్రియం దీప్తాం విష్ణుస్త్రిభిరివ క్రమైః॥

௨௮. 𑌅𑌪𑌨𑍇𑌷𑍍𑌯𑌤𑌿𑌮𑌾𑌂𑌭𑌰𑍍𑌤𑌾𑌤𑍍𑌵𑌤𑍍𑌤𑌃𑌶𑍀𑌘𑍍𑌰𑌮𑌰𑌿𑌨𑍍𑌦𑌮𑌃॥
𑌅𑌸𑍁𑌰𑍇𑌭𑍍𑌯𑌃𑌶𑍍𑌰𑌿𑌯𑌂𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌂𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑌿𑌵𑌕𑍍𑌰𑌮𑍈𑌃।

௨௮. அபநேஷ்யதிமாம்பர்த்தாத்வத்தஸ்ஶீக்ரமரிந்தம:॥
அஸுரேப்யஶ்ரியம்திப்தாம்விஷ்ணுஸ்த்ரிபிரிவக்ரமை:।

பதம்.	உரை.	பதம்.	உரை.
விஷ்ணு:	(வாமனுவதாரம் செய்தருளின) விஷ்ணுவானவர்	அரிந்தம:	சத்ருநாசகரான
த்ரிபி:	மூன்றுகளான	பர்த்தா	என் நாதனுன (ஸ்ரீராகவன்)
க்ரமை:	அடிவைப்புகளால்	மாம்	என்னை
அஸுரேப்ய:	அஸுரர்களிடத்திலிருந்து	ஶீக்ரம்	த்வரையாக
திப்தாம்	ஒளியுற்ற	த்வத்த:	உன்னிடத்திலிருந்து
ஶ்ரியமிவ	இராஜ்ஜியஸம்பத்துபோல்	அபநேஷ்யதி	எடுத்துகொண்டுபோகப்போகிருர்.

தா-ம்—மேகத்தால் மறைப்புண்ட சந்திரிகைபோலும் இந்திரஹஸ்தகதமான ஹிரண்ணியகசிபு கீர்த்திபோலும் உன்வசத்தையடைந்த வென்னை ஸ்ரீராமன் தரிசிப்பதற்கு மசக்தனென்றுபிதற்றுகிற அடேராவண! என்னுடையநாதன் மானிடவடிவங்கொண்டமையா லவருடைய விக்கிரமமகிமையை யறியாமலேசுகிருய். வாமனரூபியாய் மூன்றடிநிலம்யாசித்துப் பிறகு தனது விசுவரூபத்தைவெளியிட்டுப்பூமியையோரடியாலும் வானையோரடியாலுமளந்து மூன்ருவதடிவைப்பால் அஸுரேசுவரனுன பலிசக்கிரவர்த்தியின் ஸர்வஸ்ரீயையும் ஸ்வீகரித்த ஸ்ரீமந்நாராயணன்போல் எனதுபர்த்தாவும் சிறியஉருவங்கொண்டவராயினும் உன்போன்ற பிரபலசத்துருக்களனேகரை சிரமமின்றி தனதுகோதண்டத் திருவிளையாட்டால் க்ஷணகாலத்தில் முடிக்கவல்ல மஹாதீரன். பாணிக்கிரகணஞ்செய்த பத்தினியைப்பரிக்க வகையறியாத சௌரியமற்ற துர்ப்பலனென்றெண்ணிமகிழாதே. இன்னம்சிலநாளில் என்னைப்பற்றிவந்த உன்னிருபது புயங்களைப் பனைமரம் வெட்டிச்சாய்ப்பதுபோலறுத்து, மகுடமேந்திய சிரங்களைப் பனங்காய்போலுதிர்த்து அவனைதூவித்தவாயில்மண்ணிட்டு, இவ்விதம்கஷ்டப்படுகிற வென்னைத் திரும்பியடைந்து ரக்ஷிக்கப்போகிருர்.

౨౯. జనస్థానేహతస్థానే నిహతే రక్షసాంబలే। అశక్తేన త్వయా రక్షః కృతమేతదసాధు వై।

௨௯. ஜநஸ்தாநே ஹதஸ்தாநே நிஹதே ராக்ஷஸாம்பலே॥
அஶக்தேந த்வயா ரக்ஷ: க்ருதமேததஸாது வை।

௨௯. ஜநஸ்தாநேஹதஸ்தாநேநிஹதேராக்ஷஸாம்பலே॥
அஶக்தேநத்வயாரக்ஷ:க்ருதமேததஸாதுவை।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஜநஸ்தாநே	கரன்முதலானவர்களுடைய வாஸஸ்தானமானது	அஶக்தேந	சக்தியற்றிருக்கிற
		த்வயா	உன்றல்
ஹதஸ்தாநே	நாசம்பண்ணப்பட்டஇடமுடையதாக	அஸாது	நலமில்லாமலிருக்கும்படி
ராக்ஷஸாம்	இராக்ஷதர்களுடைய	ஏதத்	(யுக்தமில்லாமல்திருட்டுத்தனத்தாலபகரித்துவந்த) இந்தநிந்த்தியமானது
பலே	ஸைந்நியமானது		
நிஹதே(ஸதி)	அடிக்கப்பட்டிருக்கையில்	க்ருதம்	செய்யப்பட்டது.
(ஹே) ரக்ஷஸ	ஓ ராவண		

தா-ம்—கரதூஷணப்பிரமுகாளான இராக்ஷதவீரரும் அவர்களுடைய அளவற்ற ஸைன்னியமும் ஸ்ரீரகுவீர கோதண்டத்தால் ஒருமுகூர்த்த நாழிகைக்குள்மடிந்து தண்டகாரண்ணியமுழுதும் இராக்கத சூன்னியமாயிருக்கையில் கேவலமபலனுன நீ அந்தநரஸிம்மத்துவயத்தை யெதிர்க்கபயந்து வஞ்சனையாலவர்களை ஆசிரமத்தினின்று வெளிப்படுத்தி ஸமயம்பார்த்து என்னையபகரித்துவந்தாய். இந்த சோரகிருத்தியம் பௌருஷலேசமாவதுள்ளவீரன் செய்யத்தகுந்ததோ. ஸர்வலோகநிந்திதமும் விற்பிடித்தவீரன் செய்யத்தகாததுமான இச்செய்கை விக்கிரமவிளம்பரத்தை யடிக்கடிசெய்துகொள்ளுகிற உன்னுலேயே செய்யப்பட்டது.

౩౦. ఆశ్రమంతు తయోశ్శూన్యం ప్రవిశ్య నరసింహయోః। గోచరం గతయోర్భ్రాత్రో రపనీతా త్వయాధమ।

௩௦. ஆஶ்ரமம் து தயோ: ஶூந்யம் ப்ரவிஶ்ய நரஸிம்ஹயோ:॥
கோசரம் கதயோர்ப்ராத்ரோ ரபநீதா த்வயாதம।

௩௦ ஆஶ்ரமந்துதயோஶ்ஶூந்யம்ப்ரவிஶ்யநரஸிம்ஹயோ:।
கோசரம்கதயோர்ப்ராத்ரோரபநீதாத்வயாதம।

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே) அதம	அடே நீச	ஶூந்யம்	(அவர்களில்லாமல்) பாழடைந்த
கோசரம்	வெளிதேசத்தை	ஆஶ்ரமம்	முனிவர் இருக்கத்தகுந்த இடத்தை
கதயோ:	அடைந்தவாளும்	ப்ரவிஶ்ய	புகுந்து
ப்ராத்ரோ:	தமையன்தம்பிமார்களும்	த்வயா	உன்னுல்
நரஸிம்ஹயோ:	புருஷசிரேஷ்டருமான	அபநீதா	(நான்) எடுத்துக்கொண்டுவரப்பட்டேன்.
தயோ:	அந்த (இராமலக்ஷ்மணருளுடைய)		

தா-ம்—ஹேராக்ஷஸாதம! உன்னுடைய பராக்கிரமப்பிரபாவத்தை யென்னிடத்திலோ புகழ்ந்துகொள்ளுவது! என்னை நீ அபகரித்தவிதம் யானறியேனே. மஹாகஜங்களின் மஸ்தகத்தைப்பிளக்கிற ஸிம்ஹங்கள்போல் ஸர்வசத்துரு ஹந்தாக்களான இராமலக்ஷ்மணனென்கிற நரசிரேஷ்டர் என்னை யாசிரமத்தில் தனியேவிட்டு வெளியிற்போயிருக்கையில் நீ என்னையபகரித்துவந்தாய்.

3౧. సహిగంధముపాఘ్రాయరామలక్ష్మణయోస్త్వయా॥శక్యంసందర్శనేస్థాతుంశునాశార్దూలయోరివ|

௩௧. [illegible]
[illegible]

௩௧. நஹிகந்தமுபாக்ராயராமலக்ஷ்மணயோஸ்த்வயா॥
ஸக்யம்ஸந்தர்ஸநேஸ்தாதும்ஸுநாஸார்த்தூலயோரிவ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸுநா	நாயினால்	கந்தம்	வாஸனையை
ஸார்த்தூலயோரிவ	இரண்டுபுலிகள்போல்	உபாக்ராய	முகர்ந்து
த்வயா	உன்னால்	ஸ்தாதும்	இருப்பதற்கு
ராமலக்ஷ்மணயோ:	இராமலக்ஷ்மணனுடைய	நஸக்யம்	சக்கியமன்று.
ஸந்தர்ஸநே	பார்வையில்		

தா-ம்—ஹேராக்ஷஸ! வியாக்கிரமிருப்பதை வாஸனையாலறிந்து நடுங்கியோடுகிற சுவானம்போல் ஸ்ரீராமலக்ஷ்மணனென்கிற நரவியாக்கிரர் ஸமீபத்திலிருக்கிறரென்று கேட்டமாத்திரத்தில் காதவழியோடும் படியான நடைநடுக்கமுள்ளவன் நீ. அவர்களைப் பிரத்தியக்ஷத்தில்கண்டால் அவர்முன்னிற்பதற்கு முனக்கு தைரியமுண்டோ.

3౨. తస్యతేవిగ్రహేతాభ్యాంయుగగ్రహణమస్థిరమ్॥వృత్రస్యేవేంద్రబాహుభ్యాంబాహోరేకస్యనిగ్రహః|

௩௨. [illegible]
[illegible]

௩௨. தஸ்யதேவிக்ரஹேதாப்யாம்யுகக்ரஹணமஸ்திரம்॥
வ்ருத்ரஸ்யேவேந்த்ரபாஹுப்யாம்பாஹோரேகஸ்யநிக்ரஹ:।

பதம்.	உரை.	பதம்.	உரை.
தஸ்ய	(அஸமர்த்தத்தால்திருட்டுத்தனமாயென்னையபகரித்துவந்த) அந்த	வ்ருத்ரஸ்ய	விருத்திராஸுரனுடைய
		ஏகஸ்ய-பாஹோ:	ஒன்றான-தோளுக்கு
தே	உனக்கு	இந்த்ரபாஹுப்யாம்	இந்திரனுடையதோள்களோடு
தாப்யாம்	அந்தஇராமலக்ஷ்மணனோடு	விக்ரஹேஸதி	யுத்தமுண்டாயிருந்துள்ளளவில்
யத்தே (ஸதி)	சண்டையுண்டாயிருந்துள்ளளவில்	நிக்ரஹஇவ	அபஜயம்போல்
யுகக்ரஹணம்	யுத்தத்தில் (ஜயாபஜயங்கள்)	அஸ்திரம்	நிலையற்றது.

தா-ம்—சிங்ககர்ஜனையைக்கேட்டகஜம்போலும் புலிநாற்றமறிந்தசுவானம்போலும்பயந்து ஸ்ரீராமலக்ஷ்மண தரிசனமுங்கூடாதென்று அவர்களை வஞ்சனையால்வெளிப்படுத்தி, மாயவேஷத்தாலென்னைமதிமயங்கப்பண்ணி, யாகவேதிகைபோல்பரிசுத்தமானதிவ்வியாசிரமத்திலுள்ளது அபரிசுத்ததாள்களைவைத்தென்னையபகரித்துவந்த அடசோர! எதிர்நின்று யுத்தஞ்செய்ய வல்லமையற்றுப்பின்புறந்தேடின அஸத்தே! உனக்குமவ்வில்லாளர்க்கும்போர்நேரில் உனக்குஜயம்கிடைத்துவிடுமோ! ஸீதாபஹாரணம்லபித்துவிடுமோ! நீ எதிர்த்துயுத்தஞ்செய்ய அவ்வளவுநேரமாவது உன்பிராணனையுனக்குவைப்பார்களோ. ஜயாபஜயமென்கிற சங்கைக்கு மிடங்கொடுப்பார்களோ. விருத்திராஸுரனுடைய ஒருகைக்கும் இந்திரனுடைய இரண்டுகைகளுக்கும் யுத்தம்நேர்ந்தபோது இந்திரஜயமெப்படிஸித்தமாயிற்றே அவ்வண்ணம் இராக்ஷஸப்பதரான நீயொருவன்யுத்தவீராளான அவ்விருவரை யெதிர்த்தக்கா லுன்விநாசம் ஸ்திரமன்றே.

33. క్షిప్రంతవసనాథోమేరామస్సౌమిత్రిణాసహ॥తోయమల్పమివాదిత్యఃప్రాణానాదాస్యతేశరైః॥

௩௩. [illegible]
[illegible]

௩௩. க்ஷிப்ரம்தவஸநாதோமேராமஸ்ஸௌமித்ரிணாஸஹ॥
தோயமல்பமிவாதித்ய:ப்ராணாநாதாஸ்யதேஸரை:।

பதம்.	உரை.	பதம்.	உரை.
மே	என்னுடைய	தவ	உன்னுடைய
ஸ:-நாத:	அந்த-(என்)பர்த்தாவான	ப்ராணாந்	உயிரை
ராம:	ஸ்ரீராகவன்	ஸரை:	பாணங்களால்
ஸௌமித்ரிணாஸஹ	இலக்ஷ்மணரோடுகூட (வந்து)	க்ஷிப்ரம்	சீக்கிரமாக
ஆதித்ய:	ஸூரியன்	ஆதாஸ்யதே	எடுக்கப்போகிறார்.
அல்பம்-தோயமிவ	கொஞ்சமான-ஜலத்தைப்போல்		

தா-ம்—ஹேராக்ஷஸ! "யுத்தத்தினலோ ஸாமர்த்தியத்தினலோவஞ்சனையினலோ எந்தவிதத்தினலோ ஸீதையென்வசமாய்விட்டாள், எப்படிப்பட்டவீரராயினு மினியவரென்செய்வார், ஸீதையிருக்குமிடமவரறிவரோ, அறிந்தும் ஜலமத்தியிலுள்ள லிக்கோட்டையை யவரணுகுவரோ," என்று இவ்வெண்ணங்களால் ஸந்தோஷங்கொள்ளாதே. நீ ஸமுத்திரத்திலொளிந்தாலும் பாதாளபிலத்தில் நுழைந்தாலும் மாயாசக்தியால் மறைந்தாலும், ஸர்வலோகநாதனும் எனக்குப் பிராணபந்துவுமானவந்த இரகுவீரன் உன்னைவிடார். ஸமஸ்தவிடங்களிலும் தடையின்றிச்செல்லுகிற ஸூரியகிரணம்போல் ஸ்ரீராகவவிக்கிரமும்செல்லும் .நீர்க்காவலால் திடங்

கொண்டிருக்கிற அடேராவண! இன்னம் கொஞ்சகாலத்தில் என்னுடையநாதன் இலக்ஷ்மணஸஹிதராய் இங்குவந்து ஸ்வல்பஜலத்தை க்ஷணகாலத்தில்ஸூரியகிரணமாகர்ஷிப்பதுபோல் உன்னுடைய பஞ்சப்பிராணன்களையும் தன்னுடைய திவ்வியசரங்களால் அநாயாஸமாய் அதிசீக்கிரத்திலபகரிக்கப்போகிறார்.

౩౪ గిరిం కుబేరస్య గతో௨పధాయ వా సభాం గతో వా వరుణస్య రాజ్ఞః।
అసంశయం దాశరథేర్న మోక్ష్యసే మహాద్రుమః కాలహతో௨శనేరివ॥

௩௪. கி³ரிம் குபே³ரஸ்ய க³தோ௨பதா⁴ய வா ஸபா⁴ம் க³தோ வா வருணஸ்ய ராஜ்ஞ꞉।
அஸம்ஶயம் தா³ஶரதே²ர்ந மோக்ஷ்யஸே மஹாத்³ரும꞉ காலஹதோ௨ஶநேரிவ॥

௩௪. கிரிம்குபேரஸ்யகதோபதாயவாஸபாம்கதோவாவருணஸ்யராஜ்ஞ꞉॥
அஸம்ஶயம்தாஶரதேர்கமோக்ஷ்யஸேமஹாத்ருமꞋகாலஹதோஶநேரிவ।

இதி ஸ்ரீமத்ஸுந்தரகாண்டே - ஏகவிம்ஶஸ்ஸர்க³꞉.

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே ராவண)	(வாராய் இராவண)	கதோவா	அடைந்தவனானாலும்
குபேரஸ்ய	குபேரனுடைய	காலஹத꞉	காலத்தாலடிக்கப்பட்ட
கிரிம்	கைலாயத்தை அல்லது கந்தமாதனபர்வதத்தை	மஹாத்ரும꞉	பெருமரமானது
		அஶநேரிவ	இடியினின்றுபோல்
கதோவா	அடைந்தவனானாலும்	தாஶரதே꞉	இராகவனிடத்தினின்று
வருணஸ்ய	வருணனென்கிற	அபதாய	அதிக்கிரமித்து
ராஜ்ஞ꞉	அரசனுடைய	நமோக்ஷ்யஸே	விடப்படமாட்டாய்.
ஸபாம்	ஸபையை	அஸம்ஶயம்	ஸந்தேகமில்லை.

தா-ம்—அடேராவண! இவ்விடம் பத்திரமில்லையென்று வேறெங்குஓடினாலுமோடு. கைலாஸம் அல்லது கந்தமாதனமென்று சொல்லப்பட்ட குபேராசிரியமான கிரியிலாவதோடியொளித்துக்கொள். வருணனுடைய ஸபையிலாவதோடிப்புகுந்துகொள். இன்னமெதுபத்திரமென்று தோன்றுகிறதோ அங்குஓடியொளித்துக்கொள். ஸ்ரீராமபாணத்திற்குத் தப்புவாயென்று நினைக்கிறாயோ! விதிபலத்தாலேவைப்பட்டுஅழிக்கவருகிற இடிக்கிலக்கானவிருக்ஷம்போல் உன்விநாசகாலம்நெருங்க உன்சிரஸையுத்தேசித்துவருகிற ஸ்ரீராமபாணமுன்னைக்கொல்லாமல்விடாது. குபேரபலமும் வருணபலமு மற்றதேவதாபலமும் ஸ்ரீராமசரத்திற்கிடல்ல.

ஸ்ரீஸம்மகோரஞ்ஜநீநாமத்திராவிட வ்யாக்யாநஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்

இருபத்தோராவதுஸர்க்கம் - முற்றிற்று.

இருபத்திரண்டாவதுஸர்க்கம்.

౧. సీతాయా వచనం శ్రుత్వా పరుషం రాక్షసాధిపః। ప్రత్యువాచ తతస్సీతాం విప్రియం ప్రియదర్శనామ్॥

௧. ஸீதாயா வசநம் ஶ்ருத்வா பருஷம் ராக்ஷஸாதி⁴ப꞉।
ப்ரத்யுவாச ததஸ்ஸீதாம் விப்ரியம் ப்ரியத³ர்ஶநாம்॥

௧. ஸீதாயாவசநம்ஶ்ருத்வாபருஷம்ராக்ஷஸாதிப꞉।
ப்ரத்யுவாசததஸ்ஸீதாம்விப்ரியம்ப்ரியதர்ஶநாம்॥

பதம்.	உரை	பதம்.	உரை.
ராக்ஷஸாதிப꞉	இராக்ஷஸப்பிரபுவான(இராவணன்)	ப்ரியதர்ஶநாம்	இஷ்டமான பார்வையுடைய
ஸீதாயா꞉	பிராட்டியினுடைய	ஸீதாம்	பிராட்டியை(ப்பார்த்து)
பருஷம்-வசநம்	கடினமான-வார்த்தையை	விப்ரியம	அநிஷ்டமான (வசனத்தை)
ஶ்ருத்வா	கேட்டு	ப்ரத்யுவாச	பதில்சொன்னான்.
தத꞉	பிறகு		

தா-ம்—இந்தவிதம் தனக்கிட்ட வபராதங்களைக் கொஞ்சமேனும் ஸ்மரியாது, இவன் எப்படியாவது தர்மசிந்தாபரனாய் பகவத்பிரஸாதம்பெற்று உஜ்ஜீவித்தாற்போதுமென்கிற சேதன வாத்ஸல்யமிகுதியால் பிராட்டியானவள் ஹிதமொழிகளைப் பலவாறாகவுரைத்தனள். பிரதமத்தில், அவனுக்குக் கிடைத்திருக்கிற தாராஸம்பத்தைக்காட்டி, ஸ்ரீராகவார்கையானதா னவனுக்கு லபிக்கமாட்டாதனதை யுரைத்தாள். பிறகுபரதாரகமனவிச்சையாலுண்டாகு மனர்த்தங்களைக்காட்டி, ஸாதுவசனங்களையதிக்கிரமியாது தர்மாசாரத்தோடு உஜ்ஜீவியென்று நீதிமார்க்க முபதேசித்தாள். அனந்தரம், பதிசோரனைத் தாகநீர்யாசிக்குமாப்போலே தன்னை விட்டுவிடவேண்டுமென்றுகோரிதைன்னியதசையைவெளியிட்டுயாசித்தாள். கடைசியாக, ஸ்ரீராகவலக்ஷ்மண விக்கிரமத்தைஏற்கனவேயறிந்து பயத்தால்சோரகிருத்தியஞ்செய்த வவ்வரக்கனையிகழ்ந்து, தன்னைவிடாத பக்ஷத்தி ஸ்ரீரகுவீரகோதண்டத்தா லுண்டாகப்போகிற கோரவதத்தைக்காட்டி பயமுறுத்தினள். இப்படி நய

பயவிதங்களாலுரைத்த அக்கிருபாசிநியின் பத்திபவசனங்களில் குரூரமல்லாதது ஒன்றுங்கண்டானில்லை. காலபலத்தாலவனுக்கு அந்தநர்மக்கிரியையின் ஸாரவாக்கியங்கள் கர்ணகடோரமாகவேயிருந்தன. ஆகையாலவளுரைத்த நீதியெல்லாம் விபர்த்தமாய்விட்டது. அவள்பிரதிவசனம் முடிந்தவுடன்காமமயவால்வநிதாவஸீதமநியவனாக யற்றிருக்கிற இராவணன் அந்த பதிவிரதையின்மனம்வருந்தும்படி இன்னம சிலஅனுசார மொழிகளைச் சொல்லலுற்றனன்.

౧. యథా యథా సాంత్వయితా వశ్యః స్త్రీణాం తథా తథా । యథా యథా ప్రియం వక్తా పరిభూతస్తథా తథా ॥

௨. യഥാ യഥാ സാന്ത്വയിതാ വശ്യഃ സ്ത്രീണാം തഥാ തഥാ ।
യഥാ യഥാ പ്രിയം വക്താ പരിഭൂതസ്തഥാ തഥാ ॥

௨. யதாயதாஸாந்த்வயிதாவஶ்ய: ஸ்த்ரீணாம்ததாததா।
யதாயதாப்ரியம்வக்தாபரிபூதஸ்ததாததா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
யதாயதா	எப்படி எப்படி.	யதா யதா	எப்படி எப்படி.
ஸாந்த்வயிதா	நல்வார்த்தைசொல்லுகிறானோ (அந்த புருஷன்)	ப்ரியம்	இஷ்டவசனத்தை
		வக்தா	சொல்லுகிறானோ
ததா ததா	அப்படி அப்படியே	ததா ததா	அப்படி அப்படி
ஸ்த்ரீணாம்	ஸ்திரீகளுக்கு	பரிபூத:	(ஸ்த்ரீகளால்) அவமானப்படுத்தப்படுகிறான்.
வஶ்ய:	(தான்) ஸ்வாதீனனாகிறான்		

தா-ம்.—புருஷன் ஸ்திரீகளுக்குநல்வார்த்தைசொல்லச்சொல்ல இவன் அவர்கள்வசியனாகிறானல்லது அவர்களிவன் ஸ்வாதீனத்தையடைகிறதில்லை. இவன் பிரியமொழிகளுரைக்கவுரைக்க அவர்களால் திரஸ்கரிக்கப்படுகிறான்.

3. సంనియచ్ఛతి మే క్రోధం త్వయి కామస్సముత్థితః । ద్రవతో మార్గమాసాద్య హయానివ సుసారథిః ॥

௩. സംനിയച്ഛതി മേ ക്രോധം ത്വയി കാമസ്സമുത്ഥിതഃ ।
ദ്രവതോ മാർഗ്ഗമാസാദ്യ ഹയാനിവ സുസാരഥിഃ ॥

௩. ஸந்நியச்சதிமேக்ரோதம்த்வயிகாமஸ்ஸமுத்தித:।
த்ரவதோமார்க்கமாஸாத்யஹயாநிவஸுஸாரதி:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹேஸீதே)	(வாராய்ஜனகபுத்ரீ)	ஆஸாத்ய	அடைந்து
த்வயி	உன்னிடத்தில்	த்ரவத:	ஓடுகிற
ஸமுத்தித:	உண்டான	ஹயாந்	குதிரைகளை
காம:	ஆசையானது	ஸுஸாரதிரிவ	ஸமர்த்தனை தேர்ப்பாகன்போல்
மே-க்ரோதம்	என்னுடைய-கோபத்தை	ஸந்நியச்சதி	அடக்குகிறது.
அமார்க்கம்	கெட்ட வழியை		

தா-ம்—ஹேஸீதே! கேவலம் ஸதிரீஜாதியான நீ மஹாராஜாவான வெனக்குச்செய்யு மவமானத்தாலிருந்த கோபத்தையடைந்திருக்கிறேன். நீ என்மனதிற்கிசையு நிமித்தம் ஸர்வஸ்வங்களையு முனக்கர்ப்பணஞ்செய்வதாக வாய்மொழிதந்து உன்னைப் பலவாறுகப்பிரார்த்திக்கும் நீ மனமிரங்காது ஆபரணாலங்காரங்களைவர்ஜித்து என்னை அவமானிக்கிறாய். இக்கஷ்டத்தையாலுன்விஷயத்தில் மஹாகோபங்கொண்டவனாயினும் உன்மீதெனக்குள்ள காமமான தென்னையடக்குகின்றது. இராஜமார்க்கத்தைவிட்டுப் புறங்களிற்பாய்ந்தோடுகிற அசுவங்களைக் கடிவாள ஸூத்திரத்தாலடக்கித் திருப்பிக்கொண்டுபோகிற ஸமர்த்தனனஸாரதிபோல் குரோதபலத்தாலுன்னைப்பிரிகிற வென்மனதைக் காமமானது உன்னிடத்தில்பிரீதிபண்ணும்படி செய்கிறது. ஆகையாலல்லவோ நீ செய்கிற வபராதத்தைக்ஷமித்து உனக்குத்தீங்குசெய்ய மனமில்லாதிருக்கின்றனன்.

౪. వామః కామో మనుష్యాణాం యస్మిన్ కిల నిబధ్యతే । జనే తస్మింస్త్వనుక్రోశస్స్నేహశ్చ కిల జాయతే ॥

౫. ఏతస్మాత్కారణాన్న త్వాం ఘాతయామి వరాననే । వధార్హామవమానార్హాం మిథ్యాప్రవ్రజితే రతామ్ ॥

௪. വാമഃ കാമോ മനുഷ്യാണാം യസ്മിൻ കില നിബധ്യതേ ।
ജനേ തസ്മിംസ്ത്വനുക്രോശസ്സ്നേഹശ്ച കില ജായതേ ॥

௫. ഏതസ്മാത്കാരണാന്ന ത്വാം ഘാതയാമി വരാനനേ ।
വധാർഹാമവമാനാർഹാം മിഥ്യാപ്രവ്രജിതേ രതാം ॥

௪. வாம: காமோமநுஷ்யாணாம்யஸ்மிந்கிலநிபத்யதே।
ஜநேதஸ்மிம்ஸ்த்வநுக்ரோசஸ்ஸ்நேஹஸ்சகிலஜாயதே॥

௫. ஏதஸ்மாத்காரணாந்நத்வாம்காதயாமிவராநநே।
வதார்ஹாமவமாநார்ஹாம்மித்யாப்ரவ்ரஜிதேரதாம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மநுஷ்யாணாம்	பிராணிகளுக்கு	ஸ்நேஹஶ்ச	நட்பும்
வாம:	அழகான	அநுக்ரோஶஶ்ச	தயையும்
காம:	(போகத்தில்) ஆசையானது	ஜாயதேகில	உண்டாகிறதன்றோ
யஸ்மிந்கில	எவ்விடத்தில்	ஏதஸ்மாத்காரணாத்	இந்தகாரணத்தால்
நிபத்யதே	கட்டப்படுகிறதோ (அல்லது)	(ஹே) வராநநே	(ஓ)சிரேஷ்டமானமுகமுடையவளே
மநுஷ்யாணாம்	பிராணிகளுக்கு	மித்யாப்ரவ்ராஜிதே	பொய்யான வக்கியவிருத்தி யுடைய (ராமனிடத்தில்)
காம:	போகவிச்சையானது		
வாம:கில	பிரதிகூலமன்றோ (அப்படியிருந்தும்)	ரதாம்	ஆஸக்தியுடையவளும் (அதனால்)
யஸ்மிந்	எவ்விடத்தில் (அக்காமமானது)	வதார்ஹாம்	கொலைக்குரியவளும
நிபத்யதே	கட்டப்படுகிறதோ	அவமாநார்ஹாம்	அவமானத்திற் கிசைந்தவளுமான
தஸ்மிந்-ஜநே	அந்த-ஜனத்தினிடத்தில்	த்வாம்-நகாதயாமி	உன்னை-கொலைசெய்யேன்.

தா-ம்—ஹேஸீதே! ஸகலமனுஷியரும் காமத்திற்கீடுபடுகின்றனர். காமத்திலேயே பரமஸுகத்தை யனுபவிக்கின்றனர். பிறகு அக்காமமே அவருக்கு சத்துருவாய்விடுகிறது. ஒருமனிதன் எவ்விடத்தில் காமத்தால்கட்டப்படுகிறனோ அவ்விடத்திலவன் தோஷங்களைவிசாரிக்கிறதில்லை, அபராதங்களைப்பார்க்கிறதில்லை, அவ்விடத்திலவனுக்குப் பரமமைத்திரமும் தாக்ஷிணியமும் ஜனிக்கின்றன. என்ன அவமானம் நேரிடினும் அதைக்கவனியாது தான் காமுற்றஸ்திரிக்குபவ்வியனாய்விடுகிறான். இங்ஙியக்தான், ஹேஸுந்தரி! உன்விஷயத்திலெனக்குண்டாயிருக்கும் க்ஷமைக்குக்காரணம். இராஜாதிராஜன், இராக்ஷஸேந்திரன், ஸார்வபௌமன், மஹாப்பிரதாபவான், யானுன்னைக்காமுற்றனன். தண்டகாரண்ணியத்தினின்றுன்னைக் கொண்டிங்கு சேர்த்தனன். பத்துமாதமுன்னைப் பலவாறுபிரார்த்தித்தனன். நீ என்னையடையவிரும்பாது அந்த காட்டோடிராமனிடத்திலேயே வியாமோகங்கொண்டிருக்கிறாய். பௌருஷமின்மையா விராஜ்ஜியமிழந்து தபஸ்வியென்று கபடவேஷம்பூண்டு வனத்தில்ஸஞ்சரிக்கிற அந்தஅல்பனை யேபூஷிக்கிறாய். உனது ரதியையிச்சிக்கிறவென்னுடைய பலபௌருஷவிக்கிரமங்களையும் பெருமையையுமறியாது மந்தபுத்தியா லென்னைத்தூஷிக்கிறாய். ஹேஸீதே! உனது கடத்தைக்கும் பிடிவாதத்திற்கும் பயமின்றிப்பிரதிசொன்னக் குரூரவசனங்களுக்கும் உன்னையான் தண்டித்திருக்கவேண்டும். உன்னைக் கண்டார்கண்டு சிரிக்கும்படி அவமானித்திருக்கவேண்டும். ஸ்திரீஜாதியென்கிற தயையின்றி உன்னைச்சித்திரவதம் செய்திருக்கவேண்டும். இப்படிப்பட்ட மஹாபராதியாயினும் உன்னிடத்தில் யான்கிருபைகொண்டவனாயினன். பீடிப்பதற்கும் அவமானிப்பதற்கும் மனமில்லனாயினன். இதற்குக் காரணமெனதுகாமந்தான். காமுற்றவிடங்களிற் சிற்றங்கொள்ளாதது காமங்கொண்டார் குணமாதலின் நீ செய்த வபராதசதங்களைப் பிரணயலீலையென்று மானித்துன்னை க்ஷமித்திருக்கின்றனன்.

திர்த்தியவிசேஷார்த்தம்.

யஸ்மின்-எந்த, ஜநே-பக்தஜனத்தினிடத்தில், அநுக்ரோஶ:-கிருபையும், ஸ்நேஹஶ்ச-பிரியமும், நிபத்யதே-கட்டப்படுகிறதோ, தஸ்மிந்-அந்த, ஜநே-பக்தஜனவிஷயத்தில், மநுஷ்யாணாம்-மனிதர்களுக்கு, காம:- ஆவலானது, வாம:கிம் - பிரதிகூலமாயென்ன, ஆசிருதவாத்ஸல்யிதயா பரிபூர்ணையான என்னிடத்தில் பிருத்தியனாகவேண்டுமென்கிற விருப்பமானது உனக்கு யுக்தந்தான், ஆனால் என்னைக் கொலைபுரிகிற ஸ்திரீகாதகனான உன்விஷயத்தில் விசுவாஸம் யுக்தமன்றென்கிற விஷயத்தில் சொல்லப்படுகிறது; ஏதஸ்மாத்காரணாத் - உன்னிடத்தில் பிருத்தியத்துவத்தைக் கோருகிறேனாதலால், ப்ரவ்ராஜிதே-வக்யவிருத்தியுடைய, (மத்ஸ்வாமிநி-என் ஸ்வாமியான, என்னாதனான, ராமே-ஸ்ரீராகவனிடத்தில்,) ரதாம்-விருப்பமுற்றவளும் என்னுடையதேவதையுமான, த்வாம்-உன்னை, ஹேவராநநே-வாராய் சிரேஷ்டமானதிருமுகமுடையவளே, நகாதயாமி - ஹிம்ஸியேன், வதார்ஹாம் - கொலைக்கு பாத்திரபூதையும், அவமாநார்ஹாம் - அவமானத்திற்குரியவளுமான, ஸ்த்ரியமபி-ஸ்திரீஜாதியையும், காதயாமீதியத் - கொல்கிறவனென்கிற யாதொன்றுண்டோஅது, மித்யா-பொய்.

ஆசிருதஜனவிஷயத்தில் ஸ்நேகமும் கிருபையுமுண்டாகில் அவருடைய பிருத்தியத்துவத்தை யங்கீகரிப்பதற்கு அவரிடத்துள்ள காமம்பிரதிகூலமாகுமோ. உன்னிடத்தில் வாத்ஸல்லிய பரிபூர்ணையாயிருக்கிற வென்கீழ் நீ தாஸ்ஸியம்புரியவிரும்புவது யுக்தந்தான். ஆகிலும் ஸ்திரீகாதகனான உன்னையானேற்றுக்கொள்வது தகுதியோவென்னில், ஹேதேவி! ஸமாதானமுரைக்கின்றனனதைக்கேட்டருளாய். யான்ஸ்திரீகாதகனல்லன். வதத்திற்கும் அவமானத்திற்கும் தகுதியானவபராதம்செய்தஸ்திரீயாயினு மவளையான்ஹிம்ஸியேன். ஸ்திரீகாதகனென்று எனக்குமித்தியாபவாதமுண்டாயிருக்கிறது. என்னுடையநாதனான ஸ்ரீராகவனிடத்தி லத்தியந்தம் விசுவாஸமுள்ள ஹேபரதேவதே! இந்த மித்தியாபவாதத்தால் என்னைப்பரிகரியாதே, அவசியமென்தாஸ்ஸியத்தை யங்கீகரித்தருளாய்.

ட. పరుషాణీహ వాక్యాని యాని యాని బ్రవీషి మామ్ । తేషు తేషు వధో యుక్త స్తవ మైథిలి దారుణః॥

சு. வாருஷாணி ஹவாக்யாநி யாநி யாநி ப்ரவீஷிமாம்।
தேஷு தேஷு வதோயுக்தஸ்தவ மைதிலி தாருண:॥

சு. பருஷாணீஹவாக்யாநியாநியாநிப்ரவீஷிமாம்।
தேஷு தேஷு வதோயுக்தஸ்தவமைதிலிதாருண:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே) மைதிலி	(ஓ) ஸீதே	யாநியாநி	எவ்வெந்த
இஹ	இவ்விடத்தில்	பருஷாணி	கடோரங்களான
மாம்	என்னை	வாக்யாநி	வார்த்தைகளை

பதம்.	உரை.	பதம்.	உரை.
ப்ரவீஷி	சொல்லுகிறாயோ	தாருண:-வத:	பயங்கரமான-கொலையானது
தேஷு-தேஷு	அங்கங்கே	யுக்த:	தகுந்தது.
தவ	உனக்கு		

౭. ఏవముక్త్వాతువైదేహీంరావణోరాక్షసాధిపః। క్రోధసంరంభసంయుక్తస్సీతాముత్తరమబ్రవీత్॥

எ. 𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍁𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌂𑌰𑌾𑌵𑌣𑍋𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌿𑌪𑌃।
𑌕𑍍𑌰𑍋𑌧𑌸𑌂𑌰𑌮𑍍𑌭𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌸𑍀𑌤𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥

எ. ஏவமுக்த்வாதுவைதேஹீம்ராவணோராக்ஷஸாதிப:।
க்ரோதஸம்ரம்பஸம்யுக்தஸ்ஸீதாமுத்தரமப்ரவீத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராக்ஷஸாதிப:-ராவண:-	இராக்ஷஸப்பிரபுவான இராவணன்	ஸம்ரம்ப	பரபரப்போடு
வைதேஹீம்	பிராட்டியை (ப்பார்த்து)	ஸம்யுக்த:	கூடினவனாக
ஏவம்-உக்த்வா	இந்தவிதம்-சொல்லி	ஸீதாம்	பிராட்டியைக்குறித்து
க்ரோதஸம்ரம்பஸம்யுக்த:—		உத்தரம்	பிரதிவசனத்தை
க்ரோத	கோபத்தினுடைய	அப்ரவீத்	(பின்வருமாறு) சொன்னான்.

(சு-மு-எ-ல்) தா-ம்.—ஹேஸீதே! நீ இப்பொழுதுரைத்த கர்ணகடோரமான பிரதிமொழிக்கு முன்னைக் கோரவதத்திலிட்டிருக்கவேண்டும். வரம்பின்றி மனம்போனவாறு எக்கிலேமையையும் கௌரவத்தையும்யோசியாது குரூரவசனங்கள் மொழிந்தனை. உன்னைத்தக்ஷணமே வதைத்திருக்கவேண்டுமென்றறி. இந்தவிதம் அபிமதையாகாது திரணத்தைதப்புகட்டி முன்னிருக்கிற தீக்குகளைப் பயமின்றி யிடித்துரைத்த பிராட்டியின் அவமதிப்பால் மனக்கொதிப்படைந்து இவ்வாறுரைத்து அத்யுக்கிரமானகோபத்துடன் நெவிழிவிழித்து மீசைதுடிக்க தேகம்படபடக்க, மிகுந்த பரபரப்புடன் இன்னம் சிலபயங்கரமொழிகளையறைந்தனன்.

౮. ద్వౌమాసౌరక్షితవ్యౌమేయోఽవధిస్తేమయాకృతః। తతశ్శయనమారోహమమత్వంవరవర్ణిని॥

౯. ఊర్ధ్వంద్వాభ్యాంతుమాసాభ్యాంభర్తారంమామనిచ్ఛతీమ్। మమత్వాంప్రాతరాశార్థమారభన్తేమహానసే॥

அ. 𑌦𑍍𑌵𑍌𑌮𑌾𑌸𑍌𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌵𑍍𑌯𑍌𑌮𑍇𑌯𑍋𑌽𑌵𑌧𑌿𑌸𑍍𑌤𑍇𑌮𑌯𑌾𑌕𑍃𑌤𑌃।
𑌤𑌤𑌶𑍍𑌶𑌯𑌨𑌮𑌾𑌰𑍋𑌹𑌮𑌮𑌤𑍍𑌵𑌂𑌵𑌰𑌵𑌰𑍍𑌣𑌿𑌨𑌿॥

கூ. 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂𑌦𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌤𑍁𑌮𑌾𑌸𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌭𑌰𑍍𑌤𑌾𑌰𑌂𑌮𑌾𑌮𑌨𑌿𑌚𑍍𑌛𑌤𑍀𑌮𑍍।
𑌮𑌮𑌤𑍍𑌵𑌾𑌂𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑌾𑌶𑌾𑌰𑍍𑌥𑌮𑌾𑌰𑌭𑌨𑍍𑌤𑍇𑌮𑌹𑌾𑌨𑌸𑍇॥

அ. த்வௌமாஸௌரக்ஷிதவ்யௌமேயோவதிஸ்தேமயாக்ருத:।
ததஶ்ஶயநமாரோஹமமத்வம்வரவர்ணிநி॥

கூ. ஊர்த்வம்த்வாப்யாந்துமாஸாப்யாம்பர்த்தாரம்மாமநிச்சதீம்।
மமத்வாம்ப்ராதராஶார்த்தமாரபந்தேமஹாநஸே॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே) வரவர்ணினி	(ஓ) சிரேஷ்டமான தேககாந்தியுடையவளே	ஆரோஹ	ஏறு
		த்வாப்யாம்-மாஸாப்யாம்-	இரண்டு-மாஸங்களுக்கு
தே-மயா	உனக்கு-என்னால்	ஊர்த்வம்து	மேலோவென்றால்
ய:-அவதி:-	எந்த-கெடுவானது	மாம்-பர்த்தா	என்னை-நாயகனாக
க்ருத:	செய்யப்பட்டதோ (அதற்கு)	அநிச்சதீம்-த்வாம்	இச்சியாத-உன்னை
த்வௌ-மாஸௌ	இரண்டு-மாதங்கள்	ப்ராதராஶார்த்தம்	இரண்டுமாஸம், பூர்த்தியாகி மறுநாள் காலைபோஜனநிமித்தம்
மே-ரக்ஷிதவ்யௌ	என்னால்-இரக்ஷிக்கத்தக்கவை (பார்க்கத்தக்கவை)		
தத:-மம	பிறகு-என்னுடைய	மம	என்னுடைய (பாசகர்கள்)
ஶயநம்	படுக்கையை	மஹாநஸே	சமையல்கட்டில்
த்வம்	நீ	ஆரபந்தே	ஹிம்ஸிப்பார்கள்.

தா-ம்.—ஹேஸீதே! தங்கப்பிரபைபோன்றகாந்தியுடைய உனதுதிவ்யவபுவழகில்யானீடுபட்டேனாகையால் நீ பத்தியின்மையாற்செய்தவபராதங்களைக்ஷமித்தேன். நீ என்னைபர்த்தாவாகவரிப்பதற்கு ஆதியிலேற்படுத்திய ஓராண்டுகெடுவிற்பத்து மாதஞ்சென்றுவிட்டது. இன்னமிரண்டு மாதத்திற்குள் நீமனோநிச்சயஞ்செய்து என்சயனத்தை யடையவேண்டும். அதற்குள் நீ மனமிசைந்தென்னை ஸந்தோஷிப்பிக்காயாகில் மூன்றுமாதப்பிரதம தினகாலையில் உனதுமாம்ஸத்தைப் பாகஞ்செய்து எனக்காகாரமாயமைப்பதற்காக எனதுபரிசாரகர்கள் சமையற்சாலைக்குன்னைக்கொண்டுபோய்ப் பிடிப்பார்கள். இதையறிந்துநீ உஜ்ஜீவிக்கும்வண்ணம் நடந்துகொள்ளக்கடவாய்.

౧౦. తాంతర్జ్యమానాంసంప్రేక్ష్యరాక్షసేంద్రేణజానకీమ్। దేవగంధర్వకన్యాస్తావిషేదుర్వికృతేక్షణాః॥

கo. 𑌤𑌾𑌂𑌤𑌰𑍍𑌜𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌂𑌸𑌂𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌣𑌜𑌾𑌨𑌕𑍀𑌮𑍍।
𑌦𑍇𑌵𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌕𑌨𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌾𑌵𑌿𑌷𑍇𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌕𑍃𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌃॥

கo. தாந்தர்ஜ்யமாநாம்ஸம்ப்ரேக்ஷ்யராக்ஷஸேந்த்ரேணஜாநகீம்।
தேவகந்தர்வகந்யாஸ்தாவிஷேதுர்விக்ருதேக்ஷணா:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராக்ஷஸேந்த்ரேண	இராக்ஷஸராஜாவான (இராவணனா [ல்)	தேவகந்தர்வகந்யா:	தேவகந்தர்வகன்னிகைகள்
தர்ஜ்யமாநாம்	மிரட்டப்பட்ட	விக்ருதேக்ஷணா:	விகாரமான கண்களையுடையவர்களா [ய்க்கொண்டு
தாம்-ஜாநகீம்	அந்த-ஜனகபுத்திரியை (ப்பார்த்து)	விஷேது:	துக்கித்தார்கள்.

தா-ம்—இவ்விதமிராவணனா லதட்டப்பட்ட பிராட்டியின் தைன்னியத்தையும் துக்கத்தையுங்கண்டு அவ்வரக்கனைப் பின்றொடர்ந்துவந்த தேவகந்தர்வஸ்திரீகள் மிகவும்வருத்தமுற்றனர். பெருங்காற்றிலசைந்தாடுகிற இளவாழைபோல் இராக்ஷஸபீதியாலும் அவனுடைய உக்கிரவசனங்களாலும் தேககம்பமெடுத்துக் கண்ணீர்சொரிந்து என்செய்வோமென்று பரிதபிக்கிற ஏழையைக்கண்டவுடன் அம்மாதரும் பயந்து பிரமித்தபார்வையோடு தாகித்தனர்.

౧౧. ఓష్ఠప్రకారైరపరా వక్త్రైర్నేత్రైస్తథాపరాః । సీతామాశ్వాసయామాసు స్తర్జితాం తేనరక్షసా ॥

கக. ஓஷ்டப்ரகாரைரபராவக்த்ரநேத்ரைஸ்ததாபரா:।
ஸீதாமாஶ்வாஸயாமாஸுஸ்தர்ஜிதாம்தேநரக்ஷஸா॥

கக. ஒஷ்டப்ரகாரைரபராவக்த்ரநேத்ரைஸ்ததாபரா:।
ஸீதாமாஸ்வாஸயாமாஸுஸ்தர்ஜிதாம்தேநரக்ஷஸா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தேந-ரக்ஷஸா	அந்த-இராக்ஷஸனால்	ததா-அபரா:	அவ்விதமே-வேறுசிலஸ்திரீகள்
தர்ஜிதாம்-ஸீதாம்	மிரட்டப்பட்ட-பிராட்டியை	வக்த்ரநேத்ரை:	முகமென்ன கண்களென்ன, இவைகளின் ஸமிக்கியைகளாலும்
அபரா:	சிலஸ்திரீகள்		
ஒஷ்டப்ரகாரை:	உதட்டுஸமிக்கியைகளாலும்	ஆஶ்வாஸயாமாஸு:	தேறுதலைச்செய்தார்கள்.

தா-ம்—பிராட்டி இவ்வண்ண மதட்டப்பட்டு நடுக்குகையில் மறைவில்நின்ற வேறுஸ்திரீகளில் சிலர் உதடுகளாலும், சிலர் முகங்களாலும், சிலர் கண்களாலும் ஸமிக்கியைகளைச் செய்து, அந்த ஸமிக்கியைகளால் "ஸீதே! இதெல்லாம்வீண்மிரட்டுதான், காரியத்திலொன்றுமில்லை, பயப்படாதே" என்கிற அர்த்தத்தை வெளியிட்டு, துக்கிக்கிற ஜானகியைத்தேற்றினார்கள்.

౧౨. తాభిరాశ్వాసితా సీతా రావణం రాక్షసాధిపమ్ । ఉవాచాత్మహితం వాక్యం వృత్తశౌండీర్యగర్వితమ్ ॥

கஉ. தாபிராஶ்வாஸிதாஸீதாராவணம்ராக்ஷஸாதிபம்।
உவாசாத்மஹிதம்வாக்யம்வ்ருத்தஶௌண்டீர்யகர்விதம்॥

கஉ. தாபிராஸ்வாஸிதாஸீதாராவணம்ராக்ஷஸாதிபம்।
உவாசாத்மஹிதம்வாக்யம்வ்ருத்தஶௌண்டீர்யகர்விதம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தாபி:	அந்த ஸ்திரீகளால்	வ்ருத்தஶௌண்டீர்யகர்விதம் (யதாயதா)=	
ஆஶ்வாஸிதா-ஸீதா	தேத்தரவுசெய்யப்பட்ட-பிராட்டி.	வ்ருத்த	பாதிவிருத்தியத்தினுடைய
ராக்ஷஸாதிபம்	இராக்ஷஸராஜாவான	ஶௌண்டீர்ய	பலத்தினால் (உண்டான)
ராவணம்	இராவணனை (ப்பற்றி)	கர்விதம் (யதாயதா)	பெருமைதோன்றும்படி
ஆத்மஹிதம்-வாக்யம்	தனக்குநல்லதான - வார்த்தையை	உவாச	சொன்னாள்.

தா-ம்—ஸமீபத்திலுள்ள ஸ்திரீகளின் ஜாடையால் திடமடைந்த பிராட்டியானவள் ரௌத்திரமொழிகளுரைத்த இராவணனைப்பார்த்துத் தன்னுடையபாதிவிருத்தியதேஜஸ்ஸுக்குமுன் அவனுடையபலமுழுதுந் திரணப்பிராயமென்கிற பெருமைதோன்றும்படி தனக்கு ஹிதமான இன்னம் சிலவசனங்களைக்கூறினள்.

౧౩. నూనం న తే జనః కశ్చిదస్తి నిఃశ్రేయసే స్థితః । నివారయతి యో న త్వాం కర్మణోఽస్మాద్విగర్హితాత్ ॥

கங. நூநம்நதேஜந:கஶ்சிதஸ்திநிஶ்ரேயஸேஸ்தித:।
நிவாரயதியோநத்வாம்கர்மணோஸ்மாத்விகர்ஹிதாத்॥

கங. நூநம்நதேஜந:கஶ்சிதஸ்திநிஶ்ரேயஸேஸ்தித:।
நிவாரயதியோநத்வாம்கர்மணோஸ்மாத்விகர்ஹிதாத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹேராவண)	(அடேராவண)	நூநம்	நிச்சயம்
தே-நி:ஶ்ரேயஸே	உனக்கு-நல்விஷயத்தில் [வன்)	ய:-அஸ்மாத்	எவன்-இந்த (இப்படி)
ஸ்தித:	இருப்பவன் (ஹிதோபதேசம் செய்ப	விகர்ஹிதாத்	நிந்திக்கப்பட்ட
கஶ்சித்-ஜந:	ஒரு-பிராணியும்	கர்மண:	வியாபாரத்திலிருந்து
நாஸ்தி	இல்லை	த்வாம்-நநிவாரயதி	உன்னை-திருப்பவில்லையோ.

தா-ம்—அடேராவண! உன்னுடைய அன்னத்தையுண்டு பந்துக்களென்றும் மந்திரிகளென்றும் பெயர்பூண்டு உன்னைச்சூழ்ந்திருக்கிற எண்ணிறந்தஜனங்களுள் ஸன்மார்க்கநெறியில் நிலைநிற்கிற ஸாதுவொருவனுமில்லை. அதர்மத்திற் பிரவர்த்திக்கிற தங்களரசனுக்கு சாஸ்திரவிதிகளைத் துணிவுடனுபதேசித்து ஸத்ஸம்பிரதாயத்திலாஸக்தி ஜனிப்பிக்கத்தக்க ஸத்புருஷனொருவனுமில்லை. எல்லோருமுனது தயவையபேக்ஷித்து

உன்க்ஷேமத்தைக்கருதாது, உனக்கின்பமளிக்கிற பாபவிர்த்தியிலுன் மனக்குதூகலங்கொள்ளும்படி இச்சகம் பாடிகிற துர்மந்திரிகளென்றேயெண்ணுகிறேன். இங்கிருந்தபடி நீயெப்படியறிந்தாயெனில் உன்னுடையகட த்தையே அதை வியக்தமாக்குகிறது. பரதாரையைகிர்ப்பந்திக்கிற இந்தபாமகிகிருஷ்டமான பாபகிருத்தியத் தினின்றுன் மனதைத்தடுப்பாரொருவனுமில்லையே.

౧౪. మాం హి ధర్మాత్మనః పత్నీం శచీమివ శచీపతేః। త్వదన్యస్త్రిషు లోకేషు ప్రార్థయేన్మనసాపి కః॥

க௪. 𑌮𑌾𑌂 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌪𑌤𑍍𑌨𑍀𑌂 𑌶𑌚𑍀𑌮𑌿𑌵 𑌶𑌚𑍀𑌪𑌤𑍇𑌃।
𑌤𑍍𑌵𑌦𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌷𑍁 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑍇𑌨𑍍𑌮𑌨𑌸𑌾𑌪𑌿 𑌕𑌃॥

க௪. மாம்ஹிதர்மாத்மந:பத்நீம்ஶசீமிவஶசீபதே:।
த்வதந்யஸ்த்ரிஷுலோகேஷுப்ரார்த்தயேந்மநஸாபிக:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தர்மாத்மந:	தர்மத்தையேஸ்வரூபமாயுடைய (ஸ்ரீ ராகவனுக்கு)	த்வத்	உன்னைக்காட்டிலும்
பத்நீம்-மாம்ஹி	பாரியையான-என்னையோவென்றால்	அந்ய:-க:	வேறொருவனை-எவன் (தான்)
ஶசீபதே:	இந்திரனுக்கு (பாரியையான)	த்ரிஷுலோகேஷு	மூன்றுலோகங்களில்
ஶசீமிவ	சசிதேவியைப்போல்	மநஸாபி	மனதினாலாவது
		ப்ரார்த்தயேத்	கோருவான்.

தா-ம்—ஹேராக்ஷஸாதம! ஸகலதேவகணங்களுக்கு மதிபதியான மஹேந்திரனுக்கு சசிதேவிபத்தினி போல் மானுஷகோடிகளுக்கெல்லாம் பிரபுவான ஸ்ரீராகவனுக்குநான்தர்மபத்தினி. இந்திரபத்தினியையொரு வனுங்கோரத்துணியாதுபோல் அந்த தர்மஸ்வரூபியானமனுஜேந்திரனுடைய போகத்திற்கேயுரியபரிசுத்தை யானவென்னை வாய்கூசாது பிரார்த்திக்கிற நீயல்லால் இம்மூவுலகில் அனர்த்த ஹேதுகாமான இக்காமபாவ த்தை மனதிலுங்கொள்ளத்தக்க வேறொருவனுமுண்டோ? ஆத்மநாசத்தையும் வம்சநாசத்தையுமறியாமல் பதிவிரதாக்கினியைப்பற்றவருகிற உன்போல் வேறுமூடர் இவ்வுலகிலுளரோ?

౧౫. రాక్షసాధమ రామస్య భార్యామమితతేజసః। ఉక్తవానసి యత్పాపం క్వ గతస్తస్య మోక్ష్యసే॥

க௫. 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌮 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌮𑌮𑌿𑌤𑌤𑍇𑌜𑌸𑌃।
𑌉𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌸𑌿 𑌯𑌤𑍍𑌪𑌾𑌪𑌂 𑌕𑍍𑌵 𑌗𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇॥

க௫. ராக்ஷஸாதமராமஸ்யபார்யாமமிததேஜஸ:।
உக்தவாநஸியத்பாபம்க்வகதஸ்தஸ்யமோக்ஷ்யஸே॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே)ராக்ஷஸாதம	(ஓ)இராக்ஷஸநீசனே	உக்தவாந்-அஸி	சொன்னவனை-ஆனாயோ
அமிததேஜஸ:	மிதமற்றபராக்கிரமமுடைய	தஸ்ய	அவரிடத்திலிருந்து
ராமஸ்ய	ஸ்ரீராகவனுடைய	க்வ-கத:	எங்கு-போனவனை
பார்யாம்	பத்தினியான (என்னை)	மோக்ஷ்யஸே	தப்பித்துக்கொள்ளப்போகிறாய்.
யத்-பாபம்	எந்த-பாபரூபமானவாக்கியத்தை		

தா-ம்—அடாராக்ஷஸப்பதரே! ஸ்ரீராகவனைக் கேவலம் மனுஷியனென்றுபழிக்கிறாய். அவாதுவிக்கிர மத்தை நீயளவிட்டறிந்ததுண்டோ. முயன்றாலுமளவிட உன்னால்முடியுமோ. அந்த நரஸிம்மன் உன்போன்ற லக்ஷம்வீரரைக்ஷணகாலத்திலறிக்கவல்லஅமிதபலமுள்ளவீரன். அப்பேர்ப்பட்டதேஜோவான்எனக்குபர்த்தா. கைவிட்டவிடத்தும் ஒடிவந்துரக்ஷிக்கும்படியான பக்தவாத்ஸல்யமுள்ளவர். அப்படியிருக்கவென்னை அனு தையென்றுநினைத்து என்னைக்குறித்து மனம்போனவாறுபாபவசனங்களையுரைத்தாய். இவ்வபராதத்திற்காக உனக்குக்கிடைக்கப்போகிற கொடுந்தண்டத்திற்குத்தப்புவாயோ? பதிவிரதையை யவமானித்து மொழிந்த வசனங்கள் வீண்போகுமோ! நீபிரம்மலோகத்திற் போயொளிந்தாலும் உன்சிரஸைக்குறித்துவருகிற ஸ்ரீரா பாணங்களுக்குத்தப்பஸாத்தியமோ!

౧౬. యథా దృప్తశ్చ మాతంగః శశశ్చ సహితో వనే। తథా ద్విరదవద్రామస్త్వం నీచ శశవత్స్మృతః॥

க௬. 𑌯𑌥𑌾 𑌦𑍃𑌪𑍍𑌤𑌶𑍍𑌚 𑌮𑌾𑌤𑌙𑍍𑌗𑌃 𑌶𑌶𑌶𑍍𑌚 𑌸𑌹𑌿𑌤𑍋 𑌵𑌨𑍇।
𑌤𑌥𑌾 𑌦𑍍𑌵𑌿𑌰𑌦𑌵𑌦𑍍𑌰𑌾𑌮𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨𑍀𑌚 𑌶𑌶𑌵𑌤𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌃॥

க௬. யதாத்ருப்தஶ்சமாதங்கஶ்ஶஶஶ்சஸஹிதோவநே।
ததாத்விரதவத்ராமஸ்த்வம்நீசஶஶவத்ஸ்ம்ருத:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
வநே-த்ருப்த:	காட்டில்-மதித்திருக்கிற	இராவணன் தன்னையானையாக நினைத்து ஸந்தோஷிக்கப்போகிறானென்று பரிஷ்கரிக்கிறாள்.	
மாதங்கஶ்ச-ஶஶஶ்ச	யானையும்-முசலும்	ராம:-த்விரதவத்	ஸ்ரீராகவன்-யானைபோல்
யதா-ஸஹித:	எப்படி (சண்டைசெய்ய)சேருமோ	ஸ்ம்ருத:	எண்ணப்படுகிறார் [கிறாய்.)
ததா	அப்படியே (சக்கிரவர்த்தித் திருமகனும் நீயும் சேர்ந்திருக்கிறீர்கள்)	த்வம்-நீசஶஶவத்	நீ-அல்பமுசலைப்போல் (எண்ணப்படு

தா-ம்—வனத்தில்ஸஞ்சரிக்கிற வோர்மத்தகஜத்திற்கும் முயலுக்கும் யுத்தம் நேரிடிலெப்படியோ அப்படியே யுத்தமின்றிமதித்திருக்கிற தோள்களையுடைய ஸ்ரீராகவனுக்கும் இராக்ஷத நீசனனவுனக்கும் பேர் நேரிடப்போகிறது. நீதான்மத்தகஜம்போன்ற திண்தோள்வலியனென்றெண்ணுதே. இராம ராவண யுத்தத்தில் ஸ்ரீராமன்கஜமென்றும் முயல்நீயென்றும் மூன்றுலகும்சொல்லும். கரபசயுத்தத்தில் சசநாசமெப்படி வியக்தமோ அப்படியே ஸ்ரீராகவஸக்தியில் உனதுநாசம்நிச்சயம்.

தா-ம்—அந்தஸத்ஜனஹிருதய குமுதசந்திரனை ஸ்ரீராமசந்திரனின்றி எனதுவாழ் என்னவாழ்வு. பிரம்மக்கியானத்தால் முதிர்ந்தமஹாத்மா, ஸத்சரித்திர குணஸம்பன்னன், சௌரியதைரியகுணுதிகளிற்சிறந்த சூரன், ஸர்வசத்துருஹந்தாவான ஆண்மகன், ஸர்வலோகமனுேகரன், இப்படிப்பட்ட புருஷோத்தமனைப் பர்த்தாவாகவடைவது ஸாமான்னியபாக்கியமோ. பாபியானயானவனைப்பிரிந்துவிட்டேனே. அவனைப்பிரிந்த பிறகு ஜீவிப்பதினும் யான்மரிப்பதேமேன்மை.

౪౬. అథవాన్యస్తశస్త్రౌ తౌ వనే మూలఫలాశనౌ। భ్రాతరౌ హి నరశ్రేష్ఠౌ సంవృత్తౌ వనగోచరౌ॥

௪௬. 𑌅𑌥𑌵𑌾𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑍌 𑌤𑍌 𑌵𑌨𑍇 𑌮𑍂𑌲𑌫𑌲𑌾𑌶𑌨𑍌।
𑌭𑍍𑌰𑌾𑌤𑌰𑍌 𑌹𑌿 𑌨𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍌 𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌤𑍌 𑌵𑌨𑌗𑍋𑌚𑌰𑍌॥

௪௬. அதவாந்யஸ்தஶஸ்த்ரௌதௌவநேமூலபலாஶிநௌ।
ப்ராதரௌஹிநரஶ்ரேஷ்டௌஸம்வ்ருத்தௌவநகோசரௌ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அதவா	இல்லாவிட்டால்	வநே-மூலபலாஶிநௌ-காட்டில்-கிழங்கு பழமிவைகளை ப	
நரஶ்ரேஷ்டௌ	புருஷோத்தமாளும்		க்ஷிப்பவர்களும் [மாக
ப்ராதரௌ	பிராதாக்களுமான	ந்யஸ்தஶஸ்த்ரௌ	விடப்பட்ட ஆயுதமுடையவர்களு
தௌ	அந்த (இராமலக்ஷ்மணுள்)	ஸம்வ்ருத்தௌஹி	ஆய்விட்டார்களா (யென்ன.)
வநகோசரௌ	அரண்ணியஸஞ்சாரிகளும்		

தா-ம்—புருஷசிரேஷ்டரான இராமலக்ஷ்மணரிருவரும் பின்றொடர்ந்தஸ்திரீஜாதியைரக்ஷிக்கவேண்டுமென்கிற கிருபையாலல்லாவிடினும் தங்கள் ஸ்வாதீனத்திலிருந்தஸ்திரீயை யபகரித்தசோரனைத் தண்டிக்கவேண்டுமென்கிற க்ஷத்திரியபௌருஷத்தாலாவது இராவணனைத்தேடிவரக் காணேனுகையால் அந்தரவியாக்கிரரிருவரும் வெறுப்புற்றுக் கோதண்டதூணகட்காதி வீரவேஷங்களையெறிந்துவானப்பிரஸ்தா சிரமங்கொண்டு கந்தமூலாசனராய் வனஸஞ்சாரிகளாய் விட்டனரோ, என்பாக்கியவிசேஷ மெப்படியிருக்கிறதோ, காணவில்லையே இராகவனையென்று துக்கித்தனள்.

౪౭. అథవా రాక్షసేంద్రేణ రావణేన దురాత్మనా। ఛద్మనా సాదితౌ శూరౌ భ్రాతరౌ రామలక్ష్మణౌ॥

௪௭. 𑌅𑌥𑌵𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌣 𑌰𑌾𑌵𑌣𑍇𑌨 𑌦𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌾।
𑌛𑌦𑍍𑌮𑌨𑌾 𑌸𑌾𑌦𑌿𑌤𑍌 𑌶𑍂𑌰𑍌 𑌭𑍍𑌰𑌾𑌤𑌰𑍌 𑌰𑌾𑌮𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍌॥

௪௭. அதவாராக்ஷஸேந்த்ரேணராவணேநதுராத்மநா।
ஸத்மநாஸாதிதௌஸூரௌப்ராதரௌராமலக்ஷ்மணௌ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அதவா	இல்லாவிட்டால் [தரர்களுமான	ராக்ஷஸேந்த்ரேண	இராக்ஷதப்பிரபுவுமான
ஸூரௌ-ப்ராதரௌ-	பராக்கிரமமுடையவர்களும்-ஸஹோ	ராவணேந	இராவணனால்
ராமலக்ஷ்மணௌ	இராமலக்ஷ்மணன்	ஸத்மநா	கபடத்தால்
துராத்மநா	துஷ்டபுத்தியுடையவனும்	ஸாதிதௌ	ஸம்ஹரிக்கப்பட்டார்களோ.

தா-ம்—அவ்வாரியபுத்திரர் மஹாவீரராகையால் ஆசிருதையான வென்னைக்கைசோர்ந்தவுடன் மனஞ்சோர்வடையாதுதிரும்பியடைய புருஷப்பிரயத்தனமவசியஞ்செய்வார்களே. திரிலோகத்திலுமவர்களையெதிர்த்துவெல்லவல்லவீரனில்லையாகையால்தங்களைவஞ்சித்தசோரனைச்சிக்ஷிக்கமுயலுவார்களே. ஆனலவர்கள் ஜீவனோடிருந்தாலன்றோ இக்காரியம் செய்வார்கள். ஒருவேளை தீமானன ஸ்ரீராகவனுடைய புத்தியையும் மயங்கச்செய்து என்னை யபகரித்துவந்த இக்கபடராக்ஷஸன் வஞ்சனையா லவர்களையுங்கொன்றனே. த்வந்த்வயுத்தத்தில் தனது நாசம் நிச்சயமாதலால் தனதுசத்துருக்களான அப்பிரபலவீரரை மாயையால்முடித்துவிட்டானே. இல்லாவிடி லிதற்குள்மூன்றுலோகமுந்தேடி சத்துருவையதிக்து தஹித்திருப்பார்களே. என்பாக்கியவிசேஷ மெப்படியிருக்கிறதோ அறிகிலேன்.

౪౮. సాహమేవంగతే కాలే మర్తుమిచ్ఛామి సర్వథా। న చ మే విహితో మృత్యురస్మిన్ దుఃఖేఽపి వర్తతి॥

௪௮. 𑌸𑌾𑌹𑌮𑍇𑌵𑌂𑌗𑌤𑍇𑌕𑌾𑌲𑍇𑌮𑌰𑍍𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿𑌸𑌰𑍍𑌵𑌥𑌾।
𑌨𑌚𑌮𑍇𑌵𑌿𑌹𑌿𑌤𑍋𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌦𑍁𑌃𑌖𑍇𑌽𑌪𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑌿॥

௪௮. ஸாஹமேவம்கதேகாலேமர்த்துமிச்சாமிஸர்வதா।
நசமேவிஹிதோம்ருத்யுரஸ்மிந்துக்கேபிவர்த்ததி।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸா-அஹம்	அப்படிப்பட்ட-நான்	இச்சாமி	கோருகிறேன்
ஏவம்-காலே	இந்தவிதம்-காலமானது	அஸ்மிந்-துக்கேபி	இந்த-துக்கத்திலும்
கதே (ஸதி)	முடிந்தவளவில்	ம்ருத்யுः-மே	மரணமானது-எனக்கு
ஸர்வதா	ஸர்வபிரகாரத்தாலும்	விஹிதः-நசவர்த்ததி	யோக்கியமாக-உண்டாகவில்லை.
மர்த்தும்	சாவதற்கு		(வர்த்ததி-என்கிறது ஆர்ஷம்)

தா-ம்—ஸ்ரீரகுவீரனு மிலக்ஷ்மணனு மிராவணமாயாவலையிற்சிக்கி மரித்திருந்தாராயின் யான்ஜீவிப்பதிலென்னபயன், பர்த்தாவையிழப்பதினுமேலானதுக்கம் ஸ்திரீகளுக்குண்டோ. இந்ததுக்கமானது காலாக்கினிபோலென்னைத்தகித்தும் எனதுதேகமொழியவில்லை. யான்ஸர்வப்பிரகாரத்தாலும் மரணத்தைக் கோருகிறேன். ஐயோ இந்தகடுந்துக்கத்திலுழன்று அவதிப்படுகிறேனல்லது சாகவில்லையே. மரணமென்பதெனக்கேர்ப்படவில்லையோ,

౪౯. ధన్యాః ఖలు మహాత్మానో మునయస్త్యక్తకిల్బిషాః। జితాత్మానో మహాభాగా యేషాం న స్తః ప్రియాప్రియే॥

௪௯. 𑌧𑌨𑍍𑌯𑌾𑌃𑌖𑌲𑍁𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍋𑌮𑍁𑌨𑌯𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌾𑌃।
𑌜𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍋𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌾𑌯𑍇𑌷𑌾𑌂𑌨𑌸𑍍𑌤𑌃𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌪𑍍𑌰𑌿𑌯𑍇॥

௪௯. தந்யாःகலுமஹாத்மாநோமுநயஸ்த்யக்தகில்பிஷாः।
ஜிதாத்மாநோமஹாபாகாயேஷாம்நஸ்தःப்ரியாப்ரியே॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
யேஷாம்-ப்ரியாப்ரியே	எவர்களுக்கு-இஷ்டானிஷ்டத்தில்	ஜிதாத்மாநः	ஜயிக்கப்பட்ட அந்தக்கரண முடையவரும்
நஸ்தः	(ஆசை) இல்லையோ [ம்		
தே-மஹாத்மாநः	அப்படிப்பட்ட-வெகுதைரியவந்தரு	மஹாபாகாः	மிகபாக்கியமுமுடைய
த்யக்தகில்பிஷாः	விடப்பட்ட பாபமுடையவரும்	முநயः-தந்யாःகலு	மகரிஷிகள்-புண்ணியவந்தரன்றோ.

தா-ம்—ஸுகதுக்கமென்கிற பரிணமத்திற்குட்பட்டு சிறிதுகாலமின்பமும் சிறிதுகாலந்துன்பமுமனுபவித்து கஷ்டப்படுகிற மத்விதாளுடையஜன்ம மென்னஜன்மம்! எவர்களுக் கிஷ்டாநிஷ்ட காலமென்கிற பரிணமமில்லையோ, எவர்கள் ஸர்வபாபங்களுக்குமதீதராய் சுத்தஸத்வாதிகுணதிசயத்தோடு தேஜோவந்தராய் விளங்குகின்றனரோ, எவர்கள் பஞ்சேந்திரியங்களைஜயித்துப் பிராகிருதவஸ்துக்களிலாசையற்றுத் தங்களது பிரம்மக்கியானபலத்தால் அப்பிராகிருத தேஜோமயமான பரமாத்மாவைத் தியானஞ்செய்து பேரானந்தமடைந்து ஸுகிக்கின்றனரோ, அப்பேர்ப்பட்ட மாஹாத்மாக்களான மஹரிஷிகளே தன்னியர், அவர்களேகிருதார்த்தர், அவர்களேபாக்கியசாலிகள். மற்றஸம்ஸாரிகளுடையஸுகத்தை ஸுகமென்னவு மொண்ணுமோ,

౫౦. ప్రియాన్న సంభవేద్దుఃఖమప్రియాదధికం భయమ్। తాభ్యాం హి యే వియుజ్యంతే నమస్తేషాం మహాత్మనామ్॥

௫௦. 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌨𑍍𑌨𑌸𑌮𑍍𑌭𑌵𑍇𑌦𑍍𑌦𑍁𑌃𑌖𑌮𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌧𑌿𑌕𑌂𑌭𑌯𑌮𑍍।
𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌹𑌿𑌯𑍇𑌵𑌿𑌯𑍁𑌜𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍॥

௫௦. ப்ரியாந்நஸம்பவேத்துக்கம்அப்ரியாததிகம்பயம்।
தாப்யாம்ஹீயேவியுஜ்யந்தேநமஸ்தேஷாம்மஹாத்மநாம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ப்ரியாத்	இஷ்டத்தால்	ஸம்பவேத்	உண்டாகும் (ஸுகமுண்டாகாதென்றர்த்தம்)
துக்கம்-நஸம்பவேத்	வியஸனம் - உண்டாகாது (ஸுகமே உண்டாகுமென்றர்த்தம்)	தாப்யாம்	அந்த இஷ்டாநிஷ்டங்களால்
		யே-வியுஜ்யந்தே	எவர் விடுபட்டிருக்கிறார்களோ
அப்ரியாத்	அநிஷ்டத்தால்	தேஷாம்	அப்படிப்பட்ட
அதிகம்-பயம்	வெகுவான-பயமானது	மஹாத்மநாம்-நம:	மஹாத்மாக்களுக்கு-தண்டனிடுகிறேன்.

தா-ம்—ஸுகம்ஸம்பவிக்கையில் ஸந்தோஷமுறுகிறதும் அஸுகம்ஸம்பவிக்கையில் துக்கமுறுகிறதும் உலகவியல்பு. ஸுகதுக்ககாலங்களில் இவ்விதம் மனோவிகாரமடையாது எப்பொழுதும் ஒத்திருக்குமுள்ளத்தராய், பரமாத்மத்தியானத்தால் திவ்வியானந்தங்கொண்டுவாழ்கிற யோகீசுவரரான மஹான்களே தன்னியர். அப்படிப்பட்ட மஹாபுருஷரை யான் நமஸ்கரிக்கிறேன்.

౫౧. సాహంత్యక్తా ప్రియార్హేణ రామేణ విదితాత్మనా। ప్రాణాంస్త్యక్ష్యామి పాపస్య రావణస్య గతా వశమ్॥

௫௧. സാഹംത്യക്താ പ്രിയാർഹേണ രാമേണ വിദിതാത്മനാ।
പ്രാണാംസ്ത്യക്ഷ്യാമി പാപസ്യ രാവണസ്യ ഗതാ വശം॥

௫௧. ஸாஹம்த்யக்தாப்ரியார்ஹேணராமேணவிதிதாத்மநா।
ப்ராணாம்ஸ்த்யக்ஷ்யாமிபாபஸ்யராவணஸ்யகதாவஶம்॥

இதி ஶ்ரீஸுந்தரகாண்டே - ஷட்விம்ஶஸ்ஸர்க:.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸா-அஹம்	அப்படிப்பட்ட (எனது) அன்பிற்குப் பாத்திரபூதரும்-துக்காவிருதையா	த்யக்தா	விடப்பட்டவளாக
		பாபஸ்ய-ராவணஸ்ய-	பாபியான-இராவணனுடைய
ப்ரியார்ஹேண	அன்போடுபூஜிப்பவரும் [ன நான்	வஶம்	ஸுவாதீனத்தை
விதிதாத்மநா	ஆத்மஜ்ஞானமுணர்ந்தவருமான	கதா	அடைந்தவளாக
ராமேண	ஸ்ரீராகவனால்	ப்ராணாந்-த்யக்ஷ்யாமி	உயிரை-விடுகிறேன்.

தா-ம்—ஸுகதுக்ககாலங்களில் ஏகமனதுடனிருக்கிற துறவிகளின்குணமகிமையைக் கொண்டாடுகிறயான் இஷ்டானிஷ்டங்களுக்கிலக்காய் மஹாக்கியாதாவும் எனதுபிரியத்திற்கருகருமான ஸ்ரீராகவனுடைய விரகத்தால்தபிக்கப்பட்டு, கடும்பாபியான இராவணனுடையஹிம்ஸையாற்கொளுத்தப்படுகிறேன். இத்துயரின்கொடுமைதாங்கமுடியாது பிராணனையொழிக்கிறேன் என்று துக்கித்தாள்.

ஸ்ரீஸந்மஹோராஞ்ஜகீ நாமத்திராவிட வியாக்க்யாந ஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்
இருபத்தாறுவதுஸர்க்கம் - முற்றிற்று.

இருபத்தேழாவதுஸர்க்கம்.

౧. ఇత్యుక్తాస్సీతయా ఘోరా రాక్షస్యః క్రోధమూర్ఛితాః। కాశ్చిజ్జగ్ముస్తదాఖ్యాతుం రావణస్య తరస్వినః॥

௧. ഇത്യുക്താസ്സീതയാ ഘോരാ രാക്ഷസ്യഃ ക്രോധമൂർഛിതാഃ।
കാശ്ചിജ്ജഗ്മുസ്തദാഖ്യാതും രാവണസ്യ തരസ്വിനഃ॥

௧. இத்யுக்தாஸ்ஸீதயாகோராராக்ஷஸ்ய:க்ரோதமூர்ச்சிதா:।
காஶ்சிஜ்ஜக்முஸ்ததாக்யாதும்ராவணஸ்யதரஸ்விந:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸீதயா	ஸீதையினால்	ததா	அப்பொழுது
இதி-உக்தா:	இந்தவிதம்-சொல்லப்பட்டவர்களும்	தரஸ்விந:	சூரனாகிய
கோரா:	குரூரைகளுமான	ராவணஸ்ய	இராவணனுக்கு
காஶ்சித்-ராக்ஷஸ்ய:	சில-இராக்ஷஸிகள்	ஆக்யாதும்	(இந்தஸமாசாரம்) சொல்வதற்கு
க்ரோதமூர்ச்சிதா:	கோபபரவசைகளாய்	ஜக்மு:	சென்றார்கள்.

தா-ம்.—இவ்விதமக்கமலலோசனனான ஸ்ரீராகவனைநினைத்துப்புலம்பி, அச்சரண்ணியன்பக்கல் சேருவதற்கு ஹேதுவைக்காணமையாலினி ஜீவதாரணஞ்செய்கிறதில்லை, இராக்ஷஸ நீசனான இராவணனை இடதுகாலாலும் ஸ்பரிசிக்கிறதில்லை, என்றிவ்வாறுசொல்லிக்கொண்டு, தேகத்தையொழிக்க வழிதேடிநிற்கிற பிராட்டியின் திடவாக்கியங்களைக்கேட்டு சிலராக்ஷஸிகள் குரோதமூர்ச்சிதைகளாய் இந்தஸங்கதிகளைத்தங்கள் மஹாராஜாவுக் குரைக்கவேண்டுமென்று இராவணனிடத்திற்கோடினார்கள்.

౨. తతస్సీతాముపాగమ్య రాక్షస్యో ఘోరదర్శనాః । పునః పరుషమేకార్థమనర్థార్థమథాబ్రువన్ ॥

౩. అద్యేదానీం తవానార్యే సీతే పాపవినిశ్చయే । రాక్షస్యో భక్షయిష్యంతి మాంసమేతద్యథాసుఖమ్ ॥

௨. 𑌤𑌤𑌸𑍍𑌸𑍀𑌤𑌾𑌮𑍁𑌪𑌾𑌗𑌮𑍍𑌯𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑍋𑌘𑍋𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌃।
𑌪𑍁𑌨𑌃𑌪𑌰𑍁𑌷𑌮𑍇𑌕𑌾𑌰𑍍𑌥𑌮𑌨𑌰𑍍𑌥𑌾𑌰𑍍𑌥𑌮𑌥𑌾𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍॥

௩. 𑌅𑌦𑍍𑌯𑍇𑌦𑌾𑌨𑍀𑌂𑌤𑌵𑌾𑌨𑌾𑌰𑍍𑌯𑍇𑌸𑍀𑌤𑍇𑌪𑌾𑌪𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑍇।
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑍋𑌭𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌮𑌾𑌂𑌸𑌮𑍇𑌤𑌦𑍍𑌯𑌥𑌾𑌸𑍁𑌖𑌮𑍍॥

௨. ததஸ்ஸீதாமுபாகம்யராக்ஷஸ்யோகோரதர்ஸநா:।
புந:பருஷமேகார்த்தமநர்த்தார்த்தமதாப்ருவந்॥

௩. அத்யேதாநீம்தவாநார்யேஸீதேபாபவிநிஸ்சயே।
ராக்ஷஸ்யோபக்ஷயிஷ்யந்திமாம்ஸமேதத்யதாஸுகம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத:-கோரதர்ஸநா:	பிறகு-பயங்கரமானபார்வையுடைய	ராக்ஷஸ்ய:	இராக்ஷஸஸ்திரீகள்
ராக்ஷஸ்ய:	(சில) இராக்ஷஸஸ்திரீகள்	யதாஸுகம்	ஸுகத்தையதிக்கிரமியாமல்
ஸீதாம்-உபாகம்ய	ஸீதையைப்பற்றி-ஸமீபத்தில்வந்து	இதாநீம்-பக்ஷயிஷ்யந்தி-	இப்பொழுது-தின்னப்போகிறார்கள்
அத-ஸீதே-பாபவிநிஸ்சயே-	பின்பு-ஓஸீதே-பாபத்திலுறுதியு	ஏகார்த்தம்	ஒரேஅர்த்தமுடையதும் [(என்கிற)
(ஹே) அநார்யே	வாராய்துஷ்டே [டையவளே	அநர்த்தார்த்தம்	ஆபத்தைப் பிரயோஜனமாயுடையது
அத்ய-தவ	இன்றையதினம்-உன்னுடைய	பருஷம்	கடினவசனத்தை [மான
ஏதத்-மாம்ஸம்	இந்த-மாம்ஸத்தை	புந:-அப்ருவந்	மறுபடியும்சொன்னார்கள்.

தா-ம்.—பிறகுகோரரூபமுள்ள இன்னஞ்சில ராக்ஷஸிகள் அன்னையையணுகி, அடி அஸத்தே! மஹாராஜாதிராஜனை இலங்கேசுவரனைச்சேர்ந்து ஸுகிக்கவிருப்பமுறாது அந்த அல்பனையேநினைத்துக் கண்ணீர்விடுகிறமந்தபுத்தே! ஸர்வபாபங்களிலும்கிகிருஷ்டபாபமான ஆத்மஹத்தியைச்செய்யவிச்சிக்கிறபாபிஷ்டே! இதுவரையில் நீ ஸுபுத்தியடைவாயென்றுன்னை மன்னித்திருந்தோம், இனியுன்னை ஜீவனோடுவைக்கோம், உனது மாம்ஸத்தை நாங்களிப்பொழுது பக்ஷிக்கப்போகிறோம், என்று கர்ணகடோரமான மொழிகளறைந்தனர். இதுவரையில், ஸீதே! நீ இராவணனையடையாயாகில் உன்னைஹிம்ஸிப்போம், பக்ஷிப்போமென்று பயமுறுத்தினவவர், எவ்விதத்திலும் ஸீதையின்மனதைவெல்ல முடியாதென்றுதெரிந்து, பிராட்டிக்கனர்த்தமான பக்ஷிப்போமென்கிற ஒரேகடுஞ்சொல்லை மொழிந்து வாய்மூடினர். அல்லது, இலங்கைக்கும்இராவணனுக்கும் தங்களுக்கும்நேரிடப்போகிற அனர்த்தஸூசகமாக, அந்தஜகன்மாதாவைப்பார்த்து, மஹாபராதத்திற்கிடமான அத்விதியார்த்தமுள்ள வக்கடுமொழியுரைத்து வாய்மூடினர்.

౪. సీతాం తాభిరనార్యాభిర్దృష్ట్వా సంతర్జితాం తదా । రాక్షసీ త్రిజటా వృద్ధా శయానా వాక్యమబ్రవీత్ ॥

౫. ఆత్మానం ఖాదతానార్యా న సీతాం భక్షయిష్యథ । జనకస్య సుతామిష్టాం స్నుషాం దశరథస్య చ ॥

౬. స్వప్నో హ్యద్య మయా దృష్టో దారుణో రోమహర్షణః । రాక్షసానామభావాయ భర్తురస్యా భవాయ చ ॥

௪. 𑌸𑍀𑌤𑌾𑌂𑌤𑌾𑌭𑌿𑌰𑌨𑌾𑌰𑍍𑌯𑌾𑌭𑌿𑌰𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌸𑌂𑌤𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌂𑌤𑌦𑌾।
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌤𑍍𑌰𑌿𑌜𑌟𑌾𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌶𑌯𑌾𑌨𑌾𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥

௫. 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂𑌖𑌾𑌦𑌤𑌾𑌨𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑌸𑍀𑌤𑌾𑌂𑌭𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌥।
𑌜𑌨𑌕𑌸𑍍𑌯𑌸𑍁𑌤𑌾𑌮𑌿𑌷𑍍𑌟𑌾𑌂𑌸𑍍𑌨𑍁𑌷𑌾𑌂𑌦𑌶𑌰𑌥𑌸𑍍𑌯𑌚॥

௬. 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍋𑌹𑍍𑌯𑌦𑍍𑌯𑌮𑌯𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑍋𑌦𑌾𑌰𑍁𑌣𑍋𑌰𑍋𑌮𑌹𑌰𑍍𑌷𑌣𑌃।
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑌾𑌮𑌭𑌾𑌵𑌾𑌯𑌭𑌰𑍍𑌤𑍁𑌰𑌸𑍍𑌯𑌾𑌭𑌵𑌾𑌯𑌚॥

௪. ஸீதாம்தாபிரநார்யாபிர்த்ருஷ்ட்வாஸம்தர்ஜிதாம்ததா।
ராக்ஷஸீத்ரிஜடாவ்ருத்தாஸயாநாவாக்யமப்ரவீத்॥

௫. ஆத்மாநம்காததாநார்யாநஸீதாம்பக்ஷயிஷ்யத।
ஜநகஸ்யஸுதாமிஷ்டாம்ஸ்நுஷாம்தஸரதஸ்யச॥

௬. ஸ்வப்நோஹ்யத்யமயாத்ருஷ்டோதாருணோரோமஹர்ஷண:।
ராக்ஷஸாநாமபாவாயபர்த்துரஸ்யாபவாயச॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அநார்யாபி:	அயோக்யர்களான	ஸயாநா	படுத்திருப்பவளும்
தாபி:	அந்தஇராக்ஷஸிகளால்	த்ரிஜடாநாம	திரிஜடையென்பவளுமான
ஸந்தர்ஜிதாம்	நன்ருய் மிரட்டப்பட்ட	ராக்ஷஸீ	இராக்ஷஸியானவள்
ஸீதாம்	ஸீதையை	ததா	அப்பொழுது
த்ருஷ்ட்வா	பார்த்து	வாக்யம்	(பின்வருமாறு) வார்த்தையை
வ்ருத்தா	கிழவியும்	அப்ராவீத்	சொன்னாள்

பதம்.	உரை.	பதம்.	உரை.
இராக்ஷஸாநாம்	இராக்ஷதர்களுடைய	(ஹே) அநார்யா:	ஓதுஷ்டைகளான (இராக்ஷஸிகளே)
அபாவாய	இல்லாமையும்பொருட்டும்	ஆத்மாநம்	என்னை
அஸ்யா:-பர்த்து:	இவளுடைய-பதியினுடைய	காதத	பக்ஷியுங்கள்
பவாயச	க்ஷேமத்தையும்பொருட்டும்	ஜநகஸ்ய-ஸுதாம்	ஜனகருக்கு-புத்திரியும்
தாருண:	பயங்கரமானதும்	தஶரதஸ்ய-இஷ்டாம்-ஸ்நுஷாம்ச-தசரதருக்கு - இஷ்டமான வளும்-நாட்டுப்பெண்ணுமான	
ரோமஹர்ஷண:	மயிர்க்கூச்செறிகிறதுமான		
ஸ்வப்ந:-அத்ய	கனவானது-இப்பொழுது	ஸீதாம்	ஸீதையை
மயா-த்ருஷ்ட:	என்னால்-பார்க்கப்பட்டது	நபக்ஷஇஷ்யத	பக்ஷியாதையுங்கள்.

தா-ம்.—இவ்விதமவ்வஞரியைகளாலதட்டப்பட்டபிராட்டியைப்பார்த்து விருத்தையும்சயனித்திருப்பவளுமான திரிஜடையென்பவள் பின்வரும்வாக்கியத்தை நவின்றனள். துஷ்டபுத்திகொண்ட அடிகுடிகேடிகளே! பரமஸாதுவான வித்திருமாதைப்பார்த்து மஹாபசாரவசனங்கள்மொழிந்த காதுகிகளே! திவ்வியரூபவதியும் குணவதியும் மனோஹரையுமான இவ்விராஜசெல்வத்தையா பக்ஷிக்கப்போகிறீர்கள். உங்களுக்குபலிகொடுப்பதற்காகவோ ஜனகமஹாராஜன் இப்பார்மடந்தைஸுதையை உயிரினுமேன்மையாகவளர்த்தெடுத்தார். உங்களது தீவாயிலிடுவதற்காகவோ தசரதமஹாராஜா தனதருமைநாட்டுப்பெண்ணை வனத்திற்கனுப்பினூர். தர்மமுணராதநீசைகளே! இப்பரதேவதையின் மஹத்துவமறியாத மூடைகளே! தேவியைப்பார்த்திவ்வாறுபிதற்றவேண்டாம். அவ்வாரியபுத்திரிக்கு யாதொருதீங்கையும் விளைக்கவேண்டாம். உங்களுக்குப் பசிமிகுந்திருந்தால், நரமாமஸத்திலாசையதிகரித்திருந்தால், இதோபழுத்தபழம்போல் முதிர்ந்தசரீரத்தோடு நானிருக்கிறேன், என்னைப்பக்ஷியுங்கள், பசிதீருங்கள். அடிபாபிகளே! என்னபுத்திகொண்டீர்கள்! இதென்னவிநாசஹேது! நீங்கள் விபரீதபுத்திகொண்டதற்கிணங்க நானுமதிபயங்கரமான வோர்ஸ்வப்னங்கண்டேன். உண்டாகப்போகிறது இராக்ஷதருக்கனர்த்தம்! மருந்துக்குமொருராக்ஷதனில்லையென்னும்படி இப்பிருதிவியிலுள்ளஸகலராக்ஷதரும்அடியோடழிந்துபோவதற்குவந்துவிட்டதுகாலம்! பூமடந்தைபோலநிஸ்ஸந்தாமாயும், பார்மடந்தைபோல் சாந்தஸ்வரூபியாயும், உங்களதுஹிம்ஸையெல்லாம் பொறுத்து உங்களைக்கோபியாது தனதுபாக்கிய ஶூன்னியத்தையே நிந்தித்து பர்த்திருத்தியானத்துடனெழுந்தருளியிருக்கிற இம்மிதிலர்கோன்செல்வத்திற்கும் இவளுடையபர்த்தாவான ஸ்ரீரகுநாதனுக்கும் உண்டாகப்போகிறதுமங்களம்! இவ்வேழைதான் ஸுகபடப்போகிறுள். ஐசுவரியத்தாலிறுமாந்து அதர்மத்தைச்செய்கிற உங்கள் பிரபுதான் கேடடையப்போகிறுன். அடிராக்ஷஸிகளே! கண்டேனொருபயங்கரமானஸ்வப்பினம். அதை நினைத்தமாத்திரத்தில் மயிர்க்கூச்சுண்டாகிறதே! அது அதிதாருணம், அதிக்கிலேசகரம், என்னசொல்லுவேன்! பின்மாலையிற்கண்ட ஸ்வப்பினத்திற்குச் சீக்கிரபலனென்பார்களே. ஆகிலும் நானென்னசெய்வேன். இராக்ஷஸநாசஸூசகமான துஸ்வப்பினத்தை உண்மையாகவே இப்பொழுதுதான் கண்டேன்.

౭. ఏవముక్తాస్త్రిజటయా రాక్షస్యః క్రోధమూర్ఛితాః । సర్వా ఏవాబ్రువన్ భీతాస్త్రిజటాం తామిదం వచః ॥
కథయస్వ త్వయా దృష్టః స్వప్నోఽయం కీదృశో నిశి ।

௭. 𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌜𑌟𑌯𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑌮𑍂𑌰𑍍𑌛𑌿𑌤𑌾𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌾 𑌏𑌵𑌾𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍 𑌭𑍀𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌜𑌟𑌾𑌂 𑌤𑌾𑌮𑌿𑌦𑌂 𑌵𑌚𑌃 ॥
𑌕𑌥𑌯𑌸𑍍𑌵 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑌃 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍋𑌽𑌯𑌂 𑌕𑍀𑌦𑍃𑌶𑍋 𑌨𑌿𑌶𑌿 ।

௭. ஏவமுக்தாஸ்த்ரிஜடயாராக்ஷஸ்ய:க்ரோதமூர்ச்சிதா:।
ஸர்வாயேவாப்ருவந்பீதாஸ்த்ரிஜடாம்தாமிதம்வச:॥
கதயஸ்வத்வயாத்ருஷ்ட:ஸ்வப்நோயம்கீத்ருஶோநிஶி।

பதம்.	உரை.	பதம்.	உரை.
க்ரோதமூர்ச்சிதா:	கோபத்தால்மெய்மறந்தவர்களான	த்வயா-நிஶி	உன்னால்-இரவில்
ராக்ஷஸ்ய:	இராக்ஷஸிகள்	கீத்ருஶ:-அயம்-ஸ்வப்ந:-எப்படிப்பட்ட-இந்த-கனவு	
த்ரிஜடயா	திரிஜடையினால்	த்ருஷ்ட:	பார்க்கப்பட்டது
ஏவம்-உக்தா:	இந்தவிதம் - சொல்லப்பட்டவர்களாகையால்	கதயஸ்வ	சொல்லு (என்கிற)
		இதம்-வச:	இந்த-வார்த்தையை
ஸர்வாயேவ	எல்லோருமே	தாம்-த்ரிஜடாம்	அந்த-திரிஜடையை (குறித்து)
பீதா: (ஸத்ய:)	பயப்பட்டவர்களாய்க்கொண்டு	அப்ருவந்	சொன்னூர்கள்.

தா-ம்.—ஸீதை இராவணனுக் கபிமதையாகுநிமித்தம் இரவுமுழுதும்நித்திரைசெய்யாது, ஈட்டிபாலாஶூலகட்காயுதங்களைச்சுழற்றி, அடிக்கிறோம், குத்துகிறோம், கொல்லுகிறோம், தின்கிறோம், என்று கொக்கரித்துக் குரோதமூர்ச்சிதராய்ப் பிராட்டியைஹிம்ஸித்த அவ்விராக்ஷஸாதமிகள், இராவணனுக் கனிஷ்டத்தையும் ஸீதைக்கிஷ்டத்தையுங்குறிக்கிற வோர்பயங்கரமான கனவைக்கண்டேனென்றுசொன்ன திரிஜடைவாக்கியத்தைக்கேட்டு, கோபமும்கொக்கரிப்பும் பரபரப்புமடங்கி,பிரமையுற்றுத்திகிலடைந்து,அவ்விருத்தராக்ஷஸியைப்பார்த்து,திரிஜடே! இவ்விரவில் நீகண்டஸ்வப்னம்யாது? இராவணனுக்கு விபத்தையும் ஸீதைக்குஸம்பத்தையுமெப்படியூகித்தாய்? அதிபயங்கரமும் அதிதாருணமுமானஸ்வப்னமென்கிறுயே, அதைக்கேட்கயாம் ஆவல்கொண்டிருக்கின்றனம். எங்களுக்கதைதெரிவிக்கக்கடவாய், என்றுதிரிஜடையைப் பிரார்த்தித்தனர்.

౮. తాసాంశ్రుత్వాతువచనంరాక్షసీనాంముఖాచ్చ్యుతమ్ ॥ ఉవాచవచనంకాలేత్రిజటాస్వప్నసంశ్రితమ్।

௮. 𑌤𑌾𑌸𑌾𑌂𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾𑌤𑍁𑌵𑌚𑌨𑌂𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌨𑌾𑌂𑌮𑍁𑌖𑌾𑌚𑍍𑌚𑍍𑌯𑍁𑌤𑌮𑍍॥
𑌉𑌵𑌾𑌚𑌵𑌚𑌨𑌂𑌕𑌾𑌲𑍇𑌤𑍍𑌰𑌿𑌜𑌟𑌾𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑍍।

௮. தாஸாம்ஶ்ருத்வா துவசநம்ராக்ஷஸீநாம்முகாச்ச்யுதம்॥
உவாசவசநம்காலே த்ரிஜடாஸ்வப்நஸம்ஶ்ரிதம்।

பதம்.	உரை.	பதம்.	உரை.
தாஸாம்-ராக்ஷஸீநாம்	அந்த இராக்ஷஸிகளுடைய	காலே	விடியற்காலத்தில்
முகாத்-ச்யுதம்	முகத்திலிருந்து-வெளிவந்த	ஸ்வப்நஸம்ஶ்ரிதம்	கனவிலுண்டான
வசநம்-ஶ்ருத்வா	வார்த்தையை-கேட்டு	வசநம்	வார்த்தையை (ஸங்கதியை)
த்ரிஜடாது	திரிஜடையானவள்	உவாச	(பின்வருமாறு) சொன்னாள்.

தா-ம்.—இவ்விதமவ்விராக்ஷஸிகளால் வினவுற்றதிரிஜடை, விடியற்காலத்திற்றான்கண்ட ஸ்வப்னவிசேஷத்தை ஸ்மரித் தப்பொழுதுகண்டவண்ணமுரைக்க வாரம்பித்தனள்.

౯. గజదంతమయీందివ్యాంశిబికామంతరిక్షగామ్॥యుక్తాంహంససహస్రేణస్వయమాస్థాయరాఘవః।
౧౦. శుక్లమాల్యాంబరధరోలక్ష్మణేనసమాగతః॥

௯. 𑌗𑌜𑌦𑌨𑍍𑌤𑌮𑌯𑍀𑌂𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌂𑌶𑌿𑌬𑌿𑌕𑌾𑌮𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌗𑌾𑌮𑍍॥
𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌂𑌹𑌂𑌸𑌸𑌹𑌸𑍍𑌰𑍇𑌣𑌸𑍍𑌵𑌯𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌯𑌰𑌾𑌘𑌵𑌃।
௧௦. 𑌶𑍁𑌕𑍍𑌲𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑍋𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍇𑌨𑌸𑌮𑌾𑌗𑌤𑌃॥

௯. கஜதந்தமயீம்திவ்யாம்ஶிபிகாமந்தரிக்ஷகாம்॥
யுக்தாம்ஹம்ஸஸஹஸ்ரேணஸ்வயமாஸ்தாயராகவ:।
௧௦. ஶுக்லமால்யாம்பரதரோலக்ஷ்மணேநஸமாகத:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராகவ:	ஸ்ரீராகவன்	ஹம்ஸஸஹஸ்ரேண	ஹம்ஸத்தினுயிரத்தோடு
ஶுக்லமால்யாம்பரதர:-வெளுப்புவஸ்திரம் வெண்மாலை இவைகளைதரித்தவராக		யுக்தாம்	கூடினதுமான
		ஶிபிகாம்	பல்லக்கை
கஜதந்தமயீம்	யானைத்தந்தத்தாலியற்றப்பட்டதும்	ஸ்வயம்-ஆஸ்தாய	தானே-அடைந்து
திவ்யாம்	தெய்வஸம்பந்தமானதும்	லக்ஷ்மணேநஸஹ	இளையவரோடுகூட
அந்தரிக்ஷகாம்	ஆகாயத்திற்செல்லுவதும்	ராகவ:-ஆகத:	ஸ்ரீராகவன் - (இவ்விலங்கைக்கு) வந்[தார்.

தா-ம்.—அடிராக்ஷஸிகளே! யான்கண்டஸ்வப்பினத்தில் ஸ்ரீராகவக்ஷேமத்தைக்குறிக்கிற பாகத்தையுரைக்கின்றனன்கேளுங்கள். இம்மின்னிடையாளுக்குமாலையிட்ட மஹாப்பிரபுவான ஸ்ரீராகவன் அதிதாவள்ளியமானபட்டாடையுடுத்து மிகவெண்மையானமாலைசூடி, கஜதந்தமயமாயும்தெய்வகிர்மிதமாயும் சுவேதநிறமுள்ள ஹம்ஸஸஹஸ்ரத்தால் தாங்கப்பட்டதாயுமிருக்கிற ஓர் சிறந்தபல்லக்கில், தானே இலக்ஷ்மணனோடு சென்றேறி சுவேதமண்டலம்போல் ஆகாசமார்க்கத்தில் இலங்காபிமுகமாக வெழுந்தருளக்கண்டேன்.

౧౧. స్వప్నేచాద్యమయాదృష్టాసీతాశుక్లాంబరావృతా । సాగరేణపరిక్షిప్తంశ్వేతంపర్వతమాస్థితా॥
రామేణసంగతాసీతాభాస్కరేణప్రభాయథా।

௧௧. 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇𑌚𑌾𑌦𑍍𑌯𑌮𑌯𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌸𑍀𑌤𑌾𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌮𑍍𑌬𑌰𑌾𑌵𑍃𑌤𑌾।
𑌸𑌾𑌗𑌰𑍇𑌣𑌪𑌰𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌂𑌶𑍍𑌵𑍇𑌤𑌂𑌪𑌰𑍍𑌵𑌤𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾॥
𑌰𑌾𑌮𑍇𑌣𑌸𑌂𑌗𑌤𑌾𑌸𑍀𑌤𑌾𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑍇𑌣𑌪𑍍𑌰𑌭𑌾𑌯𑌥𑌾।

௧௧. ஸ்வப்நேசாத்யமயாத்ருஷ்டாஸீதாஶுக்லாம்பராவ்ருதா।
ஸாகரேணபரிக்ஷிப்தம்ஶ்வேதம்பர்வதமாஸ்திதா॥
ராமேணஸங்கதாஸீதாபாஸ்கரேணப்ரபாயதா।

பதம்.	உரை.	பதம்.	உரை.
அத்ய-மயா	இப்பொழுது-என்னால்	ஆஸ்திதா	அடைந்தவளும்
ஸ்வப்நே-ஸீதா	கனவில்-ஸீதையானவள்	பாஸ்கரேண-ப்ரபாயதா-ஸூரியனோடு-காந்திபோல்	
ஶுக்லாம்பராவ்ருதா-வெண்ணுடையால் சுற்றப்பட்டவளும்		ராமேண-ஸங்கதா	ஸ்ரீராகவனோடு-சேர்ந்தவளுமான
ஸாகரேண	ஸமுத்திரத்தில்	ஸீதாச	ஸீதையும்
பரிக்ஷிப்தம்-ஶ்வேதம்-பர்வதம்-இரக்ஷிக்கப்பட்ட-வெண்மை[யான-பருவதத்தை		த்ருஷ்டா	பார்க்கப்பட்டாள்.

தா-ம்.—அழுக்காடையுடுத்துக் கண்ணீருங்கண்ணுமாயென்கண்ணெதிரிலிதோ கஷ்டப்படுகிற இந்த ஸீதை க்ஷணகாலத்திற்குமுன் என் துஸ்வப்னத்தில், சுவேதவஸ்திரந்தரித்து, மஹோததிமத்தியிலுள்ளவோர் சுவேதகிரியையடைந்து, அங்குமணத்திருக்கோலத்துடன் வீற்றிருந்து பிரபையானது பாஸ்கரனோடு சேருவதுபோல், பர்த்திருதேஜஸ்ஸுக்கும் யசஸ்ஸுக்குக் காரணபூதையானவிவள் அர்க்ககுலதிலகனான ஸ்ரீராகவனோடுசேருகிற மங்களமஹோத்ஸவத்தையான்கண்டேன்.

౧౨. రాఘవశ్చ మయా దృష్టశ్చతుర్దంతం మహాగజమ్॥ ఆరూఢశ్శైలసంకాశం చచార సహలక్ష్మణః॥

௧௨. 𑌰𑌾𑌘𑌵𑌶𑍍𑌚 𑌮𑌯𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌨𑍍𑌤𑌂 𑌮𑌹𑌾𑌗𑌜𑌮𑍍॥
𑌆𑌰𑍂𑌢𑌶𑍍𑌶𑍈𑌲𑌸𑌙𑍍𑌕𑌾𑌶𑌂 𑌚𑌚𑌾𑌰 𑌸𑌹𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌃।

௧௨. ராகவஶ்சமயாத்ருஷ்டஶ்சதுர்தந்தம்மஹாகஜம்॥
ஆரூடஶ்ஶைலஸங்காஶம்சசாரஸஹலக்ஷ்மண:।

பதம்.	உரை.	பதம்.	உரை.
மயா-சதுர்தந்தம்	என்னால்-நான்குதந்தங்களை யுடையது	ராகவஶ்ச-த்ருஷ்ட:	இராகவனும்-பார்க்கப்பட்டார்
ஶைலஸங்காஶம்	பருவதத்திறகொப்பானதுமான [ம்	லக்ஷ்மண:	இளையவரும்
மஹாகஜம்	பெரியயானையை	ஸஹ-சசார-	(கூடஸீதையையுத்தேசித்து) ஸஞ்சரித்
(ஶிபிகாத:) ஆரூட:	(பல்லக்கிலிருந்து) ஏறினவராக		தார்.

தா-ம்.—பிறகந்தநரோத்தம னவ்வெண்பல்லக்கைவிட்டுப்பெரியகிரிபோலத்யுன்னதமும் கம்பீராகி ருதியுமுடைய, சதுர்த்தந்தஸகிதமான ஓர் சுவேதகஜசிரேஷ்டத்தின்மேலேறி இலக்ஷ்மணனோடு ஸீதாகிமித் தம் ஸஞ்சரிக்கயான்கண்டேன்.

౧౩. తతస్తౌ నరశార్దూలౌ దీప్యమానౌ స్వతేజసా॥ శుక్లమాల్యాంబరధరౌ జానకీం పర్యుపస్థితౌ॥

௧௩. 𑌤𑌤𑌸𑍍𑌤𑍌 𑌨𑌰𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲𑍌 𑌦𑍀𑌪𑍍𑌯𑌮𑌾𑌨𑍌 𑌸𑍍𑌵𑌤𑍇𑌜𑌸𑌾॥
𑌶𑍁𑌕𑍍𑌲𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑍌 𑌜𑌾𑌨𑌕𑍀𑌂 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑍌।

௧௩. ததஸ்தௌநரஶார்தூலௌதீப்யமானௌஸ்வதேஜஸா॥
ஶுக்லமால்யாம்பரதரௌஜாநகீம்பர்யுபஸ்திதௌ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத:-ஸ்வதேஜஸா	பிறகு-தம்காந்தியால்	தௌ-நரஶார்தூலௌ	அந்த-நரசிரேஷ்டர்கள்
தீப்யமானௌ	பிரகாசித்துக்கொண்டிருக்கிறவரும்	ஜாநகீம்	ஸீதையை
ஶுக்லமால்யாம்பரதரௌ -	வெண்பட்டுவெண்மாலைஇவைக ளைதரித்திருப்பவர்களுமான	பர்யுபஸ்திதௌ	ஸமீபித்திருந்தார்கள்.

தா-ம்.—பிறகுதங்களுக்கு ஸ்வகியமான அப்பிராகிருததேஜஸ்ஸால் அர்க்கமண்டலங்கள்போல் ஜ்வ லிக்கிற இராமலக்ஷ்மணரென்னு நரபுங்கவர் வெண்பட்டாடைகளணிந்து வெண்மலர்மாலைகள்தரித்து ஸுந் தரத் திருக்கோலததுடன் ஜானகியைஸமீபிக்க யான்கண்டேன்.

౧౪. తతస్తస్య నగస్యాగ్రే హ్యాకాశస్థస్య దంతినః॥ భర్త్రా పరిగృహీతస్య జానకీ స్కంధమాశ్రితా।

௧௪. 𑌤𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌨𑌗𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑍇 𑌹𑍍𑌯𑌾𑌕𑌾𑌶𑌸𑍍𑌥𑌸𑍍𑌯 𑌦𑌨𑍍𑌤𑌿𑌨𑌃॥
𑌭𑌰𑍍𑌤𑍍𑌰𑌾 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍀𑌤𑌸𑍍𑌯 𑌜𑌾𑌨𑌕𑍀 𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾।

௧௪. ததஸ்தஸ்யநகஸ்யாக்ரேஹ்யாகாஶஸ்த்தஸ்யதந்திந:॥
பர்த்ராபரிக்ருஹீதஸ்யஜாநகீஸ்கந்தமாஶ்ரிதா।

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத:-தஸ்ய-நகஸ்ய-அக்ரே-	பின்பு-அந்தசுவேத-பருவதத்தி னுடைய-நுனியில்.	ஆகாஶஸ்த்தஸ்ய-தந்திந:-	ஆகாசத்திலிருக்கிற-யானையினுடை [ய
		ஸ்கந்தம் *	புஜத்தை
பர்த்ரா-பரிக்ருஹீதஸ்ய	(தன்) நாயகனால்-கிரஹிக்கப்பட்டதும்	ஜாநகீ-ஆஶ்ரிதா	ஸீதை-அடைந்தாள்

தா-ம.—ஆழ்கடல்மத்தியில், ஓர்தவளகிரிநுனியில்வஸித்தஸீதை, விசும்பளவிலுயர்ந்து தனதுபர்த்தி ருபரிக்கிரஹீதமானவெண்கஜத்தின்மீதேறி பர்த்திருஸஹிதையாய்வீற்றிருக்க யான்கண்டேன்.

౧౫. భర్తురంకాత్సముత్పత్య తతః కమలలోచనా। చంద్రసూర్యౌ మయా దృష్టా పాణినా పరిమార్జతీ।

௧௫. 𑌭𑌰𑍍𑌤𑍁𑌰𑌙𑍍𑌕𑌾𑌤𑍍𑌸𑌮𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌯 𑌤𑌤𑌃 𑌕𑌮𑌲𑌲𑍋𑌚𑌨𑌾॥
𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍂𑌰𑍍𑌯𑍌 𑌮𑌯𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾 𑌪𑌾𑌣𑌿𑌨𑌾 𑌪𑌰𑌿𑌮𑌾𑌰𑍍𑌜𑌤𑍀।

௧௫. பர்துராங்காத்ஸமுத்பத்யதத:கமலலோசநா॥
சந்த்ரஸூர்யௌமயாத்ருஷ்டாபாணிநாபரிமார்ஜதீ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத:-பர்த்து:-அங்காத்-ஸமுத்பத்ய-	பின்பு-நாயகனுடைய-மடியில்நின்று-கிளம்பி	சந்த்ர-ஸூர்யௌ	சந்திரன்-ஸூரியன் (இவர்களை)
		பாணிநா-பரிமார்ஜதீ	கையினால்-தொடுகிறவளாக
கமலலோசநா	தாமரைபுஷ்பம் போன்ற கண்களையுடைய (ஸீதை)	த்ருஷ்டா	(என்னால்) பார்க்கப்பட்டனள்.

* 𑌆𑌰𑍋𑌹𑌣𑌂 𑌗𑍋𑌵𑍃𑌷𑌕𑍁𑌞𑍍𑌜𑌰𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌶𑍈𑌲𑌾𑌗𑍍𑌰𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑍀𑌨𑌾𑌮𑍍। 𑌵𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍁𑌲𑍇𑌪𑍋 𑌰𑍁𑌦𑌿𑌤𑌂 𑌮𑍃𑌤𑌂 𑌚 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇𑌷𑍍𑌵𑌗𑌮𑍍𑌯𑌾𑌗𑌮𑌨𑌂 𑌚 𑌧𑌨𑍍𑌯𑌮𑍍॥ பசு, எருது, யானை, உப்பரிகை, பருவதத்தின்சிகரம், மரமிவைகளையேறுகிறதும், கோமயாதிகளைப்பூசிக்கொள்ளுவதும், அழுகிறதும், சாகிறதும், சேரத்தகாதஸ்திரீகளைச் சேருகி றதுமான இந்தஸ்வப்னங்களைக்காணின், சுபமென்று ஸ்வப்னத்தியாயதிலிருக்கிறபடியால் ஸ்ரீராகவன் யானையேறினதா கக்கண்டவிஸ்வப்னத்தால் அவருக்கு அதிகமங்களமுண்டாகுமென்று சொல்லப்படுகிறது.

தா-ம்—வானளாவிதுயர்ந்த வெண்கஜத்தின்மீது ஸ்ரீராகவனுடைய மடியிலுட்கார்ந்திருந்த இக்கமலக் கண்ணினுள் எழுந்திருந்து ஸூரியசந்திரரிருவரையும் தனது திருக்கையினால் தாவிப்பிடிக்கயான்கண்டேன்.

౧౮. తతస్తాభ్యాం కుమారాభ్యామాస్థితస్స గజోత్తమః॥ సీతయా చ విశాలాక్ష్యా లంకాయా ఉపరిస్థితః।

௧௮. 𑌤𑌤𑌸𑍍𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌕𑍁𑌮𑌾𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌸 𑌗𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌃॥
𑌸𑍀𑌤𑌯𑌾 𑌚 𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌾 𑌲𑌙𑍍𑌕𑌾𑌯𑌾 𑌉𑌪𑌰𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃।

௧௮. ததஸ்தாப்யாம்குமாராப்யாம் ஆஸ்திதஸ்ஸகஜோத்தம:।
ஸீதயாசவிஶாலாக்ஷ்யாலங்காயாஉபரிஸ்த்தித:।

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத:-தாப்யாம்-குமாராப்யாம்-பின்பு-அந்த - இராஜகுமாரர்களால்			ஸீதையோடு
ஆஸ்தித:-ஸ:-கஜோத்தம:-ஏறப்பட்ட - அந்த - கஜஶிரேஷ்டமானது		லங்காயா:-உபரி ஸ்தித:	இலங்கையினுடைய-மேல்பாகத்தில் இருந்தது.
விஶாலாக்ஷ்யா-ஸீதயாச - அகன்று - நீண்டகண்களையுடைய			

தா-ம்—வடிவங்கொண்ட வனங்களொனும்படி திவ்வியரூபவான்களும் யுவாக்களுமான அவ்விராமலக்ஷ்மணரும் இப்பங்கயக்கண்ணினளுமேறப்பெற்ற அந்த கஜஶிரேஷ்டமானது இராவணபரிபாலிதமான இந்நகர்க்குமேல் ஆகாசத்தில்வந்துநிற்க யான்கண்டேன்.

౧౯. పాండురర్షభయుక్తేన రథేనాష్టయుజా స్వయమ్॥ ఇహోపయాతః కాకుత్స్థస్సీతయా సహ భార్యయా।

౨౦. లక్ష్మణేన సహ భ్రాత్రా సీతయా సహ వీర్యవాన్ * ఆరుహ్య పుష్పకం దివ్యం విమానం సూర్యసన్నిభమ్।

౨౧. ఉత్తరాం దిశమాలోక్య జగామ పురుషోత్తమః। ఏవం స్వప్నే మయా దృష్టో రామో విష్ణుపరాక్రమః।

౨౨. లక్ష్మణేన సహ భ్రాత్రా సీతయా సహ భార్యయా॥

௧௯. 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌰𑌰𑍍𑌷𑌭𑌯𑍁𑌕𑍍𑌤𑍇𑌨 𑌰𑌥𑍇𑌨𑌾𑌷𑍍𑌟𑌯𑍁𑌜𑌾 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍॥
𑌇𑌹𑍋𑌪𑌯𑌾𑌤𑌃 𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥𑌃 𑌸𑍀𑌤𑌯𑌾 𑌸𑌹 𑌭𑌾𑌰𑍍𑌯𑌯𑌾।

௨௦. 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍇𑌨 𑌸𑌹 𑌭𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑌾 𑌸𑍀𑌤𑌯𑌾 𑌸𑌹 𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍॥
𑌆𑌰𑍁𑌹𑍍𑌯 𑌪𑍁𑌷𑍍𑌪𑌕𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌵𑌿𑌮𑌾𑌨𑌂 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌮𑍍।

௨௧. 𑌉𑌤𑍍𑌤𑌰𑌾𑌂 𑌦𑌿𑌶𑌮𑌾𑌲𑍋𑌕𑍍𑌯 𑌜𑌗𑌾𑌮 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌃॥

௨௨. 𑌏𑌵𑌂 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇 𑌮𑌯𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑍋 𑌰𑌾𑌮𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌃।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍇𑌨 𑌸𑌹 𑌭𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑌾 𑌸𑍀𑌤𑌯𑌾 𑌸𑌹 𑌭𑌾𑌰𑍍𑌯𑌯𑌾॥

௧௯. பாண்டுரர்ஷபயுக்தேநரதேநாஷ்டயுஜாஸ்வயம்॥
இஹோபயாத:காகுஸ்த்தஸ்ஸீதயாஸஹபார்யயா।

௨௦. லக்ஷ்மணேநஸஹப்ராத்ராஸீதயாஸஹவீர்யவாந்॥
ஆருஹ்யபுஷ்பகம்திவ்யம்விமாநம்ஸூர்யஸந்நிபம்।

௨௧. உத்தராம்திஶமாலோக்யஜகாமபுருஷோத்தம:॥

௨௨. யேவம்ஸ்வப்நேமயாத்ருஷ்டோராமோவிஷ்ணுபராக்ரம:।
லக்ஷ்மணேநஸஹப்ராத்ராஸீதயாஸஹபார்யயா॥

* [illegible]

பதம்.	உரை.
வீர்யவாந்-புருஷோத்தம:-பராக்கிரமசாலியும்-புருஷசிரேஷ்[டனுமான]	
காகுஸ்த்த:	ஸ்ரீராகவன்
பார்யயா-ஸீதயாஸஹ	பத்தினியான-ஸீதையோடுகூட
அஷ்டயுஜா-பாண்டரர்ஷபயுக்தேந-எட்டுவிருஷபத்தோடு கூ	டினதும்-வெண்மையுற்ற எருதுகளோடு கூடினதுமான
ரதேந-ஸ்வயம்-இஹ	தேரினால்-தான்-இவ்விடத்தில்
உபயாத:	எழுந்தருளினார்
ப்ராத்ரா-லக்ஷ்மணேநஸஹ-தம்பியான-இலக்ஷ்மணரோடு கூ[டவும்]	
ஸீதயாஸஹ	ஸீதையோடுகூடவும்
ஸூர்யஸந்நிபம்-திவ்யம்-ஸூரியனுக்கு நிகரானதும்-(அதனு	ல்) சிரேஷ்டமானதுமான
புஷ்பகம்-விமாநம்-ஆருஹ்ய	புஷ்பகமென்கிற-விமானத்தை-[ஏறி]
உத்தராம்-திஶம்	வடக்கான-திக்கை
ஆலோக்ய-ஜகாம	பார்த்து-போனார்
விஷ்ணுபராக்ரம:	விஷ்ணுவின்பராக்கிரமத்தையொத்த பராக்கிரமமுடைய
ராம:-ப்ராத்ரா	ஸ்ரீராகவன்-ஸஹோதரனுன
லக்ஷ்மணேநஸஹ	இளையவரோடுகூடவும்
பார்யயா-ஸீதயாஸஹ	மனைவியான-ஸீதையோடுகூடவும்
ஸ்வப்நே-ஏவம்	கனவில்-இந்தப்பிரகாரம்
மயா-த்ருஷ்ட:	என்னால்-பார்க்கப்பட்டார்.

(௧௭-மு-௨௦-ல்.) தா-ம்—அடிராக்ஷஸிகளே! யான்கனவிற்பிரத்தியக்ஷமாகக்கண்ட இன்னமோராச்சரியஞ்சொல்லுகிறேன்கேளுங்கள். ஸர்வசத்துருக்களையும் க்ஷணகாலத்தில் நிபாதஞ்செய்யவல்ல மஹாவீரனும் புருஷசிரேஷ்டனுமான அக்காகுத்தன் தேவியோடுகூட, எட்டுவெள்ளைக் காளைகள்பூட்டிய திவ்விய ரதத்தில்தானே வெகுகோலாகலத்துட னிக்நகரில்வந்திறங்கினார். பிறகு அக்காவியாக்கிரரும் இந்தஸீதையும் இலக்ஷ்மணரோடு பானுமண்டலம்போல் ஜ்வலிக்கிற கமதுராஜசெல்வமான புஷ்பகத்தின்மீதேறி உத்தரமுகமாயெழுந்தருள யான்கண்டேன். சங்கசக்கிரதாரியான ஸாக்ஷாத்மஹாவிஷ்ணுவின்பராக்கிரமத்திற்கு நிகரான பராக்கிரமமுடைய ஸ்ரீராகவனும் அவருடையபிராதாவான இலக்ஷ்மணனும திவ்வியதேஜஸ்ஸோடு விளங்குகிற இத்திருமாதும் இவ்விதவிபவத்தையடைந்தவராக என்னால் கனவில்காணப்பட்டனர்.

௨௦. [illegible]

௨௧. [illegible]

௨௧. நஹிராமோமஹாதேஜாஸ்ஸக்யோஜேதும்ஸுராஸுரை:।
ராக்ஷஸைர்வாபிசாந்யைர்வாஸ்வர்க:ப்பாபஜநைரிவ॥

பதம்.	உரை.
மஹாதேஜா:-ராம:	அதிதேஜோவானுன-ஸ்ரீராகவன்
ஸுராஸுரை:	தேவர்களாலும்-அஸுரர்களாலும்[லும்]
ராக்ஷஸைர்வாபி-அந்யைர்வா	இராக்கதராலும்-இதரர்களா
பாபஜநை:ஸ்வர்கஇவ	பாபஜனங்களால்-ஸுவர்க்கமானது போல்
ஜேதும்-நஶக்யம்	ஜயிக்க-சக்தியன்று.

[illegible] ॥ *

* தா-ம்—தேவதார்கமான புஷ்பகவிமானத்தில் ஸீதா லக்ஷ்மணஸஹிதராயெழுந்தருளியிருந்த ஸ்ரீராகவன், அனேக அண்டங்களோடு கூடினதும், அனந்தகோடிசராசரங்களும் ஜீவராசிகளும் வஸிக்கப்பெற்றதுமான இம்மூன்று லோகத்தைக் கவளீகரிக்கிறதாகிற பீமகிருத்தியத்தைச்செய்ய யான்கண்டேன். பிறகுஓர்க்ஷீராப்திமத்தியில் சுவேதகிரியொன்று மேற்கிளம்பி நின்றது. அதன்சிகரத்தில் சதுர்த்தந்தஸஹிதமான ஒப்பற்ற சுவேதகஜமொன்றிருந்தது. அந்தகஜசிரேஷ்டத்தின்மீது இலக்ஷ்மீஸாந்நித்தியயுக்தனும், ஸர்வலோகமனோகரனும் கமலபத்திரநேத்திரனுமான ஸ்ரீராகவன் ஸீதாலக்ஷ்மண ஸஹிதராய்வீற்றிருந்தார். அப்பொழுதிந்த ஸுந்தரியெழுந்திருந்து இராகவன் மடியிலுட்கார்ந்து தனதிரண்டுகைகளால் ஷோடசகலைகளோடு அதிமனோகர்மாகப் பிரகாசிக்கிற பூர்ணேந்துவைக்கட்டியணைக்கயான்கண்டேன். பிறகு அப்புருஷோத்தமனை வேறுதிருக்கோலத்திற்கண்டேன். அவர் ஓர்மணி மயபீடத்தில்கிழக்குமுகமாயெழுந்தருளியிருந்தார். அப்பொழுது பிரம்மரிஷிகளனைவரும் பிருதிவியிலுள்ள ஸகலபுண்ணியதீர்த்தங்களையுங்கொண்டு அபிஷேகஞ்செய்தார்கள். அபிஷேகங்கொண்ட ஸ்ரீராகவன் ஸகலதேவர்களாலும் நமஸ்கரிக்கப்படுகையில் ஜனகபுத்திரியான விவள்வெண்பட்டாடையுடுத்து வெண்சாந்தம்பூசி மிகுந்தவிபவத்துட னவர்பார்சுவத்தில்விளங்கினள். பின்புதேவர்களும் கந்தர்வரும் ஸித்தரும் பிரம்மரிஷிகளும் பிரம்மாவைமுன்னிட்டுக்கொண்டு அபிவாதித்து அந்தநரேந்திரனை ஸ்துதிசெய்யயான்கண்டேன். இவ்விதம்பட்டாபிஷேக அவஸரத்திற்காணப்பட்ட ஸ்ரீராகவனை உத்தரக்ஷணத்தில் இன்னுமோரத்புதநிலைமையிற்கண்டேன். அந்த பட்டாபிஷேகாஸனத்திற்றானே அந்தஜானகீரமணன் விஷ்ணுரூபங்கொண்டார். பரப்பிரம்மஸ்வரூபியாயும், ஸத்ஸத்தியமூர்த்தியாயும், பரக்கியானதேஜஸ்ஸாயும், உத்தமதவத்திலாழ்ந்த முனீந்திரராயுங் காணப்பட்டார். ஸகலத்திற்கும் மூலபீஜமாய், அம்மூலபீஜத்திற்கு க்ஷேத்திரந்தானுமாய், ஸகலகாரணங்களுக்கும்மூலகாரணமாயும்விளங்கினார். சங்கசக்கிரதாரியாயும், வக்ஷப்பிரதேசத்தில்வாழ்கின்ற இலக்ஷ்மீதேவியோடுகூடினவராயும், செங்கமலபத்திரம்போன்றதிருக்கண்களையுடையவராயும், திருமார்பில்ஸ்ரீவத்ஸமணிந்தவராயும், நித்தியஸ்ரீயோடுகூடினவராயும், சாசுவதவாழ்க்கை யுடையவருமாகப்பிரகாசித்தார். இவ்விதமபிஷேகங்கொண்டு ஸர்வலோகேசுவரனாய்வீற்றிருந்த இரகுநந்தனனை மஹேந்திரனும், பிதுருக்களும், முனீந்திரரும், கந்தர்வவித்தியாதரரும், பன்னகேந்திரருமொன்றுசேர்ந்து ஸந்தோஷஹிருதயத்துடன் அஞ்சலிசெய்துகொண்டு ஸ்துதித்தார்கள். அப்பொழுது அப்ஸரஸ்ஸுக்கள் அந்த ஆதிபுருஷன் வீற்றிருக்கும் ஸபையை வந்தடைந்து ஸந்தோஷத்துடன் நர்த்தனஞ்செய்து கானஞ்செய்தனர். சங்கபேரிகைகள் முழங்கின; மங்களவாத்தியங்கள் கோஷித்தன; வம்சவீணைவாத்தியங்களிசைபாடின, இப்படிப்பட்ட அத்புத திருக்கோலத்தில் இராகவனை யான் கண்டேன்.

இந்த சுலோகங்கள் ஸ்ரீவால்மீகிபகவானுற் செய்யப்பட்டனவல்லவென்று கோவிந்தராஜீயவியாக்கியானத்தில்வியாக்கியானம் செய்யப்படாமல் தள்ளப்பட்டிருக்கின்றன. ஆகையால் இதற்கு பிரதிபதமின்றிதாத்பரியமாத்திரம் வரையப்பட்டது.

தா-ம்—அடிஅனரியைகளே! இராகவனைக்கேவலமோரல்பமனுஷியனென்று நிந்திக்கின்றீர்களே. அம்மஹாபாஹுவை தேவர்களாவது அஸுரர்களாவது இராக்ஷதர்களாவது இன்னமற்றெவர்களாவது வல்லச்சக்தரோ! பாபிகளுக்கு ஸ்வர்க்கப்பிராப்தியெப்படிதுர்லபமோ அவ்வண்ணமே ஜகதேகவீரனன ஸ்ரீராகவனைவெல்வது யாவர்க்குமஸாத்தியம்.

(அவதாரிகை) திரிஜடை தான்கண்டஸ்வப்னத்தில் ஸ்ரீராகவக்ஷேமகரமானபாகத்தை யிவ்விதமுரைத்து இராவணனிஷ்டகரமானபாகத்தை யுரைக்கவாரம்பிக்கிறுள்.

౨౨. రావణశ్చ మయా దృష్టః క్షితౌ తైలసముక్షితః । రక్తవాసాః పిబన్మత్తః కరవీరకృతస్రజః ॥

௨௨. ராவணஶ்ச மயா த்³ருஷ்ட꞉ க்ஷிதௌ தைலஸமுக்ஷித꞉।
ரக்தவாஸா꞉ பிப³ந்மத்த꞉ கரவீரக்ருதஸ்ரஜ꞉॥

௨௨. ராவணஸ்சமயாத்ருஷ்டஃக்ஷிதௌதைலஸமுக்ஷிதஃ।
ரக்தவாஸாஃபிபந்மத்தஃகரவீரக்ருதஸ்ரஜஃ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தைலஸமுக்ஷிதஃ-ரக்தவாஸாஃ	எண்ணெயினல்நினைக்கப்பட்டவனும்-சிகப்புவஸ்திரமுடையவனும்	கரவீரக்ருதஸ்ரஜஃ	அலரிப்பூவினல்செய்யப்பட்ட மாலையுடையவனுமான
பிபந்-மத்தஃ	மத்தியபானஞ் செய்யப்பட்டவனும்-(அதனல்) வெகுகொழுத்தவனும்	ராவணஸ்ச-க்ஷிதௌ மயா-த்ருஷ்டஃ	இராவணனும்-பூமியில் என்னல்-பார்க்கப்பட்டான்.

தா-ம்—அடிஸகிகளே! இதுவரையில் ஸ்ரீஸீதாராமலக்ஷ்மணனுக்கு க்ஷேமஸூசகமான ஸ்வப்னபாகத்தை யுரைத்தேனல்லவா! இனி இராவணவிநாசஸூசகமான ஸ்வப்னேத்பாதத்தைச்சொல்லுகிறேன்கேளுங்கள். நமதுஇராஜாவான தசக்கிரீவன் தலையிலெண்ணெயிட்டு சிகப்புவஸ்திரந்தரித்து அலரிமாலைசூடி, மத்தியபானத்தால் மயக்கங்கொண்டு பித்தன்போல் பூமியில்திரிகிற அவனது கோரவேஷத்தை யான்கண்டேன்.

౨౩. విమానాత్పుష్పకాదద్య రావణః పతితో భువి । కృష్యమాణః స్త్రియా దృష్టో ముండః కృష్ణాంబరః పునః ॥

௨௩. விமாநாத்புஷ்பகாத³த்³ய ராவண꞉ பதிதோ பு⁴வி।
க்ருஷ்யமாண꞉ ஸ்த்ரியா த்³ருஷ்டோ முண்ட³꞉ க்ருஷ்ணாம்ப³ர꞉ புந꞉॥

௨௩. விமாநாத்புஷ்பகாதத்யராவணஃபதிதோபுவி।
க்ருஷ்யமாணஃஸ்த்ரியாத்ருஷ்டோமுண்டஃக்ருஷ்ணாம்பரஃபுநஃ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அத்ய-புஷ்பகாத்-விமாநாத்	இப்பொழுது-புஷ்பகமென்கிற-விமானத்திலிருந்து	முண்டஃ-க்ருஷ்ணாம்பரஃ	மொட்டைத்தலையுடையவனும் - கறுப்பு வஸ்திரமுடையவனுமான
புவி-பதிதஃ	பூமியில்-விழுந்தவனும்	ராவணஃ-புநஃ	இராவணன்-மறுபடி
ஸ்த்ரியா-க்ருஷ்யமாணஃ	ஸ்திரீயினல்-இழுக்கப்பட்டவனும்	(மயாத்ருஷ்டஃ)	(என்னல் பார்க்கப்பட்டான்.)

தா-ம—இன்னமோருத்பாதங்கண்டேன் கேளுங்கள். நம்முடையமஹாராஜா புஷ்பகவிமானத்திலிருந்து திடீரென்று பூமியின்மீதுவிழுந்தான், அவனுடைய பத்தினிகளிலொருவள் கீழ்விழுந்தபர்த்தாவைக்கட்டியெடுத்தாள். தலையில்கேசமின்றி முண்டமாகக்காணப்பட்டான். பீதாம்பரமின்றி கறுப்புவஸ்திரம் தரித்திருந்தான். இவ்விதவேஷங்கொண்டவனாக இராவணனையான்கண்டேன்.

౨౪. రథేన ఖరయుక్తేన రక్తమాల్యానులేపనః । పిబంస్తైలం హసన్నృత్యన్ భ్రాంతచిత్తాకులేంద్రియః ॥
గర్దభేన యయౌ శీఘ్రం దక్షిణాం దిశమాస్థితః ।

௨௪. ரதே²ந க²ரயுக்தேந ரக்தமால்யாநுலேபந꞉।
பிப³ம்ஸ்தைலம் ஹஸந்ந்ருத்யந் ப்⁴ராந்தசித்தாகுலேந்த்³ரிய꞉॥
க³ர்த³பே⁴ந யயௌ ஶீக்⁴ரம் த³க்ஷிணாம் தி³ஶமாஸ்தி²த꞉।

௨௪. ரதேநகரயுக்தேநரக்தமால்யாநுலேபநஃ।
பிபம்ஸ்தைலம்ஹஸந்ந்ருத்யந்ப்ராந்தசித்தாகுலேந்த்ரியஃ॥
கர்தபேநயயௌஶீக்ரம்தக்ஷிணாம்திஶமாஸ்த்திதஃ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ராவணஃ) ரக்தமால்யாநுலேபநஃ	(இராவணன்) சிவந்தபுஷ்பமாலையையும்சந்தனப்பூச்சுடையவனும்		டையவனுமாக
தைலம்-பிபந்	எண்ணெயை-குடிப்பவனும்	கரயுக்தேந-ரதேந யயௌ	கழுதையோடுகூடின-தேரினல் போனன்
ஹஸந்-ந்ருத்யந்	சிரிப்பவனும்-கூத்தாடுபவனும்	தக்ஷிணாம்-திஶம்-ஆஸ்திதஃ	தெற்கான-திக்கை - அடைந்தவனாக
ப்ராந்தசித்தாகுலேந்த்ரியஃ	பிரமையையடைந்த மனதினலும் வியாகூலமானசக்ஷுரிந்திரியமு	கர்தபேந ஶீக்ரம்	கழுதையோடு த்துவரையாக (சென்றான்.)

தா-ம்—இரக்தவர்ணமான சந்தனப்பூச்சையும் புஷ்பமாலையையுமணிந்தஇராவணன் எண்ணெயைக் குடித்துக்கொண்டு ஹாஸ்யந்ருத்தியாதிகளைச் செய்துகொண்டு பிராந்தசித்தனாய் வியாகூலமடைந்த இந்திரியவிருத்தியுடையவனாய் கழுதையின்மீதேறி யமதிக்கான தக்ஷிணதிக்கைவிரைவாகநோக்கிச்செல்ல யான் கண்டேன்.

௨౫. పునరేవమయాదృష్టోరావణో రాక్షసేశ్వరః। పతితోవాక్శిరాభూమౌగర్దభాద్భయమోహితః।

உரு. [illegible]
[illegible]

உரு. புநரேவமயாத்ருஷ்டோராவணோராக்ஷஸேஸ்வரஃ।।
பதிதோவாக்சிராபூமௌகர்தபாத்பயமோஹிதஃ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராக்ஷஸேஸ்வரஃ-ராவணஃ-இராக்கதசிரேஷ்டனான இராவண[ன்]		பூமௌ	பூமியில்
புநரேவ	மறுபடியும்	அவாக்சிராஃ	கீழிருக்கும்படியான தலையையுடைய[வனாக]
பயமோஹிதஃ—கர்தபாத் -	பயத்தால் மெய்மறந்தவனாக-கழுதையிலிருந்து	பதிதஃ-மயா-த்ருஷ்டஃ-விழுந்தவனாக-என்னால் -	பார்க்கப்பட்டான்.

தா-ம்—கழுதையின்மேலேறிக்கொண்டு தெற்குமுகமாயோடிய இராவணன் பிறகுபயத்தால் அக்கழுதையின்மீதிருந்து சிரஸைப் பூமியில்நாட்டிக் கீழ்விழுந்தான்.

௨౬. సహసోత్థాయసంభ్రాంతో భయార్తో మదవిహ్వలః ఉన్మత్తఇవదిగ్వాసాదుర్వాక్యంప్రలపన్ బహు।

௨౭. దుర్గంధం దుస్సహం ఘోరం తిమిరం నరకోపమమ్॥ మలపంకం ప్రవిశ్యాశు మగ్నస్తత్ర స రావణః।

உசு. [illegible]

உஎ. [illegible]
[illegible]
[illegible]

உசு. ஸஹஸோத்தாயஸம்ப்ராந்தோபயார்தோமதவிஹ்வலஃ।।

உஎ. உந்மத்தஇவதிக்வாஸாதுர்வாக்யம்ப்ரலபந்பஹு।
துர்கந்தம்துஸ்ஸஹம்கோரம்திமிரம்நரகோபமம்।।
மலபங்கம்ப்ரவிஸ்யாஸுமக்நஸ்தத்ரஸராவணஃ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸஃ-ராவணஃ	அந்த-இராவணன்	துர்கந்தம்-துஸ்ஸஹம் -	கெட்டநாற்றமுடையதும் (ஆகையால்) ஸஹிக்க முடியாததும்
ஸஹஸா-உத்தாய	சீக்கிரமாக-எழுந்திருந்து	கோரம்-நரகோபமம்	பயங்கரமானதும்-நரகத்திற்குஸமான
பயாத்-ஸம்ப்ராந்தஃ	பயத்தால் பரபரப்புடையவனும்	திமிரம்	இருள்பாய்ந்ததுமான [மானதும்]
மதவிஹ்வலஃ	மதமயக்கங்கொண்டவனும்	மலபங்கம்	அழுக்குபடிந்தசேற்றை
உந்மத்தஇவ(ஸ்திதஃ)	பயித்தியம்பிடித்தவன்போல் (இருப்பவனும்)	ஆஸு	சீக்கிரமாக
திக்வாஸாஃ	திசையையேவஸ்திரமாயுடையவனும்	ப்ரவிஸ்ய-தத்ர	பிரவேசித்து-அதற்குள்
துர்வாக்யம்-பஹு-ப்ரலபந்-கெட்டவார்த்தையை-அதிகமாக	உளறிக்கொண்டும்	மக்நஃ	முழுகினான்.

தா-ம்—பிறகந்தராக்ஷஸராஜன் அதிசீக்கிரமாயெழுந்திருந்து, பயத்தால் மிகபரபரப்படைந்தவனும், மத்தியமயக்கத்தால் சித்தஸ்வாதீனமிழந்தவனுமாய், துர்வசனங்களையுளறிக்கொண்டு இராஜவேஷங்குலைந்து வஸ்திரமுமின்றி, ஸகிக்கமுடியாத துர்நாற்றமும், நரகத்திற்குநிகரானகோரமும், பயங்கரமானகாரிருளும் பொருந்தியசேற்றிற் பிரவேசித்துமூழ்கினான்.

௨౮. కంఠేబద్ధ్వాదశగ్రీవంప్రమదారక్తవాసినీ॥

௨౯. కాళీకర్దమలిప్తాంగీదిశంయామ్యాంప్రకర్షతి। ఏవంతత్రమయాదృష్టఃకుంభకర్ణోనిశాచరః॥

உஅ. [illegible]

உகூ. [illegible]
[illegible]

உஅ. கண்டேபத்வாதஸக்ரீவம்ப்ரமதாரக்தவாஸிநீ।।

உகூ. காளீகர்த்தமலிப்தாங்கீதிஸம்யாம்யாம்ப்ரகர்ஷதி।
யேவம்தத்ரமயாத்ருஷ்டஃகும்பகர்ணோநிஸாசரஃ।।

பதம். உரை.
ரக்தவாஸிநீ-காளீ சிகப்புவஸ்திரமுடையவளும்-கறுத்தவளும்
கர்தமலிப்தாங்கீ-ப்ரமதா - அழுக்கால்பூசப்பட்ட தேகமுடைவளுமான-ஸ்த்ரீ
தஶக்ரீவம்-கண்டே-பத்வா-இராவணனை-கழுத்தில்-கட்டி.

பதம். உரை.
யாம்யாம்-திஶம்-ப்ரகர்ஷதி-யமஸம்பந்தமான- திசையைக்குறித்து-இழுத்தாள்
ஏவம்-மயா இந்தவிதம்-என்னால்
கும்பகர்ண:-நிஶாசர: - கும்பகர்ணனென்கிற-இராக்ஷதன்
தத்ர-மயாத்ருஷ்ட: அந்தகனவில்-பார்க்கப்பட்டான்.

தா-ம்—பிறகு சிகப்புவஸ்திரந்தரித்தவளும் ஸ்வபாவத்திலேயே கறுப்புநிறமுள்ளவளும், மஜினலேபனத்தால் மிகக்கறுத்திருப்பவளுமான வோர்பயங்கரரூபமுள்ளஸ்திரீ இராவணனைக் கழுத்தில்கைபோட்டு யமதிக்கைநோக்கி யிழுக்கக்கண்டேன். இவ்விதகோலத்தில் கும்பகர்ணனு மிருக்கக்கண்டேன்.

30. రావణస్యసుతాస్సర్వేదృష్టాస్తైలసముక్షితాః । వరాహేణదశగ్రీవశ్శింశుమారేణచేంద్రజిత్॥
ఉష్ట్రేణకుంభకర్ణశ్చప్రయాతోదక్షిణాందిశమ్।

௩௦. 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯𑌸𑍁𑌤𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌸𑍍𑌤𑍈𑌲𑌸𑌮𑍁𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃।
𑌵𑌰𑌾𑌹𑍇𑌣𑌦𑌶𑌗𑍍𑌰𑍀𑌵𑌶𑍍𑌶𑌿𑌂𑌶𑍁𑌮𑌾𑌰𑍇𑌣𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌜𑌿𑌤𑍍॥
𑌉𑌷𑍍𑌟𑍍𑌰𑍇𑌣𑌕𑍁𑌮𑍍𑌭𑌕𑌰𑍍𑌣𑌶𑍍𑌚𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑍋𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌂𑌦𑌿𑌶𑌮𑍍।

௩௦. ராவணஸ்யஸுதாஸ்ஸர்வேத்ருஷ்டாஸ்தைலஸமுக்ஷிதா:।
வராஹேணதஶக்ரீவஶ்ஶிம்ஶுமாரேணசேந்த்ரஜித்।।
உஷ்ட்ரேணகும்பகர்ணஶ்சப்ரயாதோதக்ஷிணாம்திஶம்।

பதம். உரை.
ராவணஸ்ய-ஸர்வே-ஸுதா:-இராவணனுடைய-ஸமஸ்தர்களான-புத்திரர்கள்
தைலஸமுக்ஷிதா:-எண்ணெய்தேய்த்துக்கொண்டவர்களாக
த்ருஷ்டா: (என்னால்) பார்க்கப்படடார்கள்
வராஹேண-தஶக்ரீவ:-பன்றியோடு-இராவணனும்

பதம். உரை.
ஶிம்ஶுமாரேண-இந்த்ரஜித்-முதலையோடு-இந்திரஜித்தும்
உஷ்ட்ரேண-கும்பகர்ணஶ்ச-ஒட்டையோடு-கும்பகர்ணனும்
தக்ஷிணாம்-திஶம்-ப்ரயாதா: - தெற்கான-திக்கைப்பற்றி-சென்றார்கள்.

தா-ம்—பிறகு இராவணபுத்திரரான இந்திரஜித் பிரபிருதிகளனைவரும் தைலமிட்டிருக்க யான்கண்டேன். அன்றி, தசக்கிரீவன் பன்றிமீதும் இந்திரஜித்து முதலையின்மீதும், கும்பகர்ணன் ஒட்டையின்மீதும் ஏறிக்கொண்டு யமதிக்கைநோக்கிச் செல்லக்கண்டேன்.

31. ఏకస్తత్రమయాదృష్టశ్శ్వేతచ్ఛత్రోవిభీషణః॥ శుక్లమాల్యాంబరధరశ్శుక్లగంధానులేపనః।
32. శంఖదుందుభినిర్ఘోషైర్నృత్తగీతైరలంకృతః॥ ఆరుహ్యశైలసంకాశంమేఘస్తనితనిస్వనమ్।
33. చతుర్దంతంగజందివ్యమాస్తేతత్రవిభీషణః॥ చతుర్భిస్సచివైస్సార్థంవైహాయసముపస్థితః।

௩௧. 𑌏𑌕𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑌮𑌯𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌶𑍍𑌶𑍍𑌵𑍇𑌤𑌚𑍍𑌛𑌤𑍍𑌰𑍋𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌃॥
𑌶𑍁𑌕𑍍𑌲𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑌶𑍍𑌶𑍁𑌕𑍍𑌲𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑍁𑌲𑍇𑌪𑌨𑌃।
௩௨. 𑌶𑌙𑍍𑌖𑌦𑍁𑌨𑍍𑌦𑍁𑌭𑌿𑌨𑌿𑌰𑍍𑌘𑍋𑌷𑍈𑌰𑍍𑌨𑍃𑌤𑍍𑌤𑌗𑍀𑌤𑍈𑌰𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌃॥
𑌆𑌰𑍁𑌹𑍍𑌯𑌶𑍈𑌲𑌸𑌙𑍍𑌕𑌾𑌶𑌂𑌮𑍇𑌘𑌸𑍍𑌤𑌨𑌿𑌤𑌨𑌿𑌸𑍍𑌵𑌨𑌮𑍍।
௩௩. 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌨𑍍𑌤𑌂𑌗𑌜𑌂𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑌾𑌸𑍍𑌤𑍇𑌤𑌤𑍍𑌰𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌃॥
𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌿𑌸𑍍𑌸𑌚𑌿𑌵𑍈𑌸𑍍𑌸𑌾𑌰𑍍𑌧𑌂𑌵𑍈𑌹𑌾𑌯𑌸𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌃।

௩௧. ஏகஸ்தத்ரமயாத்ருஷ்டஶ்ஶ்வேதச்சத்ரோவிபீஷண:।।
ஶுக்லமால்யாம்பரதரஶ்ஶுக்லகந்தாநுலேபந:।
௩௨. ஶங்கதுந்துபிநிர்கோஷைர்ந்ருத்தகீதைரலங்க்ருத:।।
ஆருஹ்யஶைலஸங்காஶம்மேகஸ்தநிதநிஸ்வநம்।
௩௩. சதுர்தந்தம்கஜம்திவ்யமாஸ்தேதத்ரவிபீஷண:।।
சதுர்பிஸ்ஸசிவைஸ்ஸார்த்தம்வைஹாயஸமுபஸ்த்தித:।

பதம். உரை.
மயா-தத்ர-விபீஷண: - என்னால்-அக்கனவில்-விபீஷணன்
ஏக:-ஶ்வேதச்சத்ர:-த்ருஷ்ட:-ஒரு-வெண்குடையுடையவராக-பார்க்கப்பட்டார்
ஶுக்லமால்யாம்பரதர: - வெள்ளைவஸ்திரம் - வெண்மாலை இவைகளைத்தரித்தவரும்
ஶுக்லகந்தாநுலேபந:- வெண்சந்தனப்பூச்சுடையவரும்
ஶங்கதுந்துபிநிர்கோஷை: - சங்கத்தினுடையவும் டங்காவினுடையவும் துவனிகளினாலும்
ந்ருத்தகீதை:-நாட்யமென்ன-கானமென்ன- இவைகளினாலும்
அலங்க்ருத: அலங்கரிக்கப்பட்டவருமான

பதம். உரை.
விபீஷண: விபீஷணன்
ஶைலஸங்காஶம் மலைக்கொப்பாயும் [யதும்
மேகஸ்தநிதநிஸ்வநம் மேகத்தின் சப்தம்போன்ற சப்தமுடை-
சதுர்தந்தம்-திவ்யம் நான்குதந்தங்களையுடையதும்- தேவதார்கமானதுமான
கஜம்-ஆருஹ்ய யானையை-ஏறி [ளுடன்
சதுர்ப்பி:-ஸசிவைஸ்ஸார்த்தம்- நான்குபேர்களான - மந்திரிக
வைஹாயஸம்-உபஸ்தித:-ஆகாசத்தை-அடைந்தவராக
தத்ர-ஆஸ்தே அவ்விடத்தில்-இருந்தார்.

தா-ம்.—இக்கனவில், அடிராக்ஷஸிகளே! எனதுபிதாவான விபீஷணன், ஓர் வெண்குடையைக் கையிலேந்தி, வெண்பட்டாடையுடுத்து, வெண்மலர்மாலை சூடி, வெண்சாந்தம்பூசி, சுவேதமண்டலம் போற்பிரகாசித்துக்கொண்டு, சங்கதுந்துபிவாத்தியங்கள்கோஷிக்க, திவ்வியஸ்திரீகள் இசைபாடி நர்த்தனஞ்செய்ய, மிருந்தவிபவத்தோடு தனதுமந்திரிகள் நால்வருடன் மேகம்போற்கர்ஜ்ஜித்து சதுர்த்தந்த ஸஹிதமாய் பர்வதாகாரங்கொண்டு நிற்குமோர் கஜசிரேஷ்டத்தின்மீதேறி ஆகாயத்தில்நிற்கக்கண்டேன்.

౩౪. సమాజశ్చ మయా దృష్టో గీతవాదిత్రనిస్స్వనః॥ పిబతాం రక్తమాల్యానాం రక్షసాం రక్తవాససామ్।

௩௪. 𑌸𑌮𑌾𑌜𑌶𑍍𑌚𑌮𑌯𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑍋𑌗𑍀𑌤𑌵𑌾𑌦𑌿𑌤𑍍𑌰𑌨𑌿𑌸𑍍𑌸𑍍𑌵𑌨𑌃॥
𑌪𑌿𑌬𑌤𑌾𑌂𑌰𑌕𑍍𑌤𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌨𑌾𑌂𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌂𑌰𑌕𑍍𑌤𑌵𑌾𑌸𑌸𑌾𑌂।

௩௪. ஸமாஜஶ்சமயாத்ருஷ்டோகீதவாதித்ரநிஸ்வந:॥
பிபதாம்ரக்தமால்யாநாம்ரக்ஷஸாம்ரக்தவாஸஸாம்।

பதம். உரை.
மயா-கீதவாதித்ரநிஸ்வந:-என்னால்-தத-ஆநத்த-ஸுஷிர - கனமென்கிறவாத்தியங்களுடையதுவனிகளையுடைய
பிபதாம்-ரக்தமால்யாநாம்-குடிக்கத்தக்கவஸ்துவைக் குடித்துக்கொண்டிருப்பவரும்-சிவந்தமாலையுடையவரும்
ரக்தவாஸஸாம்-ரக்ஷஸாம் - சிவந்தவஸ்திரமணிந்தவருமான-இராக்ஷதருடைய
ஸமாஜஶ்ச-த்ருஷ்ட: கூட்டமும்-காணப்பட்டது.

தா-ம்—சிவந்தவஸ்திரமுடுத்து சிவந்தபுஷ்பமாலைதரித்து மத்தியபானஞ்செய்து கோரவாத்தியங்களைச் சப்தித்துக்கொண்டு ஒன்றுசேர்ந்துநிற்கிற இராக்ஷஸஸமூகத்தைக்கண்டேன்.

౩౫. * లంకా చేయం పురీ రమ్యా సవాజిరథకుంజరా॥ సాగరే పతితా దృష్టా భగ్నగోపురతోరణా।

௩௫. 𑌲𑌙𑍍𑌕𑌾𑌚𑍇𑌯𑌂𑌪𑍁𑌰𑍀𑌰𑌮𑍍𑌯𑌾𑌸𑌵𑌾𑌜𑌿𑌰𑌥𑌕𑍁𑌂𑌜𑌰𑌾॥
𑌸𑌾𑌗𑌰𑍇𑌪𑌤𑌿𑌤𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌭𑌗𑍍𑌨𑌗𑍋𑌪𑍁𑌰𑌤𑍋𑌰𑌣𑌾।

௩௫. லங்காசேயம்புரீரம்யாஸவாஜிரதகுஞ்ஜரா॥
ஸாகரேபதிதாத்ருஷ்டாபக்நகோபுரதோரணா।

பதம். உரை.
ரம்யா-ஸவாஜிரதகுஞ்ஜரா - மனோஹரமாயும்-குதிரை-ரதம்-யானை இவைகளோடும்கூடின
இயம்-லங்காபுரீச இந்த-இலங்கையென்கிறபட்டணமும்
பக்நகோபுரதோரணா - இடிந்துபோனபுரத்துவாரமும்பஹிர்த்துவாரமுமுடையதாகி
ஸாகரே-பதிதா-த்ருஷ்டா - கடலில் - வீழ்ந்ததாக-பார்க்கப்பட்டது.

தா-ம்—ஸகலஸௌபாக்கியங்களும்நிறைந்து, எண்ணிறந்த ரதகஜதுரகங்களாலிரக்ஷிக்கப்பட்டு ஸர்வலோக மனோகரமாகப்பிரகாசிக்கு மிம்மாநகரும் இடிந்துபடுசூர்ணமான கோபுரங்களுடனும் முறிந்ததோரணங்களுடனும் ஸமுத்திரத்தில்விழக்கண்டேன்.

౩౬. లంకా దృష్టా మయా స్వప్నే రావణేనాభిరక్షితా॥ దగ్ధా రామస్య దూతేన వానరేణ తరస్వినా।

௩௬. 𑌲𑌂𑌕𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌮𑌯𑌾𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇𑌰𑌾𑌵𑌣𑍇𑌨𑌾𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾॥
𑌦𑌗𑍍𑌧𑌾𑌰𑌾𑌮𑌸𑍍𑌯𑌦𑍂𑌤𑍇𑌨𑌵𑌾𑌨𑌰𑍇𑌣𑌤𑌰𑌸𑍍𑌵𑌿𑌨𑌾।

௩௬. லங்காத்ருஷ்டாமயாஸ்வப்நேராவணேநாபிரக்ஷிதா॥
தக்தாராமஸ்யதூதேநவாநரேணதரஸ்விநா।

பதம். உரை.
ராவணேந-அபிரக்ஷிதா-இராவணனால்-நன்றாகப்பாதுகாக்கப்பட்ட
லங்கா-மயா-இலங்கையானது-என்னால்
ராமஸ்ய-தூதேந ஸ்ரீராகவனுடைய - ஸமாசாரங்கொண்டுவருபவனும்
தரஸ்விநா-வாநரேண-பலிஷ்டனுமான-குரங்கினால்
தக்தா-ஸ்வப்நே-த்ருஷ்ட:-கொளுத்தப்பட்டதாக-கனவில்-காணப்பட்டது.

தா-ம்—தேவராஜனும்நாடுதற்கரிதாகும்படி அனந்தகோடிராக்ஷஸபடாக்களால்காக்கப்பட்டு, திரிலோகஜயம்செய்தவனான இராவணேசுவரனால் மிகபத்திரமாக ரக்ஷிக்கப்பட்டுவருகிறவிந்நகர் இராமதூதனானவோர்வானரத்தால் கொளுத்தப்படக்கண்டேன்.

౩౭. పీత్వా తైలం ప్రనృత్తాశ్చ ప్రహసంత్యో మహాస్వనాః॥ లంకాయాం భస్మరూక్షాయాం ప్రవిష్టా రాక్షసస్త్రియః।

௩௭. 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾𑌤𑍈𑌲𑌂𑌪𑍍𑌰𑌨𑍃𑌤𑍍𑌤𑌾𑌶𑍍𑌚𑌪𑍍𑌰𑌹𑌸𑌨𑍍𑌤𑍍𑌯𑍋𑌮𑌹𑌾𑌸𑍍𑌵𑌨𑌾𑌃॥
𑌲𑌂𑌕𑌾𑌯𑌾𑌂𑌭𑌸𑍍𑌮𑌰𑍂𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌂𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌾𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃।

௩௭. பீத்வாதைலம்ப்ரந்ருத்தாஶ்சப்ரஹஸந்த்யோமஹாஸ்வநா:॥
லங்காயாம்பஸ்மரூக்ஷாயாம்ப்ரவிஷ்டாராக்ஷஸஸ்த்ரிய:।

* "ரம்யா-லங்கா-ச," இதில் "ரம்யா" என்கிற பதப்பிரயோகத்தாலும், "ச" என்கிற அவ்வியத்தாலும், இலங்காநாசத்தால் திரிஜடைமனதிலுண்டாயிருக்கு மனுதாபத்தை வெளியிடுகிறார். இந்நகரம் பூலோக வமராவதியென்னும்படி அதிஸுந்தரமாக தேவராஜாநிமித்தம் பூர்வத்தில் ஸிருஷ்டிக்கப்பட்டது. இதுவெகுகாலமாயுள்ளது. அனேகபோக்தாக்களைக் கண்டது. இது கிடைக்கத்தகாதபாக்கியம். ஆதலால் ஒருவனிடத்திலும் ஸ்திரவாழ்க்கையடையவில்லை. குபேரனிடத்திலிருந்தபகரித்த இராவணனாவது இதை நீடுழியனுபவிக்கக்கூடாதா! இராவணனுடைய துஷ்கிருத்தியத்தா லிதுசீக்கிரம் விநாசமடையப்போகிறதேயென்று வருத்தமுற்றாள்.

பதம்.	உரை.
தைலம்-பீத்வா-	எண்ணெயை-குடித்து [போரும்
ப்ரந்ருத்தாஸ்ச-ப்ரஹஸந்த்ய:	- நாட்டியமாடுவோரும் - சிரிப்
மஹாஸ்வநா:	பேரிரைச்சலைச்செய்பவர்களுமான
ராக்ஷஸஸ்த்ரிய:	இராக்கதஸ்திரீகள்
பஸ்மரூக்ஷாயாம்-லங்காயாம்	- பஸ்மத்தாலுஷ்ணமான-இலங்கையில்
ப்ரவிஷ்டா:	பிரவேசித்தார்கள்.

தா-ம்—பிறகு இராக்ஷதஸ்திரீகள் தைலபானஞ்செய்துகொண்டு விசேஷமான கூத்துக்கொக்கரிப்புடனெரிந்து தணலாயிருந்த இலங்கையிற் பிரவேசிக்கக்கண்டேன்.

3౮. కుంభకర్ణాదయశ్చేమే సర్వే రాక్షసపుంగవాః॥ రక్తం నివసనం గృహ్య ప్రవిష్టా గోమయహ్రదే।

௩௮. [illegible]
[illegible]

௩௮. கும்பகர்ணாதயஸ்சேமேஸர்வேராக்ஷஸபுங்கவா:॥
ரக்தம்நிவஸநமக்ருஹ்யப்ரவிஷ்டாகோமயஹ்ரதே।

பதம்.	உரை.
கும்பகர்ணாதய:	கும்பகர்ணன்முதலான
இமே-ராக்ஷஸபுங்கவா:	இந்த-இராக்கதசிரேஷ்டர்கள்
ஸர்வேச-ரக்தம்-நிவஸநம்	-ஸமஸ்தரும்-சிவந்த- வஸ்திரத்தை
க்ருஹ்ய-கோமயஹ்ருதே-ப்ரவிஷ்டா:	- கட்டிகொண்டு-கோமயமடுவில்-பிரவேசித்தார்கள்.

தா-ம்—கும்பகர்ணப்பிரபிருதிகளான இராக்ஷஸசிரேஷ்டர்கள் இரக்தவர்ண வஸ்திரம்தரித்துக்கொண்டு சோமயமயமான மடுவில் பிரவேசிக்க யான்கண்டேன்.

3౯. అపగచ్ఛత నశ్యధ్వం సీతామాప స రాఘవః॥ ఘాతయేత్పరమామర్షీ సర్వైః సార్ధం హి రాక్షసైః।

௩௯. [illegible]
[illegible]

௩௯. அபகச்சதநஸ்யத்த்வம்ஸீதாமாபஸராகவ:॥
காதயேத்பரமாமர்ஷீஸர்வைஸ்ஸார்த்தம்ஹிராக்ஷஸை:।

பதம்.	உரை.
அபகச்சத-நஸ்யத்தவம்	-விலகி விடுங்சோள்-காணமலிருங்கோ[ள்
ஸ:-ராகவ:	அந்த-இராகவன்
ஸீதாம்-ஆப-	ஸீதையை-அடையப்போகிறார்
பரமாமர்ஷீ	(அவன்) வெகுகோபமுடையவராகி
ஸர்வை:-ராக்ஷஸைஸ்ஸார்த்தம்	-ஸமஸ்தர்களான-இராக்ஷதர்களோடு
(வ:-ராவணம்)	(உங்களை அல்லது இராவணனை)
காதயேத்	கொலைசெய்வர்.

தா-ம்.—ஆகையாலிராக்ஷஸிகளே! இவ்விடம் விட்டோடிவிடுங்கள். ஸீதையை ஹிம்ஸியாதேயுங்கள். இத்திசையிலெங்கும் தலைகாட்டாதேயுங்கள். யான்கண்டஸ்வப்ன விசேஷத்தால் இராகவனிங்குவருவது நிச்சயம், ஸீதையைமீட்பதுநிச்சயம். இராவணஸகிதமான இராக்ஷதஸை ஹதஞ்செய்வது நிச்சயம், தனது பிரியமகிஷிக்கிவ்வித துன்பம்விளைத்த வரக்கரைக் கோபங்கொண்டு தண்டிக்கையில், ஜானகியைப்பிரத்தியக்ஷத்தில் ஹிம்ஸிக்கிற உங்களையும். ஸ்திரீஜாதியென்று பாராமல் கோபவசத்தால் அடித்தாலுமடிப்பர். ஆகையால் ஓடியொளிவதைப்பாருங்கள்.

౪౦. ప్రియాం బహుమతాం భార్యాం వనవాసమనువ్రతామ్॥ భర్త్సితాం తర్జితాం వాపి నానుమంస్యతి రాఘవః।

௪0 [illegible]
[illegible]

௪0. ப்ரியாம்பஹுமதாம்பார்யாம்வநவாஸமநுவ்ரதாம்॥
பர்த்ஸிதாம்தர்ஜிதாம்வாபிநாநுமம்ஸ்யதிராகவ:।

பதம்.	உரை.
ராகவ:-ப்ரியாம்	ஸ்ரீராகவன்-(தனக்கு) இஷ்டையும்
பஹுமதாம் வநவாஸம்	- புகழத்தக்கவளும்- அரணிய வாஸத்[தை
அநுவ்ரதாம்	அநுஸரிதவிரதம்பூண்டவளும்
பர்த்ஸிதாம்-தர்ஜிதாம்வாபி	-(உங்களால்) பயப்படுத்தப்பட்டவளும்-மிரட்டப்பட்டவளுமான
பார்யாம்	பத்தினியை (பார்த்து)
நாநுமம்ஸ்யதி	ஸஹிக்கமாட்டார்.

தா-ம்.—அடிராக்ஷஸிகளே! இக்தஸ்திரீ நிமித்தமிவ்வளவு இராகவன் செய்வாரோ வென்று சங்கிக்க வேண்டாம். இவளவருக்கத்தியந்தம் பிரியை. இனிய உயிரினுமேலாகவிவளையே இரக்ஷித்துவந்தார். இவளும் மஹாபுத்திசாலி. பதிசிசுருஷையே திடவிரதமாகக்கொண்ட புண்ணியசீலை. அந்தப்புரத்தைவிட்டு அரண்ணியவாஸத்தையடைந்ததினலேயே அவளுடையபர்த்திரு விசுவாஸத்தையும பாதிவிருத்திய மஹிமையையு மறியவில்லையா. இப்படிப்பட்ட பிரியபார்யையை இவ்வவஸ்தையிற் கண்டால் மனம் ஸகிப்பரோ! ஸ்நானதியலங்காரமும் அன்னபானமுமின்றி கிருசித்ததேகத்துடன் பதியைநினைத்துப் பதறும்படிசெய்த பொல்லாவரக்கனையும் அவனைச்சூழ்ந்தோரையும் படுசூர்ணமாக்காரோ! ஆகையா லிராக்ஷஸிகளே! இதுவரையில் ஹிம்ஸித்தது போதும். இனி உயிர்தப்பவேண்டுமானு லோடியொளியுங்கள்.

౪౧. తదలం క్రూరవాక్యైర్వస్సాన్త్వమేవాభిధీయతామ్॥ అభియాచామ వైదేహీమేతద్ధి మమరోచతే।

௪௧. 𑌤𑌦𑌲𑌂𑌕𑍍𑌰𑍂𑌰𑌵𑌾𑌕𑍍𑌯𑍈𑌰𑍍𑌵𑌸𑍍𑌸𑌾𑌨𑍍𑌤𑍍𑌵𑌮𑍇𑌵𑌾𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑌾𑌮𑍍॥
𑌅𑌭𑌿𑌯𑌾𑌚𑌾𑌮𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌮𑍇𑌤𑌦𑍍𑌧𑌿𑌮𑌮𑌰𑍋𑌚𑌤𑍇।

௪௧. ததலம்க்ரூரவாக்யைர்வஸ்ஸாந்த்வமேவாபிதீயதாம்॥
அபியாசாமவைதேஹீமேதத்திமமரோசதே।

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத்-வஃ-க்ரூரவாக்யைஃ-அலம் - ஆகையால்-உங்களுடைய கடினவார்த்தையால்-போரும்		வைதேஹீம்-(அபயம்)-அபியாசாம-ஸீதையை - (பயமில்லாமலிருப்பதை)-யாசிப்போம்	
ஸாந்த்வமேவ-அபிதீயதாம் - (இனி உங்களால்) நல்வார்த்தையேசொல்லப்படட்டும்		யேதத்-மம-ரோசதே- இது-எனக்கு-தோன்றுகிறது.	

தாடம்—இக்காரணத்தால், இராக்ஷஸிகளே! இனிஸீதையை ஹிம்ஸிக்கவேண்டாம், கடுமொழிகளுரைக்கவேண்டாம். இனியவசனங்களையே சொல்லுங்கள். இவளைப்பீடிக்க ஆக்கியாபிக்கவேண்டாமென்று இராவணனிடத்தில்யாசிப்போம். இவ்விதஞ்செய்தோமானால் ஈமாவது இராகவகோபத்திற்குத் தப்பலாம். இது யுக்தமென்றெனக்கு விளங்குகிறது.

౪౨. యస్యామేవంవిధస్స్వప్నో దుఃఖితాయాం ప్రదృశ్యతే॥ సా దుఃఖైర్వివిధైర్ముక్తా ప్రియం ప్రాప్నోత్యనుత్తమమ్।

௪௨. 𑌯𑌸𑍍𑌯𑌾𑌮𑍇𑌵𑌂𑌵𑌿𑌧𑌸𑍍𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍋𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑌾𑌯𑌾𑌂𑌪𑍍𑌰𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇॥
𑌸𑌾𑌦𑍁𑌃𑌖𑍈𑌰𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍈𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌪𑍍𑌰𑌿𑌯𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑍍𑌯𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍।

௪௨. யஸ்யாமேவம்விதஸ்வப்னோதுக்கிதாயாம்ப்ரத்ருஶ்யதே॥
ஸாதுக்கைர்விவிதைர்முக்தாப்ரியம்ப்ராப்னோத்யநுத்தமம்।

பதம்.	உரை.	பதம்.	உரை.
துக்கிதாயாம்-யஸ்யாம் -	துக்கமுடையவளான-எவள்விஷயத்தில்	முக்தா	விடப்பட்டவளாக
யேவம்விதஃ-ஸ்வப்நஃ	இந்தவிதமான-கனவானது	அநுத்தமம்-ப்ரியம்	உத்தமமான-பர்த்தாவை
ப்ரத்ருஶ்யதே	(என்றால்)பார்க்கப்பட்டதோ	ப்ராப்நோதி	அடையப்போகிறாள்.
ஸா-விவிதைஃ-துக்கைஃ-	அவள்-நானாவிதமான-துக்கங்களிலிருந்து		

தா-ம்—துக்கமிகுதியாற் பரிதபிக்கிற இவள்விஷயமாகக்கண்ட கனவின்பிரயோஜனத்தால் இந்தஸாதுவானவள் சீக்கிரத்தில்துக்க விமுக்தையாய் லோகநாதனான தனது பர்த்தாவை யடையப்போகிறாளென்பது நிச்சயம்.

౪౩. భర్త్సితామపి యాచధ్వం రాక్షస్యః కిం వివక్షయా॥ రాఘవాద్ధి భయం ఘోరం రాక్షసానాముపస్థితమ్।

௪௩. 𑌭𑌰𑍍𑌤𑍍𑌸𑌿𑌤𑌾𑌮𑌪𑌿𑌯𑌾𑌚𑌧𑍍𑌵𑌂𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑌃𑌕𑌿𑌂𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌯𑌾॥
𑌰𑌾𑌘𑌵𑌾𑌦𑍍𑌧𑌿𑌭𑌯𑌂𑌘𑍋𑌰𑌂𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑌾𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍।

௪௩. பர்த்ஸிதாமபியாசத்த்வம்ராக்ஷஸ்யஃகிம்விவக்ஷயா॥
ராகவாத்திபயம்கோரம்ராக்ஷஸாநாமுபஸ்த்திதம்।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேராக்ஷஸ்யஃ	ஓராக்ஷஸஸ்திரீகளே		தேயுங்கோள்
பர்த்ஸிதாமபி	(உங்களால்) பயப்படுத்தப்பட்டவளாயினும்	யத்-ராக்ஷஸாநாம்	எக்காரணத்தால்-இராக்கதருக்கு
யாசத்வம்	(ஸீதையை) யாசியுங்கோள்	கோரம்-பயம்	குரூரமான-பயமானது
விவக்ஷயா	(நம்மால்மிரட்டப்பட்டவிவள் ப்ரஸன்னையாவளா என்கிற)சங்கையால்	ராகவாத்-உபஸ்திதம் -	ஸ்ரீ ராகவனிடத்திலிருந்து-உண்டாயிருக்கிறதோ (அக்காரணத்தால் பூர்வோக்தமான சங்கைசெய்யத்தக்கதல்ல.)
கிம்	என்னகிடைக்கப்போகிறதென் நிரா		

தா-ம்—அடிராக்ஷஸிகளே! நீங்களெல்லோருமொன்றுசேர்ந்திவளைப் பிராணரக்ஷணஞ்செய்யவேண்டுமென்று யாசியுங்கள். இதுவரையில் உங்களால் பிரமஹிம்ஸை செய்யப்பட்டுத் தப்பவழியில்லாமல் கேவலம் தீனையாகக் காணப்பட்டபோதிலும், ஸாமான்னியையென்றிவளைப் பராமரிக்கவேண்டாம். இவளிடத்துள்ள மஹிமை இப்பொழுதவ்யக்தமாயிருக்கிறது. யான்கனவுற்றவண்ணம், இவள்நிமித்தமாக, திரிலோகநாதனான இலங்காதிபதிக்கும், அவனைச்சேர்ந்த வரக்கவீரர்க்கும் விபத்துஉண்டாகப்போகிறதென்றால், காரியாதமைகளான நமக்கு நாசமுண்டாவதைப்பற்றி ஸந்தேகமேன். ஆகையாலிப்பொழுதே ஜீவபிச்சையெடுத்தீர்களாயின், இவளுடைய கிருபாகடாக்ஷத்தால் ஒருவேளைதப்பினாலுந் தப்பலாம்.

౪౪. ప్రణిపాతప్రసన్నా హి మైథిలీ జనకాత్మజా॥ అలమేషా పరిత్రాతుం రాక్షస్యో మహతో భయాత్।

௪௪. 𑌪𑍍𑌰𑌣𑌿𑌪𑌾𑌤𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌾𑌹𑌿𑌮𑍈𑌥𑌿𑌲𑍀𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾॥
𑌅𑌲𑌮𑍇𑌷𑌾𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌤𑍁𑌂𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑍋𑌮𑌹𑌤𑍋𑌭𑌯𑌾𑌤𑍍॥

௪௪. ப்ரணிபாதஃப்ரஸந்நாஹிமைதிலீஜநகாத்மஜா॥
அலமேஷாபரித்ராதும்ராக்ஷஸ்யோமஹதோபயாத்।

பதம். உரை.
ஜநகாத்மஜா-மைதிலீ- ஜனகன்புத்திரியான-ஸீதை
ப்ரணிபாதப்ரஸந்நாஹி - சரணமடைவதால் பிரஸந்நையன்றோ (ஆதலால்)

பதம். உரை.
ஹேராக்ஷஸ்ய:- ஓ இராக்ஷதஸ்திரீகளே
ஏஷா-மஹத:-பயாத்- இவள்-அதிக-பயத்திலிருந்து
பரித்ராதும்-அலம்-(நம்மை)-காப்பதற்கு-ஸமர்த்தை.

தா-ம்.—அடிராக்ஷஸிகளே! இவ்வளவுகாலங் கடுகெஞ்சுடன்கண்டித்த காதுகிகளான வெம்மிடத்தில் சரணமாத்திரத்தால் கருணைகூர்ந்துபிரஸாதமளிக்கப் பிரஸன்னையாவளோவிவளென்று சங்கிக்கவேண்டாம். இந்தயாநிதியின் குணவிபவத்தை நீங்கள்கண்டீர்களில்லை. (குலத்தளவேயாகுங்குணமென்று) பிரமாணமாதலால், இம்மஹாபாகையின் வம்சமகிமையையும் நீங்கள் அறிந்தீர்களில்லை. பூலோகத்தில ஸர்வேசுவரன் தனதுதிருவிளையாட்டுக்கு க்ஷேத்திரமாயுகந்த அர்க்கஸோமகுலங்களென்கிற இரண்டுராஜவம்சங்களுண்டல்லவா. அவற்றுள் சந்திரவம்சத்தைப் புனிதமாக்கவந்த மஹாதார்மிகனன ஜனகமஹாராஜனென்பானொருவனுளனென்றுகேட்டிருப்பீர்களே. அந்தமஹானுபாவன் பகவத்பிரஸாதத்தால் அயோநிஜையாகப்பெற்ற அருமைமடந்தையிவள். மிதிலாபுரிவாஸிகளுக்கெல்லாம் க்ஷேத்திரஸ்தானமாயுள்ளவள். குணத்திலும் க்ஷமையிலும் வம்சத்தைவிஞ்சியவள். என்னவபராதமிழைத்தபோதிலும் ஹிருதயபூர்வகமாய், "ரக்ஷமாம்" என்று சரணமடைந்தக்கால், உடனே பிரஸன்னையாகி ஸகலவபராதங்களையும்க்ஷமித்து, அபீஷ்டபலப்பிரதானஞ்செய்கிற பரதேவதையிவள். கேவலம் தீனையென் றுபேக்ஷிக்கப்பட்டவிவள் மஹத்தான ஆபத்துக்களினின்றும் ரக்ஷிக்கவல்லசக்தை. நீறுபூத்தநெருப்புபோல், மஹாதேஜஸ்ஸை உள்ளடக்கிக்கொண்டு ஆடம்பரமின்றி, ஏழைபோல்காணப்படுகிற இந்ததேவி நம்மையெல்லோரையும் ரக்ஷிக்கவல்லவளே.

౪౫. అపిచాస్యావిశాలాక్ష్యానకించిదుపలక్షయే।విరూపమపిచాంగేషుసుసూక్ష్మమపిలక్షణమ్।

௪௫. 𑌅𑌪𑌿𑌚𑌾𑌸𑍍𑌯𑌾𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌨𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑍁𑌪𑌲𑌕𑍍𑌷𑌯𑍇॥
𑌵𑌿𑌰𑍂𑌪𑌮𑌪𑌿𑌚𑌾𑌙𑍍𑌗𑍇𑌷𑍁𑌸𑍁𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌮𑌪𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍।

௪௫. அபிசாஸ்யாவிஸாலாக்ஷ்யாநகிஞ்சிதுபலக்ஷயே।
விரூபமபிசாங்கேஷுஸுஸூக்ஷ்மமபிலக்ஷணம்।

பதம். உரை.
அபிச-விஸாலாக்ஷ்யா:- பின்னும்-நீண்டகண்களையுடைய
அஸ்யா:-அங்கேஷு-இவளுடைய-அவயவங்களில்
ஸுஸூக்ஷ்மமபி-விரூபம்-சிறிதாயினும்-விகாரமான

பதம். உரை.
லக்ஷணம்-கிஞ்சித்-நோபலக்ஷயே-சின்னமும்-கொஞ்சங்கூட-காணப்படவில்லை.

தா-ம்.—அடிராக்ஷஸிகளே! இத்திருமாது மகாகுணவதியென்று இவளது குலமகிமையால் நிரூபித்தனன். அதற்குச்சார்பாகப் பிரத்தியக்ஷதிர்ஷ்டாந்தம் சொல்லுகிறேன்கேளுங்கள். இவளது திருமேனியின் அங்கலக்ஷணங்களையுற்றுப்பாருங்கள். எவ்விடத்திலாவது விரூபசின்னம் கிஞ்சித்தாவது காண்கிறீர்களா. "கல்லெழில்பகருமுன் னூலோரிலங்கெழிலளவுகுணமெனவுரைப்பர்" என்கிறபடி அழகெவ்வளவோ அவ்வளவு குணமென்று ஸாமுத்திரிகாசாஸ்திரஸித்தாந்தமாதலால், உத்தமலக்ஷணங்களமையப்பெற்ற வடிவழகுள்ளவிவள் எழிலுக்கிசைந்த குணவதியென்றறியுங்கள். மேலும், அங்கத்தில்விரூபசின்னங்கள் துக்கஸூசகங்களாகும். அப்படிப்பட்ட சின்னமொன்றுமின்றி அஸாதாரணஸகிதமாக விளங்கும் இப்பொன்மேனி இவளடையப்போகிற மங்களத்திற் கிசைந்திருக்கிறது.

౪౬. ఛాయావైగుణ్యమాత్రంతుశంకేదుఃఖముపస్థితమ్।అదుఃఖార్హామిమాందేవీంవైహాయసముపస్థితామ్।

௪௬. 𑌛𑌾𑌯𑌾𑌵𑍈𑌗𑍁𑌣𑍍𑌯𑌮𑌾𑌤𑍍𑌰𑌂𑌤𑍁𑌶𑌙𑍍𑌕𑍇𑌦𑍁𑌃𑌖𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍॥
𑌅𑌦𑍁𑌃𑌖𑌾𑌰𑍍𑌹𑌾𑌮𑌿𑌮𑌾𑌂𑌦𑍇𑌵𑍀𑌂𑌵𑍈𑌹𑌾𑌯𑌸𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌮𑍍।

௪௬. சாயாவைகுண்யமாத்ரந்துஸங்கேதுக்கமுபஸ்த்திதம்॥
அது:க்கார்ஹாமிமாம்தேவீம்வைஹாயஸமுபஸ்த்திதாம்।

பதம். உரை.
அது:க்கார்ஹாம்-வைஹாயஸம்-துக்கத்திற்குத்- தகாதவளும்-ஆகாயஸம்பந்தத்தை (விமானத்தை)
உபஸ்திதாம்-இமாம்-தேவீம்-அடைந்த-இந்த-தேவியை

பதம். உரை.
சாயாவைகுண்யமாத்ரம்-காந்திவைகல்பத்தையே
துக்கம்-உபஸ்த்திதாம் வியஸனமாக-அடைந்திருக்காள்(என்
றங்கே ஊஹிக்கிறேன். [று)

தா-ம்.—சோபனரூபமுள்ள இந்தபாக்கியசாலி துக்கத்திற்குப் பாத்திரபூதையல்ல. மஹாபோகத்திற்கே அருகையானவள். ஆனுலிப்பொழுது கஷ்டப்படுவதுபோல் காணப்படுகிறாளேயெனில், வஸ்துவைச்சாயையானது வையிலிலனுவர்த்தித்து நிழலையடைந்தவுடன் விட்டுவிடுவதுபோல், ஏதோ ஸ்வல்பதுக்கமிவளிடத்தி லிப்பொழுது பிரதிபலிக்கிறது, இது அஸ்திரமானது, க்ஷணகாலத்தில்விட்டொழியும், உண்மையானதுக்க மிவளையணுகவேயணுகாது. இவளோர்தேவவிமானத்தையடைந்து பூர்ணதேஜஸ்ஸுடன்விளங்குவதாகக் கனவுகண்டேனே. அதுஉண்மைதான், அந்தஉன்னதபதவி இவளுக்குசீக்கிரத்திலுண்டாகப்போகிறது.

౪౭. అర్థసిద్ధింతువైదేహ్యాఃపశ్యామ్యహముపస్థితామ్।రాక్షసేంద్రవినాశంచవిజయంరాఘవస్యచ।

௪௭. 𑌅𑌰𑍍𑌥𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂𑌤𑍁𑌵𑍈𑌦𑍇𑌹𑍍𑌯𑌾𑌃𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌮𑍍॥
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌿𑌨𑌾𑌶𑌂𑌚𑌵𑌿𑌜𑌯𑌂𑌰𑌾𑌘𑌵𑌸𑍍𑌯𑌚।

௪௭. அர்த்தஸித்திம்வைதேஹ்யா:பஶ்யாம்யஹமுபஸ்த்திதாம்॥
ராக்ஷஸேந்த்ரவிநாஶம்சவிஜயம்ராகவஸ்யச।

பதம்.	உரை.
அஹம்-வைதேஹ்யாஃ-	நான்-ஸீதையினுடைய
அர்த்தஸித்திம்-உபஸ்த்திதாம் -	காரியஸித்தியை-அடைந்தவ[ளாக
பஶ்யாமி	பார்க்கிறேன் [யும்

பதம்.	உரை.
ராக்ஷஸேந்த்ரவிநாஶம்-	(பின்னும்) இராக்ஷஸப்பிரபுவினழிவை[யும்
ராகவஸ்ய-விஜயம்ச	ஸ்ரீராகவனுடைய ஜயத்தையும் (பார்க்கிறேன்.)

தா-ம்.—அடி ராக்ஷஸிகளே! இப்பொழுது தேஜோ வைகல்யத்தையடைந்தவளாகக் காணப்படுகிற விந்தஜானகியைப் பலஸித்தியடைந்து விட்டவளாகவேகாண்கிறேன். இவளுடையக்ஷேமம் ஏதத்க்ஷணத்தில் பவிஷ்யத்கால விஷயமாயினும் அது சீக்கிரத்தில் ஸித்திக்கப்போகிறதென்கிற உறுதியால் பூதகாலவிஷயமென்றே நினைக்கத்துணிவுகொள்ளுகிறேன். இம்மங்களஸ்வரூபியை துக்கவிமுக்தையாய் இராகவன்பக்கல்சேர்ந்து ஆனந்தபரிதையாக விளங்கக்காண்கிறேன். ஸ்ரீராகவனை யுத்தரங்கத்தில் சத்துருவைநிபாதஞ்செய்து இடதுகையிற் கோதண்டமும் வலதுதோளில் ஜயஸ்ரீயும்தாங்கி விஜயராகவனாக விளங்கக்காண்கிறேன். அனுரியநிருத்தியனான இவ்விராவணனைப் போர்க்களத்தில் முடிசாய்ந்து கீழ்விழுந்து மண்ணைவாயில்கவ்விக்கொண்டு தேகத்தைக் கழுகுங் காக்கையும்பிடுங்க கோரவதமடைந்தவனாகக்காண்கிறேன்.

౪౮. నిమిత్తభూతమేతత్తు శ్రోతుమస్యామహత్ప్రియమ్॥ దృశ్యతే చ స్ఫురచ్చక్షుః పద్మపత్రమివాయతమ్।
౪౯. ఈషచ్చహృషితో వాస్యా దక్షిణాయా హ్యదక్షిణః॥ అకస్మాదేవ వైదేహ్యా బాహురేకః ప్రకంపతే।
౫౦. కరేణుహస్తప్రతిమస్సవ్యశ్చోరురనుత్తమః॥ వేపమానస్సూచయతి రాఘవం పురతః స్థితమ్।

௪௮. 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌭𑍂𑌤𑌮𑍇𑌤𑌤𑍍𑌤𑍁𑌶𑍍𑌰𑍋𑌤𑍁𑌮𑌸𑍍𑌯𑌾𑌮𑌹𑌤𑍍𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑍍॥
𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇𑌚𑌸𑍍𑌫𑍁𑌰𑌚𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌃𑌪𑌦𑍍𑌮𑌪𑌤𑍍𑌰𑌮𑌿𑌵𑌾𑌯𑌤𑌮𑍍।
௪௯. 𑌈𑌷𑌚𑍍𑌚𑌹𑍃𑌷𑌿𑌤𑍋𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌯𑌾𑌹𑍍𑌯𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌃॥
𑌅𑌕𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌵𑌵𑍈𑌦𑍇𑌹𑍍𑌯𑌾𑌬𑌾𑌹𑍁𑌰𑍇𑌕𑌃𑌪𑍍𑌰𑌕𑌂𑌪𑌤𑍇।
௫0. 𑌕𑌰𑍇𑌣𑍁𑌹𑌸𑍍𑌤𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌸𑍍𑌸𑌵𑍍𑌯𑌶𑍍𑌚𑍋𑌰𑍁𑌰𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌃।
𑌵𑍇𑌪𑌮𑌾𑌨𑌸𑍍𑌸𑍂𑌚𑌯𑌤𑌿𑌰𑌾𑌘𑌵𑌂𑌪𑍁𑌰𑌤𑌸𑍍𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍।

௪௮. நிமித்தபூதமேதத்துஶ்ரோதுமஸ்யாமஹத்ப்ரியம்॥
த்ருஶ்யதேசஸ்புரச்சக்ஷு:பத்மபத்ரமிவாயதம்।
௪௯. யீஷச்சஹ்ருஷிதோவாஸ்யா தக்ஷிணாயாஹ்யதக்ஷிண:॥
அகஸ்மாதேவவைதேஹ்யாபாஹு:ரேக:ப்ரகம்பதே।
௫0. கரேணுஹஸ்தப்ரதிமஸ்ஸவ்யஶ்சோருரநுத்தம:॥
வேபமாநஸ்ஸூசயதிராகவம்புரதஸ்த்திதம்।

பதம்.	உரை.
அஸ்யாஃ-மஹத்-ப்ரியம்-	இவளுக்கு-பெரிதான-இஷ்டத்தை
ஶ்ரோதும்-நிமித்தபூதம்-	கேழ்பதற்கு-காரணமான
யேதத்-ஆயதம்-	இந்த-நீண்டதானதும்
அதக்ஷிணம்-சக்ஷுஃ-	இடதுமான-கண்
பத்மபத்ரமிவ	தாமரைபுஷ்பத்தின் இதழ்போல்
ஸ்புரத்-த்ருஶ்யதே	நன்றாக-காணப்படுகிறது-
யீஷத்-ஹ்ருஷிதஃ-	கொஞ்சம்-மயிர்கூச்சலுடையதும்
அதக்ஷிணஃ-தக்ஷி[illegible]	இடதுபுறமுமான - பர்த்தாவின்க்ஷேமஸூசகமாயிருக்கிற

பதம்.	உரை.
அஸ்யாஃ-வைதேஹ்யாஃ-ஏகஃ-பாஹுஃ-	இந்த - ஸீதையினுடைய-ஒரு-தோளானது
அகஸ்மாத்-ப்ரகம்பதே-	திடீரென்று-துடிக்கிறது [தும்
கரேணுஹஸ்தப்ரதிமஃ -	யானையின் துதிக்கைக்குஸமானமான
ஸவ்யஃ-அநுத்தமஃ-	இடதானதும்-உத்தமுமான
ஊருஶ்ச-வேபமாநஃ-	துடையும்-துடிக்கிறது (ஸீதைக்கு)
புரதஃ-ராகவம்	முன்பாக-ஸ்ரீராகவனை
ஸ்திதஃ-ஸூசயதி	இருக்கிறவனாக-தெரியப்படுத்துகிறது.

(௪௮-[illegible]-ல்.) தா-ம்.—அடி ராக்ஷஸிகளே! இந்தஸீதைக்கு மஹத்தான க்ஷேமமுண்டாகப்போகிறது. அந்த[illegible]ஷத்தை யிவள்கேழ்க்கப்போகிறுளென்று இவளதங்கத்தில் சிலநற்குறிக ளுண்டாயிருக்கின்றனபாரு[illegible] இவளுடைய இடதுகண் செங்கமலபத்திரம்போல் கோமளமாயும் ஸ்புரத்தாயும் சோபனவத்தாயும்[illegible]க்குகிறதுபாருங்கள். அந்தநேத்திரமே கொஞ்சம்மயிர்க்குச்சுடன் துடிக்கிறது பாருங்கள். மேலும் இவ[illegible]டய அழகானஇடதுதோளும், யானைதுதிக்கைபோற்பெருத்துநீண்டு உத்தமவழகினதாகவிளங்குமிட[illegible]டயும் அடிக்கடி நிஷ்காரணமாகக் கம்பிக்கின்றனபாருங்கள். இந்த சுபசகுனங்களெல்லாம் சீக்கிரத்தி[illegible]திவிரதை ஸ்ரீராகவஸந்நிதியடைந்து ஸுகிக்கப்போகிறுளென்பதை ஸூசிப்பிக்கின்றன.

(அவ[illegible]) இந்தவிதம் திரிஜடைபிரதமத்தில் தான்கண்ட ஸ்வப்னத்தாலும், பிறகு பிராட்டியினது திருமேனியிலுண்டான [illegible]குறிகளாலும் இனியுண்டாகப்போகிற க்ஷேமத்தைக்காட்டி, அனந்தரம் சுபஸூசகமானவோர் திவ்வியசகுனத்தையு[illegible]கின்றனள்.

[illegible]పక్షీ శాఖానిలయః ప్రవిష్టః పునః పునశ్చోత్తమసాంత్వవాదీ॥
౫[illegible]ంనా చ మందీరయన్ పునః పునశ్చోదయతీవ హృష్టః।
௫௧[illegible]𑌲𑌯𑌃𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌃𑌪𑍁𑌨𑌃𑌪𑍁𑌨𑌶𑍍𑌚𑍋𑌤𑍍𑌤𑌮𑌸𑌾𑌨𑍍𑌤𑍍𑌵𑌵𑌾𑌦𑍀॥

௫௰. ஸம்ப்ராப்தகாலாம் வாக்யம் ஸீதாயா நாஸ்தி ஸம்ஶயம் ப்ரியம் ஸீதா ஹ்ருஷ்டா॥
௫௧. பக்ஷீசஶாகாநிலய:ப்ரஹ்ருஷ்ட:புந:புநஶ்சோத்தமஸாந்த்வவாதீ॥
௫௨. ஸுஸ்வாகதாம்வாசமுதீரயாந:புந:புநஶ்சோதயதீவஹ்ருஷ்ட:॥
இதி ஸ்ரீமத்ஸுந்தரகாண்டே - ஸப்தவிம்ஶஸ்ஸர்க:.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஶாகாநிலய:-ப்ரஹ்ருஷ்ட:-கிளையின்ஸ்தானத்தை அடைந்தது ம்-ஸந்தோஷமடைந்ததும்		உதீரயாந:	சொல்லுகிறதுமான
புந:புந:-உத்தமஸாந்த்வவாதீ-அடிக்கடி - சிறந்ததான இனிய வார்த்தையைச் சொல்லுகிறதும்		பக்ஷீ	பக்ஷியும்
ஸுஸ்வாகதாம்-வாசம்-பிரியபந்துவின்வரவையுடைய-வார்த்தையை		ஹ்ருஷ்ட:	மயிர்க்குச்சடைந்ததாக
		புந:புந:	அடிக்கடி
		சோதயதிவ-(ராமாகமனத்தை)-சொல்லுகிறதுபோல்(இருந்து)	

தா-ம்.—அடிராக்ஷஸிகளே! ஸீதாக்ஷேமத்தைப்பற்றிப் பிரஸிக்கிக்கிற வென்மொழிகளுக்கிணங்க, ஓர் திவ்வியசகுனமு மிப்பொழுதுண்டாயிருக்கிறது பாருங்கள். இதோ இந்தமஹாவிருக்ஷத்தில், புஷ்பபல்லவபபாரத்தாற் பெருத்த வோர்கிளையின்மீது, பொற்சிறகமைந்த வோர்பக்ஷி தேன்பெருகுந் திங்கனிகளையுண்ட ஸந்தோஷத்தாற் பிரஸன்னமான வதனத்தோடு நிலைபெற்று வீற்றிருக்கிறதுபாருங்கள். அவ்விஹங்கதுங்கமானது ஜானகியைப்பார்த்து அடிக்கடி நல்லவார்த்தை சொல்வதுபோலும், அவளுக்குப்பிரிய பந்துவான ஸ்ரீராகவனுடைய வரவை மிகுந்தஸந்தோஷத்துட னடிக்கடிசொல்லி அவளுடைய விரகதுக்கத்தையாற்றுவதுபோலுங் காண்கிறது பாருங்கள். இதோரத்புதசகுனமாகையால் யான்கண்ட ஸ்வப்னமும் தேவியினிடத்துண்டான நற்குறிகளும் மித்தியையாகா. அவசியமுண்டாகப்போகிற திவளுக்குமங்களம்!

விசேஷார்த்தம்.

பக்ஷீ-பக்ஷௌ அஸ்யஸ்த இதிபக்ஷீ என்று, ப்ரசம்ஸாயாம் மதுப்பாய் - விஸ்தாரமான இறக்கைகளையுடையது, கருத்மாந் - ஶாகாநிலய: - இறக்கைகளைப் பறக்கவிரித்து - பிரதக்ஷிணமாக வலம்வந்து மேற்கிளம்பி கீழ்தாழ்ந்து, சஞ்சித்தகிளையிலன்றிக்கே - நன்றாகப்புஷ்பித்து விகஸித்து அதிபல்லவிதமான கிளையின்மீது திடமாயுட்கார்ந்தது. இப்படி பிரதக்ஷிணமாயும் திடமாயுமுட்கார்ந்தது சுபத்தைச்சொல்லுகிறது, ப்ரஹ்ருஷ்ட: - அங்குண்டான அதிமாதுர்ய பலவர்க்கங்களைப் புஜித்து மந்தமாருதனை ஸேவித்து தேகமறியாமல் பூரித்து ஸந்தோஷித்தது. புந:புநஶ்சோத்தமஸாந்த்வவாதீ - அப்படி ப்ரஹர்ஷாதிசயத்தால் இறுமாந்து தூஷ்ணீமாயிருக்கையிலன்றிக்கே, மேன்மேலும் நல்லவசனங்களை மொழிவதுபோலிருந்தது. அதாவது ஸீதே! நீயேன்வருந்துகிறாய், வெகுசீக்கிரமாக தினது பர்த்தாவந்து அரவிந்ததளம்போன்ற உன்னிருதிருக்கண்களிலும் ததும்புகிற ஜலங்களைத்துடைத்து இராக்ஷதரால் உண்டான பயத்தையொழித்து உன் புழுதிபடிந்த பொன்மேனியையெல்லாமலங்கரித்து உன்னைத்தேற்றப்போகிறார். ஆகையாலிப்பொழுது சோகங்கொண்டிருப்பதற்கு ஸமயமல்லவென்று இனிய வசனங்களால் ஸீதையைஸமாதானிப்பதுபோ லிருந்தது. ஸுஸ்வாகதாம்வாசமுதீரயாந: - ஸீதே! உன்னைக்காட்டிலும் ஸ்ரீராகவன் அதிகமான விரஹதுக்கத்தையடைந்து கஷ்டப்படுகிறார். அப்படியிருந்தும் ஸுகமாகவே யிங்கெழுந்தருளி உன்னை ரக்ஷிக்கப்போகிறார். என்று பிராணபந்துவான ஸ்ரீராகவன் படுகிற துக்கத்தையு மவரது வரவையுஞ் சொல்வதுபோலிருந்தது. விரகிணிக்குத் தனது விரகத்தால் காயகனும் வருந்துகிறானென்று சொல்லுவதே பிரியவசனம். துஷ்யந்தன் சகுந்தலையைச்சேருங்கால், காமனுன்னைப் பீடிக்கிறானோ இல்லையோ அறியேன், என்னையோ இராப்பகலெப்பொழுதுந் தபிக்கிறான், என்று துதுவிடுவித்த பிரியநாயகியைப்பார்த்துச் சொல்லுகிறான், * தவ கில தந்மாத்ரம் ஹிஅஅம் மம உண காமோ திவாபி ரத்திம்பி । ணிக்கிண தவேஇ பலிஅம் துஹ வுத்தமணோரஹாஇம் அங்காஇம்॥ ஹேதந்விசகுந்தலே! காமனுன்னை ஸதா தபிக்கிறான், என்னையோ கொளுத்தியேவிடுகிறான். அதுயுக்தந்தான்! ஏனெனில் தம்பதிகளான சந்திரனு மாம்பலோடையும் பகலிற்பிரிந்திருக்குங்கால், ஸூரியன் சந்திரனைவாட்டுவதுபோல் ஆம்பலோடையை வாட்டுகிறதில்லையன்றோ! இப்படி தனக்கும் விரகதுக்கமதிகமென்றுசொல்லி நாயகியை ஸந்தோஷிப்பிக்கிறான். அவ்வண்ணமே இப்பக்ஷியும் ஸ்ரீராகவனுக்கத்தைச்சொல்லி விரகிணியான ஜானகி துக்கத்தைத் தணிப்பதுபோலிருந்தது. புந:புநஶ்சோதயதிவ - உன்னாயகன் வரப்போகிறது நிச்சயமாகையால் நீசிறிதேனு மலங்கரித்துக்கொள்ளாமல் எப்பொழுதும் துக்காச்ருவைப் பெருக்கிக்கொண்டிருப்பது யுக்தமல்ல, எழுந்திரு, ஸ்நானம்செய், அலங்கரித்துக்கொள், சீக்கிரம் சீக்கிரம், என்று ஸீதையை யடிக்கடி தூண்டுவதுபோலிருந்தது. ஹ்ருஷ்ட: - உன்பிரியநாதன்வரப்போகிறார், அதனால் நீ மிகவும் ஸந்தோஷிக்கப்போகிறாய், என்று அந்தகாலத்திலுண்டாகப்போகிற ஸந்தோஷாதிசயம் தோன்றும்படி தன்சிறகுகளை சிலிர்த்துப் புளகாங்கிதம் காட்டுவதுபோலிருந்தது.

எந்தகாவியத்தில் வாச்யார்த்தத்தைவிட வியங்க்யார்த்த மதிகமாகவிருக்கிறதோ அதாவது ஸாதாரணசுலோகார்த்தத்துடன் சுலோகத்துவனியால் ப்ரதானவர்த்தம் ஜனிக்கிறதோ-அப்படிப்பட்ட காவியத்திற்கு உத்தமகாவியமென்றுபெயர். ஸ்ரீவால்மீகிராமாயணம் உத்தமகாவியம். வியங்க்யார்த்தம் பதகதமென்றும் வாக்யகதமென்றும் பிரபந்தகதமென்றும் மூன்று விதம். இந்தசுலோகத்தால் ஜனிக்கிற வியங்க்யார்த்தம் பிரபந்தகதமானது. ஸுந்தரகாண்டமென்கிற இக்கிரந்தத்தில் அனுகிபகவந்ஸம்பந்த முடையவனான சேதனனுடைய உஜ்ஜீவனார்த்தம் பிரவர்த்தித்த ஆசாரியனுடைய பிரவர்த்தி சொல்லப்படுகிறது. இவ்வர்த்தம் இக்காண்டத்தின் பிரதமசுலோகத்தில்காண்பிக்கப்பட்டது. இந்தசுலோகத்தால் ஆசாரியவிலக்ஷணமானது வியங்க்யார்த்தமாக வெளியிடப்படுகிறது.

இவ்வர்த்தத்திற்கிணங்க சேதனனென்பான் யாரெனில், இலங்கையே சரீரம், சொக்ஷிமுதலானவர் இந்திரியாதிகள். இராவணகும்பகர்ணன் அகங்கார மமகாரங்கள், இந்திரஜித்பிரபிருதிகள் காமக் குரோத லோப மோக மத மாத்ஸரிய மென்கிற தம்பதிகள். இப்படிப்பட்ட விலங்கையிற் சிக்கிக்கொண்டஸீதையே சேதனன். சேதனனுக்கு பகவத்கியானோபதேசம் பண்ணுகிற ஆசாரியதல்லியன் ஹநுமான்.

* காளிதாஸப்பிரணீதமான "அபிக்கியான சகுந்தலநாடகம்".

(ஸீதாதுக்கவிமோசன ஸூசகமாக சிம்சுபாவிருக்ஷத்தைச் சுட்டிச்சொல்லிய பக்ஷிகளித்ததால், அம்மரத்தினேர் சாகையிலெழுந்தருளியிருந்த ஹநுமானைப் பக்ஷிக்குவமிக்கப்பட்ட ஆசாரியனாகக்கொண்டு பின்வியவகரிக்கப்படும் குணநிசயங்களை யவருக்குச்சேர்த்து ஆசாரியபரமான வர்த்தத்தையறிந்துகொள்ளவேண்டும்.)

பக்ஷீ-என்பதனால் கமனஸாதனத்திற் குபயோகமான ஜ்ஞாநகர்மங்கள் சொல்லப்படுகின்றன. எங்ஙனே யென்னில் "உபாப்யாமேவ பக்ஷாப்யாம் யதா கே பக்ஷிணாம் கதி:। ததைவ ஜ்ஞாநகர்மாப்யாம் ப்ராப்யதே ப்ரஹ்ம ஶாஶ்வதம்॥" பக்ஷிகளினிரக்கைகள் ஆகாசகமனத்திற் கெப்படி ஸாதனங்களோ அப்படி பரமாகாசமான பரமபதத்திற்கு ஜ்ஞானகர்மங்கள் ஸாதனங்கள் என்றர்த்தம். இதனால் ஆசாரியனுக்குரிய ஜ்ஞானகர்மங்களும், "ஆசிநோதி ஹி ஶாஸ்த்ரார்த்தாநாசாரே ஸ்தாபயத்யபி। ஸ்வயமாசரதே யஸ்மாத் தஸ்மாதாசார்ய உச்யதே॥" சாஸ்திரங்களின் தத்துவார்த்தத்தை யுள்ளபடியறிந்து அதிற்கூறியவண்ணம் தானுமநுஷ்டித்து இதரரையு மநுஷ்டிக்கும்படி செய்பவனெவனோ அவனே ஆசாரியனென்று ஆசாரியலக்ஷணமும் சொல்லப்பட்டன. "ஶாகாஸ்திதம்" ஶாகா - என்னும் சப்தத்திற்கு வேதசாகையென்றர்த்தம். ஸ்திதசப்தத்திற்கு அதையே அத்தியயனம்பண்ணுகிறதென்றர்த்தம். அத்தியயனத்திலுள்ள ஊற்றமும்சொல்லப்படுகிறது. "அதீத்ய வேதாந் யோ நாவர்த்தயதி நராதம:। ஸ ஜந்மஶதமாப்நோதி திர்யக்யோநிஷு து:கித:॥" எவன் வேதாத்தியயனஞ்செய்து அதை ஆவர்த்திபண்ணாமலிருக்கிறானோ அந்த நராதமன் சிசுஹத்திபாபத்திற் கிலக்காய் திரியக்முதலான பலயோனிகளிற் பிறந்து கஷ்டப்படுகிறான், என்பதனால் இப்படியன்றிக்கே ஸதா வேதாத்தியயனத்தைச் சொல்லுகிறது. ப்ரஹ்லாத: "ஸ்வாத்யாயம் ஸததம் குர்வந் ஸ்வஸ்தசித்தோ நராதிப:। ஸதா பரமஹம்ஸாத்மா ஸந்துஷ்டஹ்ருதய: ஸதா॥" என்று எப்பொழுதும் ஸந்துஷ்ட ஹ்ருதயமுடையவனென்றர்த்தம். இதனால் ஆசாரியனையெப்பொழுதுமடையலாமென்கிறது - ஸாந்த்வஸாந்த்வநஶ்ராந்த ஸாந்த்வவாக்- பகவத்விஷயமான உத்தமவாக்கியத்தை சிஷியனையும்பொருட்டு அடிக்கடி சொல்பவன். ஸாந்த்வவாக்கியமாவது "த்வம் மே ஹம் மே குதஸ்தத் ததபி குத இதம் வேதமூலப்ரமாணாத் ஏதச்சாநாதிஸித்தாதநுபவவிபவாத் தர்ஹி ஸாக்ரோஶ ஏவ। க்வாக்ரோஶ: கஸ்ய கீதாதிஷு மம விதித: கோऽத்ர ஸாக்ஷீ ஸுதீ: ஸ்யாத் ஹந்த த்வத்பக்ஷபாதீ ஸ இதி ந்ருகலஹே ம்ருக்யமத்யஸ்தவத் த்வம்॥" என்று மனுஜேஶ்வரஸம்வாதத்தில் * (ஈச்வர:) த்வம் மே - பகவத் பரதந்திரனை மநுஜ! த்வம் - நீ, மே - எனக்கு (சேஷபூதன்) அதாவது மமதாக்கியையைச்செய்பவன். (மனுஜ:) அஹம் மே - அப்படிகிடையாது. எனக்கு நானே ஸ்வதந்திரனல்லது ஒருவனுக்குக் கீழ்ப்படிந் தாழியஞ்செய்பவனல்லேன். (ஈ) தத்குத: - அதெப்படி. (ம) ததபி குத: - அதுமாத்திரமெப்படி. (ஈ) இதம் வேதமூலப்ரமாணாத் - இது சுருதியின்வாக்கியப்பிரமாணத்தால். (ம) ஏதச்சாநாதிஸித்தாதநுபவவிபவாச் - ஏதச்ச - இதுவும், அநாதிஸித்தாத் - வெகுகாலமாய் ஸித்தித்திருக்கிற, அநுபவவிபவாத் - அனுபவமான பெரிய ஆதிக்கியத்தால். (ஈ) தர்ஹி ஸாக்ரோஶ ஏவ - தர்ஹி - ஆனால், ஸாக்ரோஶ ஏவ - அது ஆக்ஷேபத்தோடு கூடினது. (ம) க்வாக்ரோஶ: கஸ்ய - ஆக்ரோஶ: - அப்படி ஆக்ஷேபிக்கும்படி, க்வ - எங்கே, கஸ்ய - எவன்விஷயமாக. (ஈ) மம கீதாதிஷு விதித: - மம - என்னுடைய, கீதாதிஷு - கீதைமுதலிய கிரந்தங்களில், விதித: - தெரியப்படுத்தப்பட்டது. (ம) கோऽத்ர ஸாக்ஷீ - அத்ர - இந்தவிஷயத்தில், ஸாக்ஷீ - உண்டென்று சொல்லுபவன், க: - யார். (ஈ) ஸுதீ: ஸ்யாத் - ஜ்ஞானியாகிறான். (ம) ஸ த்வத்பக்ஷபாதீ - ஸ: - அந்த ஜ்ஞானி, த்வத்பக்ஷபாதீ - உன்பக்ஷத்தையே குறித்துச்சொல்பவன் (ஆகையால் அதையொப்பேன்) ஹந்த - கஷ்டம், இதி - என்கிற, ந்ருகலஹே - மனிதகலஹத்தில், த்வம் - தேவரீர், ம்ருக்யமத்யஸ்தவத் - மத்தியஸ்தரைத்தேடுவதுபோல் (அவரைக்காணாது பிரமாணஞ்செய்பவர்போல்) இருக்கிறீர். இப்படி அஸத்தியவாதஞ்செய்கிற சேதனனைப் பிரமாணம்பண்ணென்று வாய்திறந்தமாத்திரம் பயமின்றிப் பிரமாணஞ்செய்துவிடுவான், காரியம் கெட்டுவிடுமென்று தேவரீரோ பிரமாணஞ்செய்வதுபோலிருக்கிறீர். அல்லது, வீண்வாதஞ்செய்கிறவனாயினும், பிரமாணம்பண்ணக் கேட்கின் பயந்துவிடுவான், பயமுறுத்தி சேஷத்தவங் கொள்ளக்கூடாதென்று தேவரீரோ நம்பிக்கைபிறப்பதற்காகப் பிரமாணம்பண்ணுபவர்போலிருக்கிறீர். இந்தவிதம், "வீற்றிருந்தேழுலகந் தனிக்கோல்செல்ல," என்கிறபடியே வைகுந்தப்பெருநகரில் திவ்யஸிம்ஹாஸனத்தின்மீது அனந்தகருடவிஷ்வக்ஸேநாதிகளால் பரிசரியமாணனாகவிருக்கச்செய்தேயும், "படாதனபட்டுமனிசர்க்காய்," என்கிறபடியே ஸம்ஸாரிகளுடைய விழவைக்கண்டகலவறியாது பிரஜைகளின் துக்கம் பிதாவுக் கஸஹ்யமாமாப்போலே, தன்னைத்தானேவந்து காட்டிக்கொடுத்தவளவிலும், "என்னைத் தீமனங்கெடுத்தாயுனக்கென்செய்கேன்" என்று கிருதக்ஞனாய்ப் புகழவேண்டியிருக்க, அதுசெய்யாது எதிரம்புகோர்க்குஞ் சேதனனைவிட்டகலாது, ஸொத்துடையவன் ஸொத்துக்கு மன்றாடுமாப்போலே எதிர்நின்று விழித்து கதிகாணாமல் பிரமாணபூர்வகமாகச் சொல்லுகிறானென் றிப்படிப்பட்ட விஷயங்களைச் சொல்லுவது ஸாந்த்வவசனமென்றபடி. இப்படி பிரமாணபூர்வகமாயும் மனிதனை ஸ்வாதீனஞ்செய்வதற்கறியா தோடிவிட்ட ஈசுவரனைப்போலன்றிக்கே, ஆசாரியன் அவனை விஞ்சவிடாமல் அவன்வாக்கியத்திற்கிணங்கி மஹாதாயாஸத்தால் சீர்திருத்தி மந்திரராஜமான திருவஷ்டாக்ஷரத்தை யுபதேசஞ்செய்து பகவானிடத்தில் சேர்ப்பிக்கிறான். மேலும் சிலபரமார்த்தங்களை மதித்துக்கேட்ட வர்ஜுனனுக்கு உபதேசியாமலொழிந்த ஈசுவரன் போலன்றிக்கே ஆசாரியன் அடிக்கடி சொல்லித் திருத்திப் பணிசெய்விப்பிக்கிறான். இக்காரணங்களால் ஈசுவரனைக்காட்டிலும் ஆசாரியன் ஏற்றம் என்கிறது சிஷ்டாசாரஸம்மதம்.

ஸ்ரீஸங்க்ஷேபராமாயணத் தமிழ்த்திராவிட வியாக்யான ஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்
இருபத்தேழாவதுஸர்க்கம் - முற்றிற்று.

---

* மனுஜேச்வரஸம்வாதம்—இந்தசுலோகத்தால் அஹங்காரமமகாரங்களால் மயக்கங்கொண்டிருக்கும் சேதனனுக்கும் சேதனனுடைய தாஸ்யத்தையாண்டு அவனுக்குத் திருவடிஸாதிக்கவேண்டுமென்று விருப்புற்ற பகவானுக்கும்நடந்த ஸம்வாதம்சொல்லப்படுகிறது. இந்தசுலோகம் பட்டர்ஸாதித்தருளியது இதில் (ஈ) என்றிருக்குமிடத்தில் ஈசுவரவாக்கென்றும், (ம) என்றிருக்குமிடத்தில் மனுஜனுடைய பிரதிவாக்கியமென்று மறிந்துகொள்க.

இருபத்தெட்டாவது ஸர்க்கம.

౧. సా రాక్షసేంద్రస్య వచో నిశమ్య తద్రావణస్యాప్రియమప్రియార్తా। సీతా వితత్రాస యథా వనాంతే సింహాభిపన్నా గజరాజకన్యా॥

க. ஸா ராக்ஷஸேந்த்ரஸ்ய வசோ நிசம்ய தத்ராவணஸ்யாப்ரியமப்ரியார்த்தா।
ஸீதா விதத்ராஸ யதா வநாந்தே ஸிம்ஹாபிபந்நா கஜராஜகந்யா॥

க. ஸாராக்ஷஸேந்த்ரஸ்யவசோநிஸம்யதத்ராவணஸ்யாப்ரியமப்ரியார்தா।
ஸீதாவிதத்ராஸயதாவநாந்தேஸிம்ஹாபிபந்நாகஜராஜகந்யா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸா-ஸீதா	அந்த-ஸீதையானவள்	அப்ரியார்தா	அனிஷ்டவாக்கியத்தால் நொந்தவளா[க]
ராக்ஷஸேந்த்ரஸ்ய-ராவணஸ்ய-	இராக்கதப்பிரபுவான - இரா[வணனுடைய]	வநாந்தே	அரண்ணியமத்தியில் (க)
தத்-அப்ரியம்	அப்படிப்பட்ட - (இராக்ஷஸிகளால் சொல்லப்பட்ட) அனிஷ்டமான	ஸிம்ஹாபிபந்நா	சிங்கத்தினற்பிடிபட்ட
		கஜராஜகந்யாயதா	சிரேஷ்டமான பெண்யானைபோல்
வச:-நிஸம்ய	வார்த்தையை-கேட்டு	விதத்ராஸ	மிகபயப்பட்டாள்.

தா-ம்.—சதுர்விதவுபாயங்களு ளொந்தவுபாயத்தினலாவது ஸீதை யென்னைக் காமுறும்படிசெய்யுங்க ளென்றுவிதித்த இராவணனதாக்கியை மேற்கொண்டு பீடித்த அவ்விராக்ஷஸிகள் பிராட்டியின்மனதைவெல்லத் தங்களாலாகாததுகண்டு, இனியிவளையுயிரோடுவைக்கிறதில்லை, பிராதராசனார்த்தமாக அஜருக்குடக்களை ஹிம்ஸிப்பதுபோலிவளைச்சேதித்து விடுவதேயுக்தமென்றுநிச்சயித்துத் தங்களுடைய தீர்மானத்தையும் ஜானகிக்குவிளம்ப, அதைக்கேட்டதேவி மிகத்துயருற்றுத் தனதுவிதியிப்படியாகவிருந்ததே யென்றுபுலம்பி மேலொன்றுஞ்செய்யவகைகாணது அரண்ணியமத்தியிற் சிங்கத்தாற்கட்டுண்ட கஜப்பேடுபோல்நடுங்கினள்.

౨. సా రాక్షసీమధ్యగతా చ భీరుర్వాగ్భిర్భృశం రావణతర్జితా చ। కాంతారమధ్యే విజనే విసృష్టా బాలేవ కన్యా విలలాప సీతా॥

உ. ஸா ராக்ஷஸீமத்யகதா ச பீருர்வாக்பிர்ப்ருசம் ராவணதர்ஜிதா ச।
காந்தாரமத்யே விஜநே விஸ்ருஷ்டா பாலேவ கந்யா விலலாப ஸீதா॥

உ. ஸாராக்ஷஸீமத்த்யகதாசபீருர்வாக்பிர்ப்ருஸம்ராவணதர்ஜிதாச।
காந்தாரமத்யேவிஜநேவிஸ்ருஷ்டாபாலேவகந்யாவிலலாபஸீதா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராக்ஷஸீமத்த்யகதா	இராக்ஷஸிகளின் மத்தியத்தையடை[ந்தவளும்]	ஸா-ஸீதா	அந்த-ஸீதையானவள்
வாக்பி:-ப்ருஸம்	வாக்குகளால்-மிகவும்	விஜநே-காந்தாரமத்யே-	ஜனமற்ற-காட்டின்நடுவில்
பீரு:-ராவணதர்ஜிதாச-	பயப்பட்டவளும் இராவணனுல் மிரட்டப்பட்டவளுமான	விஸ்ருஷ்டா-பாலா	விடப்பட்ட இளமைப்பருவமுள்ள
		கந்யேவ-விலலாப	பெண்போல்-அழுதாள்.

தா-ம்.—இராவணனுடைய பயமுறுத்தலாலும் இராக்ஷஸிகளுடைய கோரமொழிகளாலும் பயந்து மனமுளைந்து துக்கித்தபிராட்டி ஸிம்மவியாக்ராதிகளின் கர்ஜ்ஜனைகளும் நரிகளின்கோரரோதனங்களும், பூதப்பிரேத பிசாசுகளின் நர்த்தனங்களும், கொள்ளிவாய்ப்பிசாசங்களி னெரிபந்தங்களும், வில்லம்புகளேந்திய கிராதகர்ஸமூகமும் நிறைந்த நிர்மானுஷ்யமான வரண்ணியமத்தியிற் றனிமையாய்விடப்பட்ட வோரிளங்கன்னிகைபோல் நடுக்கமுற்றழுதாள்.

౩. సత్యం బతేదం ప్రవదంతి లోకే నాకాలమృత్యుర్భవతీతి సంతః। యత్రాహమేవం పరిభర్త్స్యమానా జీవామి కించిత్ క్షణమప్యపుణ్యా॥

ங. ஸத்யம் பதேதம் ப்ரவதந்தி லோகே நாகாலம்ருத்யுர்பவதீதி ஸந்த:।
யத்ராஹமேவம் பரிபர்த்ஸ்யமாநா ஜீவாமி கிஞ்சித் க்ஷணமப்யபுண்யா॥

ங. ஸத்யம்பதேதம்ப்ரவதந்திலோகேநாகாலம்ருத்யுர்பவதீதிஸந்த:।
யத்ராஹமேவம்பரிபர்த்ஸ்யமாநாஜீவாமிகிஞ்சித்க்ஷணமப்யபுண்யா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
யத்ர-அஹம்-அபுண்யா-	எக்காரணத்தால்-யான்-புண்ணியமற்றவளும்	ஸந்த:-லோகே	(அதனுல்) ஸத்புருஷர்கள்-உலகத்தி[ல்]
		அகாலம்ருத்யு:	காலமில்லாக்காலத்தில் சாவானது
ஏவம்-பரிபர்த்ஸ்யமாநா-	இந்தவிதம்-மிரட்டப்பட்டவளுமாக	நபவதி-இதிப்ரவதந்தி-	உண்டாகாது-என்றுசொல்லுகிறார்கள்
க்ஷணமபி-கிஞ்சித்-ஜீவாமி-	ஸ்வல்ப காலமாயினும்-குத்ஸிதமாக-பிழைக்கிறேனே	இதம்-ஸத்யம்	இது-வாஸ்தவம்
		பத	ஹா கஷ்டம்!.

தா-ம்.—உலகத்திற் பெரியோர் பிராணிகளுக்கு விதித்தகாலத்திலல்லது மற்றகாலத்தில் மரணம்நேரிடாதென்கிறார்களே, அதுநிச்சயந்தான். அதற்கு நானேதிருஷ்டாந்தம். நாதனைவிட்டகலும்படியான மஹாபாதகஞ்செய்தயான் இன்னம்ஜீவித்திருக்கேனன்றோ! க்ஷணகாலவிரகமும் ஸகிக்கப்பொறுதயான் நாதனைப்பிரிந் தெவ்வளவுகாலமாயிற்று! இவ்விராவணனலெவ்வளவு பயமுறுத்தப்பட்டேன்! இவ்விராக்ஷஸிகளாலெ

வ்வளவு ஹிம்ஸிக்கப்பட்டேன்! இவைகளையெல்லாம்பொறுத்து இக்கல்லுடல் ஜீவித்திருக்கிறதே! ஆனால் உடலென்னசெய்யும், இருத்தலும் சாதலும் தெய்வச்செயலன்றோ! ஹா என்னகஷ்டம்!

౪. సుఖాద్విహీనం బహుదుఃఖపూర్ణమిదం తు నూనం హృదయం స్థిరం మే। విశీర్యతే యన్న సహస్రధాద్య వజ్రాహతం శృంగమివాచలస్య॥

௪. ஸுகாத்விஹீநம்பஹுது:க்கபூர்ணமிதந்துநூநம்ஹ்ருதயம்ஸ்திரம்மே।
விஶீர்யதேயந்நஸஹஸ்ரதாத்யவஜ்ராஹதம்ஶ்ருங்கமிவாசலஸ்ய॥

௪. ஸுகாத்விஹீநம்பஹுது:க்கபூர்ணமிதந்து நூநம்ஹ்ருதயம்ஸ்த்திரம்மே।
விஶீர்யதேயந்நஸஹஸ்ராதாத்யவஜ்ராஹதம்ஶ்ருங்கமிவாசலஸ்ய॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
யத்-மே	எந்தகாரணத்தால்-என்னுடைய	நவிஶீர்யதே	பிளவாமலிருக்கிறதோ
இதம்-ஹ்ருதயம்து	இந்த-மனதானதோவென்றால்	தத்-பஹுது:க்கபூர்ணம்-ஆகையால்-துக்கபூரிதையும் [தும்	
வஜ்ராஹதம்	வஜ்ஜிராயுதத்தாலடிக்கப்பட்ட [ல்	ஸுகாத்-விஹீநம்	ஸௌக்கியத்திலிருந்து சூன்னியமான
அசலஸ்ய-ஶ்ருங்கமிவ -	பருவதத்தினுடைய கொடிமுடிபோ	ஸ்திரம்	அழிவற்றதாகவும் (இருக்கிறது)
அத்ய-ஸஹஸ்ரதா	இப்பொழுது-அனேகப் பிரகாரமாக	நூநம்	நிச்சயம்.

தா-ம்.—ஸ்ரீராகவஸமேத வாஸமாகிற நித்தியஸுகத்தையிழந்தேன். இலங்காநகரவாஸமாகிறமஹா துக்கத்தை யடைந்தேன். சிலத்தைக்குலைக்கவந்த இராவணனால் மஹாபயமடைந்தேன். ஐயோ இந்த கோரராக்ஷஸிகளால் அளவற்ற நலிவுண்டேன். இதற்கெல்லாம் சகித்ததோ இந்தஹிருதயம்! மேல்விழுந்த அசனியை லக்ஷியம்பண்ணுதிற்கிற பர்வதசிகரம்போல், இவ்வளவு துக்கங்களையுங்கொண்டு இன்னமெவ்வளவுவந்தபோதிலும் சகியேனென்று சொல்லுவதுபோல் சாசுவதஸ்திரங்கொண்டு அமைந்திருக்கிறதே என் ஹிருதயம்! இதற்கழிவென்பதுகிடையாதோ!

౫. నైవాస్తి నూనం మమ దోషమత్ర వధ్యాహమస్యాప్రియదర్శనస్య। భావం న చాస్యాహమనుప్రదాతుమలం ద్విజో మంత్రమివాద్విజాయ॥

௫. நைவாஸ்தி நூநம்மமதோஷமத்ரவத்யாஹமஸ்யாப்ரியதர்ஶநஸ்ய।
பாவம்நசாஸ்யாஹமநுப்ரதாதுமலம்த்விஜோமந்த்ரமிவாத்விஜாய॥

௫. நைவாஸ்தி நூநம்மமதோஷமத்ரவத்யாஹமஸ்யாப்ரியதர்ஶநஸ்ய।
பாவம்நசாஸ்யாஹமநுப்ரதாதுமலம்த்விஜோமந்த்ரமிவாத்விஜாய॥

பதம். உரை.

இந்தவிதம் கஷ்டானுபவத்தைப் பொறுப்பதைக்காட்டிலும் பிராணத்தியாகஞ் செய்துவிடலாம். அதனாலாத்மஹத்தியாகிற மஹாதோஷம் ஸம்பவிக்குமென்றுசங்கித்து அதை வேறுகாரணத்தால் பரிகரிக்கிறாள். [கிற) ஆத்மவதையில்

பதம்.	உரை.
அத்ர-மம	என்னால்-(இப்பொழுதுசெய்யப்படப்போ
தோஷ:-நைவாஸ்தி	பாதகம்-இல்லவேயில்லை

ஏன் தோஷமில்லையென்றால் இராவணனால் மரிப்பதைக்காட்டில் தானேமரிப்பது ஶ்ரேயஸ்கரமென்கிறாள்.

பதம்.	உரை.
அஹம்	(எக்காரணத்தால்) நான்
அப்ரியதர்ஶநஸ்ய-அஸ்ய-பிரியமற்றபார்வையுடைய-(இராவணனுடைய) இராவணனால்	
நூநம்-வத்யா	நிச்சயமாக-கொலையுரியப்பட்டவளாக [ஆகிறேனோ)

அதனால் தோஷம்கிடையாதென்று கருத்து. ஆனால் (ஸர்வத:ஆத்மாநம்கோபாய) என்கிற ச்ருதிப்ரகாரம் இராவணனையனுஸரித்தாவது ஆத்மஸம்ரக்ஷணம் காரியமென்றால் அது நான்செய்ய வரியேன் என்கிறாள்.

பதம்.	உரை.
அஹம்-அஸ்ய	நான்-இந்த-இராவணனுடைய (இராவணனிடத்தில்)
பாவம்	அபிப்பிராயத்தை-(மனதை)
த்விஜ:-அத்விஜாய	பிராம்ஹணன்-அப்பிராம்ஹணனையும்
மந்த்ரமிவ	(வேத) மந்திரம்போல் [பொருட்டு
அநுப்ரதாதும்-நாலம்	கொடுப்பதற்கு-ஸமர்த்தையல்ல.

தா-ம்.—துக்கானுபவத்தால் எனதுஜீவன் ஊர்ஜ்ஜிதவாழ்க்கைகொள்கிறதேயொழிய தேகத்தைவிட்டு நீங்குவதைக்காணேன். இப்படியே ஜீவித்திருந்தால் கொஞ்சகாலத்தி லிராவணனென்னைக் கொல்லப்போகிறான். அந்தபாபிஷ்டி கையாலிறப்பதைவிட ஆத்மஹத்திசெய்து கொள்வதேமேன்மை. ஸர்வவிதத்தாலு மாத்மரக்ஷணஞ் செய்யவேண்டுமென்கிற சுருதிவாக்கியத்தை மரியாதைபண்ணவேண்டுமானால் எனது கற்பை இராவணனுக்கர்ப்பணஞ்செய்யவேண்டும். வியபசாரஞ்செய்தாவது ஜீவரக்ஷணஞ்செய்ய விரும்புகிறவள்யானோ! அவ்வதமாதமவாழ்க்கையைவிட ஆத்மஹத்தியென்கிற பாபத்தைச்செய்வது உத்தமோத்தமமானகாரியம். பிராணஹானிநேரிடினும் வேதவித்தையைசூத்திரனுக்களிக்க விணங்காத விப்பிரன்போல், கோரவதமும் கோரபாபமுநேரிடினும் ஸ்ரீராகவார்ப்பணஞ்செய்த வென்மனதை இராவணனுக் கிசையும்படிசெய்யேன்.

౬. నూనం మమాంగాన్యచిరాదనార్యః శస్త్రైః శితైశ్ఛేత్స్యతి రాక్షసేంద్రః। తస్మిన్ననాగచ్ఛతి లోకనాథే గర్భస్థజంతోరివ శల్యకృంతః॥

௬. நூநம்மமாங்காந்யசிராதநார்யஶ்ஶஸ்த்ரைஶ்ஶிதைஶ்சேத்ஸ்யதிராக்ஷஸேந்த்ர:।
தஸ்மிந்நநாகச்சதிலோகநாதேகர்ப்பஸ்தஜந்தோரிவஶல்யக்ருந்த:॥

௬. நூநம்மமாங்காந்யசிராதநார்யஶ்ஶஸ்த்ரைஶ்ஶிதைஶ்சேத்ஸ்யதிராக்ஷஸேந்த்ர:।
தஸ்மிந்நாகச்சதிலோகநாதேகர்ப்பஸ்தஜந்தோரிவஶல்யக்ருந்த:॥

பதம்.	உரை.
லோகநாதே-தஸ்மிந்	ஜகத்ப்ரபுவான-அந்த (ஸ்ரீராகவன்)
அநாகச்சதி (ஸதி)	(இரண்டுமாதத்திற்குமுன்பே) யெழுந்தருளாமலிருப்பராகில்
கர்ப்பஸ்தஜந்தோ:	கர்ப்பத்திலிருக்கிற பிராணியினுடைய
அங்காநி-ஶல்யக்ருந்தஇவ	அவயவங்களை-நாவிதன்போல்
மம	என்னுடைய (அவயவங்களை)
அநார்ய:-ராக்ஷஸேந்த்ர:	துஷ்டனாகிய இராவணன்
ஶிதை:-ஶஸ்த்ரை:	கூருடைய-பாணங்களால்
அசிராத்-சேத்ஸ்யதி	சீக்கிரமாக-வெட்டப்போகிறான்
நூநம்	நிச்சயம்.

தா-ம்.—ஜகத்பிரபுவான ஸ்ரீராகவன் இன்னமிரண்டுமாதத்தி லென்னையடையாராகில், கர்ப்பத்தினின்று வெளிப்படாது மரித்துப்போன சிசுவினங்கங்களை நாவிதன் சின்னபின்னமாக்கி வெளிப்படுத்துவதுபோல், நன்மனோரதத்திற் கிசையாதவென்னை இராவணன் சரங்களால் சேதிக்கப்போகிறான்.

౭. దుఃఖం బతేదం మమ దుఃఖితాయా మాసౌ చిరాయాధిగమిష్యతో ద్వౌ। బద్ధస్య వధ్యస్య తథా నిశాంతే రాజాపరాధాదివ తస్కరస్య॥

௭. 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌬𑌤𑍇𑌦𑌂 𑌮𑌮 𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑌾𑌯𑌾 𑌮𑌾𑌸𑍌 𑌚𑌿𑌰𑌾𑌯𑌾𑌧𑌿𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍋 𑌦𑍍𑌵𑍌।
𑌬𑌦𑍍𑌧𑌸𑍍𑌯 𑌵𑌧𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑌥𑌾 𑌨𑌿𑌶𑌾𑌨𑍍𑌤𑍇 𑌰𑌾𑌜𑌾𑌪𑌰𑌾𑌧𑌾𑌦𑌿𑌵 𑌤𑌸𑍍𑌕𑌰𑌸𑍍𑌯॥

௭. து:க்கம்பதேதம்மமது:க்கிதாயாமாஸௌசிராயாதிகமிஷ்யதோத்வௌ।
பத்தஸ்யவத்யஸ்யததாநிஶாந்தேராஜாபராதாதிவதஸ்கரஸ்ய॥

பதம்.	உரை.
சிராயா:-துக்கிதாயா:	பஹுகாலமாய்-துக்கத்தை யடைந்த
மம-த்வௌ	எனக்கு-இரண்டான
மாஸௌ-அதிகமிஷ்யத:	கெடுவிட்டமாஸம்-வரப்போகிறது (என்கிறயாதொன்றுண்டோ)
இதம்-ராஜாபராதாத்	இது-இராஜனையும்பொருட்டு செய்த தப்பிதத்தால்
பத்தஸ்ய-ததா	கட்டப்பட்டிருப்பவனும்-அப்படியே
நிஶாந்தேச-வத்யஸ்ய	பிராதக்காலத்தில் கொலைபுரியத்தக்கவனுமான
தஸ்கரஸ்யேவ	திருடனைப்போல்
துக்கம்-பத	வியஸனம்-(வந்துவிட்டது)கஷ்டம்.

தா-ம்—.இப்பத்துமாதகாலமாக அகோராத்திரம் துக்கத்தாற் கதறுகிறவெனக்கு இவ்விரண்டுமாதங்களுமாய்ந்தவுடன், இராஜாபராதத்தாற்கட்டுண்டு அதன்பிரயோசனமாக ஓர் தினைதயத்தில் சிரஸாக்கினையையெதிர்ப்பார்த்திருக்கும் சோரன்போல், ஐயோ, நிரபராதியானயான் அதர்மத்திற் கிணங்காமைக்காக கொலையுண்ணப்போகிறேன். இராகவநிமித்தம பிராணதாரணஞ்செய்துவந்தயான் அந்தலோகநாதனைக்காணாது விநாசமடையப்போகிறேன். சிலரக்ஷணத்திற்காக விப்பலனே! ஆகொடிது!

౮. హా రామ హా లక్ష్మణ హా సుమిత్రే హా రామమాతః సహ మే జనన్యా। ఏషా విపద్యామ్యహమల్పభాగ్యా మహార్ణవే నౌరివ మూఢవాతా॥

௮. 𑌹𑌾 𑌰𑌾𑌮 𑌹𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣 𑌹𑌾 𑌸𑍁𑌮𑌿𑌤𑍍𑌰𑍇 𑌹𑌾 𑌰𑌾𑌮𑌮𑌾𑌤𑌃 𑌸𑌹 𑌮𑍇 𑌜𑌨𑌨𑍍𑌯𑌾।
𑌏𑌷𑌾 𑌵𑌿𑌪𑌦𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑌲𑍍𑌪𑌭𑌾𑌗𑍍𑌯𑌾 𑌮𑌹𑌾𑌰𑍍𑌣𑌵𑍇 𑌨𑍌𑌰𑌿𑌵 𑌮𑍂𑌢𑌵𑌾𑌤𑌾॥

௮. ஹாராமஹாலக்ஷ்மணஹாஸுமித்ரேஹாராமமாதஸ்ஸஹமேஜநந்யா।
யேஷாவிபத்யாம்யஹமல்பபாக்யாமஹார்ணவேநௌரிவமூடவாதா॥

பதம்.	உரை.
மே-ஜநந்யாஸஹ	என்னுடைய-தாயோடுகூட
ஹாராமமாத:	ஓராமமாதாவான (கௌஸல்யே)
ஹாஸுமித்ரே	ஓ ஸுமித்ரே!
ஹாராம-ஹாலக்ஷ்மண	ஓராம-ஓலக்ஷ்மண!
அல்பபாக்யா	மந்தபாக்கியமுடைய
ஏஷா-அஹம்	இந்த-நான்
மஹார்ணவே-மூடவாதா	பெருங்கடலில்-சுழற்காற்றையுடைய
நௌரிவ	ஓடம்போல்
விபத்யாமி	ஆபத்தை யடைகிறேன்.

(விபத்யே-என்றிருக்கவேண்டும் ஆர்ஷம்.)

தா-ம்—.இந்தவிதம் கிலேசமுற்றபிராட்டி தன்னுடைய பிராணபந்துவைக்காணாது பின்வருமாறு முறையிட்டனள். (ரமயதீதிராம:) ஸர்வலோக மனோகரனென்றுகாரணப் பெயர்பூண்ட ஹேநாத! ஆசிருதரக்ஷணத்திற்காக விரைந்து துஷ்டநிக்கிரகஞ்செய்யும் ஸாதுகுணமுள்ள ஹேசரண்ணிய! என்விஷயத்தில்தேவரீருடைய கல்யாணகுணங்கள் மித்தியையாகக் காண்கின்றனவே! ஆசிருதையானவென்னைத் தேவரீர் மறந்துவிட்டீரோ! என்னுடையபிரலாபங்கள் தேவரீருடையசெவிபடவில்லையோ! ஐயோகாணேனே நாதனே, இலக்ஷ்மணனையாவ தழைப்போமென்று பின்னுங்கதறுகிறாள். ஹாலக்ஷ்மண! ஜ்யேஷ்டப்ராதாவின் பத்தினியான யானுமக்கு மாதாவன்றோ! என்னையிப்படி யுபேக்ஷிக்கலாமோ! பத்தினிவிஷயமென்று ஸ்ரீராகவன் பராங்முகமாயிருந்தாலும் மாதாவிஷயத்தில் நீரிப்படியிருப்பது தர்மமாகுமோ! அன்றி, அரண்ணியத்திற்குப்பிரயாணப்படுங்கால், "ராமம்தஶரதம்வித்தி, மாம்வித்திஜநகாத்மஜாம்" என்று சொல்லிவிடுத்த ஸுமித்திரையின்வாக்கியம் மறந்துவிட்டீரோ! என்னைரக்ஷிக்க வாராதபக்ஷத்தில், உமக்குமாதாவை யுபேக்ஷித்தல், மாதிருவாக்கிய உல்லங்கனம் செய்தல், இவ்விரண்டுபாபமும் நேரிடுமாதலால் நீர் அவசியம் ரக்ஷிக்கமுயன்றிருப்பீர். ஐயோ காணேனே இன்னமப்பிரியபந்துவை. இவ்விதமிலக்ஷ்மணனைக்காணாது மாமியான கௌஸல்யையையழைக்கிறாள். அன்னாய் கௌஸல்யே! லோகபர்த்தாவான ஸ்ரீராகவனைப் பெற்றவளென்கிற யசஸ்ஸோடுவிளங்குந்தாயே! புத்திரனைநம்பி நாட்டுப்பெண்ணை காடுவிட்டனுப்பியநீர் கஷ்டமடைந்துவிட்டீர். ஐயோகானும்மைக்காணுதிங்கழிகிறேன். மாற்றான்றாயான கைகேயியைப்போலல்லாமல் மிகுந்த ஆர்வத்துடன் ஸீதாராமரக்ஷணநிமித்தமாக அருமைமைந்தனைவனத்திற் கனுப்பிய பிரியமாதாவான ஸுமித்திரே! எனதுகஷ்டத்தைக்காணீர்; ஸ்ரீராமலக்ஷ்மணுளைப்பிரிந்தேன். இராக்ஷஸவசமடைந்தேன். உங்க

னையெலலாங் காணுதொழிகிறேன். யானல்பமான பாக்கியஞ்செய்தவள். கடல்மத்தியில் சுழல்காற்றிற்கிலக்கான வோடம்போல் துக்கபாவசையாகி அங்கியாயமாய் நசித்துவிடுகிறேன். ஹாகஷ்டம்!

௯. తపస్వినా ధారయతా మృగస్య సత్త్వేన రూపం మనుజేంద్రపుత్రౌ। నూనం విశస్తౌ మమ కారణాత్తౌ సింహర్షభౌ ద్వావివ వైద్యుతేన॥

௯. [illegible]

[illegible]

௯. தாஸ்விநௌதாரயதாம்ருகஸ்யஸத்வேகரூபம்மநுஜேந்த்ரபுத்ரௌ।
நூநம்விஸஸ்தௌமமகாரணாத்தௌஸிம்ஹர்ஷபௌத்வாவிவவைத்யுதேந॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ம்ருகஸ்ய-ரூபம்	மானினுடைய-ஆகாரத்தை	வைத்யுதேந	இடியினுல்
தாரயதா-ஸத்வேந	தரித்த-ஜந்துவால் (மாரீசனுல்)	த்வௌ-ஸிம்ஹர்ஷபாவிவ-	இரண்டான ஸிம்ஹசிரேஷ்டங்க[ள்போல்
தாஸ்விநௌ-தௌ	பலமுடையவர்களான-அந்த	மம-காரணாத்	என்னுடையநிமித்தமாக
மநுஜேந்த்ரபுத்ரௌ	இராஜகுமாரரர்	நூநம்-விஸஸ்தௌ	நிச்சயமாக-ஹிம்ஸிக்கப்பட்டார்கள்.

தா-ம்.—அவ்வாரியபுத்திரரிருவரும் உயிரோடிருந்தனராயின் என்னையிதுவரையிற் றேடியடையாமலிரார். அசனியாற்கொலையுண்ட மிருகேந்திரங்கள்போல் லக்ஷ்மணராமரும் பொன்மான் வடிவங்கொண்டொன்னைமயக்கிய உத்பாதத்தாலடிப்பட்டனரென்பது நிச்சயம். ஐயோ சக்ஷுரிந்திரியத்திற்குவசையாகி மோசம்போனேனே! ஆசையால்பத்தப்பட் டென்னையனைப் பரிகொடுத்தேனே! பாபியான யானன்றோ அந்தலோகபாலருடைய நாசத்திற்குக்காரணமாகிறேன்.

௧௦. నూనం స కాలో మృగరూపధారీ మామల్పభాగ్యాం లులుభే తదానీమ్। యత్రార్యపుత్రం విససర్జ మూఢా రామానుజం లక్ష్మణపూర్వజం చ॥

௧௦. [illegible]

[illegible]

௧௦. நூநம்ஸகாலோம்ருகரூபதாரீமாமல்பபாக்யாம்லுலுபேததாநீம்।
யத்ரார்யபுத்ரம்விஸஸர்ஜமூடாராமாநுஜம்லக்ஷ்மணபூர்வஜஞ்ச॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
யதா-மூடா	எந்தகாலத்தில்-மூடையான (யான்)	ஸ:-கால:	அந்த-காலமானது
ஆர்யபுத்ரம்	பூஜ்யரானதசரதபுத்திரரான	நூநம்-ததாநீம்	நிச்சயமாக-அப்பொழுது
ராமாநுஜம்	இலக்ஷ்மணனையும்	ம்ருகரூபதாரீ	மான்வேடம்பூண்டதாக
லக்ஷ்மணபூர்வஜஞ்ச	ஸ்ரீராகவனையும்	அல்பபாக்யாம்-மாம்	ஸ்வல்பபாக்கியஞ் செய்தவளான-என்
விஸஸர்ஜ	விட்டுவிட்டேனே	லுலுபே	வஞ்சித்தது. [னை

தா-ம்.—அஹோ மூடையானேன்! மாயாமிருகதிருஷ்டத்தால் கியானசூன்னியையானேன். மோகாவேசத்தால் கைங்கரியசேஷத்துவத்தைமறந்தேன். மானசைகொண்டு நித்தியவிபூதியைப் பரிகொடுத்தேன். முன்னின்றமான்வேண்டுமென்று பதியையாசித்து அவரையதன்பின்விடுத்தேன். பிறகென்னை ரக்ஷித்துவந்த பரிசுத்தஹிருதயரான இலக்ஷ்மணனை மூடையான நான் அனுசியமொழிகளால் தூஷித்து மனங்கசந்தென்னைவிடும்படி செய்தேன். இப்படி இருவரையுங் கைவிட்டவுடன் ஆபத்தையடைந்தேன். அல்பபாக்கியமுடையவளானவென்னை அக்காலமானது மாயாமிருகரூபியாகவந்து வஞ்சித்துவிட்டது, நிச்சயம்!

௧௧. హా రామ సత్యవ్రత దీర్ఘబాహో హా పూర్ణచంద్రప్రతిమానవక్త్ర। హా జీవలోకస్య హితః ప్రియశ్చ వధ్యాం న మాం వేత్సి హి రాక్షసానామ్॥

௧௧. [illegible] [க॥

[illegible]

௧௧. ஹாராமஸத்யவ்ரததீர்க்கபாஹோஹாபூர்ணசந்த்ரப்ரதிமாநவக்த்ர।
ஹாஜீவலோகஸ்யஹித:ப்ரியஸ்சவத்யாமநமாம்வேத்ஸிஹிராக்ஷஸாநாம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸத்யவ்ரத-தீர்க்கபாஹோ-ஸத்தியத்தையே விரதமாயுடையவரோ-நீண்ட திருக்கைகளையுடையவரோ		ஹாபூர்ணசந்த்ரப்ரதிமாநவக்த்ர - நிறைந்தமதிக்குச்சமானமான திருமுகமுடையவரே	
ஹாராம	ஓ-ஸ்ரீராகவ	மாம்-ராக்ஷஸாநாம்	என்னை-இராக்கதருக்கு
ஜீவலோகஸ்ய-ப்ரியஸ்ச-பிராணி லோகத்திற்கு-இஷ்டனுமான (தேவரீர்)		வத்யாம்	ஹிம்ஸிக்கப்பட்டவளாக (பலியாக)
		நவேத்ஸிஹி-ஹா	அறியவில்லையோ-கஷ்டம்.

தா-ம்.—ஹேஸர்வலோகமஹேஹா! ஸத்தியரக்ஷணமே விரதமாகக்கொண்ட ஹேதர்மஜ்ஞ! துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனார்த்தம் நீண்ட திருக்கைகளையுடையபுருஷோத்தம! நிறைந்தமதிபோலதி ஆக்லாதகமான திருமுகமண்டலமுடைய ஹே ஸுந்தர! ஹேஸர்வஜீவகாருண்ணிய! இராக்கதர்கையிற்சிக்கி வதைபடுகிறவென்னைமறந்தீரோ! பக்தஜனத்தினுடைய மனம்ஸந்தோஷிக்கும்படி செய்கிறதேவரீர் பரமபக்தையானவென்மனம்புண்ணுகி பதறும்படியேன் விட்டிருக்கிறீர்? சரணமடைந்தாரை ரக்ஷிக்கிறதாகப் பிரதிக்கினை செய்ததேவரீர் என்னையேன் ரக்ஷிக்காது புலம்பவிட்டிருக்கிறீர்? காதூஷணப்பிரமுகாதிகளை க்ஷணத்தி

கிபாதஞ்செய்து தண்டகாவனரிஷிகளுக்கபயமளித்த திருக்கைகளால் இராவணனையடித்து என்னை ரக்ஷிக்கலாகாதோ? சிவதனுஸைமுறித்த தீர்க்கபாஹுவென்றுமமைக்கொண்டாடி ஜனகனென்னை யுமக்களித்தாரே. இப்படியான் படுவதற்கோ அந்தபாஹுபலம்படைத்தீர்! நீண்டகையுள்ளார் தீர்க்கதொடையாள னென்பார்களே, அரக்கனுக்கென்னை தானஞ்செய்வதற்கோ உமதுகைகள்நீண்டன! பக்கநயை ரக்ஷிப்பதற்கு கைகளில்லையோ! பாணிக்கிரணஞ்செய்த பத்தினியை ரக்ஷிப்பதற்கு பாஹுபலமுண்டாகவில்லையோ! கற்பழிக்கவந்த காதுகனைக் கண்டிப்பது தர்மபரிபாலனமாகாதோ! ஹாநாத, ஹாராம, தீர்க்கபாஹோ! காகணனே தேவரீருடைய திருக்கைகளை; ஸகல ஆத்மாக்களுக்கும் ஹிதஞ்செய்கிற ஜீவகாருண்ணியன். ஸகலதுக்க நிவாரணஞ்செய்கிற தயாபரன். துக்கோத்பவமான உஷ்ணத்தைப்போக்குகிற பூர்ணேந்துவதனன். ஸர்வலோகானந்தகரன். ஐயோ இக்குணங்களிலொன்றையு மிப்பொழுதுகாணவில்லையே. ஹாப்ராணபந்தோ! என்னை மறந்துவிட்டீரோவென்று துக்கித்தாளந்த பரதேவதையான ஸீதை.

౧౨. అనన్యదైవత్వమియం క్షమా చ భూమౌ చ శయ్యా నియమశ్చ ధర్మే। పతివ్రతాత్వం విఫలం మమేదం కృతం కృతఘ్నేష్వివ మానుషాణామ్॥

கஉ. [illegible]

[illegible]

கஉ. அநந்யதைவத்வமியம்க்ஷமாசபூமௌசஶய்யாநியமஶ்சதர்மே।
பதிவ்ரதாத்வமவிபலம்மமேதம்க்ருதம்க்ருதக்னேஷ்விவமாநுஷாணாம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அநந்யதைவத்வம்	இதரனைதேவதையாய் எண்ணுமலிருந்ததும் (பர்த்தாஒருவனேதெய்வ	இதம்-மே	இந்தஸமஸ்தமும்-எனக்கு
		க்ருதக்நேஷு	செய்நன்றிமறப்பவர்களிடத்தில்
இயம்-க்ஷமாச	இந்த-பொறுமையும் [மென்றர்த்தம்)	க்ருதம்	செய்யப்பட்ட
பூமௌ-ஶய்யாச	பூமியில்-படுக்கையும்	மாநுஷாணாம்	மனிதருடைய
தர்மே-நியமஶ்ச	நியாயமார்க்கத்தில்-ஸ்திரபுத்தியும்	கர்மேவ	உபகாரசெய்கைபோல்
பதிவ்ரதாத்வம்	பர்த்தாவையேவிரதமாயுடைமையும் (இவைமுதலான)	வ்யர்த்தம்	வியர்த்தமாயின.

தா-ம்.—ஹேநாத! "உன்னிற்றுமற்றொருதெய்வம்தொழாளவனையல்லால்" என்கிறபடியே, தேவரீரையல்லது வேறொருவரைத்தெய்வமாகயான்எண்ணவில்லை. தேவரீரையேதிரிகரணசுத்தியுடன் யான் தெய்வமாகப்பூஜித்துவந்தேன். பட்டாபிஷேகயத்தனகாலத்தில் நாராயண பூஜார்த்தம் பூஜாக்கிரகத்திலிருக்கையில் ரங்கநாதனையர்ச்சியாது தேவரீரையேதியானித்திருந்தேன். பரமநீசனுனராவணன் தேவரீரைத் தூஷிக்கையிலும்என்னை ஹிம்ஸிக்கையிலும் அத்யசிந்தாரஹிதையாய் தேவரீருடையகமலசரணங்களையேநம்பியிருந்தேன். இப்படிப்பட்ட பக்தையென்கிற காருண்ணியபாவத்தாலாவது தேவரீர் என்னைரக்ஷிக்கவில்லை. நாதனைக்காணலாம், க்ஷேமமடையலாம், என்று பரமஹிம்ஸைகளையெல்லாம்பொறுத்து இதுவரையில் ஜீவதாரணஞ்செய்தேன். அபராதமிழைத்த ராவணனை பஸ்மமாக்கவல்ல தேஜஸ்ஸிருந்தும் அடிமையானயான், உடைமையுடையவனிட்டவழக்கென்றிராமல், ஆத்மரக்ஷணத்திற்ப்ரவர்த்தையாயின் பாரதந்திரியலக்ஷணத்திற்குவிரோதமாகுமென்று, அவ்வழிபுகாமல், "தவாஸ்மி" என்றொருதாமஞ்சலிசெய்து பிரபத்திபண்ணினராயின் யாராகிலுமவருக்குடனே அபயப்பிரதானஞ்செய்கிறேனென்று பிரதிக்கியைகொண்டிருக்குந் தேவரீருடையதிருநாமங்களையே உச்சாரணஞ்செய்துகொண்டு அபயத்தையெதிர்பார்த்து க்ஷமையோடிருந்தேன். என்னபலனடைந்தேன். திவ்வியாந்தப்புரத்தில் திவ்வியபோகஸஹிதமான ஹம்ஸதூளிகாசயனத்தை யபேக்ஷியாமல், நாதனைப்பிரிந்தபிறகு அந்தப்புரவாஸமேன், ஆபரணாலங்காரமேன், அன்னபானாதிகளேன், என்று ஸமஸ்தஸங்கங்களையும் வர்ஜஜித்து, தேவரீருடைய திருவங்கத்தைத் திரும்பியடையுகிமித்தம் புழுதிபடிந்தபாழ்தரையிற் படுப்பதாகிற கடுவிரதத்தைஉயமனுஸரித்தேன். பதியைப்பிரிந்திருக்குங் காலத்தில் குலஸ்திரீ யனுஸரிக்கவேண்டிய ஸகலதர்மங்களையும் ஆசரித்தேன். ஆபரணங்களணிந்தேனில்லை, போகங்களபேக்ஷித்தேனில்லை, பரபுருஷஸ்மரணை கொண்டேனில்லை, எப்பொழுதும் பதியையே நினைத்து ஸந்தோஷகாலம் வருமோவென்றிருந்தேன். பாபியான இராவணனும் காதுகிகளான இவ்விராக்ஷஸிகளும் இனியமொழிகளாலும் கடுமொழிகளாலும் என்மனதைக்கலைக்க வெத்தனித்தபோது, யானிணங்காமல் பிராணஹானிக்கும்பயப்படாமல் ஸ்திரபுத்திகொண்டேயிருந்தேன். இந்த தர்மாசரணமும் பாதிவிருத்தியமும் என்னபயன்தந்தன. ஹே ராகவ! தேவரீர்விஷயமாக யான்பாராட்டிய அநந்யகதிபாவமும், பாரதந்திரியமும், தர்மாசரணமும், பாதிவிருத்தியமும், இவையெல்லாம் கிருதக்கினனுக்கிழைத்த உபகாரங்கள்போல்வீணாயின. எனதுசேஷத்துவத்தையாண்டு என்னை ஆபத்காலத்தில் கைவிட்ட தேவரீர் "ஆத்மாநம்மாநுஷம்மந்யே" என்கிறபடி மனுஷியாவதாரங்கொண்டதால் மனிதர்க்கியல்பான கிருதக்கினத்துவத்தை யடைந்துவிட்டீரோ? யான்செய்த பிரபத்தியெல்லாம் வீணாயிற்றே. இரக்ஷிப்பாரில்லையே! ஐயோ என்பாக்கியமென்ன அல்பபாக்கியம்!.

౧౩. మోఘో హి ధర్మశ్చరితో మయాయం తథైకపత్నీత్వమిదం నిరర్థకమ్। యా త్వాం న పశ్యామి కృశా వివర్ణా హీనా త్వయా సంగమనే నిరాశా॥

கங. [illegible] [illegible]

[illegible]

கங. மோகோஹிதர்மஸ்சரிதோமயாயம்ததைகபத்நீத்வமிதம்நிரர்த்தம்।
யாத்வாம்நபஸ்யாமிக்ருஸாவிவர்ணாஹிநாத்வயாஸங்கமநேகிராஸா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹேராம)த்வயாஹீநா-	(ஓராம)உம்மால்-விடப்பட்டவளாக	மயா	(அப்படிப்பட்ட) என்னால்
க்ருஸா-விவர்ணா	இளைத்தவளும்-அழகற்றவளுமாக (ஆ	சரிதஃ-தர்மஃ	செய்யப்பட்ட-தர்மமானது
(ஸாஹம்)	(அந்தயான்) [னேனோ)	வ்யர்தோஹி	பிரயோஜநமற்றதன்றோ
ஸங்கம - நே - நிராஸா -	உம்முடைய) ஸம்பந்தத்தில்-ஆசையற்றவளாக	ததா-யேகபத்நீத்வம்	அப்படியே-ஒரேபர்த்தாவையுடையதாயிருக்கையையும்
த்வாம்-நபஸ்யாமி	உம்மை-பார்க்காமலிருக்கேனோ	நிரர்த்தம்	பிரயோஜநமன்று.

தா-ம்.—ஹேராகவ! தேவரீருடைய திருக்கமல சரணஸேவையின்றி யான்கிருஸித்தேன், ஸர்வாங்க சோபையிழந்தேன். பார்வைக்குவழங்காத குத்ஸிதரூபியானேன். யானுசரித்த தர்மங்களெல்லாம் வியர்த்தமாயின. யான்செய்ததவம் ஸபலமாகவில்லை. அவ்வண்ணமே ஏகபத்நீத்வமென்கிற விரதமும் வியர்த்தமே!

౧౪. పితుర్నిదేశం నియమేన కృత్వా వనాన్నివృత్తశ్చరితవ్రతశ్చ। స్త్రీభిస్తు మన్యే విపులేక్షణాభిస్త్వం రంస్యసే వీతభయః కృతార్థః॥

கச. പിതുർനിദേശം നിയമേന കൃത്വാ വനാന്നിവൃത്തശ്ചരിതവ്രതശ്ച।
സ്ത്രീഭിസ്തു മന്യേ വിപുലേക്ഷണാഭിസ്ത്വം രംസ്യസേ വീതഭയഃ കൃതാർഥഃ॥

கச. பிதுர்நிதேஸம்நியமேநக்ருத்வாவநாந்நிவ்ருத்தஸ்சரிதவ்ரதஸ்ச।
ஸ்த்ரீபிஸ்துமந்யேவிபுலேக்ஷணாபிஸ்த்வம்ரம்ஸ்யஸேவீதபய:க்ருதார்த்த:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹேராம)-த்வம்	(வாரீர்ராமனே) தேவரீர்		யொழிந்தவராய்க்கொண்டு
பிது:-நிதேஸம்	பிதாவினுடைய-ஆஞ்ஞையை [ய்து	க்ருதார்த்த:	பலித்தபிரயோஜநமுடையவராக
நியமேந-க்ருத்வா	அவிச்சிந்நமாக(தடங்கலில்லாமல்) செ	விபுலேக்ஷணாபி:	நீண்டகண்களையுடைய
வநாத்-நிவ்ருத்த:	அரணியத்திலிருந்து-திரும்பினவராக	ஸ்திரீபி:-ரம்ஸ்யஸே	ஸ்திரீகளோடு-ரமிக்கப்போகிறீர்
வீதபய:	வனவாஸத்தா லுண்டான பயத்தை	மந்யே	(என்று) யெண்ணுகிறேன்.

தா-ம்.—ஹேராகவ! தேவரீர்பிதிருவாக்கியத்தை வனவாஸத்தால் நிறைவேற்றிப்பிற்கு அரண்ணியத்தினின்றும் அதனுடைய பயத்தினின்றும்விடுபட்டு அயோத்திமாநகரம்சேர்ந்து ஸிம்மாஸனாரூடராய் இராஜ்ஜியலக்ஷ்மிஸமேதராய் ஸகலஸாம்பிராஜ்ஜியங்களையுமடைந்து, உத்பலமலர்கள்போலகன்ற நீண்ட ஆக்லாதகரமான கண்களுடைய வனேக கட்டழகுமாதரைச்சேர்ந்து ரமிக்கப்போகிறீரென்று நினைக்கிறேன்.

౧౫. అహం తు రామ త్వయి జాతకామా చిరం వినాశాయ నిబద్ధభావా। మోఘం చరిత్వాథ తపో వ్రతం చ త్యక్ష్యామి ధిగ్జీవితమల్పభాగ్యా॥

கரு. അഹം തു രാമ ത്വയി ജാതകാമാ ചിരം വിനാശായ നിബദ്ധഭാവാ।
മോഘം ചരിത്വാഥ തപോ വ്രതം ച ത്യക്ഷ്യാമി ധിഗ്ജീവിതമല്പഭാഗ്യാ॥

கரு. அஹந்துராமத்வயிஜாதகாமாசிரம்விநாஸாயநிபத்தபாவா।
மோகம்சரித்வாததபோவ்ரதஞ்சத்யக்ஷ்யாமிதிக்ஜீவிதமல்பபாக்யா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேராம	வாரீர்ஸ்ரீராகவனே		யே உண்டான நியமத்தையும்
அல்பபாக்யா	ஸ்வல்பபாக்யத்தையுடைய	சரித்வா	செய்து
அஹம்து	நானேவென்றால்	விநாஸாய	நாசத்தையும்பொருட்டு
த்வயி-சிரம்	உம்மிடத்தில்-வெகுகாலமாக	நிபத்தபாவா	தேவரீர் திருவடிகளிலேயே கட்டப்பட்ட வபிப்ராயத்தையுடையவளாக
ஜாதகாமா	உண்டாயிருக்கிறஆசையுடையவளாக	திக்-ஜீவிதம்	தூஷிதமான-பிராணனை
அத-மோகம்	பிறகு-வியர்த்தமான	த்யக்ஷ்யாமி	விடுகிறேன்.
தபோவ்ரதம்ச	ஆகார மில்லாமலும் உம்மிடத்திலே		

தா-ம்.—இந்தவிதம், ஹேராகவ! தேவரீர் கஷ்டத்தினின்று நீங்கி நஷ்டராஜ்ஜியத்தைத் திரும்பியடைந்து நஷ்டஸ்திரீக்குப் பிரதியாக இஷ்டஸ்திரீக்களனேகரைச்சேர்ந்து ஸந்தோஷபாக்கியத்தையனுபவிக்கப்போகிறீர். பாக்கியஹீனையான யானோவென்னில், ஜீவனுள்ளளவில் உறுதியான அன்போடு தேவரீரையே நேசித்தேன். அனன்யபாவத்தோடு பாதிவிருத்தியதர்மத்தைக் குறைவின்றியனுஸரித்தேன். தேவரீரைப்பிரிந்த வித்தனைகாலம் அன்னபானமின்றி கடுந்தவத்தோடு தேவரீராகமனத்தை யெதிர்பார்த் திருந்தேன். என்னசெய்து மெனக்குப் பலோதயமாகவில்லை. அனிஷ்டநிவர்த்திக்கு நற்காலம் சேரவில்லை. எனதுநேசமும், தபஸ்ஸும், தர்மமும், கோரிக்கையும், கஷ்டமும் எல்லாம்வீணாயின. இவ்விதவிடறுகளுக்கெல்லாமிலக்காகி படாதனபட்டு ஸர்வவிததூஷிதமான ஜன்மங்கொண்ட வென்பிராணனை யான் நயந்து இதோ அதையொழித்துவிடப்போகிறேன். இப்படி யொழிக்கையிலும் தேவரீருக்கர்ப்பணஞ்செய்தவென்மனதிலேதாகிலும் களங்கமுண்டோ? கைவிட்டவொன்றேதாகிலு பக்தியிற் குறைவுண்டோ? தேவரீரது கமலசரணங்களிற்கட்டுண்ட நிர்த்தோஷமான பாவத்துடன், துன்பத்தின்வாயில்விழுந்து அகாலமரணத்தை யடைந்தழிகிறேன்.

౧౬. సాజీవితం క్షిప్రమహం త్యజేయం విషేణ శస్త్రేణ శితేన వాపి। విషస్య దాతా న హి మే஽స్తి కశ్చిచ్ఛస్త్రస్య వా వేశ్మని రాక్షసస్య॥

௧௬. 𑌸𑌾𑌜𑍀𑌵𑌿𑌤𑌂 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌮𑌹𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌯𑌂 𑌵𑌿𑌷𑍇𑌣 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌶𑌿𑌤𑍇𑌨 𑌵𑌾𑌪𑌿।
𑌵𑌿𑌷𑌸𑍍𑌯 𑌦𑌾𑌤𑌾 𑌨 𑌹𑌿 𑌮𑍇𑌽𑌸𑍍𑌤𑌿 𑌕𑌶𑍍𑌚𑌿𑌚𑍍𑌛𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌵𑍇𑌶𑍍𑌮𑌨𑌿 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌸𑍍𑌯॥

௧௬. ஸாஜீவிதம்க்ஷிப்ரமஹம்த்யஜேயம்விஷேணஶஸ்த்ரேணஶிதேநவாபி।
விஷஸ்யதாதாநஹிமேஸ்திகச்சித்ஶஸ்த்ரஸ்யவாவேஶ்மநிராக்ஷஸஸ்ய।

பதம்.	உரை.	பதம்.	உரை.
அஹம்-விஷேண	யான்-விஷத்தாலாவது	ராக்ஷஸஸ்ய-வேஶ்மநி	ராவணனுடைய-வீட்டில்
ஶிதேந-ஶஸ்த்ரேண	தீக்ஷணமான-ஆயுதத்தாலாவது	மே-விஷஸ்ய	எனக்கு-விஷத்தையாவது
ஜீவிதம்-க்ஷிப்ரம்	ப்ராணனை-சீக்கிரமாக	ஶஸ்த்ரஸ்யவா-தாதா	ஆயுதத்தையாவது-கொடுப்பவன்
த்யஜேயம்	விட்டுவிடுகிறேன்	கச்சித்-நாஸ்திஹி	ஒருவனும்-இல்லையன்றே.

தா-ம்.—இப்பொழுது கொஞ்சம்விஷமாவது, தீக்ஷணமான சஸ்திரமாவது கிடைத்தால் உடனே பிராணனை யொழித்துவிடுவேன். ஆனுலிவைகளைக் கொடுக்கும்படியான அவ்வளவு உபகாரிகள் இந்நகரிலிருப்பரோ! பாதிவிருத்தியநாசனத்தி லூற்றங்கொண்டபாபிகள் வாழுமிந்நகரில் இவ்விதவுபகாரத்தையுஞ் செய்யப்பெறுவேனே! வியபசரிபத்திற்கிணங்கின் ஸகலபோகங்களு மென்னையடையும். பிராணஹானிசெய்தாவது தர்மத்தைநிலைநிறுத்த முயலுமெனக்குக் கத்தியாவது விஷமாவது கிடைக்காத அதர்மநகரமிது. அதர்மவிர்த்திக்கே இது அனுகூலமானதல்லவோ.

౧౭. ఇతీవ దేవీ బహుధా విలప్య సర్వాత్మనా రామమనుస్మరంతీ। ప్రవేపమానా పరిశుష్కవక్త్రా నగోత్తమం పుష్పితమాససాద॥

௧௭. 𑌇𑌤𑍀𑌵 𑌦𑍇𑌵𑍀 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌿𑌲𑌪𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌰𑌾𑌮𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌤𑍀।
𑌪𑍍𑌰𑌵𑍇𑌪𑌮𑌾𑌨𑌾 𑌪𑌰𑌿𑌶𑍁𑌷𑍍𑌕𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾 𑌨𑌗𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌿𑌤𑌮𑌾𑌸𑌸𑌾𑌦॥

௧௭. இதீவதேவீபஹுதாவிலப்யஸர்வாத்மநாராமமநுஸ்மரந்தீ।
ப்ரவேபமாநாபரிஶுஷ்கவக்த்ராநகோத்தமம்புஷ்பிதமாஸஸாத॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ப்ரவேபமாநா	இராக்ஷஸஸ்திரீகளின் அதட்டுருட்டுகளால்நடுக்கப்பட்டவளும்	ஸர்வாத்மநா-ராமம்	ஸகலவிதத்தாலும்-ஸ்ரீராகவனை
பரிஶுஷ்கவக்த்ரா-தேவீ	உலர்ந்துபோன திருப்பவளத்தையுடையஸீதையானவள்	அநுஸ்மரந்தீ	ஸ்மரித்தவளாய்க்கொண்டு
இதீவ-பஹுதா-விலப்ய	இந்தவிதம்-அனேகப்ராகாரமாக துக்கித்து	புஷ்பிதம்-நகோத்தமம்	பூத்திருக்கிற வ்ருக்ஷத்துக்குள்சிறந்ததான-ஶிம்ஶுபாவ்ருக்ஷத்தை
		ஆஸஸாத	அடைந்தாள்.

தா-ம்.—இந்தவித மதர்மத்திற் பிரவர்த்திக்கும்படி இடைவிடா துபத்திரவிக்கப்பட்டபிராட்டி பிரமாதமான கலக்கத்துடன், இனி ஜீவனோடிருக்கின் அனர்த்தம்நேரிடும், ஆத்மஹத்தியால் இராவணஹிம்ஸையை முந்தவேண்டு மென்று நிச்சயித்து, தன்னுடைய தபோவிரதங்களும் மனோரதங்களும் வீணாயினவேயென்று துக்கித்து, கிலேசாதிகத்தாலும் பயமிகுதியாலும் தேககம்பமுற்று, ஸ்ரீராகவத்தியான பரையாய் ஒளிமழுங்கிசுருங்கி விரூபமடைந்த திருமுகத்துடன், எதினின்று இன்னம் க்ஷணகாலத்தில் தன்னுடையதுக்கங்களும் தாபங்களும் பிரலாபங்களும் பற்றறவொழிய ஸ்ரீராமகதாமிருதமாகிற தேவாமிருதமானது பெருகப்போகின்றதோ, எதினின்று தனதையன் விடுத்ததூதன் வெளிப்பட்டு ஆத்மஹத்தியிற் பிரவர்த்தித்த தனது துக்கத்தையாற்றிக்ஷேமஸமாசாரமுரைக்கப்போகின்றனரோ அப்படிப்பட்டவிருக்ஷராஜமாகிற ஶிம்ஶுபாவிருக்ஷத்தையடைந்தாள்.

౧౮. శోకాభితప్తా బహుధా విచింత్య సీతాథ వేణ్యుద్గ్రథనం గృహీత్వా। ఉద్బధ్య వేణ్యుద్గ్రథనేన శీఘ్రమహం గమిష్యామి యమస్య మూలమ్॥

௧௮. 𑌶𑍋𑌕𑌾𑌭𑌿𑌤𑌪𑍍𑌤𑌾 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌸𑍀𑌤𑌾𑌥 𑌵𑍇𑌣𑍍𑌯𑍁𑌦𑍍𑌗𑍍𑌰𑌥𑌨𑌂 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾।
𑌉𑌦𑍍𑌬𑌧𑍍𑌯 𑌵𑍇𑌣𑍍𑌯𑍁𑌦𑍍𑌗𑍍𑌰𑌥𑌨𑍇𑌨 𑌶𑍀𑌘𑍍𑌰𑌮𑌹𑌂 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌯𑌮𑌸𑍍𑌯 𑌮𑍂𑌲𑌮𑍍॥

௧௮. ஶோகாபிதப்தாபஹுதாவிசிந்த்யஸீதாதவேண்யுத்க்ரதநம்க்ருஹீத்வா।
உத்பத்யவேண்யுத்க்ரதநேநஶீக்ரமஹம்கமிஷ்யாமியமஸ்யமூலம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அத-ஶோகாபிதப்தா	பிறகு-வியஸனத்தால் நன்றாக தபிக்கப்பட்ட	அஹம்-வேண்யுத்க்ரதநேந	நான்-பின்னலால்
ஸீதா-வேண்யுத்க்ரதநம்	பிராட்டி-பின்னலை	உத்பத்ய	உரிபோட்டுக்கொண்டு
க்ருஹீத்வா	கிரகித்துக்கொண்டு	யமஸ்யமூலம்	இயமனுடையஸமீபத்தை
பஹுதா-விசிந்த்ய	அனேகபிரகாரமாக-ஆலோசித்து	ஶீக்ரம்	தீவிரமாக
		கமிஷ்யாமி	அடைகிறேன்.

౧౯. ఉపస్థితా సా మృదుసర్వగాత్రీ శాఖాం గృహీత్వాథ నగస్య తస్య। తస్యాస్తు రామం ప్రవిచింతయంత్యా రామానుజం స్వం చ కులం శుభాంగ్యాః॥
౨౦. శోకాన్నిమిత్తాని తథా బహూని ధైర్యార్జితాని ప్రవరాణి లోకే। ప్రాదుర్నిమిత్తాని తదా బభూవుః పురాపి సిద్ధాన్యుపలక్షితాని॥

கக. [illegible]
[illegible]
உ௦. [illegible]
[illegible]

கக. உபஸ்திதாஸாம்ருதுஸர்வகாத்ரீஶாகாம்க்ருஹீத்வா நகஸ்ய தஸ்ய।
தஸ்யாஸ்துராமம்ப்ரவிசிந்தயந்த்யாராமாநுஜம்ஸ்வஞ்சகுலம்ஶுபாங்க்யா:॥
உ௦. ஶோகாநிமித்தாநிததாபஹூநிதைர்யார்ஜிதாநிப்ரவராணிலோகே।
ப்ராதுர்நிமித்தாநிததாபபூவு:புராபிஸித்தாந்யுபலக்ஷிதாநி॥
இதி ஸ்ரீ ஸுந்தரகாண்டே அஷ்டாவிம்ஶஸ்ஸர்க:.

பதம்.	உரை.	பதம்.	உரை.
அத-ம்ருதுஸர்வகாத்ரீ-ஸா-பின்பு-மெல்லிய அவயவங்களையுடைய-அந்த (ஸீதை)		ஶோகாநிமித்தாநி	துக்கத்திற்குக்காரணமில்லாதனவும்
தஸ்ய-நகஸ்ய	அந்த-மரத்தினுடைய	ததா	அந்தபிரகாரம் (வாயிட்டுசொல்லமுடியாதனவாக)
ஶாகாம் க்ருஹீத்வா	கிளையை-பிடித்துக்கொண்டு	பஹூநி-தைர்யார்ஜிதாநி-அநேகங்களும்-தைரியத்தை யுண்டு பண்ணுகின்றனவும்	
உபஸ்திதா	இருந்தாள்.		
ராமம்-ராமாநுஜம்	ஸ்ரீராகவனையும் - இலக்ஷ்மணனையும்	லோகே-ப்ரவராணி	உலகத்தில்-பிரஸித்தமானவும்
ஸ்வம்-குலஞ்ச	தன்னுடைய-வம்சத்தையும்	புரா பி-ஸித்தாநி	முன்பும்-பலித்தனவாக
ப்ரவிசிந்தயந்த்யா:	நன்றாயாலோசித்திருக்கிறவளும்	உபலக்ஷிதாநி	காணப்பட்டுமிருக்கிற
ஶுபாங்க்யா:-தஸ்யா:-சோபனமான அவயவமுமுடைய-அந்த (பிராட்டிக்கு)		நிமித்தாநி	சுபசகுனநிமித்தங்கள்
		ததா-ப்ராதுர்பபூவு:	அப்பொழுது-உண்டாயின.

தா-ம்.—துக்கத்தால் மிகவுந்தபிக்கப்பட்ட ஸீதை சிம்சுபாவிருக்ஷத்தின்கீழ் நின்று ஆத்மஹத்திசெய்யும்விஷயத்தை வெகுவிதம்யோசித்து முடிவில் பிராணத்தியாகஞ்செய்வதே யுக்தமென்று நிச்சயித்துத் தனது பின்னலைக்கழுத்தில்சுற்றி மரக்கிளையில் மாட்டி மரணத்தையடைகிறதென்கிற தீர்மானத்துடன் அம்மரத்தினோர்சாகையைப் பிடித்துக்கொண்டுநின்றாள். தற்கொலைபுரிய வெத்தனிக்குமுன் பிராணபந்துவான ஸ்ரீராகவனையும்,பத்தினிபிரிந்தாலும் தான்பிரிந்தறியா வனுஜனை இலக்ஷ்மணனையும், மற்றுள்ள பந்துக்களையும்நினைத்துநின்றாள். அப்பொழுது அந்தசோபனாங்கிக்கு சோகத்தை யொழிக்கின்றனவும் தைரியத்தையுண்டுபண்ணுகின்றனவும், இதுவரையில் உலகத்தார்க்கு க்ஷேமத்தையேகுறித்து வந்தனவுமான அநேக நற்சகுனங்களுண்டாயின.

ஸ்ரீஸங்மனோரஞ்ஜநீ நாமத்திராவிட வியாக்யாந ஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்
இருபத்தெட்டாவதுஸர்க்கம் - முற்றிற்று.

இருபத்தொன்பதாவதுஸர்க்கம்.

௧. [illegible]

௧. [illegible]
[illegible]
௧. ததாகதாம்தாம்வ்யதிதாமநிந்திதாம்வ்யபேதஹர்ஷாம்பரிதீநமாநஸாம்।
ஶுபாம்நிமித்தாநிஶுபாநிபேஜிரேநரம்ஶ்ரியாஜுஷ்டமிவோபஜீவிந:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ததாகதாம்	(கண்க்கிடுவதற்கரிதான) அப்படிப்பட்டவியஸனத்தையடைந்தவளும்	நிமித்தாநி	(அவள்விஷயத்தில்உண்டான)சகுனங்கள் (காரணங்கள்)
வ்யதிதாம்	மனோவிசாரத்தையடைந்தவளும்	ஶுபாநி	நல்ல சகுனங்களை (ஸூசிப்பித்து)
அநிந்திதாம்	நிந்திக்கத்தகாதவளும் [ம்	ஶ்ரியா-ஜுஷ்டம்	ஸம்பத்தால்-பூர்ணனை
வ்யபேதஹர்ஷாம்	போய்விட்டஸந்தோஷ முடையவளு	நரம்-உபஜீவிந இவ	மநுஷ்யனை - அண்டிப்பிழைப்பவன் போல்
பரிதீநமாநஸாம்	மிகதைந்நியமான மனமுடையவளும்		
ஶுபாம் - தாம் - மங்களஸ்வரூபியுமான - அந்த (ஸீதையை)		பேஜிரே	ஸேவித்தன.

தா-ம்.—இந்தவிதம், இனிஜீவதாரணஞ்செய்யின் சஸ்திரசரங்களோடு பீடிக்கமுயலு மிராவணனது ஹிம்ஸைக்குள்ளாக வேண்டிவரும், அதினின்றுதப்ப ஆத்மஹத்தியொன்றேஉபாயம், அவ்வுபாயத்தை யனுஷ்டிப்பதில் விரோதங்களனேகமுண்டாயினும் அதைவிட பிரகிருதத்தில் வேறுகதியில்லை, இத்தியாதிகாரணங்களால் அந்தியோபாய மான ஹத்தியோபாயத்தில் நிச்சயங்கொண்டபிராட்டி மஹத்தான விசாரமடைந்து அதிதைன்னியமான நிலைமையிலிருந்தாள். ஸ்ரீராகவனோடுவாழ்ந்த பேரானந்தமெல்லாம்மறந்து துக்கமே குடிகொண்ட மனமுடையவளாயிருந்தாள். துக்கமனுபவிக்கையிலும் பாதிவிருத்தியத்தினின்று விலகாமல் நிந்

தனக்கிடமற்ற சிலவதியாயிருந்தாள். இப்படிப்பட்ட தைன்னியத்திலும் திவ்யலக்ஷணங்களமைந்த விரகதப்தமான அவளது ஸுந்தராங்கங்கள் சுபகரமாகவிளங்கின. இவ்விதஸ்திதியில் விருக்ஷக்கிளையைப் பிடித்துக்கொண்டு உயிர்நிலையைக்கிளப்ப ஸன்னத்தையாயிருக்கும் ஜானகிக்கு மங்களசகுனங்க ளனேகமுண்டாயின. அவையெல்லாம், தனுட்டியனையடைந்து வேண்டியதிரவியத்தைப்பெற்று ஸந்தோஷமுறும் யாசகர்போல், ஸர்வமங்களஸ்வரூபியான ஸாக்ஷாத் இலக்ஷ்மிக்குக் கிஞ்சித்துதவிபுரிந்து மேன்மையடைந்தன. அமோக மங்களங்களைப் பெறப்போகிற பிராட்டிவிஷயத்தில் தாங்களுண்டாகி அவளுடைய மங்களப்பிராப்தியால் தாங்கள் மங்களசகுனங்களென்கிற கியாதிலாபத்தையடைந்து ஸ்வரூபம் பெற்றன.

౨. తస్యాశ్శుభం వామమరాళపక్ష్మరాజీవృతం శుక్లవిశాలకృష్ణమ్। ప్రాస్పందతైకం నయనం సుకేశ్యా మీనాహతం పద్మమివాభితామ్రమ్॥

உ. தஸ்யாஶ்ஶுபம் வாமமராளபக்ஷ்மராஜீவ்ருதம் ஶுக்லவிஶாலக்ருஷ்ணம்।
ப்ராஸ்பந்ததைகம் நயனம் ஸுகேஶ்யா மீனாஹதம் பத்மமிவாபிதாம்ரம்॥

உ. தஸ்யாஶ்ஶுபம்வாமமராளபக்ஷ்மராஜீவ்ருதம்ஶுக்லவிஶாலக்ருஷ்ணம்।
ப்ராஸ்பந்ததைகம்நயனம்ஸுகேஶ்யாமீனாஹதம்பத்மமிவாபிதாம்ரம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அராளபக்ஷ்மராஜீவ்ருதம்	வக்கிரமான (கண்) இரப்பைவரிசையினல் சுற்றப்பட்டதும்.	ஸுகேஶ்யா: - தஸ்யா:	சிறந்ததலைமயிரையுடைய அந்த(ஸீதையினுடைய
ஶுக்லவிஶாலக்ருஷ்ணம்	வெளுத்ததும்விசாலமானதும் கறுப்பானதும்	வாமம்-நயனம்	இடதான-கண்ணனது
அபிதாம்ரம்	கடையில் சிகப்பையுடையதும்	மீனாஹதம்	மத்ஸ்யத்தாலடிக்கப்பட்ட
ஏகம்	அத்விதீயமானதுமான	பத்மமிவ	தாமரைப்புஷ்பம்போல்
		ஶுபம்-ப்ராஸ்பந்தத	மங்களகரமாக-அதிர்ந்தது.

தா-ம்.—அதியழகானகேசமுடைய பிராட்டியினிடதுபக்கத்திலுள்ளதும், நடுவிற்கறுத்து இடையில் வெளுத்து கடையிற்சிவந்து அதிவிசாலமும் அத்விதீயமான ஸுந்தரமும்பொருந்தி லோகானந்தகரமாகப் பிரகாசிக்கிறதுமானதிருக்கண், திவ்யஸரஸ்ஸில் ஆனந்தத்தோடுவிளையாடுமோர் மத்ஸ்யசிரேஷ்டத்தாலடிபட்டதாமரஸம்போல், மங்களஸூசகமாக இரப்பையாலடியுண்டு துடித்தது.

౩. భుజశ్చ చార్వంచితపీనవృత్తః పరార్ధ్యకాలాగరుచందనార్హః। అనుత్తమేనాధ్యుషితః ప్రియేణ చిరేణ వామస్సమవేపతాశు॥

ந. புஜஶ்ச சார்வஞ்சிதபீனவ்ருத்த: பரார்த்யகாலாகருசந்தனார்ஹ:।
அனுத்தமேனாத்யுஷித: ப்ரியேண சிரேண வாமஸ்ஸமவேபதாஶு॥

ந. புஜஶ்சசார்வஞ்சிதபீனவ்ருத்த:பரார்த்யகாளாகருசந்தனார்ஹ:।
அனுத்தமேனாத்யுஷித:ப்ரியேணசிரேணவாமஸ்ஸமவேபதாஶு॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
சார்வஞ்சிதபீனவ்ருத்த:	அழகாகப்பொருந்திபெருத்துஉருண்டதும்	அனுத்தமேன-ப்ரியேண	உத்தமனுன-நாயகனால்
பரார்த்யகாளாகருசந்தனார்ஹ:	சிறந்த கறுத்த அகருசந்தனத்திற்கிசைந்ததும்	அத்யுஷித:	பிடிக்கப்பட்டதும்
		வாம:-புஜஶ்ச	இடதுமான-தோளும்
		சிரேண-ஆஶு-ஸமவேபத	வெகுகாலம்-சீக்கிரமாக-துடித்தது.

தா-ம்.—சிறந்தவனப்புடன் திரண்டுஉருண்டு அகருமுதலிய உத்தமவாஸனைத் திரவியங்களாலலங்கரிப்பதற்கருகமாயுள்ளதும், லோகநாதனும் தனக்குப்பிராணபந்துவுமான ஸ்ரீராகவனால் ஆலிங்கனுதிகள் செய்யப்பெற்று அனுபவிக்கப்பட்டதாயுமிருக்கிற பிராட்டியினிடதுதோள் சிரகால மடிக்கடி துடித்தது.

౪. గజేంద్రహస్తప్రతిమశ్చ పీనస్తయోర్ద్వయోస్సంహతయోస్సుజాతః। ప్రస్పందమానః పునరూరురస్యా రామం పురస్తాత్ స్థితమాచచక్షే॥

ச. கஜேந்த்ரஹஸ்தப்ரதிமஶ்ச பீனஸ்தயோர்த்வயோஸ்ஸம்ஹதயோஸ்ஸுஜாத:।
ப்ரஸ்பந்தமான: புனரூருரஸ்யா ராமம் புரஸ்தாத் ஸ்திதமாசசக்ஷே॥

ச. கஜேந்த்ரஹஸ்தப்ரதிமஶ்சபீனஸ்தயோர்த்வயோஸ்ஸம்ஹதயோஸ்ஸுஜாத:।
ப்ராஸ்பந்தமான:புனரூருரஸ்யாராமம்புரஸ்தாத்ஸ்திதமாசசக்ஷே॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
கஜேந்த்ரஹஸ்தப்ரதிம:	கஜசிரேஷ்டத்தின் துதிக்கைக்குஸமானமானதும்	(வாம:)-அஸ்யா:	(இடதான)-இவளுடைய
பீன:-ஸுஜாத:	பெருத்ததும்-ஸுந்தரமானதும்	ஊரு:-புன:புன:	துடையானது-அடிக்கடி
ஸம்ஹதயோ:	(ஒன்றுக்கொன்று) சேர்ந்ததும்	ப்ரஸ்பந்தமான:	துடித்ததாக
த்வயோ:	இரண்டானதும்	ராமம்-புரஸ்தாத்	ஸ்ரீராகவனை-எதிரில்
தயோ:	(ஸுலக்ஷணத்தால் அப்படிபிரஸித்தமான)அத்துடைகளுக்குள்	ஸ்திதம்-ஆசசக்ஷே	இருப்பவராக-சொல்லிற்று.

தா-ம்.—மத்தகஜஹஸ்தம்போற் பெருத்துருண்டுநீண்ட அதிஸுந்தர வடிவினவான பிராட்டியினிரண்டுதுடைகளுள் இடதுதுடையானது ஸ்ரீராகவனிதோ வந்துவிட்டானென் றுரைப்பதுபோல் அடிக்கடி துடித்தது.

౫. శుభం పునర్హేమసమానవర్ణమీషద్రజోధ్వస్తమివాతులాక్ష్యాః। వాసస్స్థితాయాశ్శిఖరాగ్రదంత్యాః కించిత్పరిస్రంసత చారుగాత్ర్యాః॥

௫. ശുഭം പുനർഹേമസമാനവർണ്ണമീഷദ്രജോധ്വസ്തമിവാമലാക്ഷ്യാഃ।
വാസഃ സ്ഥിതായാഃ ശിഖരാഗ്രദന്ത്യാഃ കിഞ്ചിത്പരിസ്രംസത ചാരുഗാത്ര്യാഃ॥

௫. ஶுபம்புநர்ஹேமஸமாநவர்ணமீஷத்ரஜோத்வஸ்தமிவாமலாக்ஷ்யா:।
வாஸஸ்ஸ்திதாயாஶ்ஶிகராக்ரதந்த்யா:கிஞ்சித்பரிஸ்ரம்ஸதசாருகாத்ர்யா:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஶுபம்-ஹேமஸமாநவர்ணம்-மங்களகரமானதும்-பொன்னிற்குஸமானமாகியவர்ணமுடையதும்		அமலாக்ஷ்யா:	நிர்மலமானகண்களையுடையவளும்
ஈஷத்ரஜ:	கொஞ்சம்தூம்புடையதும்	ஸ்திதாயா:	வஸ்திரம்கழுவுதற்கனுகூலமாக(இருக்கிற)
ஶிகராக்ரதந்த்யா:	குண்டானநுனியையுடைய பற்களையுடையவளும்அல்லதுமாதளம்பழத்தின்விதைபோன்ற நுனியையுடையபற்களையுடையவளும்அல்லது சிகராகாரம்போன்றநுனியையுடையபற்களையுடையவளும்	சாருகாத்ர்யா:	அழகானசரீரத்தையுடைய (பிராட்டியினுடைய)
		வாஸ:-த்வஸ்தமிவ	ஆடையானது-கழுவிவிழுந்ததுபோல்
		புந:-கிஞ்சித்-பரிஸ்ரம்ஸத-மறுபடி-கொஞ்சம்-கழுவிற்று. (பர்யஸ்ரம்ஸத-என்றிருக்கவேண்டும்,பரிஸ்ரம்ஸத-என்கிறது ஆர்ஷம்.)	

தா-ம்.—பர்வதசிகரங்கள்போல் உருண்டபிரதக்கான நுனிகளையுடைய பற்களினொளியாற் பிரகாசிப்பவளும், அதியழகானஇடக்கணுக்கமுடையவளும், அதிஸுந்தரமான தனுகாத்திரமுடையவளுமான பிராட்டியின் திருமேனியிலிருந்து அவள்தரித்திருந்த சுபகரமும் ஹேமவர்ணமும் கொஞ்சம் மலினமும் பொருந்திய வஸ்திரமானது கழுவுவதுபோலிருந்தது.

౬. ఏతైర్నిమిత్తైరపరైశ్చ సుభ్రూస్సంబోధితా ప్రాగపి సాధుసిద్ధైః। వాతాతపక్లాంతమివ ప్రణష్టం వర్షేణ బీజం ప్రతిసంజహర్ష॥

௬. ഏതൈർന്നിമിത്തൈരപരൈശ്ച സുഭ്രൂസ്സംബോധിതാ പ്രാഗപി സാധുസിദ്ധൈഃ।
വാതാതപക്ലാന്തമിവ പ്രണഷ്ടം വർഷേണ ബീജം പ്രതിസഞ്ജഹർഷ॥

௬. ஏதைர்நிமித்தைரபரைஶ்சஸுப்ரூஸ்ஸம்போதிதாப்ராகபிஸாதுஸித்தை:।
வாதாதபக்லாந்தமிவப்ரணஷ்டம்வர்ஷேணபீஜம்ப்ரதிஸஞ்ஜஹர்ஷ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஏதை:-நிமித்தை:	இந்த-நிமித்தங்களாலும்		பட்டதாதலால்
ப்ராக்-ஸாது-ஸித்தை:-முன்பு-நன்றாக-ஸித்தித்திருக்கிற		ப்ரணஷ்டம்	மிககாணப்படாமலிருக்கிற
அபரை:	வேறான (நிமித்தங்களாலும்)	பீஜம்-வர்ஷேணேவ	விதையானது-மழையினாலேபோல்
ஸம்போதிதா	(சீக்கிரம் தன்னுயகாகமனவார்த்தையுண்டாகப்போகிறதென்று) அறியப்பட்டவளும்	ப்ரதிஸஞ்ஜஹர்ஷ	ஸந்தோஷித்தாள். (விதைக்குஸந்தோஷம் பூமியிலழிந்து கரிகிப்போகும் ஸமயத்தில் மழையினால்முளைக்கிளம்பி பெருப்பதுபோல் இவளும் ஸந்தோஷித்தாள்.)
ஸுப்ரூ:	நற்புருவமுமுடைய (ஸீதை)		
வாதாதபக்லாந்தம்	காற்றினாலும்வெயிலினாலும் வாட்டப்		

தா-ம்.—பூமியில்விழுந்தநாள்முதல் பிராணதாரகமான ஜலத்தைக் காணாது வெயில் வாதமிவைமிழைக்குந்தன்மையால்வாடி நிந்துபோகும்வித்தானது மழையைக்கண்டவுடன் ஏறக்குறைய நஷ்டமாய்விட்ட பிராணனை மறுபடியுமடைந்து வேரோடி மேல்நோக்கிப் பயிராவதுபோல், இலங்காக்ஷேத்திரத்தில் ஸ்ரீராகவனாகிற நீலமேகமண்டலத்தைக் காணாது இராக்ஷஸிகளாகிற உஷ்ண வாதத்தால் தபிக்கப்பட்டுப் பிராணநஷ்டத்தைச்செய்துகொள்ள ஸித்தையாயிருக்கிற பிருகுடிஸௌந்தரியமுடையாளான பிராட்டி, இந்தநன்குசகுனங்களையும் இன்னம் முன்னோனுபவத்தில் சுபஸூசகங்களென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிற அநேக நிமித்தங்களையும் நன்றாகப்பார்த்து அவை முற்குறிக்கிற ஸ்ரீராகவப்பிராப்தமாகிற க்ஷேமலாபத்தையூகித்து நானும் என நாதனையடையும்படியான பாக்கியஞ்செய்தேனோ, இதென்னஸந்தோஷகாலமென்று தேகமபூரித்து ஆனந்தபரவசையானாள்.

౭. తస్యాః పునర్బింబఫలాధరోష్ఠం స్వక్షిభ్రు కేశాంతమరాళపక్ష్మ। వక్త్రం బభాసే సితశుక్లదంష్ట్రం రాహోర్ముఖాచ్చంద్ర ఇవ ప్రముక్తః॥

௭. തസ്യാഃ പുനർബിംബഫലാധരോഷ്ഠം സ്വക്ഷിഭ്രുകേശാന്തമരാളപക്ഷ്മ।
വക്ത്രം ബഭാസേ സിതശുക്ലദംഷ്ട്രം രാഹോർമ്മുഖാച്ചന്ദ്ര ഇവ പ്രമുക്തഃ॥

௭. தஸ்யா:புநர்ப்பிம்பபலாதரோஷ்டம்ஸ்வக்ஷிப்ருகேஶாந்தமராளபக்ஷ்ம।
வக்த்ரம்பபாஸேஸிதஶுக்லதம்ஷ்ட்ரம்ராஹோர்முகாச்சந்த்ரஇவப்ரமுக்த:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
பிம்பபலாதரோஷ்டம்-கோவைக்கனிபோல்மேலுதடும்கீழுதடுமுடையவளும்		ஸிதஶுக்லதம்ஷ்ட்ரம்-மிகவெளுப்புற்றபற்களையுடையவளுமான அல்லதுஇடைவெளியில்லாமல் கோர்வையானபற்களையுடையவளுமான	
ஸ்வக்ஷிப்ரு	சிறந்தகண்களும்புருவமுமுடையவளும்		
கேஶாந்தம்	மயிரின்நுனியையுடையவளும் (என்றுல்முன்பாகத்தில்விஸ்தரித்தஅளகமுடையவளென்றர்த்தம்)	தஸ்யா:-வக்த்ரம்	அந்த (ஸீதையினுடைய)முகமானது
		ராஹோர்முகாத்-முக்த:-இராகுவினிடவாயிலிருந்து விடப்பட்ட	
அராளபக்ஷ்ம	கோணலான இரப்பையுடையவளும்	சந்த்ரஇவ-பபாஸே-மதிபோல்-(மறுபடி)விளங்கிற்று.	[ட்ட

தா-ம்.—"அடுத்ததுகாட்டும் பளிங்குபோனெஞ்சங் கடுத்ததுகாட்டுமுகம்" என்பதுபோல், சுபசகுனங்களைக்கண்டு ஸந்தோஷித்த பிராட்டியின் மனோத்ஸாகத்தை அவள் வாண்முகம் வெளிக்காண்பித்தது. தக்கதப்தமாகி துவண்டிருந்தவதரங்கள் சுவைநீர்ப்பெருக்கால் சோபையடைந்து கோவைக்கனிபோல் மிகவுஞ் சிவந்துவிளங்கின. உள்கிற்கு முருவல்வரிசைகளும் நிலாபொழிவனபோல் வெளிவந்து பிரகாசித்தன. செங்கமலபத்திரம்போலகன்ற திருக்கண்கள் ஒளிபெற்றுவிளங்கின. மன்மதசாபம்போல்வளைந்த புருவங்கள் உன்னதமடைந்துசோபித்தன. அடர்ந்த ரோமபங்திகளையுடைய இமைகள் ஒளிவீசு நேத்திரங்களை ரக்ஷித்துக்கொண்டு தங்களுக்கியல்பான கோணலைவகித்துப் பிரகாசித்தன. இப்படி அதியழகான அதரங்களும் முருவல்களும் நேத்திரங்களும் புருவங்களுமமையப்பெற்று, நீருண்டமேகம்போறகறுத்த நீண்டகேசத்தையெல்லையாகக்கொண்டு பிரகாசிக்குமப்பிராட்டியின் திருமுகமண்டலமானது இராகுவிமுக்தமான சந்திரன்போல் ஸ்வச்சமான காந்தியைவகித்து அதிமனோகரமாயும் பிரஸன்னமாயும் விளங்கிற்று.

౮. సా వీతశోకా వ్యపనీతతంద్రీ శాంతజ్వరా హర్షవిబుద్ధసత్త్వా। అశోభతార్యా వదనేన శుక్లే శీతాంశునా రాత్రిరివోదితేన॥

அ. ஸா வீதஶோகா வ்யபநீததந்த்ரீ ஶாந்தஜ்வரா ஹர்ஷவிபுத்தஸத்த்வா।
அஶோபதார்யா வதநேந ஶுக்லே ஶீதாம்ஶுநா ராத்ரிரிவோதிதேந॥

அ. ஸாவீதஸோகாவ்யபநீததந்த்ரீஸாந்தஜ்வராஹர்ஷவிவ்ருத்தஸத்வா।
அஸோபதார்யாவதநேநஸுக்லேஸீதாம்ஸுநாராத்ரிரிவோதிதேந॥

இதி ஶ்ரீமத்ஸுந்தரகாண்டே ஏகோநத்ரிம்ஶஸ்ஸர்க:

பதம்.	உரை.	பதம்.	உரை.
வீதஸோகா	போய்விட்டசோகமுடையவளும்	ஆர்யா-ஸா	பூஜ்யையுமான-அந்த(ஸீதை)
வ்யபநீததந்த்ரீ	போக்கடிக்கப்பட்ட புத்திகல்மஷமுடையவளும்	வதநேந	முகத்தினால்
ஸாந்தஜ்வரா	அடங்கினஸந்தாபமுடையவளும்	ஸுக்லே-உதிதே	ஸுக்லபக்ஷத்தில்-உதித்த
ஹர்ஷவிவ்ருத்தஸத்வா-ஸந்தோஷத்தால்விகஸித்தமனமுடையவளும்		ஸீதாம்ஸுநா-ராத்ரிரிவ-சந்திரனாலே-இராபோல்	
		அஸோபத	விளங்கினள்.

தா-ம்.—இந்த சுபசகுனங்களுடைய தர்சனமாத்திரத்தால் பிராட்டியினுடையஸர்வசோகமும்விலகிவிட்டது. ஆத்மஹத்திசிந்தையால்கலக்கமுற்ற வவள்மனம் நிஷ்கல்மஷமானதாய்விட்டது. இராவணபயத்தாலும் ஸ்ரீராகவப்பிராப்திய பாவத்தாலுமுண்டான ஜ்வரமானது உடனே தணிந்துவிட்டது. இப்படி துக்கவிமுக்தையாகி ஸந்தோஷிக்கொண்ட அவ்வாரியபுத்திரியின் திருமுகமானது திவ்வியானந்தகரமான கலைகளைவீசிக்கொண்டு பிரகாசிக்கும் பூர்ணேந்துவைப்போல் சோபித்தது. இவ்விதவாண்முகத்துடன் தேவியானவள் சுசினமுபகதமான சுக்லபக்ஷவிரவுபோல் பிரபையுற்று விளங்கினள்.

ஸ்ரீஸந்மஹோராஞ்ஜநீநாமத் திராவிடவியாக்யாநஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்

இருபத்தொன்பதாவது ஸர்க்கம் - முற்றிற்று.

முப்பதாவது ஸர்க்கம்.

౧. హనుమానపి విక్రాంతస్సర్వం శుశ్రావ తత్త్వతః। సీతాయాస్త్రిజటాయాశ్చ రాక్షసీనాం చ తర్జనం॥

௧. ஹநுமாநபி விக்ராந்தஸ்ஸர்வம் ஶுஶ்ராவ தத்த்வத:।
ஸீதாயாஸ்த்ரிஜடாயாஶ்ச ராக்ஷஸீநாம் ச தர்ஜநம்॥

௧. ஹநுமாநபிவிக்ராந்தஸ்ஸர்வம்ஸுஸ்ராவதத்வத:।
ஸீதாயாஸ்த்ரிஜடாயாஸ்சராக்ஷஸீநாம்சதர்ஜநம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
விக்ராந்த:*-ஹநுமாநபி-பராக்கிரமவந்தரான-ஹனுமாரும்		ராக்ஷஸீநாம்	(திரிஜடையொழிந்தமற்ற)இராக்ஷஸிகளுடைய
ஸீதாயா:-த்ரிஜடாயாஸ்ச-பிராட்டியினுடையவும் - திரிஜடையினுடையவும்		தர்ஜநம்	பயமுறுத்தும்வார்த்தைகளையும்
தத்வத:-ஸர்வம்	உள்ளபடி-ஸகலவிருத்தாந்தத்தையும்	ஸுஸ்ராவ	கேட்டார்.

தா-ம்.—சிம்சுபாவிருக்ஷக் கிளையின்மீ தெழுந்தருளியிருந்த ஹநுமான், பிராட்டியின் பிரலாபத்தையும், திரிஜடாஸ்வப்னத்தையும்,இராக்ஷஸிகளின் மிரட்டலையும் இவைகளையெல்லாம்உள்ளபடிகேட்டறிந்தார்.

౨. అవేక్షమాణస్తాం దేవీం దేవతామివ నందనే। తతో బహువిధాం చింతాం చింతయామాస వానరః॥

* "விஸ்ராந்த:" என்றும் பாடம். அப்பொழுது ஹநுமான் நிஸ்சேஷ்டிதராயிருந்தாரென்றர்த்தம்.

உ. கவெக்ஷமாணஹா தெவீம்தெவதாமிவ நநூதெந।
தெதாவஹ விதாம் விஹாம் விஹயாமாஸவாநரஃ॥

உ. அவேக்ஷமாணஸ்தாம்தேவீம்தேவதாமிவநந்தநே।
ததோபஹுவிதாம்சிந்தாம்சிந்தயாமாஸவாநரஃ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
வாநரஃ-தாம்-தேவீம் நந்தநே-தேவதாமிவ	ஹநுமான்-அந்த-ஸீதையை இந்திரோத்தியானவனத்தில் - தேவதைபோல்	அவேக்ஷமாணஃ-ததஃ பஹுவிதாம்-சிந்தாம் சிந்தயாமாஸ	பார்க்கிறவராய்க்கொண்டு-பிறகு அநேகவிதமான-எண்ணத்தை ஆலோசித்தார்.

தா-ம்.—மஹேந்திரவனமான நந்தனவனத்திலுலாவுந் தேவஸ்திரீபோல் அஸாதாரணவடிவழகோடு சிம்சுபாவிருக்ஷத்தின்கிழ் ஸஞ்சரிக்கும் பிராட்டியைப்பார்த்து ஹநுமான் வெகுவிதமாகச்சிந்தித்தார்.

3. యాంకపీనాంసహస్రాణిసుబహూన్యయుతానిచ। దిక్షుసర్వాసుమార్గంతేసేయమాసాదితామయా॥

ஙு. யாம்கபீநாம்ஸஹஸ்ராணிஸுபஹூந்யயுதாநிச।
திக்ஷுஸர்வாஸுமார்க்கந்தே ஸேயமாஸாதிதாமயா॥

ங. யாம்கபீநாம்ஸஹஸ்ராணிஸுபஹூந்யயுதாநிச।
திக்ஷுஸர்வாஸுமார்க்கந்தேஸேயமாஸாதிதாமயா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸுபஹூநி கபீநாம்-ஸஹஸ்ராணி அயுதாநிச யாம்-ஸர்வாஸு-திக்ஷு-எந்த(ஸீதையை) - ஸமஸ்தங்களான	மிகவதிகங்களான வானரங்களுடைய ஆயிரங்களும் பதினாயிரங்களும் [திக்குகளில்	மார்க்கந்தே ஸா-இயம் மயா-ஆஸாதிதா	தேடுகின்றனவோ அப்படிப்பட்ட - இந்த (ஸீதையானவள்) என்னால்-அடையப்பட்டாள்.

தா-ம்.—எவள்கிமித்தமாக அனேகாயிரம்வானரர் சதுர்த்திசைகளிலும் விடுக்கப்பட்டனரோ, எவளைவானரர் திசைகள்தோறுமின்னம் தேடுகின்றனரோ, அப்படிப்பட்ட ஸீதையானவள், அஹோ ஆச்சரியம் என்பாக்கியவிசேஷத்தாலிதோவென்னால் காணப்பட்டாள்.

அபிபாஷஸ்வமாம்தேவிதூதோதாஶரதேரஹம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே) அநிந்திதே	நிந்திக்கப்படாதவளே	அஹம்	அடியேன்
தே-ஏதத்	உன்பொருட்டு-இந்த	தாஶரதே:-தூத:-	ஸ்ரீராகவனுடையவார்த்தாஹரன்
யதாவ்ருத்தம்-ஸர்வம்	நடந்தவிதம்-ஸமஸ்தங்களும்	ஹேதேவீ	வாராய்ஸீதே
ஆக்யாதம்	(என்னால்) சொல்லப்பட்டது	மாம்-அபிபாஷஸ்வ	என்னை(ப்பற்றி)மொழியவருள்புரிவீர்.

தா-ம்.—வாராய் அநிந்திதே! இந்தவிதம் நடந்தவர்த்தமானங்களை யதார்த்தமாக உம்முடைய நிமித்தம் விஜ்ஞாபித்தேன். இனியென்னை ஸ்ரீராகவதூதனென்று நம்பி எனக்குப்பிரதிவசன மளிக்கக் கிருபை புரிவீர்.

௨௩. తం మాం రామకృతోద్యోగం త్వన్నిమిత్తమిహాగతమ్। సుగ్రీవసచివం దేవి బుధ్యస్వ పవనాత్మజమ్॥

௨௩. 𑌤𑌂 𑌮𑌾𑌂 𑌰𑌾𑌮𑌕𑍃𑌤𑍋𑌦𑍍𑌯𑍋𑌗𑌂 𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌮𑌿𑌹𑌾𑌗𑌤𑌮𑍍।
𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌸𑌚𑌿𑌵𑌂 𑌦𑍇𑌵𑌿 𑌬𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵 𑌪𑌵𑌨𑌾𑌤𑍍𑌮𑌜𑌮𑍍॥

௨௩. தம்மாம்ராமக்ருதோத்யோகம்த்வந்நிமித்தமிஹாகதம்।
ஸுக்ரீவஸசிவம்தேவிபுத்யஸ்வபவநாத்மஜம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே) தேவி	ஓ ஸீதே	இஹ—ஆகதம்	இங்கு-வந்தவனாகவும்
ராமக்ருதோத்யோகம் -	ராமனால்செய்யப்பட்ட உத்ஸாஹத்[தையுடைய	ஸுக்ரீவஸசிவம்	ஸுக்கிரீவமந்திரியாகவும்
தம்-மாம்	அப்படிப்பட்ட-என்னை	பவநாத்மஜம்	வாயுகுமாரனாகவும்
த்வந்நிமித்தம்	உன்னிமித்தம்	புத்யஸ்வ	அறிவீர்.

தா-ம்.—ஹேபவித்ரே! அங்கதப்பிரப்ருதிகளான அநேககோடிவானரர்நிற்க அவர்களுள் தேவியைத் தேடியறியவல்லவனிவன்தானென் றடியேனுடைய பாக்கியவிசேஷத்தா லென்னைக் குறிப்பிட்டழைத்து உத்ஸாகப்படுத்தி அனுக்கிரகித்தனுப்பினர். அத்திரிலோகபூஜ்ஜியனை புருஷோத்தமனை நீங்கிவிடுக்கப்பட்டதூதன்யான் உம்மைத்தேடி தண்டன்ஸமர்ப்பிக்குநிமித்தம் யானிங்குவந்தனன், ஸுக்கிரீவமஹாராஜாவுக்கு நான்மந்திரி, வாயுபகவானுக்குப்புத்திரன் ஆகையால் அடியேனைபிருத்தியனாக வங்கீகரிக்கவருள்புரிவீர்.

௨௪. కుశలీ తవ కాకుత్స్థః సర్వశస్త్రభృతాం వరః। గురోరారాధనే యుక్తో లక్ష్మణశ్చ సులక్షణః॥

௨௪. 𑌕𑍁𑌶𑌲𑍀 𑌤𑌵 𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥𑌃 𑌸𑌰𑍍𑌵𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌭𑍃𑌤𑌾𑌂 𑌵𑌰𑌃।
𑌗𑍁𑌰𑍋𑌰𑌾𑌰𑌾𑌧𑌨𑍇 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌶𑍍𑌚 𑌸𑍁𑌲𑌕𑍍𑌷𑌣𑌃॥

௨௪. குஶலீதவகாகுத்ஸ்தஸ்ஸர்வஶஸ்த்ரப்ருதாம்வர:।
குரோராராதநேயுக்தோலக்ஷ்மணஶ்சஸுலக்ஷண:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸர்வஶஸ்த்ரப்ருதாம்-வர:	ஸமஸ்தவில்லாளிகளுக்குள்சிறந்த[வரான	ஆராதநே-யுக்த:	கைங்கரியத்தில்-கூடினவராய்
தவ-காகுத்ஸ்த:	உன்னுடைய-ஸ்ரீராகவன்	ஸுலக்ஷண:-லக்ஷ்மணஶ்ச-	ஸுஷ்டுவான லக்ஷணமுடைய இலக்ஷ்மணரும் (க்ஷேமமாயிருக்கிறார்.)
குஶலீ	க்ஷேமம்		
குரோ:	(பிதாவுக்குநிகரான) ஸ்ரீராகவனுடைய		

தா-ம்.—ஹேஜனகாத்மஜே! பக்தவத்ஸலரான ஸ்ரீராமலக்ஷ்மணர் இத்தனைகாலமாயினு மென்னையடையவில்லையே, ஜீவனோடிருக்கின்றனரோ, இராவணமாயையிற் சிக்கினரோவென்று வியஸனமுற்றீரோ, விற்பிடித்தவீரருக்குள் மிகசிரேஷ்டரும், எப்படிப்பட்ட யுத்தமாயினும் சிறிதேனும்சலிக்காமல்நின்று வெல்லுந்திறமையுள்ள வம்சத்திற்பிறந்த விக்கிரமனும், இவ்வளவு தைந்நியநிலைமையிலும் எவருடைடதர்சனார்த்தம் பிராணதாரணஞ்செய்துவருகிறீரோ அப்படிப்பட்ட வும்முடையபிரியநாதனை அந்தரங்கநாதன் க்ஷேமத்தோடுவிளங்கிவருகிறார். ரூபவானும் குணவானுமான இலக்ஷ்மணன் "ஜ்யேஷ்டப்ராதாபித்ருஸம:" என்று பிதாவுக்குஸமானனான ஸ்ரீராகவனுக்குக் கைங்கரியஞ்செய்துகொண்டு அதனால் தினேதினே விர்த்தியடைகிறசோபையோடு விளங்கிவருகிறார்.

௨௫. తస్య వీర్యవతో దేవి భర్తుస్తవ హితే రతః। అహమేకస్తు సంప్రాప్తః సుగ్రీవవచనాదిహ॥

௨௫. 𑌤𑌸𑍍𑌯 𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌤𑍋 𑌦𑍇𑌵𑌿 𑌭𑌰𑍍𑌤𑍁𑌸𑍍𑌤𑌵 𑌹𑌿𑌤𑍇 𑌰𑌤𑌃।
𑌅𑌹𑌮𑍇𑌕𑌸𑍍𑌤𑍁 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌃 𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌵𑌚𑌨𑌾𑌦𑌿𑌹॥

௨௫. தஸ்யவீர்யவதோதேவிபர்துஸ்தவஹிதேரத:।
அஹமேகஸ்துஸம்ப்ராப்தஸ்ஸுக்ரீவவசநாதிஹ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தேவி	ஸீதே	தவ-பர்து:	உன்னுடைய-பர்த்தாவுமான
ஏக:-அஹந்து	ஒருவனான-நானோவென்றால்	தஸ்ய-ஹிதே	அந்த ஸ்ரீராகவனுடைய- நன்மையில்
ஸுக்ரீவவசநாத்	ஸுக்கிரீவனுடைய ஆஜ்ஞையினால்	ரத:	ஆஸக்தியுடையவனாக
வீர்யவத:	பராக்கிரமமுடையவரும்	இஹ-ஸம்ப்ராப்த:	இங்கு-வந்தேன்.

தா-ம்.—மஹாவீரியவானும் உம்முடையபர்த்தாவுமான ஸ்ரீராகவனும்மைத் திரும்பியடைகிறவிஷயத்திற்கூடிய ஹிதத்தைச்செய்யவேண்டுமென்கிற விருப்பமுடையவனும் ஸுக்கிரீவாக்ஞையை மேற்கொண்டு ஒருவனும் யானிங்குவந்தனன்.

౭౬. మయేయమసహాయేన చరతా కామరూపిణా। దక్షిణా దిగనుక్రాన్తా త్వన్మార్గవిచయైషిణా॥

௭௬. 𑌮𑌯𑍇𑌯𑌮𑌸𑌹𑌾𑌯𑍇𑌨 𑌚𑌰𑌤𑌾 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌿𑌣𑌾।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾 𑌦𑌿𑌗𑌨𑍁𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾 𑌤𑍍𑌵𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌗𑌵𑌿𑌚𑌯𑍈𑌷𑌿𑌣𑌾॥

௭௬. மயேயமஸஹாயேநசரதாகாமரூபிணா।
தக்ஷிணாதிகநுக்ராந்தாத்வந்மார்கவிசயைஷிணா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அஸஹாயேந-சரதா	ஸஹாயமின்றி-திரிபவனும் [ம்		சையுமுடைய-என்னால்
காமரூபிணா	இச்சைக்கிசைந்த ரூபமுடையவனு	தக்ஷிணா-இயம்-திக்	தெற்கான-இந்த-திசையானது
த்வந்மார்கவிசயைஷிணா-மயா-தம்மிருப்பிடத்தைத்தேட இச்		அநுக்ராந்தா	அடையப்பட்டது.

தா-ம்.—தாமிருக்கு மிடத்தைத்தேடியறிய விச்சைகொண்ட வடியேன் பிறருடைய ஸகாயத்தையபேக்ஷியாமல், ஸமயத்திற்கனுகுணமான ரூபத்தை தரித்துக்கொண்டு தக்ஷிணதிக்கிலுள்ள இவ்விடத்திற் பிரவேசித்தேன்.

౭౭. దిష్ట్యాహం హరిసైన్యానాం త్వన్నాశమనుశోచతామ్। అపనేష్యామి సంతాపం తవాభిగమశంసనాత్॥

௭௭. 𑌦𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌹𑌂 𑌹𑌰𑌿𑌸𑍈𑌨𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌶𑌮𑌨𑍁𑌶𑍋𑌚𑌤𑌾𑌮𑍍।
𑌅𑌪𑌨𑍇𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸𑌨𑍍𑌤𑌾𑌪𑌂 𑌤𑌵𑌾𑌭𑌿𑌗𑌮𑌶𑌂𑌸𑌨𑌾𑌤𑍍॥

௭௭. திஷ்ட்யாஹம்ஹரிஸைந்யாநாம்த்வந்நாஶமநுஶோசதாம்।
அபநேஷ்யாமிஸந்தாபம்தவாபிகமஶம்ஸநாத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
த்வந்நாஶம்	உன்னைக்காணுமையைப்பற்றி	அஹம்-திஷ்ட்யா	யான்-தெய்வாதீனத்தால் [யால்
அநுஶோசதாம்-ஹரிஸைந்யாநாம்-துக்கித்திருக்கிற - வானரக்		தவ-அபிகமஶம்ஸநாத் - தம்முடைய- அடைந்ததின் ஸங்கதி
ஸந்தாபம்	துக்கத்தை [கூட்டங்களுடைய	அபநேஷ்யாமி	போக்கடிக்கப்போகிறேன்.

தா-ம்.—நீரிருக்குமிடத்தைத்தேடி யறியுநிமித்தம் வெளிவந்து உம்மைக்காணுது நம்முடையகதி யென்னமாகுமோவென்று துக்கித்து அக்கரையில்நிற்கிறவானரரை, உம்மைக்கண்டு யான்தண்டன்ஸமர்ப்பித்த இந்தச்செய்தியால் உகப்பிக்க யான்வல்லனுயினேன்.

౭౮. దిష్ట్యా హి మమ న వ్యర్థం దేవి సాగరలఙ్ఘనమ్। ప్రాప్స్యామ్యహమిదం దిష్ట్యా త్వద్దర్శనకృతం యశః॥

௭௮. 𑌦𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌹𑌿 𑌮𑌮 𑌨 𑌵𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌦𑍇𑌵𑌿 𑌸𑌾𑌗𑌰𑌲𑌙𑍍𑌘𑌨𑌮𑍍।
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑌿𑌦𑌂 𑌦𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌤𑍍𑌵𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌕𑍃𑌤𑌂 𑌯𑌶𑌃॥

௭௮. திஷ்ட்யாஹிமமநவ்யர்த்தம்தேவிஸாகரலங்கநம்।
ப்ராப்ஸ்யாம்யஹமிதம்திஷ்ட்யாத்வத்தர்ஶநக்ருதம்யஶ:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
		த்வத்தர்ஶநக்ருதம்-இதம்-யஶ:	உன்பார்வையினுல்செய்யப்பட்ட-இக்கீர்த்தியை
தேவி-மம	ஸீதே-எனக்கு		
ஸாகரலங்கநம்	கடலைக்கடந்தது	அஹம்	நான் [வேன்
திஷ்ட்யா-வ்யர்த்தம்-ந	தெய்வச்செயலால்- வீணுக-ஆகவில்லை	திஷ்ட்யா-ப்ராப்ஸ்யாமி	என்பாக்கியாதிசயத்தால் அடை

தா-ம்.—ஹேதேவி! இக்கடலைக்கடந்தது எனக்குவியர்த்தமாகவில்லை. தெய்வானுக்கிரகத்தால துஸபலமாயிற்று. உம்புருமணுகவொண்ணு விலங்கையில் ஹநுமான்பிரவேசித்து பிராட்டியை ஸேவித்தானென்கிறகீர்த்தி என்பாக்கியவிசேஷத்தா லென்னையடையப்போகிறது, இனி யான்கிருதார்த்தனுனேன்.

౭౯. రాఘవశ్చ మహావీర్యః క్షిప్రం త్వామభిపత్స్యతే। సమిత్రబాన్ధవం హత్వా రావణం రాక్షసాధిపమ్॥

௭௯. 𑌰𑌾𑌘𑌵𑌶𑍍𑌚 𑌮𑌹𑌾𑌵𑍀𑌰𑍍𑌯𑌃 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌤𑍍𑌵𑌾𑌮𑌭𑌿𑌪𑌤𑍍𑌸𑍍𑌯𑌤𑍇।
𑌸𑌮𑌿𑌤𑍍𑌰𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌂 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌰𑌾𑌵𑌣𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌿𑌪𑌮𑍍॥

௭௯. ராகவஶ்சமஹாவீர்ய: க்ஷிப்ரம்த்வாமபிபத்ஸ்யதே।
ஸமித்ரபாந்தவம்ஹத்வாராவணம்ராக்ஷஸாதிபம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மஹாவீர்ய:-ராகவஶ்ச	பராக்கிரமமுடைய-ஸ்ரீராகவனும்	ராவணம்-ஹத்வா	இராவணனை-கொன்று
ஸமித்ரபாந்தவம்	பந்துமித்திரர்களோடுகூடினவனும்	க்ஷிப்ரம்-த்வாம்-அபிபத்ஸ்யதே-	சீக்கிரமாக-உன்னை-அடையப்போகிறுர்.
ராக்ஷஸாதிபம்	இராக்ஷஸபிரபுவுமான		

தா-ம்.—அக்கோதண்ட தீக்ஷாகுருவும் தேவி இலங்கையிலிருப்பதையும் அபராதமிழைத்தவனிராவணனென்பதையும் என்னாலறிந்தவுடன் இவ்விடம்சேர்ந்து, கடல்மத்தியிலுள்ள தனக்கு யாதொருபயமு

யில்லையென்று நினைத்து புத்திரமித்திர களத்திராதிகளுடன் களிப்புற்று வாழ்ந்துவருகிற இப்பதிவிரதாபராதியை ஹதஞ்செய்து சீக்கிரத்திலுமமை யடையப்போகிறார்.

౮౦. మాల్యవాన్నామ వైదేహి గిరీణాముత్తమో గిరిః। తతో గచ్ఛతి గోకర్ణం పర్వతం కేసరీ హరిః॥

௮௦. 𑌮𑌾𑌲𑍍𑌯𑌵𑌾𑌨𑍍𑌨𑌾𑌮 𑌵𑍈𑌦𑍇𑌹𑌿 𑌗𑌿𑌰𑍀𑌣𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑍋 𑌗𑌿𑌰𑌿𑌃।
𑌤𑌤𑍋 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌗𑍋𑌕𑌰𑍍𑌣𑌂 𑌪𑌰𑍍𑌵𑌤𑌂 𑌕𑍇𑌸𑌰𑍀 𑌹𑌰𑌿𑌃॥

௮௦. மால்யவாந்நாமவைதேஹிகிரீணாமுத்தமோகிரி:।
ததோகச்சதிகோகர்ணம்பர்வதம்கேஸரீஹரி:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே) வைதேஹி	ஓ விதேஹதேசத்தரசனுடையபுத்திரி	தத:-கேஸரீ-ஹரி:-	அம்மலையினின்று கேஸரியென்கிற-வானர[ன்]
கிரீணாம்	பர்வதங்களுக்கெல்லாம்	கோகர்ணம்-பர்வதம்-	கோகர்ணமென்கிற-பர்வதத்தை
உத்தம:	சிரேஷ்டமான [மலை (இருக்கிறது)	கச்சதி	அடைந்தான்.
மால்யவாந்நாம-கிரி:	மால்யவானென்றுபிரஸித்தியடைந்த		

౮౧. స చ దేవర్షిభిర్దిష్టః పితా మమ మహాకపిః। తీర్థే నదీపతేః పుణ్యే శంబసాదనముద్ధరత్॥

௮௧. 𑌸 𑌚 𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑌿𑌭𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌃 𑌪𑌿𑌤𑌾 𑌮𑌮 𑌮𑌹𑌾𑌕𑌪𑌿𑌃।
𑌤𑍀𑌰𑍍𑌥𑍇 𑌨𑌦𑍀𑌪𑌤𑍇𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌶𑌮𑍍𑌬𑌸𑌾𑌦𑌨𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑌤𑍍॥

௮௧. ஸசதேவர்ஷிபிர்திஷ்ட:பிதாமமமஹாகபி:।
தீர்த்தேநதீபதே:புண்யேஸம்பஸாதநமுத்தரத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மஹாகபி:	பெருவானரனும்	தேவர்ஷிபி:	(அங்கிருக்கும்) தேவருஷிகளால்
மம-பிதா	என்னுடைய-தகப்பனுமான	திஷ்ட:	ஆஜ்ஞாபிக்கப்பட்டவராக
ஸச	அந்த கேஸரியும்	ஸம்பஸாதநம்	சம்பஸாதனனென்னும்(இராக்கதனை)
புண்யே-நதீபதே:	பரிசுத்தமான-கடலினுடைய	உத்தரத்	ஸம்ஹரித்தார்.
தீர்த்தே	ஸ்தானத்தில்		

౮౨. తస్యాహం హరిణః క్షేత్రే జాతో వాతేన మైథిలి। హనూమానితి విఖ్యాతో లోకే స్వేనైవ కర్మణా॥

௮௨. 𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑌂 𑌹𑌰𑌿𑌣𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌜𑌾𑌤𑍋 𑌵𑌾𑌤𑍇𑌨 𑌮𑍈𑌥𑌿𑌲𑌿।
𑌹𑌨𑍂𑌮𑌾𑌨𑌿𑌤𑌿 𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑍋 𑌲𑍋𑌕𑍇 𑌸𑍍𑌵𑍇𑌨𑍈𑌵 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾॥

௮௨. * தஸ்யாஹம்ஹரிண:க்ஷேத்ரேஜாதோவாதேநமைதிலி।
ஹநூமாநிதிவிக்யாதோலோகேஸ்வேநைவகர்மணா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மைதிலி	ஸீதே	வாதேந-ஜாத:	வாயுவினால்-பிறந்தேன்
அஹம்	நான்	ஸ்வேநைவ-கர்மணா	ஸ்வயமான கிருத்தியத்தினால்
தஸ்ய-ஹரிண:	அந்த வானரனுக்கு [இல்	லோகே	உலகத்தில் [பட்டவனானேன்.
க்ஷேத்ரே	மனைவியான அஞ்ஜனாதேவியினிடத்	ஹநூமாநிதி-விக்யாத:	ஹனுமானென்று-நன்றாய் சொல்லப்

(௮௦-மு-௮௨-ல்) தா-ம்.—ஹே ஜனகபுத்திரி! இதுவரையில் இராமலக்ஷ்மணனுடைய லக்ஷணங்களையும், அவ்விருவர்க்கும் வானரர்க்கும் ஸ்நேகமுண்டானவிருத்தாந்தத்தையும் யானிங்குவந்ததற்குக் காரணத்தையுமுரைத்தேன். இனி யென்உத்பத்தியைப்பற்றிக் கொஞ்சம்சொல்லுகிறேன், திருச்செவிசாற்றக் கிருபைபுரிவீர்; பர்வதங்களுக்குள் அதிசிரேஷ்டமான மால்யவானென்றொருபர்வதமுண்டு; அதில் கேஸரியென்னு மோர்வானரசிரேஷ்டன் வஸித்திருந்தார். அவர்என்பிதா; அவர் ஒருக்கால் கோகர்ணபர்வதத்தைச் சென்றடைந்தார். அதற்கருகில் ஸமுத்திர தீரத்தில் தபஸ்ஸுபுரிந்துவந்த தேவரிஷிகள் சம்பஸாதனனென்னு மிராக்ஷஸன் ஹிம்ஸை ஸதாங்காது அவனை ஸம்ஹரிக்கும்படி கேஸரியென்பவரை வேண்டிக்கொண்டனர். அவர்கள் வேண்டுகோளின்படி கேஸரியும் அவ்வரக்கனைமுடித்தார். இவ்விஷயமாக அவர்தேசாந்திரகதராயிருக்

* அப்ஸரஸ்திரீகளுக்குள் உயர்ந்தவளும் ரூபயௌவன குணாதிகளிற்சிறந்தவளும், புஞ்சிகஸ்தலையென்று பிரஸித்திபெற்றவளுமான ஓர்தெய்வப்பெண் சாபவசத்தால் குஞ்சரனென்கிற வானராதிபதிக்கு மகளாய்ஜநித்து அஞ்சனையென்றுபெயர்பூண்டு கேஸரியென்கிறவானரனுக்கு மனைவியானாள். ஒருக்காலந்த அஞ்சனையானவள் காமரூபியாதலால் வானரரூபத்தைவிட்டு ஸுந்தரமான மானிடவடிவங்கொண்டு திவ்வியாபரணாலங்காரத்துடன் ஓர் மலையினுனியிலுலாவுகையில் அவளைவாயுபகவான்கண்டுமோகித்து அவள்வஸ்திரத்தைவிலக்கி ஆலிங்கனம்செய்தார். உடனே அஞ்சனை தனதுபாதிவிருத்தியத்திற்கு பங்கமிழைத்த மாருதனைப்பார்த்துக்கோபிக்க அதற்கவர் அவளிடத்திலன்புகூர்ந்து, "ஹேகோமளாங்கி! உன்சீலத்தைக்கெடுப்பதற்கெத்தனிக்கவில்லை, உன்னுடைய ஸுந்தராவயவங்களைக்கண்டுதழுவினேன், இதனாலுனக்கு பாதிவிருத்தியபங்கம்நேரிடாது. என்னைப்போல்பலவானும், புத்திமானும், கீர்த்திமானும், தாண்டுவதிலும், மென்மேல்செல்லுவதிலும், எனக்குஸமானனுமான நற்புத்திரனுனக்குண்டாகப்போகிறான்" என்றனுக்கிரகித்துப்போனார். உடனே ஹநுமானையீன்றாள். ஆதலால் அஞ்ஜனையென்னும் வானரஸ்திரீக்கு வாயுவின் அனுக்கிரகத்தால் பிறந்தமையால் ஜாதியில்வானரனாயினும் வாயுபுத்திரனென்று சொல்லுகிறார்கள். தன்னுடையகிருத்தியத்தினாலே ஹநுமானென்று அவருக்குப் பெயருண்டானதென்கிறசரிதம் இந்த காண்டமுதல் சுலோகத்தின்கீழ் வரையப்பட்டிருக்கிறது.

கையில், அவர்பத்தினியும் எனதன்னையுமான அஞ்சனாதேவியின் கர்ப்பத்தில் வாயுபகவான் ஓர்புத்திரனையனுக்கிரகம்செய்தார். அப்படி ஜனித்தவன்யான்; ஜனனகாலத்தில் நடந்தவிர்த்தாந்தத்தால் ஹநுமானென்று பிரஸித்தமானபெயரடைந்தேன்.

௫௩. విశ్వాసార్థం తు వైదేహి భర్తురుక్తా మయా గుణాః । అచిరాద్రాఘవో దేవి త్వామితో నయితానఘే ॥

௫௩. [illegible]

௫௩. விஸ்வாஸார்தந்துவைதேஹிபர்துருக்தாமயாகுணாঃ।
அசிராத்ராகவோதேவித்வாமிதோநயிதாநகே॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
வைதேஹி-மயா	ஸீதே-என்னால்	ஹே தேவி	ஓ ஸீதே
பர்த்துঃ-குணாঃ	உன்பதியினுடைய-குணங்கள்	ராகவঃ-த்வாம்	ஸ்ரீராகவன்-உம்மை
விஸ்வாஸார்த்தம்-உக்தாঃ-நம்பகத்தின்பொருட்டு-சொல்லப்பட்டன		இதঃ-அசிராத்	இவ்விடத்திலிருந்து-சீக்கிரமாக
அநகே	பாபரஹிதையான	நயிதா	அழைத்துக்கொண்டு போகப்போகிறார்.

தா-ம்.—பரிசுத்தையான ஹேஜானகி! என்னைப்பற்றி விபரீதவெண்ணங்கொள்ளாமல் ஸ்ரீராகவதூதனென்று நம்புவதற்காக அப்புருஷோத்தமனுடைய திருமேனிலக்ஷணங்களையும் கல்யாணகுணங்களையும் விக்யாபனஞ்செய்தேன். அந்தரகுராமன் உம்மைசீக்கிரமாக இங்குவந்து அழைத்துப்போகப்போகிறார்.

௫௪. ఏవం విశ్వాసితా సీతా హేతుభిః శోకకర్శితా । ఉపపన్నైరభిజ్ఞానైర్దూతం తమవగచ్ఛతి ॥

௫௪. [illegible]

௫௪. ஏவம்விஸ்வாஸிதாஸீதாஹேதுபிঃஶோககர்ஶிதா।
உபபந்நைரபிஜ்ஞாநைர்தூதந்தமவகச்சதி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஶோககர்ஶிதா-ஸீதா	வியஸனத்தாலிளைத்திருக்கிற - ஸீதை	விஸ்வாஸிதா	நம்பகமடைந்தவளாக
ஏவம்-ஹேதுபிঃ	இவ்விதமான-காரணங்களாலும்	தம்-தூதம்	அவ்வானரனை-தூதனாக
உபபந்நைঃ	யுக்தங்களான	அவகச்சதி	தெரிந்துகொண்டாள்.
அபிஜ்ஞாநைঃ	அடையாளங்களாலும்		

தா-ம்.—துயர்க்கடலிலாழ்ந்தபிராட்டி, ஹநுமான் ஸ்ரீராகவலக்ஷ்மணர்களுடைய இலக்ஷணங்களைக்கீழ்ச்சொன்னவிதம் உள்ளபடியுரைத்தமையாலவனை ஸ்ரீராகவதூதனென்றே நிச்சயித்தாள்.

௫௫. అతులం చ గతా హర్షం ప్రహర్షేణ చ జానకీ । నేత్రాభ్యాం వక్రపక్ష్మాభ్యాం ముమోచానందజం జలమ్ ॥

௫௫. [illegible]

௫௫. அதுலம்சகதாஹர்ஷம்ப்ரஹர்ஷேணசஜாநகீ।
நேத்ராப்யாம்வக்ரபக்ஷ்மாப்யாம்முமோசாநந்தஜம்ஜலம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஜாநகீ	ஸீதையானவள்	வக்ரபக்ஷ்மாப்யாம்	கோணலானஇரப்பைகளையுடைய
ப்ரஹர்ஷேண	வெகுகளிப்பால்	நேத்ராப்யாம்	கண்களால்
அதுலம்	நிகரற்ற	ஆநந்தஜம்-ஜலம்-முமோச-ஆநந்தத்தாலுண்டான - ஜலத்தை பெருக்கினாள்.	
ஹர்ஷம்-லப்தா	ஸந்தோஷத்தை-அடைந்தவளாக		

தா-ம்.—இந்தவிதம் ஆனந்தாதிசயத்திற்கடியான ஹநுமத்வசனத்தைக்கேட்டபிராட்டி, இந்ததேசத்தில், இக்காலத்தில், இத்தனைநாள்கழித்து, எனதுயிர்நிலையனை ஸ்ரீராகவனை யினிகாணப்போகிறேனோ இல்லையோவென்று சங்கித்திருக்கையில், அந்தஸுந்தரகாத்திரனைப் பிரத்தியக்ஷத்தில் தரிசிப்பதுபோல் அவருடைய திவ்யமங்களவிக்கிரகத்தின் விலக்ஷணங்களை யிவனுரைக்கக்கேட்டேன். இதென்ன ஆச்சரியம்! இதென்னபாக்கியவிசேஷம்! என்று நிகரற்றபிரஹர்ஷாதிசயத்துடன், கொஞ்சம்வளைந்து அதியழகாகவிளங்குகிற இமைகளோடுபிரகாசிக்கும் திருக்கண்களால் ஆனந்தபாஷ்பம்பெருக்கினாள்.

௫௬. చారు తద్వదనం తస్యాస్తామ్రశుక్లాయతేక్షణమ్ । అశోభత విశాలాక్ష్యా రాహుముక్త ఇవోడురాట్ ॥

௫௬. [illegible]

௫௬. சாருதத்வதநம்தஸ்யாஸ்தாம்ரஶுக்லாயதேக்ஷணம்।
அஶோபதவிஶாலாக்ஷ்யாராஹுமுக்தஇவோடுராட்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தாம்ரஶுக்லாயதேக்ஷணம்-	வெளுப்பாயும் சிகப்பாயும் நீண்டுமிருக்கிற கண்களையுடையவளும்	தத்-வதநம்	அந்த-முகமானது
சாரு-தஸ்யா:-விசாலாக்ஷ்யா:	அழகான-அந்த-விசாலநேத்திரங்களுள்ளவளுடைய (ஸீதையினுடைய)	ராஹுமுக்த:	இராகுவினால்விடப்பட்ட
		உடுராடிவ	மதியைப்போல்
		அஶோபத	விளங்கிற்று

தா-ம்.—செந்தாமரை தளம்போலகன்று நீண்டு விசாலமாகி வெகுஸுந்தரமாகவிளங்கும் நேத்திரத்துவயத்தோடுகூடின பிராட்டியின்திருமுகமானது,பர்த்திருக்ஷேமத்தை ஹநுமத்வசனத்தா லவளறிந்தவுடன், ஸகலகிலேசமுமொழிந்து இராகுவிமுக்தமான நிறைமதிபோல் திவ்வியசோபையடைந்து பிரகாசித்தது.

౮౬౧. హనుమంతం కపిం వ్యక్తం మన్యసే నాన్యథేతి సా।

அசுஉ. 𑌹𑌨𑍂𑌮𑌨𑍍𑌤𑌂𑌕𑌪𑌿𑌂𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂𑌮𑌨𑍍𑌯𑌸𑍇𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑍇𑌤𑌿𑌸𑌾।

அசுஉ. ஹநுமந்தம்கபிம்வ்யக்தம்மந்யதேநாந்யதேதிஸா।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸா	அந்தபிராட்டி	மந்யதே	எண்ணினள்
ஹநுமந்தம்-கபிம்-இதி	ஹநுமானை-வானரன்-என்று	அந்யதா-ந	வேறுவிதமாக-எண்ணவில்லை.
வ்யக்தம்	ஸ்பஷ்டமாக		

தா-ம்.—முற்குறித்தகாரணங்களால் மாருதியைப் பிராட்டி வானரனென்று நிச்சயித்து விபரீதமான வேறெண்ணங்களை யொழித்தாள்.

౮౬౪. అథోవాచ హనూమాంస్తాముత్తరం ప్రియదర్శనామ్।

౮౬౫. ఏతత్తే సర్వమాఖ్యాతం సమాశ్వసిహి మైథిలి కిం కరోమి కథం వా తే రోచతే ప్రతియామ్యహమ్॥

அள. 𑌅𑌥𑍋𑌵𑌾𑌚𑌹𑌨𑍂𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑌂𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌮𑍍॥

அஅ. 𑌏𑌤𑌤𑍍𑌤𑍇𑌸𑌰𑍍𑌵𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂𑌸𑌮𑌾𑌶𑍍𑌵𑌸𑌿𑌹𑌿𑌮𑍈𑌥𑌿𑌲𑌿।
𑌕𑌿𑌂𑌕𑌰𑍋𑌮𑌿𑌕𑌥𑌂𑌵𑌾𑌤𑍇𑌰𑍋𑌚𑌤𑍇𑌪𑍍𑌰𑌤𑌿𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍॥

அஎ. அதோவாசஹநூமாம்ஸ்தாமுத்தரம்ப்ரியதர்ஶநாம்॥

அஅ. ஏதத்தேஸர்வமாக்யாதம்ஸமாஶ்வஸிஹிமைதிலீ।
கிம்கரோமிகதம்வாதேரோசதேப்ரியதாம்யஹம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அத-ஹநுமாந்	பிறகு ஹனுமானனவர்	தே-ஆக்யாதம்	உன்பொருட்டு-சொல்லப்பட்டது
ப்ரியதர்ஶநாம்-தாம்	இஷ்டமானபார்வையுடைய - அந்த (ஸீதையைக்குறித்து)	ஸமாஶ்வஸிஹி	(ஆகையால்) ஸமாதானமடை
உத்தரம்-உவாச	பதிலுத்திரவை-சொன்னார்	தே-கிம்-கதம்-ரோசதே-	உனக்கு-என்ன-எப்படி - இஷ்டப்படு
மைதிலி	ஸீதே	கரோமி	(அதை) செய்கிறேன். [கிறதோ
ஸர்வம்-ஏதத்	ஸமஸ்தமான-இந்தவரலாறு	அஹம்-ப்ரதியாமி	நான்-போகிறேன்.

தா-ம்.—அஹங்குளிர்ந்து வாண்முகததுடன் தன்னைக்கடாக்ஷிக்கும் பிராட்டியைப்பார்த்து ஹநுமான், ஹேதேவி! இவ்விடத்தில் விக்கியாபிக்கவேண்டிய விஷயங்களையெல்லாம் விக்கியாபித்தேன். இனி ஸ்ரீராகவனதிவ்வரையிலேயே இங்கெழுந்தருளி சத்துருஹநஞ்செய்து உம்மையடைவர். கொஞ்சகாலம்பொறுமையுடன் வீற்றிருக்கவேண்டும். அடியேனால் யாதுஎவ்விதம்செய்யப்படவேண்டுமென்று விரும்புகிறீரோ அதை நியமித்தால்செய்ய ஸித்தனாயிருக்கிறேன். தேவியினுடைய க்ஷேமஸமாசாரத்தை ஸ்ரீராகவனுக்கு விண்ணப்பஞ்செய்ப வேண்டுமாதலால் நான் கிஷ்கிந்தைக்குப்புறப்படுகிறேன.

౮౭౦. హతేసురే సంయతి శంబసాదనే కపిప్రవీరేణ మహర్షిచోదనాత్। తతోస్మి వాయుప్రభవో హి మైథిలి ప్రభావతస్తత్ప్రతిమశ్చ వానరః॥

அகூ. 𑌹𑌤𑍇𑌽𑌸𑍁𑌰𑍇𑌸𑌂𑌯𑌤𑌿𑌶𑌮𑍍𑌬𑌸𑌾𑌦𑌨𑍇𑌕𑌪𑌿𑌪𑍍𑌰𑌵𑍀𑌰𑍇𑌣𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌚𑍋𑌦𑌨𑌾𑌤𑍍।
𑌤𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿𑌵𑌾𑌯𑍁𑌪𑍍𑌰𑌭𑌵𑍋𑌹𑌿𑌮𑍈𑌥𑌿𑌲𑌿𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌤𑌸𑍍𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌶𑍍𑌚𑌵𑌾𑌨𑌰𑌃॥

அகூ. ஹதேஸுரேஸ்ம்யதிஶம்பஸாதநேகபிப்ரவீரேணமஹர்ஷிசோதநாத்।
ததோஸ்மிவாயுப்ரபவோஹிமைதிலிப்ரபாவதஸ்தத்ப்ரதிமஶ்சவாநர:॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌪𑌞𑍍𑌚𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃.

(அவதாரிகை.) பிராட்டியைப்பார்த்து ஏதாவது ஆக்ஞையுளதாயின் தெரிவித்தால் அதை நிறைவேற்றுகிறேனென்றசொன்ன ஹநுமான், இவ்வானரன் எமக்குச்செய்வ தென்னுளதென்ற நினைத்து ஸந்தேஹமடைவளோவென்று சங்கித்து எக்காரியத்தையும் நிர்வகிக்கவல்ல தனது மஹாத்மியத்தை வெளியிடுகிறார்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே) மைதிலி	ஓஸீதே	வாநரேண	(கேஸரிஎன்கிற) வானரனால்
கபிப்ரவீரேண	கபிசிரேஷ்டனை	மஹர்ஷிசோதநாத்	மஹரிஷிகள்ஆஜ்ஞையால்

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸம்யதி	யுத்தத்தில்	ப்ரபாவத:	மஹிமையினால்
ஶம்பஸாதநே-அஸுரே-சம்பஸாதனனென்கிறஅரக்கன்		தத்ப்ரதிம:	அவருக்குஸமானமான
ஹதேஸதி	மாளாநின்றளவளவில்[ண்டானேன்	வானர:	வானரன்.
தத:-வாயுப்ரபவ:	பிறகுநான்-வாயுவினிடத்திலிருந்துஉ		

தா-ம்.—ஹேமைதிலி! மஹரிஷிகளாக்கியையாலவர்கள்கவலையற சம்பஸாதனனென்னு மரக்கனைத்துவந்துவயுத்தத்தில் என்பிதா கேஸரியென்கிறவானரவீரன் ஸம்ஹரிக்கப்போயிருக்கையில், வாயுபகவானுடைய அநுக்கிரகத்தால் அஞ்சனாதேவிகர்ப்பத்தில் ஜனித்தவன்யான். விக்கிரமவீரிய தேஜோவிசேஷங்களில் மாருதனுக்கு ஸமானனென்றனர். இதனால், தனதம்சம் தேவதாம்சமென்றும், ரிபுஸம்ஹர்த்தாவும் ஸத்ஜனஹிதனுமான ஓர்வானரவீரனுடைய உத்தமக்ஷேத்திரத்தில் ஜனித்தவனென்றும், ஸர்வாந்தரியாமியும் கடல் மலைகளையெல்லா மொன்றுசேர்த்து அல்லோலகல்லோலப்படுத்த வல்லபலவானுமான வாயுபகவானைப்போலவே, தானுமெங்குஞ்சென்று ஸம்ஸ்தகாரியங்களையும் ஸாதித்துவரக்கூடியவனென்றும், மஹரிஷிகளுக்கபயந்தந்த தன்பிதாவான கேஸரியைப்போலவே தானும் தேவியின்கவலைதீர்க்கச் சக்தனென்றும், இத்யாதிபாவங்களை வெளிப்படுத்துகிறார்.

ஸ்ரீஸந்மநோரஞ்ஜநீநாமத்திராவிட வ்யாக்யாநஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்

முப்பத்தைந்தாவதுஸர்க்கம்-முற்றிற்று.

முப்பத்தாறுவது ஸர்க்கம்.

౧. భూయఏవమహాతేజా హనూమాన్మారుతాత్మజః। అబ్రవీత్ప్రశ్రితం వాక్యం సీతాప్రత్యయకారణాత్॥

൧. ഭൂയ ഏവ മഹാതേജാ ഹനൂമാന്മാരുതാത്മജഃ।
അബ്രവീത്പ്രശ്രിതം വാക്യം സീതാപ്രത്യയകാരണാത്॥

க. பூயயேவமஹாதேஜாஹநூமாந்மாருதாத்மஜ:।
அப்ரவீத்ப்ரஶ்ரிதம்வாக்யம்ஸீதாப்ரத்யயகாரணாத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மாருதாத்மஜ:	வாயுமைந்தரும்	ப்ரஶ்ரிதம்-வாக்யம்	வினயமுள்ள-வசனத்தை
மஹாதேஜா:-ஹநூமாந்-மிக்க தேஜஸ்ஸுமுடைய-ஹநுமான்		பூயயேவ-அப்ரவீத்	மறுபடியும்-மொழிந்தனர்.
ஸீதாப்ரத்யயகாரணாத்-பிராட்டிக்கு நம்பகஙிமித்தமாக			

தா-ம்.—இவ்வித மந்த வாதாத்மஜரான ஹநுமான் அஞ்சலிபத்தராய் பிராட்டியின் முன்சென்று சில வார்த்தைகளை விண்ணப்பம் செய்ய, அதைக்கேட்ட தேவி இப்படியும் கலியச்செய்ய வேண்டுமோ, அஹோ ராவண! என்று பயந்து விழுந்து மோஹித்துக்கிடந்து வெகுகாலத்திற்குப்பின் பிரக்கினையயடைந்து, இப்படி செய்வது உனக்கு நன்மையாகாதுகாண், என்று தைன்னியமாகப் பலவார்த்தைகளைச் சொல்ல, அவளுடைய வதிசங்கையைத் தீர்க்கைக்காக அவள் கேட்டபடி ஸ்ரீராகவன் திருமேனிமுதலான அடையாளங்களையெல்லாம் ஸுஸ்பஷ்டமாக திருவுள்ளத்திற் படும்படி விண்ணப்பம்செய்து தான் ராமதூதனென்பதையுமறிவிக்க, இவ்வடையாளங்களைத் திருச்செவிசாற்றிய பிராட்டி, இவன் ராமதூதன்தான் என்று நிச்சயித்து,இராகுவினால் சிரகாலம் பீடிக்கப்பட்டிருந்த ராகாசந்திரன் விடுபட்டவுடன் தன் கிரணங்களை வாரிப்பொழிந்து முன்னினும் அதிக காந்திமானாய் பிரகாசிக்குமாப்போலே அதிக தேஜிஷ்டமாக திருமுக மிக விளங்கித் திருவுள்ளமுமுகக்க, அவளுடைய அப்போதிய வழகைக் கண்ணுறகண்டு ஸேவித்ததிருவடி, பாவஜ்ஞராகையாலே இப்பொழுது இவள் நம்மை ராமதூதனாக வறிந்திருக்கவேண்டுமென்று நிச்சயித்து அந்த ஹர்ஷத்தாலே முன்னினுங்காட்டில் வெகு தேஜஸ்ஸையுடையவராய் பிரஸன்னமான திருமுகத்துடன் இவளுக்கு இன்னம் நன்றாக நம்பிக்கையுண்டாவதின்பொருட்டு வெகு வினயத்தோடு மறுபடி ஓர் விஞ்ஞாபனம் செய்தனர்.

அவதாரிகை.—இதுவரையில் வாக்கினால் தேவியைத்தேற்றி இனி ஸ்ரீராகவன் தந்தருளின மோதிரத்தைக்கொடுத்து நன்றாக ஸமாதானிக்கிறார்.

౨ వానరోఽహం మహాభాగే దూతో రామస్య ధీమతః। రామనామాంకితం చేదం పశ్య దేవ్యంగులీయకమ్॥

൨. വാനരോഽഹം മഹാഭാഗേ ദൂതോ രാമസ്യ ധീമതഃ।
രാമനാമാങ്കിതം ചേദം പശ്യ ദേവ്യംഗുലീയകമ്॥

உ. வாநரோஹம்மஹாபாகே தூதோராமஸ்யதீமத:।
ராமநாமாங்கிதம்சேதம்பஶ்யதேவ்யங்குளீயகம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மஹாபாகே	பெருபாக்கியமுடையவளே	ஹே தேவி	ஓ ஸீதே
அஹம்	அடியேன்	ராமநாமாங்கிதம்	இராகவதிருநாமத்தையுடையாளமாயு[டைய
தீமத:-ராமஸ்ய	வெகுபுத்திமானான-ஸ்ரீராகவனுடைய	இதம்-அங்குளீயகம்	இந்த-கணையாழியை
தூத:-வாநர:	வார்த்தாஹரனான-வானரன்	பஶ்ய	பாரும்.

౩. ప్రత్యయార్థం తవానీతం తేన దత్తం మహాత్మనా। సమాశ్వసిహి భద్రం తే క్షీణదుఃఖఫలా హ్యసి॥

௩. 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌾𑌰𑍍𑌥𑌂 𑌤𑌵𑌾𑌨𑍀𑌤𑌂 𑌤𑍇𑌨 𑌦𑌤𑍍𑌤𑌂 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ।
𑌸𑌮𑌾𑌶𑍍𑌵𑌸𑌿𑌹𑌿 𑌭𑌦𑍍𑌰𑌂 𑌤𑍇 𑌕𑍍𑌷𑍀𑌣𑌦𑍁𑌃𑌖𑌫𑌲𑌾 𑌹𑍍𑌯𑌸𑌿 ॥

௩. ப்ரத்யயார்த்தம்தவாநீதம்தேநதத்தம்மஹாத்மநா।
ஸமாஶ்வஸிஹிபத்ரம்தேக்ஷீணதுக்கபலா ஹ்யஸி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மஹாத்மநா-தேந	மஹாநுபாவனான-அந்தராமனால்	ஸமாஶ்வஸிஹி	தேர்ந்துகொள்
தவ-ப்ரத்யயார்த்தம்	உன்னுடைய-நம்பகத்தின்பொருட்டு	க்ஷீணதுக்கபலா	குறைந்த வியஸனத்தின் பலமுடையவளாக
தத்தம்	கொடுக்கப்பட்டது		
ஆநீதம்	(என்னால்) கொண்டுவரப்பட்டது	அஸி	ஆகிறாய்.
தே-பத்ரம்	உன்பொருட்டு-மங்களமுண்டாக		

தா-ம்—ஹே கல்யாணி! அநேக வானரகோடிகளின்மத்தியில் இவன்தான் தேவிஸந்நிதி போவதற்குரியவன், இவன்தான் காரியஸாதனம் செய்யவல்லவனென்றறிந்து அடியேனை விடுத்த மஹாபுத்திமானாய், அம்மதிவிசேஷத்திற் கனுரூபமாக ஸகலரையு மானந்திப்பிக்கும்படியான வடிவழகுடையவராய், எங்களையு மொருபொருட்டாயெண்ணி ஸ்நேகித்த யாதொரு ஸௌலப்பிய நிதியுண்டோ, அப்படிப்பட்ட ஸ்ரீராகவனுடைய தூதன் யான். ஜாதியில் வானரன். வேறுபாடாய் உம்மை வஞ்சிக்கவந்த மாயாவியல்ல. இதுவரையில் கொண்டவெண்ணமினிவேண்டாம். லோகவிக்கியாதனாய் ஸ்வரூபரூபகுணவிபவைசுவர்ய சீலாதியநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாணகுணாத்மகனான பரமபுருஷனுக்கு மாலையிட்ட ஹே சோபநே! உம்மைப்போலுண்டோ பாக்கியசாலி! உம்முடைய பாக்கியமன்றோ பாக்கியம். மூவுலகிலுமுண்டோ உம்மைப்போன்ற புண்யவதி. உம்மையடையப்போகிறதன்றோ மஹாக்ஷேமம். இனியாகிலும் அடியேனை ராமதூதனாக விசுவஸிக்கவேண்டும், அடியேனிடத்தில் நம்பிக்கையுண்டாய் தேவரீர் அருள்புரியுநிமித்தம் அம்மஹாநுபாவன்இவ்வடையாளத்தையும் பிரஸாதித்தருளினார். இதோ கடாக்ஷிக்கலாம், கவலைநீக்கலாம், ஆனந்தமடையலாம் பரமபாவனமும் ஸ்மரணமாத்திரத்தினாலேயே ஜன்மமடியாகவந்த எல்லா துஷ்கர்மங்களையு மொருமிக்க வொழியும்படி செய்யவல்ல திருவஷ்டாக்ஷரத்துவயமுடையதும் ஸமஸ்த ஸாம்ராஜ்யாபிஷேகம் பண்ணிவைக்கும் படியான திறமையுடையதுமான அந்த புருஷோத்தமனுடைய திருநாமத்தால் அலங்கிருதமாய், வஜ்ஜிரவைடூரியாதி நவரத்தினங்கள் பதித்து வெகு மேன்மையான தங்கத்தினாலிழைக்கப்பட்டு அதிப்பிரயகரமாய் மிகவழகாய் விளங்கு மிந்த திருவாழியைப்பாரீர். இதோ மோதிரமென்று காண்பித்தனர்.

౪. గృహీత్వా ప్రేక్షమాణా సా భర్తుః కరవిభూషణమ్। భర్తారమివ సంప్రాప్తా జానకీ ముదితాభవత్॥

௪. 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌾 𑌸𑌾 𑌭𑌰𑍍𑌤𑍁𑌃 𑌕𑌰𑌵𑌿𑌭𑍂𑌷𑌣𑌮𑍍 ।
𑌭𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌿𑌵 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾 𑌜𑌾𑌨𑌕𑍀 𑌮𑍁𑌦𑌿𑌤𑌾𑌭𑌵𑌤𑍍 ॥

௪. க்ருஹீத்வாப்ரேக்ஷமாணாஸாபர்துக்கரவிபூஷணம்।
பர்த்தாரமிவஸம்ப்ராப்தாஜாநகீமுதிதாபவத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸா-ஜாநகீ	அந்த-ஸீதையானவள்	பர்த்தாரமிவ	நாயகனைப்போல்
பர்த்து:-கரவிபூஷணம்-பர்த்தாவினுடைய-	திருக்கைக்கு அலங்காரமாயுள்ள மோதிரத்தை	ஸம்ப்ராப்தா	அடைந்தவளாய்
		முதிதா	ஸந்தோஷித்தவளாக
க்ருஹீத்வா	வாங்கி	அபவத்	ஆனாள்.
ப்ரேக்ஷமாணா	பாராநின்றுகொண்டு		

தா-ம்.—தனது பர்த்தாவனுப்பிய மிக சிலாக்கியமான வக்கணையாழியைக் கண்ணுற்ற பிராட்டி அதிசீக்கிரமாயதைவாங்கி மார்போடணைத்து சிரஸின்மீதுவைத்துப் பிறகு வெகு ஸந்தோஷமாயதை பார்த்து அப்பொழுது தன்பர்த்தாவையடைந்ததுபோல் பரமானந்தம்கொண்டு மகிழ்ந்தனள்.

விசேஷார்த்தம்.

அவதாரிகை.—"மைத்தருமாமலர்க்குழலாய்வைதேவிவிண்ணப்பம் - ஒத்தபுகழ்வானரக்கோனுடனிருந்துநினைத்தேட - அத்தகுசீரயோத்தியர்கோனடையாளமிவைமொழிந்தான் - இத்தகையாலடையாளமீதவன்கைமோதிரமே" என்றபடியே மைபோலிருண்டு சிலாக்கியமான மலரோடேகூடியிருக்கும்படியான குழலையுடையளாய் இப்போது தேஹத்தைச் சிறிதேனும்பேணாது கேவலமந்த தர்மத்தையே ஆதரித்துப்போருகிற ஹே ஸீதே! தேவரீருடைய திருவடியின் தர்சனபிலாஷியாய் குதூகலித்திங்கோடிவந்த இந்த வானரனை அடியேன் செய்யும் விண்ணப்பத்தைத் திருவுள்ளம்பற்றவேணும். உம்முடைய பிரிவினால் ஸ்ரீராகவனுடைய திருமேனியிலுண்டான வைவர்ண்யம் தம்முடம்பிலே தோற்றும்படி அப்படி ஸாகதுக்கங்களால் ஸ்ரீராகவனோடு ஒத்து, அதனால் பிரஸித்திபெற்ற மஹாராஜர் தன் ராஜதானியான கிஷ்கிந்தையி லிருக்கையன்றிக்கே மாலியவானில் பெருமாளோடுகூட விருந்துகொண்டு தேவரீரைத்தேடுவதற்காக ஸமஸ்த திக்குகளிலும் அநேகமாயிரம் வானரங்களை விடுக்கிறவளவிலே அவர்களைப்போலன்றிக்கே அடியேனை வெகுமானித்து, தேவரீரைப் பிரிந்தபின்பு ஊணுமுறக்கமுமற்று கடித்ததுவுமூர்ந்ததுவுமறியாதே ஏதேனுமொரு போக்கியபதார்த்தங்களைக்கண்டால் தேவரீரைநினைத்து ஈடுபடாநின்றுள்ள அந்நிலைமைக்குத்தகுதியான பிரணயித்வகுணமுடையவராய் திருவயோத்திக்கு மன்னரான ஸ்ரீராகவனால் அநேக வடையாளங்கள் மொழியப்பட்டனவென்றறிவித்து இது அவர் திருக்கையிலலங்கிருதமாயிராநின்ற திருவாழிமோதிரமென்று கொடுக்க:—"திக்குநிறைபுகழாளன்றீவேள்விச்சென்றநாள் - மிக்கபெரும்சபைநடுவே வில்லிருத்தான்மோதிரங்கண்டு - ஒக்

குமாலவடையாளமனுமானென்றுச்சிமேல்வைத்துக்கொண்டுகேர்தநளான்மலர்க்குழலாள்சீதையுமே" என்கிறபடியே மலர்க்குழலையுடைய வப்பிராட்டி, மெய்யறிவினாலும் எம்பெருமானுடைய குணானுபவத்தைக்காட்டிலும் வேறொன்றில் நசையற்று ஒரு பலத்திலுமாசையற்று ஸத்கர்மானுஷ்டானங்களைப் பண்ணிக்கொண்டு போருகையால் ஸமஸ்த திசைகளிலும் "ஜ்ஞாநாதிகர்களாயிருப்பார், ஜனககுலத்திலுள்ளார்க்கு மேலில்லை" யென்று புகழ்ச்சிபெற்ற ஸ்ரீஜனகராஜன் ஆஹவநீயம் - கார்ஹபத்யம் - தக்ஷிணாக்னி என்கிற அக்நித்திரயத்தோடே பண்ணும் யாகத்திலே விசுவாமித்திரன் பின்னேவந்து அனேக வரசரால் சூழப்பட்டிருக்கிற ஸபைநடுவே தனக்கு கன்னியாசுல்கமாக வைத்திருந்த தனுஸ்ஸை முறித்து நிற்கு மளவிலேகண்ட மோதிரத்தை யிப்பொழுது கண்டு, ஹநுமானே! நீர் முன்புசொன்னவையெல்லா மொக்குமென்றருளி அத்திருவாழிமோதிரத்தை வாங்கி அதனுடைய கௌரவமும் தன்னுடைய ஆதரமும் தோற்றத் தலைமேல் வைத்துக்கொண்டு பிறகு கையிலேந்தி, வைத்த கண்மாறாதே அதைப் பார்த்துக்கொண்டிருக்கையாலே அத்திருவாழியோடு சேர்ந்த அவயவவிசேஷங்களை நினைத்து பாவனாப்ரகர்ஷத்தாலே ஸ்ரீராகவனை யடைந்தாப்போல் தோன்ற பிரீதையானாளென்கிறது.

"க்ருஹீத்வா" தேசாந்தரம்போனபந்துக்களைக்கண்டாப்போலேமேல்விழுந்தாள். "ப்ரேக்ஷமாணா" ராவணமாயையாலேவந்ததோ என்னும் பயத்தால் முற்படக்கண் வைக்கமாட்டாதேயிருந்தாள். அத்தலையாலே வந்ததென்று தெளிந்தபின்பு வைத்த கண்மாறாதே பார்த்துக்கொண்டிருந்தாள். "ஸா"(பஸ்பதேவி)என்று முன்பு பார்வைக்கு திருஷ்டிபண்ண வேண்டும்படி இருந்தவளிப்பொழுது கண்மாறவைக்கைக்கு திருஷ்டிபண்ண வேண்டும்படி யிருந்தாள். "பர்துঃகரவிபூஷணம்" விவாககாலத்தில் முதலில் தன் கையைப்பிடிக்கிறபோதுநத்தினபடியை நினைத்தாள். அங்ஙனன்றிக்கே தானுமவரும் ஸம்ஶ்லேஷிக்கும்போது வேகத்தின்மிகுதியாலே ப்ரணயரோஷம் தலையெடுத்து ஒருவரையொருவர் முகம்பாராதே கூடியிருப்பார்கள். அப்பொழுதிருவரையும் சேர்த்த மோதிரமென்னுதல். அதாவது அப்பொழுது நேர்முகம்பார்க்கையும் வார்த்தைசொல்லுகையுமிருவர்க்கு மபேக்ஷிதமாயிருக்கும், வேறு சேர்ப்பாரில்லையாகையாலே கையிலணிந்திருக்கும் திருவாழிமோதிரத்தை ஸ்ரீராகவன் தரையிலே விழவிடுவர். அப்பொழுது பிராட்டி மோதிரத்தை விழவிட்டீர்காணுமென்று அதையெடுத்து கொடுப்பாள். அப்போது இருவர்க்கும் வார்த்தையை யுண்டாக்கின மோதிரமாகையாலே கடகமான மோதிரமென்கிறது. "அணிமிகுதாமரைக்கை" என்கிறபடியே ஆபரணபூதமான கரத்துக்கும் ஆபரணமான அத்திருவாழியை "பர்த்தாரமிவ" அதைக்கண்டபோதே இத்தோடேசேர்ந்த ஸ்ரீராகவனுடைய விரலையும் கையையும் நினைத்தாள். அதற்காசிரயமான தோளையும் அதற்காசிரயமான வடிவையும் நினைத்தாள். "ஸம்ப்ராப்தா" இருவரும் ஒருபடுக்கையிலிருந்து ஸ்ரீராகவன் பூமுடிக்கவும் அலங்கரிக்கவும் பெற்று அவரை கேராகத்தழுவிக்கொள்ளுமாப்போல் அத்திருவாழியை தழுவிக்கொண்டாள். ஸ்ரீராகவனக்கரையிலும் தானிக்கரையிலும் இடையிலொரு கடலிடப்பதாகவும் அறிந்திலள். திருவாழி மோதிரமன்றோ இவள் கையிலிருக்கிறது. இத்தாலே பர்த்தாவையடைந்தாளென்று சொல்லக்கூடுமோவென்னில், பாவனாப்ரகர்ஷத்தாலே யடைந்தாள். ஆனால் கூடவிருந்ததாக நினைத்தால் அவர் திருக்கையிலிருக்கும் மோதிரம் இவள்கையில் வருவானென்னென்னில், ஒருசூது சதுரங்கமாடி அவரைத் தோற்கச்செய்து தான் ஜயித்ததனால் அவர் மோதிரத்தை தான் பெற்றாள். அப்போது "பர்த்தாரமேவஸம்ப்ராப்தா" நாயகனையே யடைந்தாளென்று சொல்ல வமைந்திருக்க, (இவ) என்று சொல்லுவானென்னென்ன, அதற்கிரண்டர்த்தம். முந்தினது தாயாருடைய ஸம்ஶ்லேஷப்ரகாரத்தை வியக்த்தமாய்ச்சொல்லவொண்ணாமையாலே. அல்லது இந்த பாவனை குலைந்தால் இவ்விராக்ஷஸிகள் அறியும்படி யிருந்தோமோவென்று நோவுபடப் புகுகிறாளென்னவுமாம். "ஜாநகீ" சோகஹர்ஷங்களுக்கிளையாத குடியிலே பிறந்தவள். "முதிதாபவத்" ஸந்தோஷித்தவளானாள்.

அவதாரிகை.—துக்கநிவர்த்திக்கு மேலே ஹர்ஷப்ரகர்ஷமுண்டாகையாலே ராஹுமுக்தனான சந்திரனைப்போதி திருமுகம் விளங்கினபடியைச் சொல்கிறது.

౫ చారు తద్వదనం తస్యాస్తామ్రశుక్లాయతేక్షణమ్। అశోభత విశాలాక్ష్యా రాహుముక్త ఇవోడురాట్॥

* ஓ. 𑌚𑌾𑌰𑍁 𑌤𑌦𑍍𑌵𑌦𑌨𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌾𑌮𑍍𑌰𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌯𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌮𑍍।
𑌅𑌶𑍋𑌭𑌤 𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌾 𑌰𑌾𑌹𑍁𑌮𑍁𑌕𑍍𑌤 𑌇𑌵𑍋𑌡𑍁𑌰𑌾𑌟𑍍॥

ரு. சாருதத்வதநம்தஸ்யாஸ்தாம்ரஶுக்லாயதேக்ஷணம்।
அஶோபதவிஶாலாக்ஷ்யாராஹுமுக்தயிவோடுராட்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தாம்ரஶுக்லாயதேக்ஷணம்	சிவந்தும் வெளுத்தும் நீண்டுமிருக்கிறவும்	தத்-வதநம்	அப்படிப்பட்ட அந்த-முகமானது
சாரு	அழகாயுமிருக்கிற	ராஹுமுக்தঃ	இராகுவினால் விடப்பட்ட
விஶாலாக்ஷ்யாঃ	விசாலமான கண்களையுடையவளான	உடுராடிவ	சந்திரன்போல்
தஸ்யாঃ	அந்த ஸீதையினுடைய	அஶோபத	பிரகாசித்தது.

தா-ம்.—"ரஹஸ்யஞ்சப்ரகாஶம்ச" என்றுகொண்டு பிரம்ஹாவின் பிரஸாதத்தாலே உள்ளபடி ஸ்ரீராகவனுடைய சரிதமெல்லாம் தோற்றக்கடவதாகப் பெற்றுடையவனான ரிஷிக்கும் இவ்வளவென்று நிர்ணயித்துச் சொல்லவொண்ணாதே "ததாகதாம்" என்று பிராட்டியினுடைய துக்கமிகுதியைக்காட்டிலும் மேலொன்றில்லையென்று துக்காதிசயமிருக்கும்படியைச் சொல்லித் தளர்ந்தேங்கின மஹரிஷிதானே இப்பொழுது ஸ்ரீராகவனுடைய திருவாழிமோதிரத்தைக் கண்டவுடனே பிராட்டிக்குண்டான ஆனந்ததேஜோவிசேஷத்தைப்பார்த்து இப்படியுமுண்டோ ஒரு ஸந்தோஷாதிசயமென்று பரமோத்ஸாகமுடையவராய் இந்தவிடத்தி லின்னதைச் சொன்னேனென்பதையும் மறந்து ஈடுபட்டுக்கொண்டாடுகிறார்.

தன்னுடைய நாயகனான ஸ்ரீராகவனோடு தான்கூடிவாழ்ந்திருக்கையில், இராவணன் ஸந்நியாஸியாய் வந்துவஞ்சித்து, சரீரத்தைவிட்டுச் சாயையைப் பிரிக்குமாப்போலே, தன்னுடைய பிராணதாரகனிடத்திலிருந்து தன்னைப்பிரித்துக்கொண்டு போகும்போது வாடினதிருமுகமானது இப்பொழுதுமலர்ந்தது. அல்லது இராவணன் தன்னைக்கொண்டு அசோகவனிகையில் வைத்து கோரமான இராக்ஷஸிகளைக் காவல்வைத்து அடிக்கடி மிரட்ட அதனால் வருத்தமுற்று இனி யென்னாதனைக் காண்பேனா, என் புருஷோத்தமனை யடை

* இந்த சுலோகம் ருஙி-வது ஸர்க்கத்தில் அசு-வது சுலோகம். அதையே இங்கும் சொன்னது ஹர்ஷாதிசயத்தாலென்றறியவும்.

வேனு. என் பதியோடு கூடுவேனு, ஆனந்தமுண்டாகுமோ, ஏதேது கிடையாது, ஹாராம! பிழைத்திருக்கிறீரா! ஹா லக்ஷ்மண! ஜீவனேடிருக்கிறீரா? இங்கு வரக்கூடாதா, என்னை இரக்ஷிக்கக்கூடாதா, வேண்டாமோ இந்த ஸீதை, என்று அலறிக்கதறிப்பதறி ஏங்கி தளர்ந்துவாடி என்கிலேசத்தை யொழித்து விடுகிறேனென்று கிளம்பி கேசத்தையவிழ்த்து உச்சுருக்குடன் மரத்தடியில் நின்று ஒளிமாறி ஒருமிக்க எல்லாம் பாழாகும்படிசெய்ய யெத்தனித்த தருணத்திலே ஹநுமான் சொல்லிய ஸ்ரீராகவகதாப்பிரஸ்தாபத்தால் கொஞ்சம் தேறி அவருடைய வார்த்தையாலும் ஸ்ரீராகவதிருமேனிவர்ணனையாலும் பர்த்தாவினுடைய வடையாளத்தைத் தரிசித்ததாலும் பரமானந்த நிர்ப்பரையாய் கடைக்கண் சிவந்து கருவிழிபொருந்தி சுற்றிலும்வெளுத்து செவியளவிற்பாய்ந்து செந்தாமரையினிதழைப் பழிக்கும்படி ஸுந்தரமான நேத்திரசோபையுடன்கூடிய பிராட்டியினுடைய வதனமானது வெகுவழகாய் இராகுவினிர்முக்தமான பூர்ணசந்திரன்போல் மிகவும் பிரகாசித்தது.

౬. తతస్సా హ్రీమతీ బాలా భర్తృసందేశహర్షితా। పరితుష్టా ప్రియం కృత్వా ప్రశశంస మహాకపిమ్॥

௬. ததஸ்ஸா ஹ்ரீமதீ பாலா பர்த்ருஸந்தேஶஹர்ஷிதா।
பரிதுஷ்டா ப்ரியம் க்ருத்வா ப்ரஶஶம்ஸ மஹாகபிம்॥

௬. ததஸ்ஸாஹ்ரீமதீபாலாபர்த்ருஸந்தேஶஹர்ஷிதா।
பரிதுஷ்டாப்ரியம்க்ருத்வாப்ரஶஶம்ஸமஹாகபிம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத:	பின்பு	பரிதுஷ்டா	(ஹநுமானைப்பற்றி) ஸந்தோஷித்தவளுமாக
ஸா-பாலா	அந்த-ஸீதையானவள்	மஹாகபிம்	அப்பெருவானரனை
ஹ்ரீமதீ	லஜ்ஜையையுடையவளாகவும்	ப்ரியம்-க்ருத்வா	வெகுமானத்தை-செய்து
பர்த்ருஸந்தேஶஹர்ஷிதா	நாயகன்விஷயமான வார்த்தையைக்கேட்டு களிப்புற்றவளாகவும்	ப்ரஶஶம்ஸ	கொண்டாடினள்.

தா-ம். தானும் தன்னாயகனும் பிரணயகலகத்தாற் பிரிவுண்டு மூசித்துக்கிடக்குந்தசையில், இருவர்க்கும் மத்தியஸ்தமாய் நின்று ஒன்றுசேர்த்துவைத்த வம்மோதிரத்தைத் தனது பர்த்தாவை யடைவதுபோலடைந்து களித்த பிராட்டி கொஞ்சம் லஜ்ஜையுடையளாய், இராவணன் மாயாவேஷம்பூண்டு வந்தானென்று சங்கித்திருந்தவள் ஸ்ரீராகவன் பக்கல்நின்று வந்தவனென்றறிந்தபின்பு ஹநுமானை மிகுந்த ஆதரத்துடன் கடாக்ஷித்துப் பின்வருமாறு புகழ்ந்துகொண்டாடினள்.

౭. విక్రాంతస్త్వం సమర్థస్త్వం ప్రాజ్ఞస్త్వం వానరోత్తమ। యేనేదం రాక్షసపదం త్వయైకేన ప్రధర్షితమ్॥

௭. விக்ராந்தஸ்த்வம் ஸமர்த்தஸ்த்வம் ப்ராஜ்ஞஸ்த்வம் வாநரோத்தம।
யேநேதம் ராக்ஷஸபதம் த்வயைகேந ப்ரதர்ஷிதம்॥

௭. விக்ராந்தஸ்த்வம்ஸமர்த்தஸ்த்வம்ப்ராஜ்ஞஸ்த்வம்வாநரோத்தம।
யேநேதம்ராக்ஷஸபதம்த்வயைகேநப்ரதர்ஷிதம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே) வாநரோத்தம	வானீர் வானரசிரேஷ்டரே	(தேந)	(அக்காரணத்தால்)
யேந	எக்காரணத்தால்	த்வம்-விக்ராந்த:	நீ-அதிபலத்தையடைந்தவன்
ஏகேந-த்வயா	ஒருவனான-உம்மால்	த்வம்-ஸமர்த்த:	நீ-வெகு சக்தியடைந்தவன்
இதம்-ராக்ஷஸபதம்	இந்த-அரக்கரிருப்பிடமானது	த்வம்-ப்ராஜ்ஞ:	நீ-மிகபுத்தியுடையவன்.
ப்ரதர்ஷிதம்	திரஸ்கரிக்கப்பட்டதோ		

தா-ம். ஹே வானரசிரேஷ்ட! யாதொரு ஸகாயமுமின்றி ஒருவனாய், மாயாராக்ஷஸரக்ஷிதமான இக்கொடுநகரிற்பிரவேசித்து, அரக்கரைக் கொஞ்சமேனும் லக்ஷியஞ்செய்யாது நிர்ப்பயமாயெங்குந்திரிந்து யானிருக்குமிடந்தேடி யறிந்திங்குவந்தீர். இப்படிப்பட்ட நீரன்றி உமக்குப் பராக்கிரமத்திலும் ஸாமர்த்தியத்திலும் பிரக்ஞையிலும் ஸதிருசனொருவனுங் கிடையாது.

౮. శతయోజనవిస్తీర్ణస్సాగరో మకరాలయః। విక్రమశ్లాఘనీయేన క్రమతా గోష్పదీకృతః॥

௮. ஶதயோஜநவிஸ்தீர்ணஸ்ஸாகரோ மகராலய:।
விக்ரமஶ்லாகநீயேந க்ரமதா கோஷ்பதீக்ருத:॥

௮. ஶதயோஜநவிஸ்தீர்ணஸ்ஸாகரோமகராலய:।
விக்ரமஶ்லாகநீயேநக்ரமதாகோஷ்பதீக்ருத:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மகராலய:	மத்ஸ்யங்களுக்கிருப்பிடமானதும்	விக்ரமஶ்லாகநீயேந	சிலாகிக்கத்தக்க பராக்கிரமத்தால்
ஶதயோஜநவிஸ்தீர்ண:	நூறுகாதவழி தூரமானதுமான	க்ரமதா	தாண்டிவந்த (உன்னால்)
ஸாகர:	கடலானது	கோஷ்பதீக்ருத:	பசுவின் கொளம்படியாகச் செய்யப்பட்டது.

தா-ம்.—அதிபயங்கரமான ஜலஜந்துக்களுக்குக் குடியிருப்பாயும், சதயோஜனை விஸ்தீர்ணமுள்ளதாயும், மிகவுங்கலங்கி நுரைத்துப் பேரொலியோடு மேற்கிளம்பு மலைகளோடு கூடினதாயுமிருக்கிற இவ்வாழ்

கடலை யொருபொருட்டா யெண்ணாத திரிலோகமும் சிலாகிக்கும்படி உமது பல பௌருஷாதிசயத்தால் தாண்டி, இக்கடல் கேவலமோர் பசுவின் கொளப்படி யென்னும்படி அதன் மஹிமையை அடக்கிவிட்டீர். மஹோததியின் மஹிமையை யிவ்விதமடக்கின உம்முடைய பராக்கிரமென்ன விசேஷமானதென்று கொண்டாடினள்.

౯. నహి త్వాం ప్రాకృతం మన్యే వానరం వానరర్షభ। యస్య తే నాస్తి సంత్రాసో రావణాన్నాపి సంభ్రమః॥

௯. 𑌨𑌹𑌿𑌤𑍍𑌵𑌾𑌂𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌂𑌮𑌨𑍍𑌯𑍇𑌵𑌾𑌨𑌰𑌂𑌵𑌾𑌨𑌰𑌰𑍍𑌷𑌭।
𑌯𑌸𑍍𑌯𑌤𑍇𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌸𑌂𑌤𑍍𑌰𑌾𑌸𑍋𑌰𑌾𑌵𑌣𑌾𑌨𑍍𑌨𑌾𑌪𑌿𑌸𑌂𑌭𑍍𑌰𑌮𑌃॥

௯. நஹித்வாம்ப்ராக்ருதம்மந்யேவாநரம்வாநரர்ஷப।
யஸ்யதேநாஸ்திஸந்த்ராஸோராவணாந்நாபிஸம்ப்ரம:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹே வாநரர்ஷப	ஓ வானரோத்தம	ராவணாத்	இராவணனிடத்திலிருந்து
த்வாம்	உன்னை	ஸந்த்ராஸ:	பயமும்
ப்ராக்ருதம்—வாநரம்	ஸாதாரணமான-வானரனென்று	ஸம்ப்ரம:	வியாகூலமும்
நமந்யே	எண்ணேன்	நாஸ்திஹி	இல்லையன்றோ.
யஸ்யதே	எந்த உனக்கு		

தா-ம்.—ஹே வானரோத்தம! இவ்விலங்கை யாவர்க்கும் பிரவேசிக்க அசக்கியமானது. இராவணனென்றால் அமரருமலறுவார். இராக்ஷதருடைய கிரௌரியம் திரிலோகமு மறியும். அப்படியிருந்தும் இராவணனையும் அரக்கரையும் திரணங்களாயெண்ணி இக்ககருட்பிரவேசித்து என்னையுங்கண்டு ஸந்தோஷிப்பித்து நிர்ப்பயனாய் நிராயாஸனாய் நிற்கிற உம்மை ஸாமான்னிய வானரனென்றெண்ணேன்.

౧౦. అర్హసే చ కపిశ్రేష్ఠ మయా సమభిభాషితుమ్। యద్యపి ప్రేషితస్తేన రామేణవిదితాత్మనా॥

௧௦. 𑌅𑌰𑍍𑌹𑌸𑍇𑌚𑌕𑌪𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌮𑌯𑌾𑌸𑌮𑌭𑌿𑌭𑌾𑌷𑌿𑌤𑍁𑌮𑍍।
𑌯𑌦𑍍𑌯𑌪𑌿𑌪𑍍𑌰𑍇𑌷𑌿𑌤𑌸𑍍𑌤𑍇𑌨𑌰𑌾𑌮𑍇𑌣𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾॥

௧௦. அர்ஹஸேசகபிஶ்ரேஷ்டமயாஸமபிபாஷிதும்।
யத்யபிப்ரேஷிதஸ்தேநராமேணவிதிதாத்மநா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹே-கபிஶ்ரேஷ்ட	ஓ வானரசிரேஷ்டனே	ப்ரேஷித:	அனுப்பப்பட்டாயோ
யத்யபி	யாதொருகாரணத்தினால்	(தஸ்மாத்)	ஆகையால்
விதிதாத்மநா-தேந-ராமேண	அறியப்பட்ட-மனமுடைய-அந்த இராமனாலே	மயா-ஸமபாஷிதும் - அர்ஹஸே	என்னோடு-வார்த்தைசொல்லுகிறதற்கு தகுந்தவனாகிறாய்.

౧౧. ప్రేషయిష్యతి దుర్ధర్షో రామో న హ్యపరీక్షితమ్। పరాక్రమమవిజ్ఞాయ మత్సకాశం విశేషతః॥

௧௧. 𑌪𑍍𑌰𑍇𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌿𑌦𑍁𑌰𑍍𑌧𑌰𑍍𑌷𑍋𑌰𑌾𑌮𑍋𑌨𑌹𑍍𑌯𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍍।
𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯𑌮𑌤𑍍𑌸𑌕𑌾𑌶𑌂𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃॥

௧௧. ப்ரேஷயிஷ்யதிதுர்தர்ஷோராமோநஹ்யபரீக்ஷிதம்।
பராக்கிரமமவிஜ்ஞாயமத்ஸகாஶம்விஶேஷத:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
துர்தர்ஷ:	எவர்களாலும் திரஸ்கரிக்கமுடியாத தான சக்தியையுடைய	பராக்ரமம்-அவிஜ்ஞாய-சக்தியை-அறியாமலும்	
		அபரீக்ஷிதம்	பரீக்ஷிக்காமலுமிருக்கிறவனை
ராம:	ஸ்ரீராகவன்	மத்ஸகாஶம்	என்ஸமீபத்திற்கு
விஶேஷத:	அதிகமாக	நப்ரேஷயிஷ்யதிஹி	அனுப்பமாட்டாரல்லவா.

(௧௦-மு-௧௧-ல்) தா-ம்.—ஹே வானரோத்தம! எனது பர்த்தாவான ஸ்ரீராகவன் மஹாபுத்திமான், ஸர்வக்கியர், யாவராலும் வெல்லமுடியாத பராக்கிரமமுடையவர், ஹிதாஹிதங்களை யோசியாமல் எக்காரியத்திலுங் கையிடார். ஸாதாரணமா யொருவர் பக்கல் தூதனை விடுக்கவேண்டுமானால், அந்த தூதனுடைய சக்திகளையும் குணவிசேஷங்களையும் நன்றாகப் பரீக்ஷித்தறியாமலனுப்பார். மேலும் என்னிடத்தில் அனுப்புகையில் உமது வல்லமையையும் குணங்களையும் நன்றாகவே அறிந்திருப்பார். ஆகையால், ஹே ஹரிபுங்கவ! நீர் என்னோடு வார்த்தைசொல்ல அர்கர்தான். எக்காரியத்தையும் வீணாக்காது ஜயத்துடன் தலைக்கட்டவல்லவர்தான்; நீர் மிக ஸமர்த்தரே! என்று புகழ்ந்தனள்.

౧౨. దిష్ట్యా చ కుశలీ రామో ధర్మాత్మా సత్యసంగరః। లక్ష్మణశ్చ మహాతేజాః సుమిత్రానన్దవర్ధనః॥

௧௨. 𑌦𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌚𑌕𑍁𑌶𑌲𑍀𑌰𑌾𑌮𑍋𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌸𑌤𑍍𑌯𑌸𑌂𑌗𑌰𑌃।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌶𑍍𑌚𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾𑌃𑌸𑍁𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌵𑌰𑍍𑌧𑌨𑌃॥

௧௨. திஷ்ட்யாசகுஶலீராமோதர்மாத்மாஸத்யஸங்கர:।
லக்ஷ்மணஶ்சமஹாதேஜாஸ்ஸுமித்ராநந்தவர்தந:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தர்மாத்மா	தர்மபுத்தியிலூற்றமுடையவரும்	மஹாதேஜாஃ	மிகயஶஸ்ஸுடையவரும்
ஸத்யஸங்க்ரஃ	யதார்த்தமான பிரதிஜ்ஞையுடையவருமான	ஸுமித்ராநந்தவர்தநஃ	ஸுமித்திரைக்கு ஆநந்தத்தைவிருத்தி செய்பவருமான
ராமஃ	ஸ்ரீ ராகவனும்		
திஷ்ட்யா	தெய்வாதீனத்தால் (என்பாக்கியவிசேஷத்தால்	லக்ஷ்மணஶ்ச	லக்ஷ்மணனும் (க்ஷேமமாக விருக்கிறார்.)
குஶலீ	க்ஷேமமாயிருக்கிறார		

தா-ம்.—எங்களாராதனமான ஸ்ரீரங்கநாதனுடைய அனுக்கிரகத்தாலும், என்னுடைய பாக்கியவிசேஷத்தாலும், ஸத்தியஸங்தரும் திடப்பிரதிக்கியை புடையவருமான ஸ்ரீராகவன் க்ஷேமமாக விருக்கிறார். "மாம்வித்திஜநகாத்மஜாம்" என்று சொல்லிவிடுத்த ஸுமித்திராவக்கியத்தின்படி என்னிடத்தில் மிக பக்தி சிரத்தையுடையராய், அதனுல் ஸுமித்திராதேவிக் கானந்தவிர்த்திகராய், பிராதிருஸ்நேகத்தாலுண்டான அன்புதோற்ற மிக தேஜோவானுய் விளங்குகிற இலக்ஷ்மணனும் க்ஷேமமாக விருக்கிறான்றோ!

౧౩. కుశలీ యది కాకుత్స్థః కిం ను సాగరమేఖలామ్ । మహీం దహతి కోపేన యుగాన్తాగ్నిరివోత్థితః ॥

கங. [illegible]

கங. குஶலீயதிகாகுத்ஸ்த்தஃகிந்நுஸாகரமேகலாம்।
மஹீம்தஹதிகோபேநயுகாந்தாக்நிரிவோத்திதஃ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
காகுஸ்த்தஃ	ஸ்ரீராகவன்	யுகாந்தாக்நிரிவ	பிரளயாக்கினிபோல்
குஶலீயதி	க்ஷேமமாயிருந்தாராகில்	உத்திதஃ	கிளம்பினவராக
ஸாகரமேகலாம்	கடலை ஒட்டியாணமாயுடைய	கோபேந	சினத்தினுல் [தம்.)
மஹீம்	பூமியை	தஹதி கிந்து	கொளுத்துகிறுரோ(இல்லையென்றர்த்

౧౪ అథవా శక్తిమన్తౌ తౌ సురాణామపి నిగ్రహే । మమైవ తు న దుఃఖానామస్తి మన్యే విపర్యయః ॥

கச. [illegible]

கச. அதவாஶக்திமந்தௌதௌஸுராணமபிநிக்ரஹே।
மமைவதுநதுஃகாநாமஸ்திமந்யேவிபர்யயஃ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அதவா	இல்லாவிடில்	(கிந்து)	(பின் என்னெனில்)
தௌ	அந்த (இராமலக்ஷ்மணர்)	மமைவ	என்னுடைய
ஸுராணாம்	தேவர்களுடைய	துஃகாநாம்-விபர்யயஃ	வியஸனத்தினுடைய அழிவானது
நிக்ரஹே	சிக்ஷிப்பதில்	நாஸ்தி-மந்யே	இல்லையென்று எண்ணுகிறேன்.
ஶக்திமந்தௌ	ஸாமர்த்தியமுடையவர்கள்தான்		

౧౫. కచ్చిన్న వ్యథితో రామః కచ్చిన్న పరితప్యతే । ఉత్తరాణి చ కార్యాణి కురుతే పురుషోత్తమః ॥

கரு. [illegible]

கரு. கச்சிந்நவ்யதிதோராமஃகச்சிந்நபரிதப்யதே।
உத்தராணிசகார்யாணிகுருதேபுருஷோத்தமஃ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
புருஷோத்தமஃ-ராமஃ	புருஷஶிரேஷ்டரான-ஸ்ரீராகவன்	உத்தராணிகார்யாணிச	(என்னையடையும்படியான)மேல்முயற்சிகளை
நவ்யதிதஃ-கச்சித்	இளைக்காமலிருக்கிறார	குருதே	செய்கிறார.
நபரிதப்யதே கச்சித்	பரிதபிக்காமலிருக்கிறார		

౧౬. కచ్చిన్న దీనః సంభ్రాన్తః కార్యేషు చ న ముహ్యతి । కచ్చిత్పురుషకార్యాణి కురుతే నృపతేః సుతః ॥

கசு. [illegible]

கசு. கச்சிந்நதீநஸ்ஸம்ப்ராந்தஃகார்யேஷுசநமுஹ்யதி।
கச்சித்புருஷகார்யாணிகுருதேந்ருபதேஸ்ஸுதஃ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ந்ருபதேஃ-ஸுதஃ	தசரதமஹாராஜாவினுடைய புத்திரனுனஸ்ரீராகவன்	ஸம்ப்ராந்தஃ	வியாகுலமுடையவராக
நதீநஃகச்சித்	தைரியத்தையிழக்காமலிருக்கிறார?	நமுஹ்யதி	தேஹத்தை மறவாமலிருக்கார?
கார்யேஷுச	காரியங்களில்	புருஷகார்யாணி	புருஷப்பிரயத்தினத்தை
		குருதேகச்சித்	செய்துகொண்டிருக்கிறார ?

(௧௩-மு-௧௬-ல்) தா-ம்.—ஹே ப்லவங்கசார்த்தூல! என் பிராணநாதனை ரகுநந்தனன் க்ஷேமமாக விருக்கிறானன்றோ! அவர் க்ஷேமமாகவிருந்தோ யானிப்படி யவதிப்படுவது. பிறர் துயரம் பொறுக்கவறியாப் பெருங்குலத்திற்பிறந்த பெருமானன்றோ! பூவுலகு துன்பமொழித்தது போராதென்று வானுலகு சென்று இந்திரசத்ருக்களையரித்த காகுஸ்தவம்சத்திலன்றோ தாமவதரித்தது. அப்படி யவதரித்தும, ஸர்வசத்ருக்களையும் வெல்ல வல்லமையிருந்தும, பிறர்க்குவந்தவை பரிகரிப்பதல்லது தமக்கு வந்தது பரிகரிப்பதில்லையென்றிருந்துவிட்டனரோ! ஸீதை வேண்டாமென்றென்னைத் தியஜித்துவிட்டனரோ! இல்லாவிடில், என்னிமித்தமாக, இராக்ஷதரெல்லோரு மெதிர்த்தாலும் தேவகணங்களனைவு மொன்றுசேர்ந்து பயமுறுத்தினும் அவர்களையெல்லாம் தனது தீக்ஷ்ணசரங்களாற்கொளுத்திப் பிரளயாக்கினிபோல் ஜ்வலித்துக் கடலரண்கொண்ட விக்காசினியை யேன் தஹிக்கக்கூடாது. ஜலநிதியையொழித்தல்லவோ பூமியைச் சுடவேண்டும், இவ்வபாரக்கடலை வறட்டுவது ஸாத்தியமோ வென்கிறீரோ? ஹநுமந்! என்னுடைய காதலுக்கெல்லாமொன்றுதான். திரவவஸ்துவான ஜலத்தைச் சுடுவதற்கொரு பாணமும், கடினவஸ்துவான பூமியைச் சுடுவதற்கு வேறொரு பாணமு மவருக்கு வேண்டுமோ! வேண்டுமோ லம்மஹாவீரன் கடல்நீரை செய்பாகக்கொண்டு அகிலபுவனத்தை பஸ்மீகரமாக்குவார். அவரப்படி செய்யாமலிருப்பதற்கு யானொருகாரண முத்தேசிக்கிறேன். இராஜாக்களுக்கு பூமியுமோர்பத்தினியாகையால், என்னைக் கைப்பிடித்ததுபோலவே அவர் பூமியையுங் கைப்பிடித்தார். இருவரையு மொக்கக் கைப்பிடித்தவராயினும் என்னை விரகாக்கினியால் நோவுபடச்செய்து, "கடலுடுகை" யென்கிறபடி, பூமிக்கு பரிவட்டப்பிரதிமமாயிருக்கிற கடலை வறட்டாதே, பிரியபார்யையான பூமியையும் வாட்டாதேயிருந்தார். ஹே ஹநுமன்! ஸ்ரீராகவன் பிரியப்படின் என்னை ரக்ஷிக்கவகையில்லையோ? கோபத்தா லவர்க்குக் கடைக்கண்மாத்திரம் சிவக்கின், இவ்வுலகு ஈசுவரன் ஸிருஷ்டித்தமைத்தபடி பொருந்தி நிற்குமோ! ஏதேது, ஸ்ரீராகவனுக்கென்னிடத்தி லன்பில்லைபோற் றோன்றுகிறது. இல்லாவிடில் பத்தையான வென்னை யித்தனைகாலம் அரக்கன் பிடிக்கவிட்டு கணத்திற் கல்லெறிந்தாற்போல் சும்மென்றிருப்பரோ! என்றிந்தவிதம் பிராட்டி மொழிந்தனள்.

வனமெழுந்தருளுகையில் உன்னை யழைத்துப்போக வஞ்சுகிறேனென்றருளின பர்த்தாவைப்பார்த்து "கிந்த்வாமந்யதவைதேஹ: பிதாமேமிதிலாதிப: । ராமஜாமாதரம்ப்ராப்ய ஸ்த்ரியம்புருஷவிக்ரஹம்"—ஒரு பெண் ஆணுடையுடுத்து என்மகளைக் கைப்பிடித்துப்போனுளென்றல்லவோ எங்களையர் நினைப்பாரென்று, அவர் தாமிலக்காகச் சொன்னது போதாதென்று, அவர் வரவிட்ட தூதன் முன்னேயும் பெருமானை நிந்திக்கும்படியான இவளுடைய ப்ரணயரோஷமிருக்கும்படி.

இவ்விதம் நிந்தித்தபிறகு, தனக்குதற்காலம் ஸமீபியாவிடில் அந்த தர்மாத்மாவை நோவதென்னென்று தேறுதலடைகிறாள். ஹேஹரிபுங்கவ! ஸ்ரீராமலக்ஷ்மணர் மஹாசக்திமான்கள்தான், ஸர்வசத்ருக்களையுநிபாதஞ்செய்யவல்லவர்தான். தேவர்கள் வந்தெதிர்த்தபோதிலும் பின்வாங்காதவர்களை ஜயித்துவிடுவார்களே. ஆனால்என்னுடைய துக்கமொழியக் காலம்வரவில்லை. இல்லாவிடில் இவ்வரக்கரையொழித்து என்னை ரக்ஷிப்பது அவருக்கொருபொருட்டோ! நல்லதிருக்கட்டும். இனியாவது அவர்கள் புருஷப்பிரயத்தினஞ்செய்யின் யான் க்ஷேமமடையலாம். என்ன, மாருதே! என்னைப்பிரிந்த துக்கத்தால் ஸ்ரீராகவன் மனநொந்து தேகம்வெளுத்தி திருமேனி வாடிவருந்துகின்றனரோ? ஐயோ ஸீதைபிரிந்து வெகுகாலமாய்விட்டதே, அவனுயிரோடிருக்கின்றனளோ, உயிரைத்தான் விட்டனளோவென்று வியஸனமுற்றுத் தபிக்கின்றனரோ? அல்லது, இவ்வித ஸங்கடத்திற்கிடந்து முசித்திராமல், என்னையடைவதற்குத் தக்க முயர்ச்சிகள் செய்கின்றனரோ? ஹே வானரர்ஷப! அவ்விராஜகுமாரரிருவரும் தைரியத்தைக் கைவிடாமல் துக்கஸாகரத்தில் மூழ்காமல், யானிருக்குமிடத்தையறிய புருஷப்பிரயத்தினத்தைச் செய்துவருகின்றனரோ?

சகுஸ்திஷ்டத்தி - என்ற ஸமாஸம் - "ககுத்" என்றால் எருதின் முசுப்புக்குப்பெயர். இக்ஷ்வாகுவம்சஸ்தரான ஒரு ராஜா இந்திரனுக்கு நேரிட்ட ஆபத்தை நீக்குநிமித்தம் அவனை எருதாகச்செய்துகொண்டு அவன்முசுப்பிலேறி அவன் சத்துருவான ஸகல அஸுரரையும் ஸம்ஹரித்ததனால் அவருடைய வம்சஸ்தவருக்கு காகுஸ்தரென்று பெயருண்டாயிற்று.

౧౭. ద్వివిధం త్రివిధోపాయముపాయమపి సేవతే । విజిగీషుస్సుహృత్కచ్చిన్మిత్రేషు చ పరంతపః॥

௧௭. த்விவிதம்த்ரிவிதோபாயமுபாயமபிஸேவதே।
விஜிகீஷுஸ்ஸுஹ்ருத்கச்சிந்மித்ரேஷுசபரந்தப:॥

௧௭. த்விவிதம்த்ரிவிதோபாயமுபாயமபிஸேவதே।
விஜிகீஷுஸ்ஸுஹ்ருத்கச்சிந்மித்ரேஷுசபரந்தப:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
பரந்தப:	சத்ருக்களைத் தபிக்கச்செய்கிற ஸ்ரீ [ராகவன்]	அமித்ரேஷு	பகைவரிடங்களில்
மித்ரேஷு	ஸ்நேஹிதரிடங்களில்	விஜிகீஷு (ஸ்ஸந்)	ஜயிக்க இச்சையுடையவராய் (கொண்டு)
ஸௌஹார்த்-(ஸந்)	நல்லமனமுடையவராய் (கொண்டு)	த்ரிவிதோபாயம்	மூன்றுவிதமான உபாயத்தையும்
த்விவிதம்-உபாயமபி	இரண்டுவிதமான-உபாயத்தையும்	ஸேவதேகச்சித்	பிரயோகிக்கிறாரயென்ன?

தா-ம்.—பகைவரைத் தபிக்கச்செய்யவல்ல அந்த ஸ்ரீராகவன் என்னையடையவேண்டுமென்கிற கிருபையோடு மித்திராமித்திரரிடங்களில் பிரயோகிக்கக்கூடிய ஸாமதானபேத தண்டங்களென்கிற சதுர்விதோ

பாயங்களை அவரவருக்குத் தக்கபடி, மித்திரர்பக்கல் அன்புகூர்ந்தவராய் ஸாமதானங்களையும், பகைவர்பக்கல் சினமுற்றவராய் அவரைவென்று ஜயம்பெறத்தகுந்த தான பேத தண்டங்களையும் அனுஸரித்து வருகிறாரா?

౧౮. కచ్చిన్మిత్త్రాణి లభతే మిత్త్రైశ్చాప్యభిగమ్యతే। కచ్చిత్కల్యాణమిత్త్రశ్చ మిత్త్రైశ్చాపి పురస్కృతః॥

௧௮. 𑌕𑌚𑍍𑌚𑌿𑌨𑍍𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿𑌲𑌭𑌤𑍇𑌮𑌿𑌤𑍍𑌰𑍈𑌶𑍍𑌚𑌾𑌪𑍍𑌯𑌭𑌿𑌗𑌮𑍍𑌯𑌤𑍇।
𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌮𑌿𑌤𑍍𑌰𑌶𑍍𑌚𑌮𑌿𑌤𑍍𑌰𑍈𑌶𑍍𑌚𑌾𑌪𑌿𑌪𑍁𑌰𑌸𑍍𑌕𑍃𑌤𑌃॥

௧௮. கச்சிந்மித்ராணிலபதேமித்ரைஶ்சாப்யபிகம்யதே।
கச்சித்கல்யாணமித்ரஶ்சமித்ரைஶ்சாபிபுரஸ்க்ருத꞉॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மித்ராணி	(ஸ்ரீராகவன்) தோழர்களை	கல்யாணமித்ர꞉	ஸௌம்யரான தோழனையுடையவராய்
லபதே	அடைகிறாரா	மித்ரைஶ்சாபி	தோழர்களால்
மித்ரைஶ்சாபி	தோழர்களாலும்	புரஸ்க்ருத꞉-கச்சித்	வெகுமானிக்கப்படுகிறாரா?
அபிகம்யதேகச்சித்	அடையப்படுகிறாரா?		

தா-ம்.—ஹே ஹநுமந்! என்னுடைய பர்த்தாவான ஸ்ரீராகவன் மைத்திரபாவநடனஞ்செய்து ஸமயத்திற்கைவிடுகிற கபடஸ்நேகரோடுசேராது யோக்கியரும் ஸாதுவும் ஸுகாஸுகங்களுக்கிணங்கினவருமான ஸுஹிருத்துக்களோடு சேர்ந்து அவர்களுக்கு ஸந்தோஷந்தந்து அவர்களாலவர் வெகுமானிக்கப்பட்டு வருகிறாரா?

౧౯. కచ్చిదాశాస్తి దేవానాం ప్రసాదం పార్థివాత్మజః। కచ్చిత్పురుషకారం చ దైవం చ ప్రతిపద్యతే॥

௧௯. 𑌕𑌚𑍍𑌚𑌿𑌦𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑌿𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌂𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌜𑌃।
𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌪𑍁𑌰𑌷𑌕𑌾𑌰𑌂𑌚𑌦𑍈𑌵𑌂𑌚𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇॥

௧௯. கச்சிதாஶாஸ்திதேவாநாம்ப்ரஸாதம்பார்த்திவாத்மஜ꞉।
கச்சித்புருஷகாரம்சதைவம்சப்ரதிபத்யதே॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
பார்த்திவாத்மஜ꞉	இராஜபுத்திரரான (ஸ்ரீராகவன்)	புருஷகாரம்ச	புருஷப்பிரயத்தினத்தையும்
தேவாநாம்-ப்ரஸாதம்	தேவதைகளுடைய - அனுக்கிரஹத்	தைவம்ச	தைவத்தையும்
ஆஶாஸ்திகச்சித்	பிரார்த்திக்கிறாரா? [தை	ப்ரதிபத்யதேகச்சித்	அடைகிறாரா?

தா-ம்.—ஹே வானரோத்தம! தசரத மைந்தனான அந்த ரகூத்தமன் என்னை யடையுநிமித்தம் அபீஷ்ட வரப்பிரஸாதிகளான தேவர்களைப் பிரார்த்தித்து வருகிறாரா? ஸர்வஸ்மாத்பரனான ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணனைக்குறித்துத் தவஞ்செய்து அவருடைய திவ்வியானுக்கிரஹத்திற்குத் தன்னைப் பாத்திரபூதனாகச் செய்துவருகிறாரா! தேவதாப்பிரார்த்தனைகளுடன், என்னை யடைவதற்காக, அவருடைய வீரிய சௌரிய பராக்கிரமங்களுக்குத் தகுதியான புருஷப்பிரயத்தனங்களையுஞ் செய்துவருகிறாரா?

౨౦. కచ్చిన్న విగతస్నేహః ప్రవాసాన్మయి రాఘవః। కచ్చిన్మాం వ్యసనాదస్మాన్మోక్షయిష్యతి వానర॥

௨௦. 𑌕𑌚𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌵𑌿𑌗𑌤𑌸𑍍𑌨𑍇𑌹𑌃𑌪𑍍𑌰𑌵𑌾𑌸𑌾𑌨𑍍𑌮𑌯𑌿𑌰𑌾𑌘𑌵𑌃।
𑌕𑌚𑍍𑌚𑌿𑌨𑍍𑌮𑌾𑌂𑌵𑍍𑌯𑌸𑌨𑌾𑌦𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌿𑌵𑌾𑌨𑌰॥

௨௦. கச்சிந்நவிகதஸ்நேஹ꞉ப்ரவாஸாந்மயிராகவ꞉।
கச்சிந்மாம்வ்யஸநாதஸ்மாந்மோக்ஷயிஷ்யதிவாநர॥

பதம்.	உரை.	பதம்	உரை.
ராகவ꞉	ஸ்ரீராகவன்	ஹேவாநர.	ஓ ஹநுமானே!
ப்ரவாஸாத்	தூரதேசவாஸத்தால்	மாம்	என்னை
மயி-விகதஸ்நேஹ꞉	என்னிடத்தில்-போய்விட்ட ஸ்நேஹத்தையுடையவராக	அஸ்மாத்-வ்யஸநாத்	இந்த-ஸங்கடத்திலிருந்து
நகச்சித்	ஆகாரன்றோ	மோக்ஷயிஷ்யதிகச்சித்	விலக்குவரா?

தா-ம்.—ஹே ப்லவங்கம! யானிப்பொழுது தூரதேசவாஸியாய் விட்டபடியால் என்னுடையநாதன் என்னிடத்திலுள்ள பூர்வஸ்னேகத்தை மறந்துவிட்டனரோ? அப்படியின்றி முன்போலவே அன்புபாராட்டி வருகின்றனரோ? ஹேவாயுபுத்திர! இத்துயர்க்கடலினின்று என்னை என்பிராணநாதன் மீட்பரோ?

౨౧. సుఖానాముచితో నిత్యమసుఖానామనౌచితః। దుఃఖముత్తరమాసాద్య కచ్చిద్రామో న సీదతి॥

௨௧. 𑌸𑍁𑌖𑌾𑌨𑌾𑌮𑍁𑌚𑌿𑌤𑍋𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌸𑍁𑌖𑌾𑌨𑌾𑌮𑌨𑍌𑌚𑌿𑌤𑌃।
𑌦𑍁𑌃𑌖𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯𑌕𑌚𑍍𑌚𑌿𑌦𑍍𑌰𑌾𑌮𑍋𑌨𑌸𑍀𑌦𑌤𑌿॥

௨௧. ஸுகாநாமுசிதோநித்யமஸுகாநாமநௌசித꞉।
துக்கமுத்தரமாஸாத்யகச்சித்ராமோநஸீததி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
நித்யம்	எப்பொழுதும்	ராம꞉	ஸ்ரீராகவன்
ஸுகாநாம்-உசித꞉	ஸந்தோஷத்திற்கு-தக்கவரும்	உத்தரம்-துக்கம்	மேன்மையான-வியஸனத்தை
அஸுகாநாம்	துன்பத்திற்கு	ஆஸாத்ய	அடைந்து
அநௌசித꞉	தகாதவருமான	நஸீததிகச்சித்	நசியாமலிருக்கிறாரா?

தா-ம் —ஹேஹநுமன்! சியாமளவர்ணமுள்ளதிருமேனியுடைய அந்தஸுந்தரராகவன்எப்பொழுதும் ஸுகானுபவத்திற்கே அர்ஹர், துககத்திற்கு முற்றிலுமனர்ஹர். துக்கத்தைக்கண்டால் அவருடைய ஸுகுமாரமானசரீரம்மெலிந்து சோர்ந்துவிடுமே, புகரகற்றுவிடுமே, ஆகையாலென்னைப்பிரிந்ததுக்கத்தால் தேகம் நொந்துவருந்தாமல் பாங்காக வெழுந்தருளியிருக்கிறாரோ?

౨౨. కౌసల్యాయా స్తథా కచ్చిత్సుమిత్రాయా స్తథైవ చ। అభీక్ష్ణం శ్రూయతే కచ్చిత్కుశలం భరతస్య చ॥

௨௨. 𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌸𑍁𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚।
𑌅𑌭𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌂 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇 𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑍁𑌶𑌲𑌂 𑌭𑌰𑌤𑌸𑍍𑌯 𑌚॥

௨௨. கௌஸல்யாயாஸ்ததாகச்சித் ஸுமித்ராயாஸ்ததைவச।
அபீக்ஷ்ணம்ஶ்ரூயதேகச்சித்குஶலம்பரதஸ்யச॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
கௌஸல்யாயா꞉	கௌஸல்யா தேவியினுடையவும்	ததைவச	அப்படியே
ததா-ஸுமித்திராயா꞉	அப்படியே - ஸுமித்திரையினுடைய [வும்	பரதஸ்யச	பரதனுடையவும்
குஶலம்	க்ஷேமமானது (உங்களால்)	அபீக்ஷ்ணம்	க்ஷேமமானது
ஶ்ரூயதேகச்சித்	கேட்கப்படுகிறதா	ஶ்ரூயதேகச்சித்	கேட்கப்படுகிறதாயென்ன?.

தா-ம்.—ஹநுமன்! என்மாமியரான கௌஸல்யையை ஸுமித்திரை இவர்களுடையவும், மைத்துனனு னபரதனுடையவும க்ஷேமங்கள் தெரியவருகின்றனவா?

౨౩. మన్నిమిత్తేన మానార్హః కచ్చిచ్ఛోకేన రాఘవః కచ్చిన్నాన్యమనా రామః కచ్చిన్మాం తారయిష్యతి॥

௨௩. 𑌮𑌨𑍍𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍇𑌨 𑌮𑌾𑌨𑌾𑌰𑍍𑌹𑌃 𑌕𑌚𑍍𑌚𑌿𑌚𑍍𑌛𑍋𑌕𑍇𑌨 𑌰𑌾𑌘𑌵𑌃।
𑌕𑌚𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌾𑌨𑍍𑌯𑌮𑌨𑌾 𑌰𑌾𑌮𑌃 𑌕𑌚𑍍𑌚𑌿𑌨𑍍𑌮𑌾𑌂 𑌤𑌾𑌰𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌿॥

௨௩. மந்நிமித்தேநமாநார்ஹ꞉கச்சிச்சோகேநராகவ꞉।
கச்சிந்நாந்யமநாராம꞉கச்சிந்மாம்தாரயிஷ்யதி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மாநார்ஹ꞉-ராகவ꞉	பூஜார்ஹரான-ஸ்ரீராகவன்	ராம꞉	ஸ்ரீராகவன்
மந்நிமித்தேந	என்னுடையஹேதுவினாலுண்டான	அந்யமநா꞉	வேறுகாரியத்தில் மனமில்லாதவராக
ஶோகேந	துக்கத்தினால்		(இருக்கிறாரா) [க்ஷிப்பாரா?
பரிதப்யதேகச்சித்	தாபத்தை அடையாமலிருக்காரா?	மாம்-தாரயிஷ்யதிகச்சித்-என்னை-(இத்துயரத்திலிருந்து) இர	

தா-ம்.—ஹேவானரோத்தம! மஹாபூஜ்ஜியரான ஸ்ரீராகவன் என்பிரிவினாலுண்டான சோகமோஹ தாபாதிகளால் மனமுளைந்து தேகந்தளராதிருக்கிறாரோ? அன்னியவிஷயங்களில் மனஞ்செலுத்தி யென்னை மறந்துவிடாமல், இத்துயர்க்கடலிலிருந் தென்னைக்கரையேற்றி அவரது திவ்வியகடாக்ஷமாகிற இன்பக்கடலிலாழ்த்தி இரக்ஷிப்பரோ?

౨౪. కచ్చిదక్షౌహిణీం భీమాం భరతో భ్రాతృవత్సలః। ధ్వజినీం మన్త్రిభిర్గుప్తాం ప్రేషయిష్యతి మత్కృతే॥

௨௪. 𑌕𑌚𑍍𑌚𑌿𑌦𑌕𑍍𑌷𑍌𑌹𑌿𑌣𑍀𑌂 𑌭𑍀𑌮𑌾𑌂 𑌭𑌰𑌤𑍋 𑌭𑍍𑌰𑌾𑌤𑍃𑌵𑌤𑍍𑌸𑌲𑌃।
𑌧𑍍𑌵𑌜𑌿𑌨𑍀𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑍍𑌗𑍁𑌪𑍍𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑍇𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌮𑌤𑍍𑌕𑍃𑌤𑍇॥

௨௪. கச்சிதக்ஷௌஹிணீம்பீமாம்பரதோப்ராத்ருவத்ஸல꞉।
த்வஜிநீம்மந்த்ரிபிர்குப்தாம்ப்ரேஷயிஷ்யதிமத்க்ருதே॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ப்ராத்ருவத்ஸல꞉	பிராதிருவிசுவாஸமுடைய	மந்த்ரிபி꞉-குப்தாம்	மந்திரிகளால்-பாதுகாக்கப் பட்ட து [மான
பரத꞉	பரதன்	த்வஜிநீம்	ஸைன்னியத்தை
அக்ஷௌஹிணீம்	அக்ஷோஹிணியுடையதும்	மத்க்ருதே	என்பொருட்டு
பீமாம்	பயங்கரமானதும்	ப்ரேஷயிஷ்யதிகச்சித்	அனுப்புவரா?

தா-ம்.—என்னை மீட்பதின்பொருட்டு, பிராதிருவாத்ஸல்லியமுள்ளபரதன் ஸ்ரீராகவனுக்கு புத்திமான்களான மந்திரிகளிரக்ஷணையிலுள்ளனவும், அதனால் மிகவும்பலங்கொண்டு பயங்கரமாய்விளங்குகின்றனவுமான பெருவெள்ளச்சேனைகளைத் திரட்டியனுப்புவரோ?

౨౫. వానరాధిపతిః శ్రీమాన్ సుగ్రీవః కచ్చిదేష్యతి। మత్కృతే హరిభిర్వీరైర్వృతో దంతనఖాయుధైః॥

௨௫. 𑌵𑌾𑌨𑌰𑌾𑌧𑌿𑌪𑌤𑌿𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌃 𑌕𑌚𑍍𑌚𑌿𑌦𑍇𑌷𑍍𑌯𑌤𑌿।
𑌮𑌤𑍍𑌕𑍃𑌤𑍇 𑌹𑌰𑌿𑌭𑌿𑌰𑍍𑌵𑍀𑌰𑍈𑌰𑍍𑌵𑍃𑌤𑍋 𑌦𑌨𑍍𑌤𑌨𑌖𑌾𑌯𑍁𑌧𑍈𑌃॥

௨௫. வாநராதிபதி:ஸ்ரீமாந்ஸுக்ரீவ:கச்சிதேஷ்யதி।
மத்க்ருதேஹரிபிர்வீரைர்வ்ருதோதந்தநகாயுதை:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸ்ரீமாந்	சோபையுடையவரும்	தந்தநகாயுதை:	பற்களையும் நகங்களையுமாயுதமாயுடை[யவரும்
வாநராதிபதி:	வானரருக்கெஜமானனுமான	வீரை:	சூரருமான
ஸுக்ரீவ:	ஸுக்கிரீவர்	ஹரிபி:-வ்ருத:	மந்திகளோடு-கூடினவராக
மத்க்ருதே	என்னிமித்தம்	ஏஷ்யதிகச்சித்	வருவாராவென்ன.

தா-ம்.—ஹேப்லவங்கம! அகிலபுவனத்திற்கு மாக்கியாகர்த்தாவான ஸ்ரீரகுநாதன் "ஸுக்ரீவம்ஶரணங்கத:" என்று ஸுக்கிரீவனைநாதனாகவடைந்து, தன்னுடைய அமலவாக்கினால் அவருடையஸ்நேகம்யாசிக்க, இருவரும் கையோடுகைசேர்த்து ஸக்கியம்செய்து, பிறகு ஸ்ரீராகவதிவ்யகடாக்ஷத்தால் ஸகலதுக்கங்களுமவிலகி இராஜ்ஜியாபிஷேகமடைந்து ஸ்ரீமானாய் ஸகலவானரர்க்கு மதிபதியாய்விளங்கு முங்கள்மஹாராஜர் நகங்களையும் பற்களையுமாயுதமாயுடைய வானரவீரரைத்திரட்டிக்கொண்டு என்னுடைய நிமித்தம ஸ்ரீராகவனுக்குப்பலமாயிங்குவருவரோ?

౨౬. కచ్చిల్లక్ష్మణశ్శూరస్సుమిత్రానందవర్ధనః। అస్త్రవిచ్ఛరజాలేన రాక్షసాన్ విధమిష్యతి॥

௨௬. 𑌕𑌚𑍍𑌚𑌿𑌚𑍍𑌚 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌃 𑌶𑍂𑌰𑌃 𑌸𑍁𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌵𑌰𑍍𑌧𑌨𑌃।
𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌚𑍍𑌛𑌰𑌜𑌾𑌲𑍇𑌨 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑍍 𑌵𑌿𑌧𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑌿॥

௨௬. கச்சிச்சலக்ஷ்மணஶ்ஶூரஸ்ஸுமித்ராநந்தவர்த்தந:।
அஸ்த்ரவிச்சரஜாலேநராக்ஷஸாந்விதமிஷ்யதி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸுமித்ராநந்தவர்த்தந:	ஸுமித்திரைக்கானந்தவர்த்தகரும்	ஶரஜாலேந	பாணஸமூகத்தால்
அஸ்த்ரவித்	மந்திரத்தோடுகூடின அஸ்திரமறிந்தவரும்	ராக்ஷஸாந்	அரக்கரை
ஶூர:-லக்ஷ்மணஶ்ச	வீரருமான-இலக்ஷ்மணரும்	விதமிஷ்யதிகச்சித்	ஸம்ஹரிப்பரா.

தா-ம்.—ஸுமித்திரானந்த வர்த்தகரும், மந்திரபுரஸ்ஸரமான அஸ்திரங்களையறிந்தவரும் யுத்தத்திற் பின்வாங்காததீரருமான இலக்ஷ்மணன் இவ்வரக்கரை யொழிக்கவல்லரோ?

౨౭. రౌద్రేణ కచ్చిదస్త్రేణ జ్వలతా నిహతం రణే। ద్రక్ష్యామ్యల్పేన కాలేన రావణం ససుహృజ్జనమ్॥

௨௭. 𑌰𑍌𑌦𑍍𑌰𑍇𑌣 𑌕𑌚𑍍𑌚𑌿𑌦𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌜𑍍𑌵𑌲𑌤𑌾 𑌨𑌿𑌹𑌤𑌂 𑌰𑌣𑍇।
𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌲𑍍𑌪𑍇𑌨 𑌕𑌾𑌲𑍇𑌨 𑌰𑌾𑌵𑌣𑌂 𑌸𑌸𑍁𑌹𑍃𑌜𑍍𑌜𑌨𑌮𑍍॥

௨௭. ரௌத்ரேணகச்சிதஸ்த்ரேணஜ்வலதாநிஹதம்ரணே।
த்ரக்ஷ்யாம்யல்பேநகாலேநராவணம்ஸஸுஹ்ருஜ்ஜநம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ரௌத்ரேண	குரூரமானதும்	ராவணம்	இராவணனை
ஜ்வலதா	எரிகிறதுமான	நிஹதம்	அடிக்கப்பட்டவனாக
அஸ்த்ரேண	பாணத்தால்	அல்பேந	கொஞ்சமான
ரணே	போர்க்களத்தில்	காலேந	காலத்தால்
ஸஸுஹ்ருஜ்ஜநம்	ஹிதஜனத்தோடுகூடின	த்ரக்ஷ்யாமிகச்சித்	பார்ப்பேனா.

தா-ம்.—ஹேஹநுமன்! என்னையிக்கதியில்வைத்துத் தனதுபக்துக்களோடு இன்புற்றுவாழுமிவ்விராவணனுடைய மணக்கோலங்குலைந்து, அவனு மவன்ஸுஹிருத்துக்களும் சீக்கிரத்தில் அக்கினிப்பிரதிமமான சரங்களால்துளைக்கப்பட்டு யுத்தாங்கத்தில் பிணக்கோலத்துடனிருக்க யான்காண்பேனோ?

౨౮. కచ్చిత్తత్ హేమసమానవర్ణం తస్యాననం పద్మసమానగంధి। మయా వినా శుష్యతి శోకదీనం జలక్షయే పద్మమివాతపేన॥

௨௮. 𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌦𑍍𑌧𑍇𑌮𑌸𑌮𑌾𑌨𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑌨𑌂 𑌪𑌦𑍍𑌮𑌸𑌮𑌾𑌨𑌗𑌨𑍍𑌧𑌿।
𑌮𑌯𑌾 𑌵𑌿𑌨𑌾 𑌶𑍁𑌷𑍍𑌯𑌤𑌿 𑌶𑍋𑌕𑌦𑍀𑌨𑌂 𑌜𑌲𑌕𑍍𑌷𑌯𑍇 𑌪𑌦𑍍𑌮𑌮𑌿𑌵𑌾𑌤𑌪𑍇𑌨॥

௨௮. கச்சித்தத்தேமஸமாநவர்ணம்தஸ்யாநநம்பத்மஸமாநகந்தி।
மயாவிநாஶுஷ்யதிஶோகதீநம்ஜலக்ஷயேபத்மமிவாதபேந॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேமஸமாநவர்ணம்	தங்கத்தினுடையவர்ணம் போன்றவர்ணமுடையதும்	ஶோகதீநம்	துக்கத்தால்பரிதாபத்தையடைந்ததாக
பத்மஸமாநகந்தி	தாமரைபுஷ்பத்திற்கு நிகராககந்தமுடையதுமான	ஜலக்ஷயே	ஜலக்குறை வுண்டாயிருக்கும்போது
தஸ்ய-ஆநநம்	அந்தஸ்ரீராகவனுடைய - முகமானது	ஆதபேந	வெய்யலினால்
மயாவிநா	நானில்லாமல்	பத்மமிவ	தாமரைபுஷ்பம்போல்
		ஶுஷ்யதிகச்சித்	உலர்ந்துபோகாமலிருக்கிறதா.

தா-ம்.—ஹேகபிகுலோத்தம! பசும்பொன்னினுடைய பளபளப்பையும் அப்போதலர்ந்த செந்தாமரைமலரின் பரிமளத்தையும்வகித்து அதிப்பிரியகரமும் தேஜோமயமானதுமான ஸ்ரீராகவனுடையதிருமுகம்,

ஜலக்குறைவாலும் ஸூரியோஷ்ணத்தாலும் உலர்ந்துவாடுகிற கமலம்போல் எனதுபிரிவால்துவண்டுசுருங்கி புகரிழந்துவிடாமல், ஸ்வாபாவிகமான ஆக்லாதகாத்தோடு விளங்கிவருகிறதோ?

౨౯. ధర్మాపదేశాత్త్యజతశ్చ రాజ్యం మాం చాప్యరణ్యం నయతః పదాతిమ్। నాసీద్వ్యథా యస్య న భీర్న శోకః కచ్చిత్స ధైర్యం హృదయే కరోతి॥

௨௯. 𑌧𑌰𑍍𑌮𑌾𑌪𑌦𑍇𑌶𑌾𑌤𑍍𑌤𑍍𑌯𑌜𑌤𑌶𑍍𑌚 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌮𑌾𑌂 𑌚𑌾𑌪𑍍𑌯𑌰𑌣𑍍𑌯𑌂 𑌨𑌯𑌤𑌃 𑌪𑌦𑌾𑌤𑌿𑌮𑍍।
𑌨𑌾𑌸𑍀𑌦𑍍𑌵𑍍𑌯𑌥𑌾 𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌭𑍀𑌰𑍍𑌨 𑌶𑍋𑌕𑌃 𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌸 𑌧𑍈𑌰𑍍𑌯𑌂 𑌹𑍃𑌦𑌯𑍇 𑌕𑌰𑍋𑌤𑌿॥

௨௯. தர்மாபதேஶாத்த்யஜதஶ்சராஜ்யம்மாம்சாப்யரண்யம்நயத:பதாதிம்।
நாஸீத்வ்யதாயஸ்யநபீர்நஶோக:கச்சித்ஸதைர்யம்ஹ்ருதயேகரோதி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தர்மாபதேஶாத்	தர்மத்தினுத்தேசத்தால்	நாஸீத்	இல்லாமற்போயிற்றோ
ராஜ்யம்-த்யஜதஶ்ச	இராஜ்ஜியத்தை-விட்டவரும்	பீரபி	பயமும்(இல்லாமற்போயிற்றோ)
மாம்ச	என்னையும்	ஶோகஶ்ச	வியஸனமும்(இல்லாமற்போயிற்றோ)
பதாதிம்	வழிநடப்பவளாக	ஸ:	அப்படிப்பட்ட(ஸ்ரீராகவன்)
அரண்யம்-நயத:	அடவியை-அடைவிப்பித்தவருமான	ஹ்ருதயே	மனதில்
யஸ்ய-வ்யதா	எவருக்கு-துக்கம்	தைர்யம்-கரோதிகச்சித்-தைரியத்தை-செய்கிறாரா.	

தா-ம்.—ஹேமஹாகபே! பிதிருவசனபரிபாலனார்த்தம்ஸகலஸாம்பிராஜ்ஜியஸமேதமானநாட்டரசை விட்டு துக்கநிர்மிதமான காட்டரசைவிரும்பி வனமெழுந்தருளி, இராஜ்ஜியபோகமிழந்தோமேயென்று சிறிதேனும் கிலேசமுறாமலும், வனவாஸத்தால்பயமடையாமலும், அத்புதபீதாம்பரம்பாப்பி நடைபாவாடையிட்டதன்மீது ஸஞ்சரிக்க அருகையான வென்னைக் கல்லும்முள்ளும் நிறைந்த கடுந்தரையில் கேவலமோர் பாதசாரிணிபோல் நடத்திவந்து அதனால் இலஜ்ஜைகொள்ளாமலும், அகிலபுவன தந்திரம்வகிக்கவல்ல தனக்கு இராஜமுடியின்றி ஜடாமண்டலமும்மரயுரியும் வனவாஸமும் நேர்ந்தனவேயென்றுசிந்தியாமலும், கேவலம தர்மசிந்தாபராய்ப்போருகிற ஸ்ரீராகவன் இப்பொழுது கவலையால் பிடிக்கப்படாமல் தைரியவானாய் விளங்கிவருகிறாரோ?

(அவதாரிகை) ஸ்ரீராகவன் தைரியத்தையிழந்திருப்பதற்குரிய காரணங்களைச்சொல்லுகிறது.

30. న చాస్య మాతా న పితా చ నాన్యః స్నేహాద్విశిష్టోఽస్తి మయా సమో వా। తావత్త్వహం దూత జిజీవిషేయం యావత్ప్రవృత్తిం శృణుయాం ప్రియస్య॥

௩௦. 𑌨 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌮𑌾𑌤𑌾 𑌨 𑌪𑌿𑌤𑌾 𑌚 𑌨𑌾𑌨𑍍𑌯𑌃 𑌸𑍍𑌨𑍇𑌹𑌾𑌦𑍍𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌮𑌯𑌾 𑌸𑌮𑍋 𑌵𑌾।
𑌤𑌾𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌹𑌂 𑌦𑍂𑌤 𑌜𑌿𑌜𑍀𑌵𑌿𑌷𑍇𑌯𑌂 𑌯𑌾𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌶𑍃𑌣𑍁𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯॥

௩௦. நசாஸ்யமாதாநபிதாசநாந்யஸ்நேஹாத்விஶிஷ்டோஸ்திமயாஸமோவா।
தாவத்வஹம்தூதஜிஜீவிஷேயம்யாவத்ப்ரவ்ருத்திம்ஶ்ருணுயாம்ப்ரியஸ்ய॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேதூத	ஓவார்த்தாஹர!	அந்ய:-நாஸ்தி	இதரபந்துக்களும்-இல்லை
ஸ்நேஹாத்	பிரேமையோடு	யாவத்	எதுக்குன்
விஶிஷ்டா	கூடியிருப்பவரான	ப்ரியஸ்ய-ப்ரவ்ருத்திம்	நாயகனுடைய - என்னையழைத்து போவதற்குரிய வார்த்தையை
அஸ்ய	இந்தராமனுக்கு	ஶ்ருணுயாம்	கேட்கிறேனோ
மாதாச	தாயும்	தாவத்	அதுவரையில்
மயா-ஸம:-ந	என்னோடு-ஸமானையாக-ஆகாள்	அஹம்-ஜிஜீவிஷேயம்	நான்பிழைத்திருப்பேன்.
பிதாச	தகப்பனாரும்(ஆகார்)		

தா-ம்.—பிராட்டி திருவடியை ஸ்ரீராகவதூதனென்றுநிச்சயித்தபிறகு, பிரணயரோஷத்தால் ஸ்ரீராகவன்மீதுசிற்றத்துடன்,ஹே ஸ்ரீராகவவார்த்தாகர! "தர்மாபதேசாத்" என்கிறபடி பிதிருவசனபரிபாலனார்த்தமாகவா ஸ்ரீராகவன்வனமெழுந்தருளினது, அல்லவேஅல்ல, என்னைநலியச்செய்யும்பொருட்டே, என்றிப்புடைகளிலே அனேகமருளிச்செய்ய, அவைகளைச்செவியுற்ற திருவடி, நீர் அருளினதுநன்றாக விருக்கிறது, இவ்விடத்தில் யாதொருதோஷமுமில்லையோ, உயிர்நிலையனான காதலனைப்பிரிந்த வப்பொழுதே பிராணனைத்தியஜிக்கவுடலாயிருக்க, அதுசெய்யாதே ஜீவிப்பதுடன் அச்சரண்ணியன்மீது தோஷாரோபணமும் செய்யவேண்டுமோ, என்னசொன்னாலு மவருக்கென்னதாழ்வு, தேவியிருப்பிடமறியாது ஸகாஸம்பாதித்து இப்பொழுது கோடிவானரரை நாற்றிசைகளிலும் விடுத்திருக்கிறார், உம்முடையநிமித்தமவர்படுகிறதுன்பத்தை யானேபார்த்திருக்கிறேனே, இப்படி சொல்லத்தகுமோவென்று நினைப்பனென்கிற அவருடைய அபிப்பிராயத்தை முன்னோர்ந்தபிராட்டி அருளிச்செய்கிறாள்.

ஹேஹநுமந் ! ஸ்ரீராகவனைப்பிரிந்தமாத்திரமே மரிக்காது இதுவரையில்யான் ஜீவதாரணஞ்செய்துவருவதற்கு யாதுகாரணமென்னெனில்:—உலகத்தில்பிரேமையாகிற நீரின்மடையைவெட்டி அதைமாதாவினிடத்திலொருபங்கும் பிதாவினிடத்திலொருபங்கும் மற்றபந்துக்களிடத்திலொருபங்குமன்றோவிட்டிருப்பது. ஸ்ரீராகவனுக்கோ அப்படியில்லை. மாதாபிதாபந்துவர்க்கங்க ளனைவரிடத்துள்ள யாவத்ஸ்நேகத்திற்கு மென்னையே பாத்திரபூதையாகச்செய்திருக்கிறார். அப்படிப்பட்ட பிரேமபந்தமுடையவரான ஸ்ரீராகவன் எனது

பிரிவாற்றாது ஊனுமுறக்கமுமின்றி ஒலிகடலேயூடறுத்துக்கொண்டிங்கெழுந்தருளி, விரோதிவர்க்கங்களை "கிள்ளிக்களைந்தானை" யென்கிறபடி, மகுடமேந்திய இராவணசிரங்களைத் துரும்புபோலே அனாயாஸமாய்க் கிள்ளி, அரக்கர்பூண்டை இருந்தவிடந்தெரியாமல் வேரொடு கிழங்கொடு பேர்த்தெறிந்துவிட்டு, ஸூரியோஷ்ணதப்தனாய் விடாய்த்து தாஹத்தால் காவறழ்ந்து தாபசமனத்திற் கெங்குங்கதிகாணாது ஓர் தண்ணீர்ப்பந்தலைநோக்கித் தண்ணீர்தண்ணீரென்று துடித்தோடிவந்து அங்கொரு பிந்துஜலமுங்காணாது கீழுருண்டிருக்கு மொருவனைக்காண்பவனுக்கு ஜீவதாரணஞ்செய்வதெப்படியரிதாமோ, அவ்வண்ணம் சத்துருவைமுடித்தவுடன் ஸ்ரீராகவன் பேரவாவொடு என்னை இலங்கைமுழுதுந்தேடிக்காணாது, "ஹாஸீதே ஸீதே" யென்றுகதறிப் பிராணனைவிடுவரோயென்கிற பயத்தினால், அவருடையரக்ஷணார்த்தம் ஜீவதாரணஞ்செய்கிறேனல்லது வேறில்லை. அல்லது "மாயும்வகையறியேன் வல்வினையேன் பெண்பிறந்தே" என்கிறபடி, பெண்ணாய்ப்பிறந்தாரொருவர்க்குப் பிராணனைத்தான்விட ஸ்வதந்திரமுண்டோ? "பாபாநாமாகரம்ஸ்த்ரியஃ" என்கிறபடி ஸகலபாபங்களுக்குங் குடியிருப்பாய் ஒன்றையும்வகையறிந்து செய்யத்தெரியாப் பிறப்பன்றோவிது. "நஸ்த்ரீஸ்வாதந்த்ர்யமர்ஹதி" என்கிறநியாயப்படி இருப்பதும் இறப்பதும் என்னுடைய செயலாகுமோ? ஸ்ரீராகவஸ்வேச்சாவினியோகார்கமான வித்ததேகத்தை, ஹநூமந்! யானென்னசெய்யக்கூடும்? ஆகையால்தான் பிழைத்திருக்கிறேன். அவர்என்னையழைத்துப் போகும்படியான முயர்ச்சிகளைச் செய்யுமளவில்தான் எனதுயிரும் நிற்கும், அதற்கப்புறம் ஒருநிமிஷமும் தங்காதுஎன்று மொழிந்தனள்.

இதுவரையில் "வானர" வென்று ஸம்போதித்தவள் இப்பொழுது "தூத" வென்று ஸம்போதித்ததற்கு பாவமென்னெனில், ஸ்ரீராகவன்மீதுண்டான கோபமதிகரித்து இவர்பரியக்தம்பாய்ந்து, அவர்விடுத்த தூதனன்றோ நீயென்றனள்.

(அவதாரிகை.) நெடும்போது அனேகார்த்தங்களை விவரித்துச்சொல்லிவந்த வால்மீகிமஹரிஷி, ஸ்திரீகளுடைய பிரணயமாகிற மதுதாரை ரிஷிகளாயிருப்பார்க்கு நிலமல்லாமையாலே, இன்னதென்றறியாதே இந்தவிதமென்று சொல்லி, ஸ்ரீராகவனைப்பற்றிய வார்த்தையைமறுபடி அம்மாருதியினிடத்திலிருந்து கேட்பதற்கு வாய்மூடிய பிராட்டியினப் போதியவழகை ஸ்ரீராகவன் பார்க்கப்பெறவில்லையேயென்று துக்கிக்கிறார்.

30. ఇతీవ దేవీ వచనం మహార్థం తం వానరేంద్రం మధురార్థముక్త్వా। శ్రోతుం పునస్తస్య వచోభిరామం రామార్థయుక్తం విరరామ రామా॥

௩௧. 𑌇𑌤𑍀𑌵 𑌦𑍇𑌵𑍀 𑌵𑌚𑌨𑌂 𑌮𑌹𑌾𑌰𑍍𑌥𑌂 𑌤𑌂 𑌵𑌾𑌨𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌮𑌧𑍁𑌰𑌾𑌰𑍍𑌥𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 ।
𑌶𑍍𑌰𑍋𑌤𑍁𑌂 𑌪𑍁𑌨𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌵𑌚𑍋𑌭𑌿𑌰𑌾𑌮𑌂 𑌰𑌾𑌮𑌾𑌰𑍍𑌥𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌰𑌰𑌾𑌮 𑌰𑌾𑌮𑌾 ॥

௩௧. இதிவதேவிவசநம்மஹார்த்தம்தம்வாநரேந்த்ரம்மதுரார்த்தமுக்த்வா।
ச்ரோதும்புநஸ்தஸ்யவசோபிராமம்ராமார்தயுக்தம்விரராமராமா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தேவீ	பிரகாசமுடைய	உக்த்வா	சொல்லி [தும்
ராமா	பெண் (பிராட்டியானவள்)	ராமார்த்தயுக்தம்	ஸ்ரீராகவபிரயோஜனத்தோடுகூடின
இதிவ	இந்தப்பிரகாரம்	அபிராமம்	மனதிற்கின்பமானதுமான
மஹார்த்தம்	வெகுவர்த்தமுடையதும்	தஸ்ய-வசஃ	ஹனுமாருடைய-வாக்கியத்தை
மதுரார்த்தம்	செவிக்கினிப்பானதுமான	புநஃ-ஶ்ரோதும்	மறுபடி-கேட்பதற்கு
வசநம்	வார்த்தையை (நித்து)	விரராம	பேசாமலிருந்தாள்.
வாநரேந்த்ரம்-தம்	வானராதிபதியானஅம்மாருதியைகு		

தா-ம்.—நாடோடி ஸ்திரீகளுடைய பிரணயவியவகாரமும் இதாருக்குத் தெரியாதன்றோ? அப்படியிருக்க, இவளோமஹாராஜ பட்டமஹிஷி, மஹாஞானியானவானான ஜனகராஜன்புத்திரி. திரைலோக்யவீரனான ஸ்ரீராகவனுடையபத்தினி. அப்படிப்பட்டவள் பிரணயதாரையை இன்னதென்று நிர்ணயிக்கமுடியாதவிதம் தனது மதுரவாக்கினால் ஹநுமானுடைய செவியில்வர்ஷித்து, காதனைப்பற்றித் தான்கேட்டபிரச்னங்களுக்குப்பிரத்தியுத்தரமவருடைய திவ்யவாக்கினின்று கேட்குநிமித்தம் அவருக்கவகாசமளித்துத்தான் வாய்மூடியிருந்தனள்.

31. సీతాయా వచనం శ్రుత్వా మారుతిర్భీమవిక్రమః। శిరస్యంజలిమాధాయ వాక్యముత్తరమబ్రవీత్॥

௩௨. 𑌸𑍀𑌤𑌾𑌯𑌾 𑌵𑌚𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌮𑌾𑌰𑍁𑌤𑌿𑌰𑍍𑌭𑍀𑌮𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌃 ।
𑌶𑌿𑌰𑌸𑍍𑌯𑌞𑍍𑌜𑌲𑌿𑌮𑌾𑌧𑌾𑌯 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥

௩௨. ஸீதாயாவசநம்ஶ்ருத்வாமாருதிர்பீமவிக்ரமஃ।
ஶிரஸ்யஞ்ஜலிமாதாயவாக்யமுத்தரமப்ரவீத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை;
பீமவிக்ரமஃ-மாருதிஃ	பயங்கரமான பராக்கிரம முடைய ஹனுமார்	ஶிரஸி	தலைமேல்
		அஞ்ஜலிம்-ஆதாய	கைகூப்புகிறதை-செய்து
ஸீதாயாஃ	பிராட்டியினுடைய	உத்தரம்-வாக்யம்	பதிலான-வாக்கியத்தை
வசநம்-ஶ்ருத்வா	வார்த்தையை-கேட்டு	அப்ரவீத்	சொன்னார்.

தா-ம்.—கடல்நீரைவற்றி விதைவிதைக்கக் கோலுவாரைப்போலே அபாரமாயகன்ற ஆழ்கடலைத்தாண்டி அமரரையுமடக்கிய அரக்கனுடைய நகருட்புகுந்து தேவியைத்தேடியறிந்து, இப்படிப்பட்ட பிமகிருத்தியங்களைச்செய்த வீரனை அம்மாருதி தேவியருளிய வசனங்களைச் செவியுற்று, அவள்பக்கலுண்டான கௌரவாதிசயம்தோற்ற அதிவிநீதராய் சிரஸிலஞ்சலிசெய்துகொண்டு, பிராட்டிக்குப் பிரத்யுத்தரமளிக்க வாரம்பித்தனர்.

33. నత్వామిహస్థాంజానీతే రామః కమలలోచనే। తేనత్వాంనానయత్యాశు శచీమివపురందరః॥

௩௩. நத்வாமிஹஸ்தாம்ஜாநீதே ராம:கமலலோசநே।
தேநத்வாம்நாநயத்யாஶு ஶசீமிவபுரந்தர:॥

௩௩. நத்வாமிஹஸ்த்தாம்ஜாநீதேராமஃகமலலோசநே।
தேநத்வாம்நாநயத்யாஶுசீமிவபுரந்தரஃ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேகமலலோசநே	கமலம்போன்ற-கண்களையுடையவளே	தேந-த்வாம்	அதனால்-உம்மை
ராமஃ	ஸ்ரீ ராகவன்	புரந்தரஃ	இந்திரன்
த்வாம்-இஹஸ்த்தாம்	உன்னை-இங்கிருப்பவளாக	ஶசீமிவ-ஆஶு	சசிதேவியைப்போல்-சீக்கிரமாக
நஜாநீதே	அறியவில்லை	நாநயதி	அழைத்துப்போகவில்லை.

தா-ம்.—மூவுலகிலுமிணையில்லா வெழில்பூண்ட கமலக்கண்களையுடைய ஹேஸீதே! "ராமோரக்தாந்தலோசநஃ" "ராமஃகமலலோசநஃ" என்றுத்கோஷிக்கிறபடி லோகானந்தகரமானகண்ணழகையுடையராயினும் ஸ்ரீராகவன், உம்முடையதிருக்கண்சோபையிலீடுபட்டுமயங்கி, "நஜீவேயம்க்ஷணமபிவிநாதாமஸிதேக்ஷணாம்" அவ்வுத்பலாக்ஷியைப்பிரிந்து க்ஷணகாலமாயினும் ஜீவியேனென்று முசித்துத்துடித்துக்கிடக்கிறான்றோ! மேலும் "துல்யஶீலவயோவ்ருத்தாம்," சீலவயோவிருத்திகளில் அப்புருஷோத்தமனோடொத்து, "இயஞ்சமதிரோக்ஷணா" என்கிறபடி நயனசோபையில்மாத்திர மவரோடுசேராது ஒப்பற்றிருக்கிறீரன்றோ! அப்படிப்பட்ட நேத்திரஸௌந்தரியமுள்ள ஹேஜநகாத்மஜே! உம்மைக் காணாது பரிதபிக்கிற ஸ்ரீராகவன் நீரெழுந்தருளியிருக்கு மிவ்விடத்தையறிந்திலர். இனியும்முடையதுக்கத்தை யொழிப்பதில் தாமஸமிராது. அனுக்லாதனென்னுமஸுரன் இந்திரபத்தினியான சசிதேவியைக்கொண்டொளித்தவிடத்தைச்சிரகாலமறியாது அறிந்தபின் அப்புரந்திரனவளைமீட்டதுபோல் ஸ்ரீராகவனும் இராவணபுரத்தில் நீரிருப்பதாகத்தெரிந்தவுடன் இங்குவந்து அரக்கனைப்போக்கி அவனோடும்முடைய துக்கத்தையும்போக்கி உம்மை யிரக்ஷிப்பதற்கு யாதொருஸந்தேகமுமில்லை.

34. శ్రుత్వైవ తు వచో మహ్యం క్షిప్రమేష్యతి రాఘవః। చమూంప్రకర్షన్ మహతీం హర్యృక్షగణసంకులామ్॥

௩௪. ஶ்ருத்வைவதுவசோமஹ்யம்க்ஷிப்ரமேஷ்யதிராகவ:।
சமூம்ப்ரகர்ஷந்மஹதீம்ஹர்ய்ருக்ஷகணஸங்குலாம்॥

௩௪. ஶ்ருத்வைவதுவசோமஹ்யம்க்ஷிப்ரமேஷ்யதிராகவஃ।
சமூம்ப்ரகர்ஷந்மஹதீம்ஹர்யர்க்ஷகணஸங்குலாம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராகவஃ	ஸ்ரீராகவன்	மஹதீம்	அனேகமான
மஹ்யம்-என்னுடைய	(ஷஷ்ட்யர்த்தத்தில்-சதுர்த்திவந்தது)	சமூம்	ஸைந்யத்தை
வசஃ-ஶ்ருத்வா	வார்த்தையை-கேட்டு [பித்திருக்கிற	ப்ரகர்ஷந்(ஸந்)	அழைத்து(கொண்டு)
ஹர்யர்க்ஷகணஸங்குலாம்-குரங்கு கரடி இவைகளால் வியா		க்ஷிப்ரமேவ-ஏஷ்யதி-சீக்கிரமாகவே-வரப்போகிறார்.	

தா-ம்.—நீரிங்கெழுந்தருளியிருப்பதை அடியேன் ஸ்ரீராகவனுக்கு விக்ஞாபித்தவுடன் அவர்காலதாமஸமின்றி அனேககரடி வானரஸைன்னியங்களைத்திரட்டிக்கொண் டிங்குவரப்போகிறார்.

(அவதாரிகை.) வானரஸைந்யங்கள் இலங்கையை யெப்படியடையும்படி செய்வாரென்கிற சங்கையைப் பரிகரிக்கிறார்.

35. విష్టంభయిత్వా బాణౌఘైరక్షోభ్యం వరుణాలయమ్। కరిష్యతి పురీం లంకాం కాకుత్స్థః శాంతరాక్షసామ్॥

௩௫. விஷ்டம்பயித்வாபாணௌகைரக்ஷோப்யம்வருணாலயம்।
கரிஷ்யதிபுரீம்லங்காம்காகுத்ஸ்த:ஶாந்தராக்ஷஸாம்॥

௩௫. விஷ்டம்பயித்வாபாணௌகைரக்ஷோப்யம்வருணாலயம்।
கரிஷ்யதிபுரீம்லங்காம்காகுஸ்த்தஶ்ஶாந்தராக்ஷஸாம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
காகுஸ்த்தஃ	ஸ்ரீராகவன் [முடியாததான)	விஷ்டம்பயித்வா	தப்தமாகச்செய்து
அக்ஷோப்யம்	கலக்கமற்ற(ஒருவராலும்திரஸ்கரிக்க	லங்காம்-புரீம்	இலங்கையென்கிற-பட்டணத்தை
வருணாலயம்	ஸமுத்திரத்தை	ஶாந்தராக்ஷஸாம்	அடங்கின அரக்கரையுடையதாக
பாணௌகைஃ	பாணஸமூகங்களால்	கரிஷ்யதி	செய்யப்போகிறார்.

தா-ம்.—ஹேதேவி! இந்திரனுக்குதவிபுரிந்த ககுஸ்தவம்சத்திற்பிறந்த தயாளுவாயினும் பிறர்துயரம்போக்குவதல்லது தனக்குநேரிட்டதுன்பத்தை யொழிப்பதில்லையென்று விரதங்கொண்டாரோவென்று வி

னவினீரோ, அம்ம! அப்படியில்லை, அந்தபக்தவத்ஸலன் தேவியிருக்குமிடத்தை யென்முகமாயறிந்தவுடன் யாவர்க்குந் துஸ்ஸகமான விப்பெருங்கடலை வானரர் நடந்துசெல்லும்படி சரஸமூகங்களால் சோஷிக்கச்செய்து, கடலரணுளியுமாக்கு உக்கிரராக்ஷஸபரிபாலனத்தால் காலாக்கினிபோல்ஜ்வலித்து பயங்கரமாக விளங்குமிக்ககரையடைந்து இலை அராக்ஷஸமாகச்செய் தும்மைரக்ஷிக்கப்போகிறார்.

3౬. తత్రయద్యంతరామృత్యుస్సదేవాస్సహాసురాః। స్థాస్యంతిపథి రామస్య సతాన్ పివధిష్యతి॥

௩௬. [illegible]

[illegible]॥

௩௬. தத்ரயத்யந்தராம்ருத்யுர்யதிதேவாஸ்ஸஹாஸுராஃ।
ஸ்தாஸ்யந்திபதிராமஸ்யஸதாநபவதிஷ்யதி।

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத்ர	தம்மைமீட்டுவருமக்காரியத்தில்	ஸ்த்தாஸ்யதியதி	இருந்தாலும்
ம்ருத்யுஃ	மிருத்யுதேவதை	ஸஹாஸுராஃ-தேவாஃ	தேவர்கள்-அரக்கரோடுகூடினவராக
ராமஸ்ய	ஸ்ரீராகவனுக்கு	ஸ்த்தாஸ்யந்தியதி	இருப்பாராகிலும்
பதி	மார்க்கத்தில் [ருட்டு)	ஸஃ-தாநபி	அந்தஸ்ரீராகவன்-அவர்களையும்
அந்தரா	நடுவில்(காரியவிக்கினத்தையும் பொ	வதிஷ்யதி	வதம்செய்வர்.

தா-ம்.—ஹேஅரவிந்தலோசநே! அந்த ரக்தாக்தலோசனன ஸ்ரீராகவன் உம்மைரக்ஷிக்கும் விஷயத்தில், அதற்குப்பிரதிபக்ஷமாக, ஸர்வாத்மாபஹாரனை ஸாக்ஷாத்மிருத்தியுதேவதையே வந்தெதிர்த்தாலும் அகிலராக்ஷஸரு மொன்றுசேர்ந்து தடுத்தாலும், அல்லது தம்வம்சஸ்தரால் உதவிசெய்யப்பெற்று மித்திருக்களாய்வந்த தேவர்களே அரக்கருக்குச் சார்பாகவந்துதகைந்தாலும் அவர்களெல்லோரையும்ஹதஞ்செய்தும்மை யிரக்ஷிப்பார்.

3౭. తవాదర్శనజేనార్యే శోకేనసపరిప్లుతః। నశర్మలభతే రామస్సింహార్దితఇవద్విపః॥

௩௭. [illegible]

[illegible]॥

௩௭. தவாதர்ஶநஜேநார்யேஶோகேநஸபரிப்லுதஃ
நஶர்மலபதேராமஸ்ஸிம்ஹார்திதயிவத்விபஃ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேஆர்யே	ஒபூஜ்யே	பரிப்லுதஃ	வியாபிக்கப்பட்டவராக
ஸஃ-ராமஃ	அந்த-ஸ்ரீராகவன்	ஸிம்ஹார்திதஃ	சிங்கத்தால்பீடிக்கப்பட்ட
தவ	உம்முடைய [கத்தால்	த்விபஇவ	யானைபோல்
அதர்ஶநஜேந-ஶோகேந-பாருவையின்மையாலுண்டான-துக்	ஶர்ம-நலபதே	ஸுகத்தை-அடையவில்லை.

தா-ம்.—ஹேஸர்வஜகத்பூஜ்யே! அப்புருஷோத்தமன் உம்மைப்பிரிந்து, உமது திருமுக வொளியைக் காணப்பெறுமே வியஸனமுற்று சிங்கத்தின்வாயிற்பட்ட மத்தகஜம்போல் ஸங்கடப்படுகிறார்.

(அவதாரிகை.) தான்சொன்னயாவும் ஸத்தியமென்று பிராட்டி நம்பி கவலைதீர்ந்து விசுவஸிக்குநிமித்தம் தனக்குப்பிரியகரமான கிரிப்பிரதேசங்களின்மீதும் ஜீவனோபயோகமான கிழங்குகனிவர்க்கங்கள்மீதும் சபதஞ்செய்கிறார்.

3౮. మలయేనచవింధ్యేన మేరుణామందరేణచ దర్దురేణచ తేదేవి శపేమూలఫలేనచ॥

3౯. యథాసునయనంవల్గుబింబోష్ఠం చారుకుండలమ్। ముఖంద్రక్ష్యసి రామస్య పూర్ణచంద్రమివోదితమ్॥

௩௮. [illegible]

[illegible]॥

௩௯. [illegible]

[illegible]॥

௩௮. மலயேநசவிந்த்யேநமேருணாமந்தரேணச।
தர்த்துரேணசதேதேவிஶபேமூலபலேநச॥

௩௯. யதாஸுநயநம்வல்குபிம்போஷ்டம்சாருகுண்டலம்।
முகம்த்ரக்ஷ்யஸிராமஸ்யபூர்ணசந்த்ரமிவோதிதம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேதேவி	ஒஸீதே	வல்கு	இனிதான
மலயேநச	மலயபருவதத்தோடும்	பிம்போஷ்டம்	கோவக்கனிபோன்ற உதடுடையதும்
விந்த்யேந	விந்தியமலையோடும்	சாருகுண்டலம்	அழகானகுண்டலமுடையதுமான
மேருணா	மேருபருவதத்தோடும்	ராமஸ்ய-முகம்	ஸ்ரீராகவனுடைய-முகத்தை
மந்தரேணச	மந்தாபர்வதத்தோடும் [டும்	உதிதம்-பூர்ணசந்த்ரமிவ-உதயமான-நிறைமதிபோல்	
தர்த்துரே	தர்த்துரமென்கிறபர்வதவிசேஷத்தோ	யதா-த்ரக்ஷ்யஸி	எப்படி-பார்க்கப்போகிறீரோ
மூலபலேநச	கிழங்கு பழங்களோடும்	ததா-தே	அப்படி-தேவரையும்பொருட்டு
ஸுநயநம்	சிறந்தகண்களையுடையதும்	ஶபே	(நான்) சபதம்செய்கிறேன்.

* தா-ம்.—ஹே ஸ்ரீராகவப்ரியே! நாதனென்மீது உதாஸீனராய்விட்டனர், இத்தனைகாலம் வந்தென்னைரக்ஷிக்காதவர் இனிவந்து ரக்ஷிக்கப்போகின்றனரோ, இவ்வானரனேதோ சொல்லுகிறான், அவைகளையான்என்னவிதம்நம்பி தைரியமடைகிறது, என்றிவ்விதமேங்கித் தளர்ந்து பெருமூச்செறிகின்றீரோ, இப்படியேன் துயருறவேண்டும்! ஸ்ரீராகவனை நீரடையப்போகிறீரென்பதற்கு யாதொருஸந்தேகமுமில்லை. அரவிந்ததளம்போலகன்று கடைப்புறஞ்சிவந்து அதிஸூக்ஷ்மவாய் அத்விதீயமாய் விளங்குகிற நேத்திரத்துவயத்தோடும், "திருப்பவளச்செவ்வாய்" என்கிறபடி கோவக்கனிபோற்சிவந்து அழகாயும் மாதுரியரஸவத்தாயும் விளங்குகிற அதரத்தோடும், அத்புதரத்தினங்கள்பதித்த குண்டலமிட்ட திருச்செவிகளோடும்கூடிய ஸ்ரீராகவனுடைய திருமுகமண்டலத்தை, எதோகாலவிசேஷத்தால் பிரிவுற்றிருக்கிற தேவரீர் அதித்வரையிலேயே, மேகத்தால் மறைப்புண்டு அம்மேகம்விலகியவுடன் விசேஷகாந்திவத்தாய் பிரகாசிக்கிற பூர்ணேந்துமண்டலத்தைப்போல், தரிசிக்கப்போகிறீர், கவலைகொள்ளவேண்டாம். எனதுவார்த்தையில் நம்பிக்கையில்லாவிடில், எனக்கு வாஸயோக்கியமான மலயவிந்திய மேருமந்தரதர்துரமென்கிற பர்வதங்களின்மீதும், எனக்கு போஜ்யபதார்த்தங்களான கிழங்கு பலங்களின்மீதும் சபதஞ்செய்கிறேன். இனியாவது நம்பிக்கைகொண்டு வருத்தமுறாமல் எழுந்தருளியிருக்கலாம்.

౪౦. క్షిప్రంద్రక్ష్యసివైదేహిరామంప్రస్రవణేగిరౌ।శతక్రతుమివాసీనంనాకపృష్ఠస్యమూర్ధని॥

௪௰. 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑌿𑌵𑍈𑌦𑍇𑌹𑌿𑌰𑌾𑌮𑌂𑌪𑍍𑌰𑌸𑍍𑌰𑌵𑌣𑍇𑌗𑌿𑌰𑍌।
𑌶𑌤𑌕𑍍𑌰𑌤𑍁𑌮𑌿𑌵𑌾𑌸𑍀𑌨𑌂𑌨𑌾𑌕𑌪𑍃𑌷𑍍𑌠𑌸𑍍𑌯𑌮𑍂𑌰𑍍𑌧𑌨𑌿॥

௪௰. க்ஷிப்ரம்த்ரக்ஷ்யஸிவைதேஹிராமம்ப்ரஸ்ரவணேகிரௌ।
ஶதக்ரதுமிவாஸீநம்நாகப்ருஷ்டஸ்யமூர்த்தநி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேவைதேஹி	ஓஸீதே	மூர்த்தநி	மேல்பாகத்தில்
ப்ரஸ்ரவணே-கிரௌ	பிரஸ்ரவணமென்கிற-பர்வதத்தில்	ஶதக்ரதுமிவ(ஸ்திதம்)	இந்திரன்போலிருக்கிற
ஆஸீநம்	எழுந்தருளிஇருக்கிறவர் (ஆகையால்)	ராமம்	ஸ்ரீராகவனை
நாகப்ருஷ்டஸ்ய	இந்திரன்வஸிக்க யோக்கியமான ஸ்தானவிசேஷத்தினுடைய	க்ஷிப்ரம்-த்ரக்ஷ்யஸி	சீக்கிரமாய்-பார்க்கப்போகிறீர்.

தா-ம்.—ஹேதேவி! மஹாப்பிரயாஸத்தால் மத்தியிலொருவிக்கினமும் நேரிடாமல் அதிபயத்தோடு நூறு யக்கியம்செய்து அதனால் வீற்றிருக்க யோக்கியமான மஹேந்திராஸனத்திலிருக்கும் தேவராஜாபோல் ப்ரஸ்ரவணமென்கிற பர்வதத்தின் மீதெழுந்தருளியிருக்கிற ஸ்ரீராகவனை வெகுசீக்கிரம் பார்க்கப்போகிறீர்.

౪౧. నమాంసంరాఘవోభుఙ్క్తేనచాపిమధుసేవతే।వన్యంసువిహితంనిత్యంభక్తమశ్నాతిపంచమమ్॥

௪௧. 𑌨𑌮𑌾𑌂𑌸𑌂𑌰𑌾𑌘𑌵𑍋𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇𑌨𑌚𑌾𑌪𑌿𑌮𑌧𑍁𑌸𑍇𑌵𑌤𑍇।
𑌵𑌨𑍍𑌯𑌂𑌸𑍁𑌵𑌿𑌹𑌿𑌤𑌂𑌨𑌿𑌤𑍍𑌯𑌂𑌭𑌕𑍍𑌤𑌮𑌶𑍍𑌨𑌾𑌤𑌿𑌪𑌞𑍍𑌚𑌮𑌮𑍍॥

௪௧. நமாம்ஸம்ராகவோபுங்க்தேநசாபிமதுஸேவதே।
வந்யம்ஸுவிஹிதம்நித்யம்பக்தமஶ்நாதிபஞ்சமம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராகவ꞉	ஸ்ரீராகவன்	ஸுவிஹிதம்	வானப்ரஸ்தருக்குசிதமாய் விதிக்கிருக்கிறதுமான
மாம்ஸம்-நபுங்க்தே	மாம்ஸத்தை-புஜிக்கிறதில்லை	பக்தம்	அன்னத்தை
மதுசாபிநஸேவதே	மத்தியத்தையும்-ஸேவிக்கிறதில்லை	பஞ்சமம்	ஐந்தாவதுகாலத்திலுண்டானதாக
வந்யம்	வனத்திலுண்டானதும்	நித்யம்-அஶ்நாதி	பிரதிதினமும்-புஜிக்கிறார்.

தா-ம்.—ஹேமந்தபாஷிணி! அந்த சாருபாஷியான ஸ்ரீராகவன் உம்முடைய பிரிவாற்றாது, இராஜார்கமும் மிகமாதுரியமுமான மாம்ஸவகைகளையும் மத்தியங்களையும் அபேக்ஷிக்காமல் வானப்பிரஸ்தருக் குசிதமாகவிதித்திருக்கும் காய்கிழங்குகளை, பிராதஸ்ஸங்கவ மத்தியான்ன அபரான்னஸாயங்காலமென்கிற பஞ்சகாலங்களில்கடைசியான ஸாயங்காலவேளையில் கேவலம் சரீரதாரணமாத்திரோபயோகமாகப் புஜித்துவருகிறார். அல்லது, (பஞ்சமம்) வானப்பிரஸ்தர் தங்களுக்குவிஹிதமான வன்னத்தைஐந்துபாகமாக்கி, தேவதைகளுக்கொருபாகமும், பிதிருக்களுக்கொருபாகமும் அதிதிகளுக்கொருபாகமும், பூதங்களுக் கொருபாகமும்கொடுத்து ஐந்தாவதுபாகத்தைத் தாங்கள் புஜிப்பார்கள், அதுபோல் ஸ்ரீராகவனும்செய்துவருகிறார்.

(அவதாரிகை.) ஸுகார்ஹரான ஸ்ரீராகவன் ஸீதையினிடத்தில் பாவபந்தமுடையராய் தனதுதிருமேனியில் மேய்ந்துலாவும் கீடாதிகளைப்போக்காது மிகவும் துக்காக்கிராந்தராய் முசித்துக்கிடக்கிறாரென்பதைச் சொல்லுகிறது.

౪౨. నైవదంశాన్నమశకాన్నకీటాన్నసరీసృపాన్ । రాఘవోపనయేద్గాత్రాత్త్వద్గతేనాంతరాత్మనా॥

* ஒருவன் சொல்லும்வார்த்தையை ஸத்தியமென்று பிறர்நம்புவதற்காக தனக்கு அருமைபந்துக்களான மாதாபிதாமக்கள்மீதும்,குருதெய்வங்கள்மீதும், உண்ணுமுணவு இருக்குமிடங்களின்மீதும் ஆணையிடுகிறதுண்டு. வானரர்க்கு பிரியவஸ்துக்கள் கிரிப்பிரதேசங்களும் காய்கிழங்குகளுமாதலால் அவைமீது ஹநுமானுணையிடுகிறார். தான்அக்குதம்சொல்லி பிராட்டியை வஞ்சிக்கின் தனக்குவாஸயோக்கியமான இடமும்,புஜிக்கயோக்கியமான பதார்த்தங்களும் கிடைக்காமற்போகக்கடவதாகவென்று பாவம். தர்துரமென்பது மலயபர்வதத்திற்கு ஸமீபத்தில் சந்தனவிருக்ஷங்கள் மிகவுடைய ஓர் பர்வதசிரோஷ்டமென்றறிக.

௪௨ 𑌨𑍈𑌵 𑌦𑌂𑌶𑌾𑌨𑍍𑌨 𑌮𑌶𑌕𑌾𑌨𑍍𑌨 𑌕𑍀𑌟𑌾𑌨𑍍𑌨 𑌸𑌰𑍀𑌸𑍃𑌪𑌾𑌨𑍍।
𑌰𑌾𑌘𑌵𑍋𑌽𑌪𑌨𑌯𑍇𑌦𑍍𑌗𑌾𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑍍𑌗𑌤𑍇𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌾॥

௪௨. நைவதம்ஶாந்நமஶகாந்நகீடாந்நஶரீஸ்ருபாந்।
ராகவோபநயேத்காத்ராத்த்வத்கதேநாந்தராத்மநா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராகவ꞉	ஸ்ரீராகவன்	நைவாபநயேத்	ஓட்டமாட்டார்
த்வத்கதேந	தம்மையடைந்த	மஶகாந்	கொசுக்களையும் ஓட்டார்
அந்தராத்மநா	மனதினால்	கீடாந்	புழுக்களையும் ஓட்டார்
தம்ஶாந்	காட்டுயீக்களை	ஶரீஸ்ருபாந்	மலைப்பாம்புகளையும் ஓட்டார்.
காத்ராத்	சரீரத்திலிருந்து		

தா-ம்—ஹேசாருஹாஸிநி! குங்குமசந்தனம்பூசி, நறுமலர்மாலைசூடி, திவ்விய பீதாம்பரமுடுத்து அத்புதாபரணங்கள்தரித்து, வெண்குடைக்கீழ் மணிமயபீடத்தின்மீது வீற்றிருந்து, இருபுறங்களிலும் வெண்சாமரம்வீச, வந்தியர்கள் புடைசூழ்ந்துஸ்துதிபாட, இராஜமண்டலம் மகுடம்வணங்கிநிற்க, இப்படி இராஜாதிராஜனாய் ஸகலபோகஸமேதனாய் விளங்கவேண்டியிருக்க, அப்படியிராதே, அந்த ரகுநந்தனன் உம்மைப்பிரிந்ததுக்கத்தால் பிரக்ஞையையிழந்து தனதுமிருதுளமானசரீரத்தைத் துளைக்கிற வனஈக்களையும், அதன்மீது ஊருகிறகீடவர்க்கங்களையும், புரளுகிறமலைப்பாம்புகளையும்போக்கார்; அவைகளிழைக்கும் துன்பங்களையறியார். இவ்விதம், தனதுடம்பிற்கடித்தனவு மூர்ந்தனவுமோராதே கேவலம் பரகாயப்பிரவேசஞ்செய்தவர்போல் தேகமறியாது, உம்மிடத்திற்குடிகொண்ட மனமுடையராய் ஸங்கடப்படுகிறார்.

௪௩. నిత్యం ధ్యానపరో రామో నిత్యం శోకపరాయణః। నాన్యచ్చింతయతే కించిత్ స తు కామవశం గతః॥

௪௩. 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌪𑌰𑍋 𑌰𑌾𑌮𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌶𑍋𑌕𑌪𑌰𑌾𑌯𑌣𑌃।
𑌨𑌾𑌨𑍍𑌯𑌚𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌤𑍇 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌸 𑌤𑍁 𑌕𑌾𑌮𑌵𑌶𑌂 𑌗𑌤𑌃॥

௪௩. நித்யம்த்யாநபரோராமோநித்யம்ஶோகபராயண꞉।
நாந்யத்சிந்தயதேகிஞ்சித்ஸதுகாமவஶம்கத꞉॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸ꞉-ராம꞉	அந்த-ஸ்ரீராகவன்	நித்யம்-ஶோகபராயண꞉-எப்பொழுதும்-துக்கமுற்றவருமாக	
காமவஶம்	மன்மதனுக்கு ஸ்வாதீனத்தை	அந்யத்	வேறொன்றை
கத꞉	அடைந்தவராக	கிஞ்சித்-நசிந்தயேத்	கொஞ்சமும்-சிந்திக்கிறதில்லை.
நித்யம்-த்யாநபர꞉	எப்பொழுதும்-சிந்தாஸக்தராயும்		

தா-ம்.—ஹேசாருநேத்ரே! ஸ்ரீராகவன் உமதுவிரகம்ஸகிக்காது மன்மதபாணங்களுக்கிலக்காய் மஹாதாபமடைந்து அநவரதம் உம்மையேநினைத்துக்கொண்டு சோகத்தியானபரராய், அந்யவஸ்து சிந்தாரஹிதராய் கொஞ்சமேனு மானந்தமின்றி பரிதபிக்கிறார்.

௪௪. అనిద్రస్సతతం రామస్సుప్తోఽపి చ నరోత్తమః। సీతేతి మధురాం వాణీం వ్యాహరన్ ప్రతిబుధ్యతే॥

௪௪. 𑌅𑌨𑌿𑌦𑍍𑌰𑌸𑍍𑌸𑌤𑌤𑌂 𑌰𑌾𑌮𑌸𑍍𑌸𑍁𑌪𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌚 𑌨𑌰𑍋𑌤𑍍𑌤𑌮𑌃।
𑌸𑍀𑌤𑍇𑌤𑌿 𑌮𑌧𑍁𑌰𑌾𑌂 𑌵𑌾𑌣𑍀𑌂 𑌵𑍍𑌯𑌾𑌹𑌰𑌨𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍁𑌧𑍍𑌯𑌤𑍇॥

௪௪. அநித்ரஸ்ஸததம்ராமஸ்ஸுப்தோபிசநரோத்தம꞉।
ஸீதேதிமதுராம்வாணீம்வ்யாஹரந்ப்ரதிபுத்யதே॥

பதம்	உரை.	பதம்.	உரை.
நரோத்தம꞉-ராம꞉	புருஷஶிரேஷ்டனான ஸ்ரீராகவன்	ஸீதேதி	ஸீதையென்கிற
ஸததம்-அநித்ர꞉	எக்காலத்திலும் - தூக்கமற்றவராக (இருக்கிறார்)	மதுராம்-வாணீம்	இனிதான-வாக்கை
		வ்யாஹரந் (ஸந்)	சொல்லிக்கொண்டு
ஸுப்தோபி	தூங்கினாலும்	ப்ரதிபுத்யதே	எழுந்திருக்கிறார்.

தா-ம்.—ஹேபத்மாననே! அபிமதவிஷயத்தி லிருக்கவேண்டிய பிரகாரம் புருஷோத்தம லக்ஷணமுடையவராதலால் அநங்கேந்திரன் அந்தக்கரணமுழுதும் உம்மிடத்திற்செலுத்தி; உமதுதிவ்யமங்கள விக்கிரகத்தின் தர்சனமின்மையால்ஸுகமின்றி நித்திராலேசமுமற்று கஷ்டப்படுகிறார். எப்பொழுதாவது ஸ்வல்பநித்திரையடைந்தனராயின், விழித்துக்கொள்ளுகையில், சொல்லும்பொழுதே நாவில் நீர்வருவும்படி அவ்வளவு சரஸமான "ஸீதேஸீதே" யென்றுச்சரிக்கிற திவ்வியமாதுரியவாக்கோடு எழுந்திருக்கிறார். இப்படி ஸதாகாலமும், மனத்தாலும் வாக்காலும் உமதுசிந்தனையும் உமது நாமோச்சாரணமுமின்றி வேறு வியாபாரமற்றவரா யெழுந்தருளியிருக்கிறார்.

௪௫. దృష్ట్వా ఫలం వా పుష్పం వా యద్వాన్యత్ స్త్రీమనోహరమ్। బహుశో హా ప్రియేత్యేవం శ్వసంస్త్వామభిభాషతే॥.

௪௫. 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌫𑌲𑌂 𑌵𑌾 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌵𑌾 𑌯𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌮𑌨𑍋𑌹𑌰𑌮𑍍।
𑌬𑌹𑍁𑌶𑍋 𑌹𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑍇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌶𑍍𑌵𑌸𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌮𑌭𑌿𑌭𑌾𑌷𑌤𑍇॥

௪௫. த்ருஷ்ட்வாபலம்வாபுஷ்பம்வாயத்வாந்யத்ஸ்த்ரீமநோஹரம்।
பஹுஶோஹாப்ரியேத்யேவம்ஶ்வஸந்ஸ்த்வாமபிபாஷதே॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ராமஃ)	(ஸ்ரீராகவன்)	பஹுஶஃ	அனேகபிரகாரமாக
பலம்வா-புஷ்பம்வா	கனியையாகிலும்-புஷ்பத்தையாகிலு[ம்]	ஹாப்ரியேதி	ஹேஸீதே என்று
அந்யத்-ஸுமநோஹரம்-வேருன-மனத்திற்கினிதானது		யேவம்	இந்தவிதம்
யதி	எதிருக்குமோ	ஶ்வஸந்	பெருமூச்செறிந்துகொண்டு
தத்வா	அதையாகிலும்	த்வம்	தம்மைக்குறித்து
த்ருஷ்ட்வா	பார்த்து	அபிபாஷதே	பிரத்தியுத்தரம்சொல்லுகிறார்.

தா-ம்—ஹேஜாநகி! வனத்திலுள்ள பரிமளபுஷ்பங்களையும் மாதுரியகனிகளையும் இன்னமனேக மனோகரவஸ்துக்களையும கண்ணுறின் அப்பொழுது ஸ்ரீராகவனும்முடைய கியாபகமடைந்தும்மை, "ஹா ஸீதே! ஹாபிரியே!" என்று பற்பலவிதம் ஸம்போதித்துப்பெருமூச்செறிந்து உம்மோடுஸம்பாஷிப்பதுபோல் உத்தரப் பிரத்தியுத்தரங்கள் சொல்லிக்கொண்டிவ்விதம் கஷ்டப்படுகிறார்.

౪౮. సదేవినిత్యంపరితప్యమానస్త్వామేవసీతేత్యభిభాషమాణః। ధృతవ్రతో రాజసుతో మహాత్మా తవైవ లాభాయ కృతప్రయత్నః॥

௪௮. ஸதேவிநித்யம்பரிதப்யமானஸ்த்வாமேவஸீதேத்யபிபாஷமாணஃ॥
த்ருதவ்ரதோராஜஸுதோமஹாத்மாதவைவலாபாயக்ருதப்ரயத்நஃ॥

௪௮. ஸதேவிநித்யம்பரிதப்யமாநஸ்த்வாமேவஸீதேத்யபிபாஷமாணஃ।
த்ருதவ்ரதோராஜஸுதோமஹாத்மாதவைவலாபாயக்ருதப்ரயத்நஃ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேதேவி	ஓ ஸீதே!	க்ருதப்ரயத்நஃ	செய்யப்பட்டபிரயத்தினமுடையவ[ராக]
மஹாத்மா	பெருந்தைரியமுடையவரும்	ஸீதேதி	ஸீதே என்று
த்ருதவ்ருதஃ	த்ருடமான விரதமுடையவரும்	த்வாமேவ	தம்மையே
ராஜஸுதஃ-ஸஃ	இராஜபுத்திரருமான - அந்த (ஸ்ரீராகவன்)	அபிபாஷமாணஃ	எதிரில் வார்த்தைசொல்வதாக
தவைவ லாபாய	தமக்கே - பிராப்தியும் பொருட்டு	நித்யம்-பரிதப்யமாநஃ	எப்பொழுதும்-பரிதபித்துக்கொண்டு (இருக்கிறார்.)

தா-ம்.—ஹேதேவி! உமதுபிரிவால் மஹாசோகத்தை யடைந்திருந்தாலும் அந்தசக்கிரவர்த்தித்திருமகன் [ஸ்]வாட்[ட]விகமான தனதுமனோதைரியத்தையும் திடவிரதத்தையும் கைவிடாமலிருக்கிறார். உம்மையடையுகிமித்தம் மஹா[ப்]பிரயத்தினங்கள் செய்துவருகிறார். ஆகிலும் உமதுபிரிவாற்றாமையால், உம்மைப்பார்ப்பதுபோலும் உம்மோடு ஸம்பாஷிப்பதுபோலுமெண்ணி அப்படிப்பட்ட ஸுகம்பெற மாட்டாமையாலே பரிதபிக்கிறார்.

౪౯. సా రామసంకీర్తనవీతశోకా రామస్యశోకేన సమానశోకా। శరన్ముఖే సాంబుదశేషచంద్రా నిశేవ వైదేహసుతా బభూవ॥

௪௯. ஸாராமஸங்கீர்த்தநவீதஶோகாராமஸ்யஶோகேநஸமாநஶோகா।
ஶரந்முகேஸாம்புதஶேஷசந்த்ராநிஶேவவைதேஹஸுதாபபூவ॥

௪௯. ஸாராமஸங்கீர்த்தகவீதஶோகாராமஸ்யஶோகேகஸமாகஶோகா।
ஶரந்முகேஸாம்புதஶேஷசந்த்ராநிஶேவவைதேஹஸுதாபபூவ॥

இதி ஸ்ரீஸுந்தரகாண்டே - ஷட்த்ரிம்ஶஸ்ஸர்க்கஃ.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராமஸ்ய-ஶோகேந	ஸ்ரீராகவனுடைய-துக்கத்தோடு	ஶரந்முகே	சரத்ருது ஆரம்பத்தில்
ஸமாநஶோகா	நிகரானதுக்கமுடையவளும்	ஸாம்புதஶேஷசந்த்ரா -	மேகசேஷத்தோடுகூடின மதியையுடைய
ராமஸங்கீர்த்தநவீதஶோகா -	ஸ்ரீராகவனுடைய புகழ்ச்சியால் போனதுக்கமுடையவளுமான	நிஶேவ	இரவுபோல்
ஸா-வைதேஹஸுதா	அந்த-ஸீதையானவள்	பபூவ	ஆனாள்.

தா-ம்.—ஸ்ரீராகவன் தன்னைரக்ஷிக்கிறவிஷயத்தில் ஸத்பாவங்கொண்டிருக்கிறாரோ, இல்லையோவென்று துக்கமுற்றிருந்தாள். அப்புருஷோத்தமனின் பிரிவாற்றாமையாலே துக்கமுற்றிருந்தாள். இத்தனைகாலம் தன்னையிரக்ஷிக்கவராத ஸ்ரீராமலக்ஷ்மணருக்கு என்னவிபத்துநேர்ந்ததோவென்று நிலைகலங்கியிருந்தாள். ஹநுமத்வாக்கினால் அந்நரேந்திரருடைய க்ஷேமத்தைக்கேள்வியுற்ற பிறகுகவலைதீர்ந்து கிலேசங்குறைந்தவளானாள். ஆகிலும் தன்னிமித்தம் தனதுபர்த்தா ஊணுமுறக்கமுமின்றி கடித்தனவு மூர்ந்தனவுமோராதே மெய்மறந்து, துக்கத்தில்மூசித்துக் கிடக்கிறானென்பதைக்கேட்டு ஆயாஸமடைந்தாள். ஸ்ரீராகவன் தன் விஷயமாக எவ்வளவு சோகமடைந்தனரோ அவ்வளவுசோகம் தானுமடைந்தாள். இந்தவிதம் பிராட்டி பர்த்திருக்ஷேமஸமாசாரத்தால் ஸந்தோஷத்தையும், அவர்படுகிற விரகதுக்கத்தால் கிலேசத்தையு மடைந்து, சரத்ருதுவாரம்பத்தில் சேஷமான ஸ்வல்பமேகத்தால் சிறிது சிறிதுகாலம் மறைப்புண்டு மாறிமாறிப்பிரகாசிக்கு மிந்துமண்டலம்போல் விளங்கினள்.

ஸ்ரீஸந்மநோரஞ்ஜநீநாமத்திராவிட வ்யாக்யாநஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்
முப்பத்தாறுவதுஸர்க்கம் - முற்றிற்று.

முப்பத்தேழாவது ஸர்க்கம்.

౧. సీతా తద్వచనం శ్రుత్వా పూర్ణచంద్రనిభాననా। హనూమంతమువాచేదం ధర్మార్థసహితం వచః॥

௧. 𑌸𑍀𑌤𑌾 𑌤𑌦𑍍𑌵𑌚𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌪𑍂𑌰𑍍𑌣𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌨𑌿𑌭𑌾𑌨𑌨𑌾।
𑌹𑌨𑍂𑌮𑌨𑍍𑌤𑌮𑍁𑌵𑌾𑌚𑍇𑌦𑌂 𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌸𑌹𑌿𑌤𑌂 𑌵𑌚𑌃॥

௧. ஸீதாதத்வசநம்ஶ்ருத்வாபூர்ணசந்த்ரநிபாநநா।
ஹநுமந்தமுவாசேதம்தர்மார்த்தஸஹிதம்வச:।

பதம்.	உரை.	பதம்.	உரை.
பூர்ணசந்த்ரநிபாநநா	நிறைமதிபோன்ற முகமுடைய	தர்மார்த்தஸஹிதம்	தர்மத்தோடுகூடின
ஸீதா	பிராட்டியானவள்	இதம்வச:	(இனிவருகிற) இந்தவார்த்தையை
தத்-வசநம்-ஶ்ருத்வா	அந்த-வார்த்தையை-கேட்டு	உவாச	மொழிந்தனள்.
ஹநுமந்தம்	ஹனுமானை (குறித்து)		

தா-ம். இந்தவிதம், ஸ்ரீராகவ விஷயமாயும் தனதனிஷ்ட நிவர்த்திகரமாயு மிருக்கிற அனேக விஷயங்களை ஹநுமானுரைக்கக்கேட்ட பிராட்டித் திருவுளமுகந்து திருவடியனிடத்திற் கல்மஷமற்ற பாவமுடையளாய், ஸ்வச்சமான கலைகளோடு விளங்கும் நிறைமதிக்கு நிகரான திருமுகமுடையளாய் அந்த ராமதாஸனை நோக்கி நீதிநிறைத்த நன்மொழிகளைக் கர்ணானந்தகரமாக மொழிய வருள்புரிந்தனள்.

౨. అమృతం విషసంసృష్టం త్వయా వానరభాషితమ్। యచ్చ నాన్యమనా రామో యచ్చ శోకపరాయణః॥

௨. 𑌅𑌮𑍃𑌤𑌂 𑌵𑌿𑌷𑌸𑌂𑌸𑍃𑌷𑍍𑌟𑌂 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌵𑌾𑌨𑌰𑌭𑌾𑌷𑌿𑌤𑌮𑍍।
𑌯𑌚𑍍𑌚 𑌨𑌾𑌨𑍍𑌯𑌮𑌨𑌾 𑌰𑌾𑌮𑍋 𑌯𑌚𑍍𑌚 𑌶𑍋𑌕𑌪𑌰𑌾𑌯𑌣𑌃॥

௨. அம்ருதம்விஷஸம்ஸ்ருஷ்டம்த்வயாவாநரபாஷிதம்।
யச்சநாந்யமநாராமோயச்சஶோகபராயண:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேவாநர	ஓ ஹநுமானே!	அம்ருதம்	(அது) அமிருதம்போன்றது
ராம:	ஸ்ரீராகவன்	ஶோகபராயண:	(ராமன்) துக்காஸக்தராக இருக்கிறொன்கிற
அந்யமநா:-ந	இதரமானதில் மனதைவைப்பதில்லை		
யத்	எதுவானது [என்கிற)	இதியத்	யாதொன்றுண்டோ
த்வயா.பாஷிதம்	உன்னால் சொல்லப்பட்டதோ	தத்-விஷஸம்ஸ்ருஷ்டம்	(அது) விஷத்தோடுகூடினது.

தா-ம். ஹே மாருதாத்மஜ! ஸ்ரீராகவனென்னைப் பிரிந்தவன்று துடங்கி வேறுவிஷயங்களில் மனஞ்செலுத்தாதே, என்மீது கிருபையோடெழுந்தருளியிருக்கிறு ரென்பதை நீர்சொல்லக்கேட்டு, சிரகாலமாகாரவர்ஜ்ஜிதனான வொருவனுக்கு அமிருதோபமான மிருஷ்டான்னங்கிடைக்கி னெவ்வளவானந்த மடைவனோ அவ்வளவு ஆனந்தமடைந்தேன். ஸுகத்திற்கே அர்கமான மிருதுளசரீரமுடைய என்னுடைய நாதன் என்னிமித்தம் மஹாசோகமடைந்து வருந்துகிறுரென்று கேட்கையில், மிருஷ்டான்ன போக்தாவுக்கு விஷயுக்தமான கஷ்டான்னம் கிடைத்தாலெவ்வளவு துக்கமுண்டாகுமோ அவ்வளவு துக்கமடைந்து ஆனந்தமற்றவளாகிறேன்.

౩. ఐశ్వర్యే వా సువిస్తీర్ణే వ్యసనే వా సుదారుణే। రజ్జ్వేవ పురుషం బద్ధ్వా కృతాంతః పరికర్షతి॥

௩. 𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑍇 𑌵𑌾 𑌸𑍁𑌵𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑍇 𑌵𑍍𑌯𑌸𑌨𑍇 𑌵𑌾 𑌸𑍁𑌦𑌾𑌰𑍁𑌣𑍇।
𑌰𑌜𑍍𑌜𑍍𑌵𑍇𑌵 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑌃 𑌪𑌰𑌿𑌕𑌰𑍍𑌷𑌤𑌿॥

௩. ஐஶ்வர்யேவாஸுவிஸ்தீர்ணேவ்யஸநேவாஸுதாருணே।
ரஜ்வேவபுருஷம்பத்வாக்ருதாந்த:பரிகர்ஷதி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
க்ருதாந்த:	தெய்வமானது	வ்யஸநேவா	துக்கத்திலாகிலும்
ஸுவிஸ்தீர்ணே	வெகுவான	புருஷம்-பத்வா	புருஷனை-கட்டி.
ஐஶ்வர்யேவா	ஐஶ்வர்யத்திலாகிலும்	ரஜ்வேவ	கயறுபோல்
ஸுதாருணே	வெகுபயங்கரமான	பரிகர்ஷதி	இழுக்கிறது.

தா-ம். ஹேஹநுமன்! தெய்வம் யாவரைத்தப்பவிடுகிறது திவ்யவாகனருடனும் அத்புதகல்பசயனனும், திரைலோக்கியராஜாவாய் மஹதைசுவரியத்தில் வாழ்ந்துவருகிற ஸ்ரீமானையும், அன்னவஸ்திரத்திற்குங் கதியற்ற தரித்திர சிகாமணியான நாடோடி புருஷனையும் கயிற்றுலேபோல் முன்னம் பின்னுமிழுத்து ஹிம்ஸிக்கிறது.

౪. విధిర్నూనమసంహార్యః ప్రాణినాం ప్లవగోత్తమ। సౌమిత్రిం మాం చ రామం చ వ్యసనైః పశ్య మోహితాన్॥

௪. 𑌵𑌿𑌧𑌿𑌰𑍍𑌨𑍂𑌨𑌮𑌸𑌂𑌹𑌾𑌰𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌂 𑌪𑍍𑌲𑌵𑌗𑍋𑌤𑍍𑌤𑌮॥
𑌸𑍌𑌮𑌿𑌤𑍍𑌰𑌿𑌂 𑌮𑌾𑌂 𑌚 𑌰𑌾𑌮𑌂 𑌚 𑌵𑍍𑌯𑌸𑌨𑍈𑌃 𑌪𑌶𑍍𑌯 𑌮𑍋𑌹𑌿𑌤𑌾𑌨𑍍॥

௪. விதிர்நூநமஸம்ஹார்ய꞉ப்ராணிநாம்ப்லவகோத்தம।
ஸௌமித்ரிம்மாம்சராமம்சவ்யஸநை꞉பஶ்யமோஹிதாந்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேப்லவகோத்தம	ஒவானரசிரேஷ்டரே	வ்யஸநை꞉	துக்கங்களினால்
விதி꞉	தெய்வமானது	மோஹிதாந்	மெய்மறந்திருக்கிற
ப்ராணிநாம்	பிராணிகளுடைய (ப்ராணிகளினால்)	ஸௌமித்ரிம்	இலக்ஷ்மணனையும்
நூநம்	நிச்சயமாக	மாம்ச	என்னையும்
அஸம்ஹார்ய꞉	ஸம்ஹரிக்கப்படத்தக்கினதன்று	ராமம்ச-பஶ்ய	ஸ்ரீராகவனையும்-பாரும்.

தா-ம். ஹே ப்லவங்கம! தெய்வமானது நிஷ்பக்ஷபாதமானது. ஜன்மாந்தர கர்மமடியாக, எவ்வெவருக்கு என்னென்ன ஸுகதுக்கங்க ளளிக்கவேண்டுமோ அவ்விதமேசெய்யும். ஸுகிருதஞ்செய்தவருக்கு இந்த ஜன்மத்தில் ஸுகத்தையும், துஷ்கிருதஞ் செய்தவருக்கு துக்கத்தையு மீயுமல்லது, அவரவர் நிலைமையை நோக்கி ஸுகதுக்கங்களைச்செய்யாது. அதற்கு, ஸார்வபௌமகுலோத்பவரான ஸீதாராமலக்ஷ்மணரே திருஷ்டாந்தம். எங்களுடைய பூர்வநிலைமையென்ன? இப்பொழுது துன்ப பங்கத்திற்கிடந்து புரளுகிறதையினியமென்ன? இதைப்பாரீர்.

౫. శోకస్యాస్య కదా పారం రాఘవోఽధిగమిష్యతి। ప్లవమానః పరిశ్రాంతో హతనౌః సాగరే యథా॥
௫. 𑌶𑍋𑌕𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌕𑌦𑌾𑌪𑌾𑌰𑌂𑌰𑌾𑌘𑌵𑍋𑌽𑌧𑌿𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑌿।
𑌪𑍍𑌲𑌵𑌮𑌾𑌨𑌃𑌪𑌰𑌿𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍋𑌹𑌤𑌨𑍌𑌃𑌸𑌾𑌗𑌰𑍇𑌯𑌥𑌾॥
௫. ஶோகஸ்யாஸ்யகதாபாரம்ராகவோதிகமிஷ்யதி।
ப்லவமாந꞉பரிஶ்ராந்தோஹதநௌஸ்ஸாகரேயதா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
பரிஶ்ராந்த꞉-ராகவ꞉	மிகசிரமத்தையடைந்த - ஸ்ரீராகவன்	அஸ்ய-ஶோகஸ்ய	இந்த-துக்கத்தினுடைய
ஸாகரே	கடலில்	பாரம்	கரையை
ப்லவமாந꞉	போகுகின்ற	கதா	எப்பொழுது
ஹதநௌர்யதா	அடிக்கப்பட்டஓடம்போல்	அதிகமிஷ்யதி	அடைவர்.

தா-ம். ஹே மாருதே! பெருங்காற்றிற்கிலக்காகி பாய்கிழிந்து கொடிமாமுறிந்து முன்பின் செல்லவகையற்றுத் தத்தளித்துத்தடுமாறி ஆழ்கடலிலமிழ்ந்துபோகிற வோடம்போல், ஸ்ரீராகவன் ஸீதாவிரகமாகிற சண்டமாருதத்தாலடிக்கப்பட்டு துக்கஸாகரத்தில் மூழ்கிக்கிடக்கிறார். இந்ததுக்கக்கடலினின்றெப்பொழுது கரையேறி ஸுகிப்பரோ!

౬. రాక్షసానాం వధం కృత్వా సూదయిత్వా చ రావణమ్। లంకామున్మూలితాం కృత్వా కదా ద్రక్ష్యతి మాం పతిః॥
௬. 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑌾𑌂𑌵𑌧𑌂𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌸𑍂𑌦𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌚𑌰𑌾𑌵𑌣𑌮𑍍।
𑌲𑌙𑍍𑌕𑌾𑌮𑍁𑌨𑍍𑌮𑍂𑌲𑌿𑌤𑌾𑌂𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌕𑌦𑌾𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿𑌮𑌾𑌂𑌪𑌤𑌿𑌃॥
௬. ராக்ஷஸாநாம்வதம்க்ருத்வாஸூதயித்வாசராவணம்।
லங்காமுந்மூலிதாம்க்ருத்வாகதாத்ரக்ஷ்யதிமாம்பதி꞉॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
பதி꞉	என்பர்த்தாவான (ஸ்ரீராகவன்)	உந்மூலிதாம்-க்ருத்வா	நாசமுறும்படியானதாக-செய்து
ராக்ஷஸாநாம்-வதம்-க்ருத்வா-இராக்கதரை-ஹதம்-செய்து		மாம்-கதா	என்னை-எப்பொழுது
ராவணம்ச-ஸூதயித்வா-இராவணனையும்-கொலைபுரிந்து		த்ரக்ஷ்யதி	பார்க்கப்போகிறார்.
லங்காம்	இலங்கையை		

தா-ம்.—ஹேவாதாத்மஜ! அனந்தகோடி அரக்கருக்குப்பிரபுவாய், அகிலஜனகண்டகனாய், அகண்டஸாம்பிராஜ்ஜியங்களுக் கதிபதியாய், தனக்கு நிகரொருவரில்லையென்று கெர்வித்திருக்கிற இவ்விராவணன்கண்ணெதிரிலேயே இப்பொல்லாவரக்கரையெல்லாம் மடியச்செய்து, அவனதுமகுடசிரங்களையும் வெட்டிச்சாய்த்து பூவுலகுக்கோரமராவதிபோல் செல்வம்நிறைந்து ஸுந்தரமாகவிளங்கு மிப்பெருநகரையும் பாழாக்கி யென்னையெப்பொழுது என்னுடைய நாதனிரக்ஷிப்பரோ!

౭. స వాచ్యస్సంత్వరస్వేతి యావదేవ న పూర్యతే। అయం సంవత్సరః కాలస్తావద్ధి మమ జీవితమ్॥
௭. 𑌸𑌵𑌾𑌚𑍍𑌯𑌸𑍍𑌸𑌂𑌤𑍍𑌵𑌰𑌸𑍍𑌵𑍇𑌤𑌿𑌯𑌾𑌵𑌦𑍇𑌵𑌨𑌪𑍂𑌰𑍍𑌯𑌤𑍇।
𑌅𑌯𑌂𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌃𑌕𑌾𑌲𑌸𑍍𑌤𑌾𑌵𑌦𑍍𑌧𑌿𑌮𑌮𑌜𑍀𑌵𑌿𑌤𑌮𑍍॥
௭. ஸவாச்யஸ்ஸந்த்வரஸ்வேதியாவதேவநபூர்யதே।
அயம்ஸம்வத்ஸர꞉காலஸ்தாவத்திமமஜீவிதம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
யாவத்	எவ்வளவுக்குள்ளாக	மம-ஜீவிதம்	எனக்கு-பிழைப்பு
அயம்-ஸம்வத்ஸர꞉	இந்த-வருஷரூபமான	தத꞉	ஆகையாலே
கால꞉	காலமானது	ஸந்த்வரஸ்வேதி	த்வரைசெய்யவேண்டுமென்று
நபூர்யதே	நிறையவில்லையோ	ஸ꞉-வாச்ய꞉	(உம்மால்) அந்த(ஸ்ரீராகவன்) சொல்லப்படத்தகுந்தவர்.
தாவத்ஹி	அவ்வளவுக்குள்ளேதான்		

தா-ம்.—ஹேமஹநுமந்! நீர் ஸ்ரீராகவஸந்நிதியில் விக்ஞாபிக்கவேண்டிய தென்னெனில் இவ்வர்த்தமான ஸம்வத்ஸரமுடிவுக்குள் இங்கெழுந்தருளினால் தான் ஸீதையைக்காணலாம். அதற்கப்புறம் ஒரு க்ஷணகாலங்கழித்து வந்தாலும் ஸீதையைக்காண்பதரிது. எனது ஜீவன்போய்விடும். ஆகையால் அக்காலத்திற்குள் ஸ்ரீராகவனிங்கெழுந்தருளும்படி செய்யவேண்டும்.

౮. వర్తతే దశమో మాసో ద్వౌ తు శేషౌ ప్లవంగమ। రావణేన నృశంసేన సమయో యః కృతో మమ॥

௮. 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌦𑌶𑌮𑍋 𑌮𑌾𑌸𑍋 𑌦𑍍𑌵𑍌 𑌤𑍁 𑌶𑍇𑌷𑍌 𑌪𑍍𑌲𑌵𑌙𑍍𑌗𑌮।
𑌰𑌾𑌵𑌣𑍇𑌨 𑌨𑍃𑌶𑌂𑌸𑍇𑌨 𑌸𑌮𑌯𑍋 𑌯𑌃 𑌕𑍃𑌤𑍋 𑌮𑌮॥

௮. வர்ததேதஶமோமாஸோத்வௌதுஶேஷௌப்லவங்கம।
ராவணேநந்ருஶம்ஸேநஸமயோயஃக்ருதோமம॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேப்லவங்கம	ஓவானரே!	யஃ-ஸமயஃ	எந்த-காலமானது
தஶமஃ-மாஸஃ	பத்தாவதான-மாஸமானது	மம-க்ருதஃ	எனக்கு-செய்யப்பட்டதோ
வர்ததே	நடக்கிறது	(ஸது	அதுவோவென்றால்)
ந்ருஶம்ஸேந-ராவணேந-குரூரனான-இராவணனால்		ஶேஷௌ-த்வௌ	மீதியான-இரண்டு(மாஸமிருக்கிறது.)

தா-ம்.—ஹேப்லவங்கம! எனக்கு இவ்விலங்கையில் இன்னம் ஜீவகாலமெவ்வளவென் றறிவீரோ! இக்கொடியவரக்கன் என்னையபகரித்திங்கு கொண்டுசேர்த்தவப்பொழுது யானவனுக்கபிமதையாவதற் கொருவருஷமளவிட்டான். அதற்குள் அபிமதையாகாவிடில், அக்காலங்கடந்த உத்தரக்ஷணத்தில் என்னை வதஞ்செய்யும்படி ஆக்ஞாபித்திருக்கிறான். அக்காலத்திலிப்பொழுது பத்துமாதமாய்விட்டது. இன்னமிரண்டு மாதந்தான் சேஷமிருக்கிறது. ஆகையால், மாருதே! என்னுடையநாதன அதற்குள் இங்கெழுந்தருளக் கிருபைசெய்யவேண்டும்.

౯. విభీషణేన చ భ్రాత్రా మమ నిర్యాతనం ప్రతి। అనునీతః ప్రయత్నేన న చ తత్కురుతే మతిమ్॥

௯. 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑍇𑌨 𑌚 𑌭𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑌾 𑌮𑌮 𑌨𑌿𑌰𑍍𑌯𑌾𑌤𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿।
𑌅𑌨𑍁𑌨𑍀𑌤𑌃 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌨 𑌚 𑌤𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌮𑌤𑌿𑌮𑍍॥

௯. விபீஷணேநசப்ராத்ராமமநிர்யாதநம்ப்ரதி।
அநுநீதஃப்ரயத்நேநசதத்குருதேமதிம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஸஃ	அந்த இராவணன்)	ப்ரயத்நேந	மிகயத்தினத்தோடு
ப்ராத்ரா-விபீஷணேந-உடன்பிறந்தவனான (விபீஷணனால்)		அநுநீதஶ்ச	உத்ஸாக பூர்வகமாய் திருப்பினவனாலும்
மம-நிர்யாதநம்ப்ரதி	என்னுடைய-திருப்பிக்கொடுப்பதின் பொருட்டு	தத்	அதைப்பற்றி
		மதிம்-நகுருதே	புத்தியை-செய்யவில்லை.

தா-ம்.—ஹேவானரோத்தம! இப்பொல்லா வரக்கனுக்கு விபீஷணனென்னு மோர் ஸகோதரனுண்டு. அந்த தர்மாத்மா என்னை ஸ்ரீராகவனிடத்தில் மறுபடிகொண்டு ஸமர்ப்பித்துவிடும்படி பிராதாவுக்கு மஹாப்பிரயத்தினபூர்வகமா யுபதேசித்தனர். அவரது நல்வார்த்தைகள் அந்ததுர்ப்புத்தியினிடத்திற் பயன்படவில்லை. என்னை ஸ்ரீராகவனிடத்தில் சேர்ப்பிக்கும்விஷயத்திற் கொஞ்சமேனு மவன்புத்தி யிணங்கவில்லை.

౧౦. మమ ప్రతిప్రదానం హి రావణస్య న రోచతే। రావణం మార్గతే సంఖ్యే మృత్యుః కాలవశం గతమ్॥

௧0. 𑌮𑌮 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑌂 𑌹𑌿 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯 𑌨 𑌰𑍋𑌚𑌤𑍇।
𑌰𑌾𑌵𑌣𑌂 𑌮𑌾𑌰𑍍𑌗𑌤𑍇 𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑍇 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 𑌕𑌾𑌲𑌵𑌶𑌂 𑌗𑌤𑌮𑍍॥

௧0. மமப்ரதிப்ரதாநம்ஹிராவணஸ்யநரோசதே।
ராவணம்மார்கதேஸங்க்யேம்ருத்யுஃகாலவஶம்கதம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மம	என்னுடைய	காலவஶம்	யமனுக்குஸ்வாதீனத்தை
ப்ரதிப்ரதாநம்ஹி	திருப்பிக்கொடுப்பதோவென்றால்	கதம்-ராவணம்	அடைந்த-இராவணனை
ராவணஸ்ய-நரோசதே-இராவணனுக்கு-ருசிக்கவில்லை		ஸங்க்யே-மார்கதே	யுத்தத்தில்-தேடுகிறது.
ம்ருத்யுஃ	(ஆகையால்) மிருத்தியுதேவதையானது		

தா-ம்.—ஹே ஹரிசார்த்தூல! இராவணன் ஸமாதானவழிக்கு வரப்பட்டவனல்ல. என்னை ஸ்ரீராகவனிடத்திலளிப்பது கொஞ்சமேனுமவனுக்குப் பிரியப்படவில்லை. ஹிதகரனான ஸாக்ஷாத்ஸகோதரனுடைய பத்தியவசனங்களே விஷவசனங்களாய்விட்டன. இதற்கெல்லாமவன் துஷ்காலமேகாரணம். அதித்வரையில் அவன் மிருத்தியுவாயிற்படப்போகிறான். மிருத்தியுவும் அவனது ஆருயிரைப்பறிக்க வேறுகதிகாணாது ஸ்ரீராகவயுத்தமெப்பொழுது கேரிடப்போகிறதென்று எதிர்பார்த்து நிற்கிறது.

౧౧. జ్యేష్ఠా కన్యా నలా నామ విభీషణసుతా కపే। తయా మమేదమాఖ్యాతం మాత్రా ప్రహితయా స్వయమ్॥

கக. 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾 𑌕𑌨𑍍𑌯𑌾𑌨𑌲𑌾 𑌨𑌾𑌮 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌸𑍁𑌤𑌾 𑌕𑌪𑍇।
𑌤𑌯𑌾 𑌮𑌮𑍇𑌦𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾 𑌪𑍍𑌰𑌹𑌿𑌤𑌯𑌾 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍॥

கக. ஜ்யேஷ்டாகந்யாநலாநாமவிபீஷணஸுதாகபே।
தயாமமேதமாக்யாதம்மாத்ராப்ரஹிதயாஸ்வயம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேகபே	ஓவாநர	ப்ரஹிதயா	அனுப்பப்பட்டவளாக
ஜ்யேஷ்டா	முதலில்பிறந்தவளும்	தயா	அந்த (அனலையினால்)
அநலாநாம	அனலையென்று பிரஸித்த மானவளும்	ஸ்வயம்-மம	தானே-எனக்கு
விபீஷண-ஸுதா	விபீஷணனுக்கு-புத்திரியுமான	இதம்	இந்தவக்ஷ்யமாணபிரகாரம்
கந்யா	பெண்ணானவள் (இருக்கிறாள்)	ஆக்யாதம்	சொல்லப்பட்டது
மாத்ரா	தாயானஸரமையினால்		

தா-ம்.—ஹே மஹாகபே! இராவணப்பிராதாவான விபீஷணனென்பவருக்கு ஜ்யேஷ்டபுத்திரி யொருவளிருக்கிறாள். அவளுக்கு அனலையென்றுபெயர். அக்கன்னிகையானவள் தன்மாதாவான ஸரமையினாலிவ்விடமனுப்பப்பட்டு, என்னைப்பார்த்துத் தானே மேற்சொல்லிய விஷயத்தை மொழிந்தனள்.

(அவதாரிகை.) ஸ்ரீராகவன் தன்னை யடைய விதர்க்குறியதான அவரது திவ்யகுணங்களைச் சொல்லுகிறாள்.

౧౨. అసంశయం హరిశ్రేష్ఠ క్షిప్రం మాం ప్రాప్స్యతే పతిః। అంతరాత్మా హి మే శుద్ధస్తస్మింశ్చ బహవో గుణాః॥
౧౩. ఉత్సాహః పౌరుషం సత్త్వమానృశంస్యం కృతజ్ఞతా। విక్రమశ్చ ప్రభావశ్చ సంతి వానర రాఘవే॥

கஉ. 𑌅𑌸𑌂𑌶𑌯𑌂 𑌹𑌰𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌤𑍇 𑌪𑌤𑌿𑌃।
𑌅𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌹𑌿 𑌮𑍇 𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌂𑌶𑍍𑌚 𑌬𑌹𑌵𑍋 𑌗𑍁𑌣𑌾𑌃॥

கங. 𑌉𑌤𑍍𑌸𑌾𑌹𑌃 𑌪𑍌𑌰𑍁𑌷𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌾𑌨𑍃𑌶𑌂𑌸𑍍𑌯𑌂 𑌕𑍃𑌤𑌜𑍍𑌞𑌤𑌾।
𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌶𑍍𑌚 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌵𑌾𑌨𑌰 𑌰𑌾𑌘𑌵𑍇॥

கஉ. அஸம்ஸயம்ஹரிஸ்ரேஷ்ட க்ஷிப்ரம்மாம்ப்ராப்ஸ்யதேபதி:।
அந்தராத்மாஹிமேஸுத்தஸ்தஸ்மிம்ஸ்சபஹவோகுணா:॥

கங. உத்ஸாஹ:பௌருஷம்ஸத்வமாந்ருஸம்ஸ்யம்க்ருதஜ்ஞதா।
விக்ரமஸ்சப்ரபாவஸ்சஸந்திவாநரராகவே॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹரிஸ்ரேஷ்ட	ஓவானரோத்தம!	தஸ்மிந்-ராகவே	அந்த-ஸ்ரீராகவனிடத்திலும்
பதி:	(என்) பர்த்தாவான (ஸ்ரீராகவன்)	உத்ஸாஹ:	மிக பிரயத்தினமும்
மாம்	என்னை	பௌருஷம்	பலமும்
க்ஷிப்ரம்-ப்ராப்ஸ்யதே	சீக்கிரமாக-அடையப்போகிறார்.	ஆந்ருஸம்ஸ்யம்	குரூரமின்மையும்
அஸம்ஸயம்	ஸந்தேஹமில்லை.	க்ருதஜ்ஞதா	செய்த நன்றியை மறவாமையும்
மே-அந்தராத்மாஹி	என்னுடைய-மனதோவென்றால்	விக்ரமஸ்ச	சௌரியமும்
ஸுத்த:	பரிஷ்காரமாயிருக்கிறது	ப்ரபாவஸ்ச .	மஹிமையும்
ஹேவாநர	ஓவானர!	பஹவ:-குணா:-அதிகங்களான-குணங்களும் (இருக்கின்றன.)	

தா-ம்.—ஹே வானரோத்தம! ஸ்ரீராகவ னென்னைச் சீக்கிரத்திலடைவா ரென்பதற்கு யாதொரு ஸந்தேகமுமில்லை. ஏனெனில், என தந்தராத்மாவானது யாதொரு கல்மஷமின்றி நிஷ்களங்கமாய் விளங்குகிறது. இது ஜயஸூசகமன்றோ? மேலும் எனது பர்த்தாவும் லோகநாதனுமான அப்பிரபுவினிடத்தில் இப்படிப்பட்ட ஸாதுரக்ஷணமான ஸத்காரியத்திற் பின்வாங்காரென்று நிர்ணயிக்கும்படியான திவ்யகுணங்களனேகமுள. எப்படிப்பட்ட காரியமாயினும், இதுசெய்ய எமக்குத்திறமையுண்டோவென்று கைசோர்ந்து கால்சோர்ந்து பயந்துவிடாமல் மனோதிடத்துடன் பிரயத்தனிக்கு முத்ஸாகமுடையவர். எத்தனித்தகாரியத்தினின்று பின்வாங்காத க்ஷத்திரியபௌருஷமுள்ளவர். என்னவிக்கினம் நேர்ந்தபோதிலுமவைகளையெல்லாமொழித்துக் காரியபூர்த்தி செய்யத்தகுந்தவலிவுடையவர். இக்குணங்களெவ்விஷயத்திற் பயன்படுவானேனென்று வினவுகிறீரோ, ஹநுமன்! பகவான்தயாளு, பிறர்துயரம்ஸகியார், ஸாதுக்களும்பக்தரும வருத்தமுறக்கேட்டுக் கண்துஞ்சார். "கதஞ்சிதுபகாரேண க்ருதேநைகேநதுஷ்யதி" என்கிறபடி பிறரிழைத் தஸ்வல்பவுபகாரத்தையும் ஒருபொழுதுமறவாதுஸதாஸ்மரித்திருக்கும் கிருதஜ்ஞன். இவ்விதகுணமுள்ள அத்தயாநிதி யுத்தத்தில்மஹாவீரியவான், ஸர்வசத்துருஹரன், திரைலோக்கிய பிரஸித்தமான ஆண்மையுடையவன். யுத்தத்திலனேக பிரபலசத்துருக்களை நிபாதஞ்செய்தபிரபாவமுள்ளவன். இப்பேர்ப்பட்ட மஹாகுணங்களவரிடத்துள்ளபடியாலும் எனதந்தராத்மா ஸ்புரத்தாகவிளங்குகிறபடியாலும் என்னுடையநாதன் பக்ஷையான வென்மீதுகருணைகூர்ந்து, மஹோத்ஸாகப்பிரயத்தனத்தால் இப்பெருங்கடலை யூடறுத்துக்கொண்டிங்கெழுந்தருளி விக்கிரமாதிசயத்தா லிராவணன்முடியிறக்கி என்னையடைவாரென்று நிச்சயிக்கிறேன்.

౧౪. చతుర్దశ సహస్రాణి రాక్షసానాం జఘాన యః। జనస్థానే వినా భ్రాత్రా శత్రుః కస్తస్య నోద్విజేత్॥

கச. 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑌾𑌂 𑌜𑌘𑌾𑌨 𑌯𑌃।
𑌜𑌨𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌵𑌿𑌨𑌾 𑌭𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑌾 𑌶𑌤𑍍𑌰𑍁𑌃 𑌕𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌨𑍋𑌦𑍍𑌵𑌿𑌜𑍇𑌤𑍍॥

கச. சதுர்தஶஸஹஸ்ராணிராக்ஷஸாநாம்ஜநாகயஃ।
ஜநஸ்த்தாநேவிநாப்ராத்ராஶத்ருஃகஸ்தஸ்யநோத்விஜேத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
யஃ	எந்த (ஸ்ரீராகவன்)	ஜகாந	ஸம்ஹரித்தாரோ
ஜநஸ்த்தாநே	ஜனஸ்தானத்தில்	தஸ்ய	அந்த (ஸ்ரீராகவனுக்கு)
ராக்ஷஸாநாம்	இராக்ஷதருடைய	கஃ-ஶத்ருஃ	எந்த-சத்துருதான்
சதுர்தஶ-ஸஹஸ்ராணி-பதினான்கான-ஆயிரங்களை		நோத்விஜேத்	பயப்படான்.
ப்ராத்ராவிநா	தம்பியில்லாமலே		

தா-ம்.—ஹேமாருதே! இராக்ஷதருக்குக்குடியிருப்பான ஜனஸ்தானத்தில் கரதூஷணப்பிரபிருதிகளும் அவர்களைச்சேர்ந்தோருமான பதினாலாயிரம்ரதிகளை இலக்ஷ்மணனுடைய உதவியுமின்றி தனியாய் நின்று நிராயாஸனுய் ஒருமுகூர்த்தகாலத்திற்குள்வென்றுகொன்று அதிதீப்தியமானதேஜஸ்ஸுடன் விளங்கின ஸ்ரீராகவனுடைய விக்கிரமத்தைக்கண்ட வெந்தசத்துருதான் பயப்படான்.

(அவதாரிகை.) ஸ்ரீராகவன் தன்னையடைவனென்று திடமாகச்சொன்னதற்குக் காரணஞ்சொல்லுகிருள்.

౧౫. సనశక్యస్తులయితుంవ్యసనైఃపురుషర్షభః। అహంతస్యప్రభావజ్ఞాశక్రస్యేవపులోమజా॥

கரு. 𑌸 𑌨 𑌶𑌕𑍍𑌯𑌸𑍍𑌤𑍁𑌲𑌯𑌿𑌤𑍁𑌂 𑌵𑍍𑌯𑌸𑌨𑍈𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌰𑍍𑌷𑌭𑌃।
𑌅𑌹𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌜𑍍𑌞𑌾 𑌶𑌕𑍍𑌰𑌸𑍍𑌯𑍇𑌵 𑌪𑍁𑌲𑍋𑌮𑌜𑌾॥

கரு. ஸநஶக்யஸ்துலயிதும்வ்யஸநைஃபுருஷர்ஷபஃ।
அஹம்தஸ்யப்ரபாவஜ்ஞாஶக்ரஸ்யேவபுலோமஜா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
புருஷர்ஷபஃ-ஸஃ	புருஷசிரேஷ்டரான-அந்தஸ்ரீராகவன்	புலோமஜா	இந்திராணி
வ்யஸநைஃ	ஸங்கடத்தினுல்	ஶக்ரஸ்யேவ	இந்திரனுடையபோல்
துலயிதும்	சலிக்கைக்கு	தஸ்ய	அந்த (ஸ்ரீராகவனுடைய)
நஶக்யஃ	தகுந்தவரல்ல	ப்ரபாவஜ்ஞா	மகிமையையறிந்தவள்.
அஹம்	யான்		

தா-ம்.—அப்புருஷோத்தமன் என்ன பிரமாதமான துக்கம் ஸம்பவிக்கினும் மனம் சலியாது தைரியத்தோடிருப்பவர். யானெவ்விதமறிவேனெனில் மஹேந்திரனது மஹிமையை அவரதுபத்தினியான சசிதேவியறிவதுபோல், ஸுகதுக்ககாலங்களி லிணைபிரியாது, வஸ்துவைச்சாயைபோல, பர்த்தாவை யனுஸரித்தவளானயான் நாதனுடைய பிரபாவாதியசயங்களை அனுபோகபூர்வகமாயறிந்திருக்கின்றனன்.

౧౬. శరజాలాంశుమాన్శూరఃకపేరామదివాకరః। శత్రురక్షోమయంతోయముపశోషంనయిష్యతి॥

கசா. 𑌶𑌰𑌜𑌾𑌲𑌾𑌂𑌶𑍁𑌮𑌾𑌨𑍍𑌶𑍂𑌰𑌃 𑌕𑌪𑍇 𑌰𑌾𑌮𑌦𑌿𑌵𑌾𑌕𑌰𑌃।
𑌶𑌤𑍍𑌰𑍁𑌰𑌕𑍍𑌷𑍋𑌮𑌯𑌂 𑌤𑍋𑌯𑌮𑍁𑌪𑌶𑍋𑌷𑌂 𑌨𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌿॥

கசா. ஶரஜாலாம்ஶுமாஞ்ஶூரஃகபேராமதிவாகரஃ।
ஶத்ருரக்ஷோமயம்தோயமுபஶோஷம்நயிஷ்யதி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேகபே	ஓவானர! [டைய	தோயம்	ஜலத்தை
ஶரஜாலாம்ஶுமாந்	பாணஸமூகங்களாகிற கிரணங்களையு	உபஶோஷம்	உலத்துவதை
ராமதிவாகரஃ	ராமனுகிறஸூரியன்	நயிஷ்யதி	அடைவிப்பர்.
ஶத்ருரக்ஷோமயம்	சத்துருராக்ஷஸமயமான		

தா-ம்.—ஹேமஹாகபே! கதிரவன் தனதுகிரணங்கள்ால் ஜலத்தை யாகர்ஷிப்பதுபோல் ஸ்ரீராகவனுகிறஆதித்தியன் சத்துருராக்ஷதராகிய ஜலராசியை சரங்களாகிற கிரணஸமூகங்கள்ால் க்ஷணகாலத்தில்வற்றும்படி செய்துவிடுவர்.

౧౭. ఇతిసంజల్పమానాంతాంరామార్థేశోకకర్శితామ్। అశ్రుసంపూర్ణనయనామువాచవచనంకపిః॥

கஎ. 𑌇𑌤𑌿𑌸𑌂𑌜𑌲𑍍𑌪𑌮𑌾𑌨𑌾𑌂𑌤𑌾𑌂 𑌰𑌾𑌮𑌾𑌰𑍍𑌥𑍇 𑌶𑍋𑌕𑌕𑌰𑍍𑌶𑌿𑌤𑌾𑌮𑍍।
𑌅𑌶𑍍𑌰𑍁𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌨𑌯𑌨𑌾𑌮𑍁𑌵𑌾𑌚 𑌵𑌚𑌨𑌂 𑌕𑌪𑌿𑌃॥

கஎ. இதிஸம்ஜல்பமாநாம்தாம்ராமார்த்தேஶோககர்ஶிதாம்।
அஶ்ருஸம்பூர்ணநயநாமுவாசவசநம்கபிஃ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
இதி-ராமார்த்தே	இந்தவிதம்-ஸ்ரீராகவப் பிரயோஜனத்தையும்பொருட்டு	அஶ்ருஸம்பூர்ணநயநாம்-கண்ணீரால்நிறைந்த கண்ணுடையவளுமான	
ஸம்ஜல்பமாநாம்	ஸம்பாஷிக்கிறவளும்	தாம்	அந்தபிராட்டியை
ஶோககர்ஶிதாம்	வியஸனத்தால் வாடியிருப்பவளும்	கபிஃ	ஹநுமான்
		வசநம்-உவாச	வார்த்தையை-சொன்னூர்.

தா ம்.—"தாழ்ந்துகண்ணீர்ததும்ப" என்கிறபடியே ஸ்ரீராகவவிச்லேஷத்தால் மனநொந்துதேகம்வாடி திருக்கண்களில் தாரைதாரையாய்நீர்பெருக்கி பர்த்தாதன்னைஸந்தேகமின்றி யடைவனென்பதற் குசிதமாக அவருடையவீரிய சௌரியதைரிய தயாதாக்ஷிண்ணிய கிருதஜ்ஞதை முதலிய விசேஷங்களையும் அவைகளை வெளியிட்ட அவ்வஸரங்களையும் தேனொழுகுமொழிகளாலுரைத்த பிராட்டிக்கு ஹநுமான் பிரதியுரைக்க லுற்றனர்.

౧౮. శ్రుత్వైవతువచోమహ్యంక్షిప్రమేష్యతిరాఘవః। చమూంప్రకర్షన్మహతీంహర్యృక్షగణసంకులాం॥

௧௮. 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑍈𑌵𑌤𑍁𑌵𑌚𑍋𑌮𑌹𑍍𑌯𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌮𑍇𑌷𑍍𑌯𑌤𑌿𑌰𑌾𑌘𑌵𑌃।
𑌚𑌮𑍂𑌂𑌪𑍍𑌰𑌕𑌰𑍍𑌷𑌨𑍍𑌮𑌹𑌤𑍀𑌂𑌹𑌰𑍍𑌯𑍃𑌕𑍍𑌷𑌗𑌣𑌸𑌙𑍍𑌕𑍁𑌲𑌾𑌮𑍍॥

௧௮. ஶ்ருத்வைவதுவசோமஹ்யம்க்ஷிப்ரமேஷ்யதிராகவ:।
சமூம்ப்ரகர்ஷந்மஹதீம்ஹர்யர்க்ஷகணஸங்குலாம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராகவ:	ஸ்ரீராகவன்	சமூம்	ஸைன்னியத்தை
மஹ்யம்	என்னுடைய	ப்ரகர்ஷந்-(ஸந்)	திரட்டிக்(கொண்டு)
வச:-ஶ்ருத்வா-வார்த்தையை-கேட்டு.		க்ஷிப்ரமேவ	சீக்கிரமாகவே
மஹதீம்-ஹர்யர்க்ஷகணஸங்குலாம் - அதிகங்களான-குரங்கு-கரடி இவைகளுடையஸமூகத்தால்வியாப்தமான		ஏஷ்யதி	வரப்போகிறார்.

தா-ம்.—ஹேதேவி! உமதுவிருத்தாந்தம்யாவத்தையு மடியேன் விக்கியாபிக்கக்கேட்டு ஸ்ரீராகவனுத்தரக்ஷணத்திலேயே கரடி வானரஸைன்னியங்களைத் திரட்டிக்கொண்டு உம்மைரக்ஷிக்குநிமித்த மிங்கெழுந்தருளுவார்.

౧౯. అథవామోచయిష్యామిత్వామద్యైవవరాననే। అస్మాద్దుఃఖాదుపారోహమమపృష్ఠమనిందితే॥

௧௯. 𑌅𑌥𑌵𑌾𑌮𑍋𑌚𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿𑌤𑍍𑌵𑌾𑌮𑌦𑍍𑌯𑍈𑌵𑌵𑌰𑌾𑌨𑌨𑍇।
𑌅𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌦𑍁𑌃𑌖𑌾𑌦𑍁𑌪𑌾𑌰𑍋𑌹𑌮𑌮𑌪𑍃𑌷𑍍𑌠𑌮𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑍇॥

௧௯. அதவாமோசயிஷ்யாமித்வாமத்யைவவராநநே।
அஸ்மாத்து:காதுபாரோஹமமப்ருஷ்டமநிந்திதே॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அதவா	அப்படி இல்லாவிடில்	த்வாம்	தேவரீரை
ஹேஅநிந்திதே	வாராய்நிந்திக்கத்தகாதவளே (நீர்)	அத்யைவ	இப்பொழுதே
மம-ப்ருஷ்டம்	என்னுடைய-முதுகை	அஸ்மாத்-துக்காத்	இந்த-வியஸனத்திலிருந்து
உபாரோஹ	ஏறும்	மோசயிஷ்யாமி	விலக்கிவிடுகிறேன்.
ஹேவராநநே	ஓசிறந்தமுகமுடையவளே		

தா-ம்.—தோஷரஹிதையான ஹே பவித்ரே! ஸ்ரீராகவன் தக்ஷணமெழுந்தருளாவிட்டாலும் பாதகமில்லை. காதனெப்பொழு தெழுந்தருளுவரோவென்று நீரும்பரிதபிக்கவேண்டியதில்லை.பரமபாவனரான ஸ்ரீராகவனை வகித்த அடியேனுடைய முதுகிதோயிருக்கிறது. அதன்மீதேறக் கிருபைபுரிந்தால், ஹேதிவ்விய ஸுந்தரி! க்ஷணகாலத்தி லிப்பெருங்கடலைத்தாண்டி ஸ்ரீராகவன்பக்க லும்மைச்சேர்த்து, இக்கடுந்துக்கமுழும்மைப்பாதித்ததோ வென்றெண்ணும்படி செய்துவிடுகிறேன். அப்படி கிருபைசெய்யலாமோ?

(அவதாரிகை.) தன்னைவகித்துக் கடல்தாண்டுவதெப்படியென்று பிராட்டி நினைக்கப்போகிறாளென்று அந்த சங்கையைப்பரிகரிக்கிறார்.

౨౦. త్వాంతుపృష్ఠగతాంకృత్వాసంతరిష్యామిసాగరమ్। శక్తిరస్తిహిమేవోఢుంలంకామపిసరావణామ్॥

௨௦. 𑌤𑍍𑌵𑌾𑌂𑌤𑍁𑌪𑍃𑌷𑍍𑌠𑌗𑌤𑌾𑌂𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌸𑌨𑍍𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿𑌸𑌾𑌗𑌰𑌮𑍍।
𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑌿𑌹𑌿𑌮𑍇𑌵𑍋𑌢𑍁𑌂𑌲𑌙𑍍𑌕𑌾𑌮𑌪𑌿𑌸𑌰𑌾𑌵𑌣𑌾𑌮𑍍॥

௨௦. த்வாம்துப்ருஷ்டகதாம்க்ருத்வாஸந்தரிஷ்யாமிஸாகரம்।
ஶக்திரஸ்திஹிமேவோடும்லங்காமபிஸராவணாம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அஹம்-த்வாம்	நான்-தம்மை	ஸராவணாம்	இராவணனோடுகூடின
ப்ருஷ்டகதாம்	முதுகையடைந்தவளாக	லங்காமபி	இலங்கையையும்
க்ருத்வா	செய்து	வோடும்	வகிக்க
ஸாகரம்	கடலை	மே-ஶக்தி:-அஸ்தி	எனக்கு-ஸாமர்த்தியம் - இருக்கிறது.
ஸந்தரிஷ்யாமி	தாண்டுவேன்		

தா-ம்.—ஹேதேவி! ஓரல்பவனசானுன நீஏதோசிரமப்பட்டுக்கடல்தாண்டி யிங்குவந்துவிட்டாய்.இங்கிருந்து திரும்பிப்போவதே ஸம்சயமாயிருக்க, என்னையுமுதுகில்வகித்து இக்கடல்தாண்டுவ துன்னாற்கூடுமோவென்று அதிசங்கைகொள்ளுகிறீரோ? அம்ம! அக்கவலைவேண்டாம். உமது அனுக்கிரகப்பிராப்திமாத்திர மடியேனுக்குண்டாயின், உம்மை யென்முதுகினில்வகித்து ஸாகராக்கிராந்தஞ்செய்து ஸ்ரீராகவன் பக்கல்கொண்டுசேர்ப்பது ஒருவிஷயமல்ல; கைலையைப்பேர்த்துப்பந்தாடிய பீமவிக்கிரமனான இராவண

அசேஷாகணிஸங்கியையான அரக்கருங்கிறைந்த இம்மாநகரையும் ஜலமத்தியினின்று வேரோடுபேர்த்து வகித்துக்கொண்டுபோய் ஸ்ரீராகவஸன்னிதியில்வைக்க அடியேனுக்குச் சக்தியுண்டு.

౨౧. అహంప్రస్రవణస్థాయ రాఘవాయాద్య మైథిలి। ప్రాపయిష్యామి శక్రాయ హవ్యంహుతమివానలః॥

உக. 𑌅𑌹𑌂𑌪𑍍𑌰𑌸𑍍𑌰𑌵𑌣𑌸𑍍𑌥𑌾𑌯𑌰𑌾𑌘𑌵𑌾𑌯𑌾𑌦𑍍𑌯𑌮𑍈𑌥𑌿𑌲𑌿।
𑌪𑍍𑌰𑌾𑌪𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿𑌶𑌕𑍍𑌰𑌾𑌯𑌹𑌵𑍍𑌯𑌂𑌹𑍁𑌤𑌮𑌿𑌵𑌾𑌨𑌲𑌃॥

உக. அஹம்ப்ரஸ்ரவணஸ்தாயராகவாயாத்யமைதிலி|
ப்ராபயிஷ்யாமிஶக்ராயஹவ்யம்ஹுதமிவாநலஃ||

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேமைதிலி	ஓமிதிலைதேசத்தரசன்புத்ரி	ஹவ்யமிவ	ஹோமத்திரவியம்போல்
அஹம்	நான்	ப்ரஸ்ரவணஸ்த்தாய	பிரஸ்ரவணபர்வதத்திலிருக்கிற
ஶக்ராய	இந்திரனையும்பொருட்டு	ராகவாய	ஸ்ரீராகவனையும்பொருட்டு
அநலஃ	அக்கினியானவன்	அத்ய	இப்பொழுது (தம்மை)
ஹுதம்	ஹோமம்செய்யப்பட்ட	ப்ராபயிஷ்யாமி	அடைவிப்பிக்கிறேன்.

தா-ம்.—ஹேமைதிலி! ஜ்யோதிஷ்டோமாதியாகங்களில் மஹேந்திரனையுத்தேசித்து ஆஹுதிசெய்த ஹோமத்திரவியமாகிற ஹவிஸ்ஸை அக்கினிபகவானவரிடத்திற்கொண்டு சேர்ப்பதுபோல், ப்ரஸ்ரவணகிரியில் மஹேந்திரனுக்குநிகராகவீற்றிருக்கும் ஸ்ரீராகவனுடையஸன்னிதியில், யாகசாலையிலவதரித்த பரமபவித்திரையான தேவரீரைக்கொண்டுசேர்ப்பித்து தன்னியனாகிறேன்.

౨౨. ద్రక్ష్యస్యద్యైవ వైదేహి రాఘవం సహలక్ష్మణం। వ్యవసాయసమాయుక్తం విష్ణుం దైత్యవధే యథా॥

உஉ. 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍍𑌯𑌦𑍍𑌯𑍈𑌵𑌵𑍈𑌦𑍇𑌹𑌿𑌰𑌾𑌘𑌵𑌂𑌸𑌹𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌮𑍍।
𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌂𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂𑌦𑍈𑌤𑍍𑌯𑌵𑌧𑍇𑌯𑌥𑌾॥

உஉ. த்ரக்ஷ்யஸ்யத்யைவவைதேஹிராகவம்ஸஹலக்ஷ்மணம்|
வ்யவஸாயஸமாயுக்தம்விஷ்ணும்தைத்யவதேயதா||

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேவைதேஹி	ஓஸீதே!	ஸஹலக்ஷ்மணம்	இலக்ஷ்மணரோடேகூடினவருமான
தைத்யவதே	அஸுரருடைய ஹிம்ஸையில்	ராகவம்	ஸ்ரீராகவனை
விஷ்ணும்யதா	விஷ்ணுவைப்போலே	அத்யைவ	இப்பொழுதே
வ்யவஸாயஸமாயுக்தம்-பிரயத்தினத்தோடு நன்றாய்கூடியிருக்கிறவனும்		த்ரக்ஷ்யஸி	பார்க்கப்போகிறீர்.

தா-ம்.—ஹே வைதேஹி! பூர்வத்தில் தேவசத்துருக்களான அஸுரரை விஷ்ணுவானவரெப்படி ஹிம்ஸித்தனரோ அவ்வண்ணம் ஸ்ரீராகவன் அபராதிகளான இவ்வரக்கரை இலக்ஷ்மணஸகிதராயெழுந்தருளி வதைக்கப் பிரயத்தினஞ்செய்துகொண்டிருக்கிறார். அம்மஹாபுருஷனை அதிசீக்கிரத்திலிங்குதரிசிக்கப் போகிறீர்.

౨౩. త్వద్దర్శనకృతోత్సాహమాశ్రమస్థం మహాబలం। పురందరమివాసీనం నాకరాజస్య మూర్ధని॥

உங. 𑌤𑍍𑌵𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌕𑍃𑌤𑍋𑌤𑍍𑌸𑌾𑌹𑌮𑌾𑌶𑍍𑌰𑌮𑌸𑍍𑌥𑌂𑌮𑌹𑌾𑌬𑌲𑌮𑍍।
𑌪𑍁𑌰𑌨𑍍𑌦𑌰𑌮𑌿𑌵𑌾𑌸𑍀𑌨𑌂𑌨𑌾𑌕𑌰𑌾𑌜𑌸𑍍𑌯𑌮𑍂𑌰𑍍𑌧𑌨𑌿॥

உங. த்வத்தர்ஶநக்ருதோத்ஸாஹமாஶ்ரமஸ்த்தம்மஹாபலம்|
புரந்தரமிவாஸீநம்நாகராஜஸ்யமூர்த்தநி||

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆஶ்ரமஸ்த்தம்	ப்ரஸ்ரவணபர்வத ஆஸனத்திலிருக்கிறவராகையால்	த்வத்தரஶநக்ருதோத்ஸாஹம் - உம்முடையபார்வையிலுத்ஸாஹமுடையவரும்	
நாகராஜஸ்ய	தேவராஜாவின் ஸ்தானத்தினுடை	மஹாபலம்	பெருவலிவுடையவருமான
மூர்த்தநி	சிரஸில் [ய	(ராகவம்)	(ஸ்ரீராகவனை)
ஆஸீநம்-புரந்தரமிவ	உட்கார்ந்திருக்கிற - இந்திரனைப்போல் (இருக்கிறவரும்)	(த்ரக்ஷ்யஸி)	(பார்க்கப்போகிறீர்.)

தா-ம்—நாகமென்கிற ஓராஸனவிசேஷத்தின்மீது பெருமையோடுவீற்றிருக்கு மும்பர்கோமானைப்போல் ப்ரஸ்ரவணகிரியின்மீது தேவியைப்பார்க்கவேண்டுமென்கிற பரமோத்ஸாகத்துடனும், அதற்கிடையிலுள்ள சத்துருக்களையெல்லா மொழிக்கவல்ல பராக்கிரமத்துடனு மெழுந்தருளியிருக்கிற அப்பரமோதாரனை அதித்வரையிலேயே காணப்போகிறீர்.

౨౪. పృష్ఠమారోహ మే దేవి మా వికాంక్షస్వ శోభనే। యోగమన్విచ్ఛ రామేణ శశాంకేనేవ రోహిణీ॥

உச. 𑌪𑍃𑌷𑍍𑌠𑌮𑌾𑌰𑍋𑌹𑌮𑍇𑌦𑍇𑌵𑌿𑌮𑌾𑌵𑌿𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌸𑍍𑌵𑌶𑍋𑌭𑌨𑍇।
𑌯𑍋𑌗𑌮𑌨𑍍𑌵𑌿𑌚𑍍𑌛𑌰𑌾𑌮𑍇𑌣𑌶𑌶𑌾𑌙𑍍𑌕𑍇𑌨𑍇𑌵𑌰𑍋𑌹𑌿𑌣𑍀॥

உச. ப்ருஷ்டமாரோஹமேதேவிமாவிகாங்க்ஷஸ்வஶோபநே।
யோகமந்விச்சராமேணஶஶாங்கேநேவரோஹிணீ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹே ஶோபநே	மங்களஸ்வரூபியான	ஶஶாங்கேந	மதியோடு
ஹே தேவி	ஓ ஸீதே	ரோஹிணீவ	ரோஹிணீதேவிபோல்
மே-ப்ருஷ்டம்-ஆரோஹ-என்னுடைய-முதுகை-ஏறும்		ராமேண	ஸ்ரீராகவனோடு
மாவிகாங்க்ஷஸ்வ	உபேக்ஷியாதேயும்	யோகம்-அந்விச்ச	சேருதலை-தேடும்.

தா-ம்.—நித்தியமங்களகரமான ஹே ஸீதே! இவ்வானர னேதோசொல்லுகிறுனென் றடியேனே யுபேக்ஷிக்கவேண்டாம். எனது முதுகின்மீதெழுந்தருளக் கிருபைபுரியும். அடியேனும்மைவகித்துப்போய், சந்திரனோடு ரோகிணீதேவியைச் சேர்ப்பதுபோல், அபூர்ணேந்துவதனனான ஸ்ரீராகவனோடும்மைச் சேர்த்துவிடுகிறேன். அம்மஹாபுருஷனோடு சேர்ந்து வாழ்வந்தக்கோரும்.

౨౫. కథయంతీవ చంద్రేణ సూర్యేణ చ మహార్చిషా। మత్పృష్ఠమధిరుహ్య త్వం తరాకాశమహార్ణవౌ॥

உ௫. 𑌕𑌥𑌯𑌨𑍍𑌤𑍀𑌵 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌣 𑌸𑍂𑌰𑍍𑌯𑍇𑌣 𑌚 𑌮𑌹𑌾𑌰𑍍𑌚𑌿𑌷𑌾।
𑌮𑌤𑍍𑌪𑍃𑌷𑍍𑌠𑌮𑌧𑌿𑌰𑍁𑌹𑍍𑌯 𑌤𑍍𑌵𑌂 𑌤𑌰𑌾𑌕𑌾𑌶𑌮𑌹𑌾𑌰𑍍𑌣𑌵𑍌॥

உ௫. கதயந்திவசந்த்ரேணஸூர்யேணசமஹார்சிஷா।
மத்ப்ருஷ்டமதிருஹ்யத்வம்தராகாஶமஹார்ணவௌ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
த்வம்	தேவரீர்	கதயந்திவ	வார்த்தைசொல்லுகிறவள்போல்
மத்ப்ருஷ்டம்-அதிருஹ்ய-என்முதுகை-ஏறி		அகாஶமஹார்ணவௌ - ஆகாசத்தையும்மஹாஸமுத்திரத்தையும்	
மஹார்சிஷா-சந்த்ரேண - வெகுகிரணங்களையுடைய-மதியோடும்		தர	தாண்டும்.
ஸூர்யேணச	ஆதித்யனோடும்		

தா-ம்.—ஹே தேவி! உம்மையடியேன்வகித்தேகுகையில் இராக்கதர்கண்டுவிட்டாலென்னமோசம்வந்துவிடுமோவென்று பயப்படுகிறீரோ? அந்தபயம் வேண்டாம். என்முதுகினில் தேவரீரெழுந்தருளியவுடன் பூமண்டலத்தைவிட்டு கருத்மானினுமதிவேகவானாய் சந்திரார்க்கமண்டலங்களை யளாவி, அச்சந்திர ஸூரியரோடு நீர் ஸம்பாஷிப்பதுபோற் றோற்றும்படி அவ்வளவு உன்னதமாகக் கிளம்புவேன். ஆகையால், ஹே கல்யாணி! என்மீதெழுந்தருளி ஆகாசகமனத்தா லிக்கடலைத் தாண்டவருள்புரியீர்.

(அவதாரிகை.) இலங்கையிலிருக்கு மரக்கரால் பயம்நேரிடுமோவென்கிற சங்கையைப்பரிகரிக்கிறார்.

౨౬. న హి మే సంప్రయాతస్య త్వామితో నయతోఽంగనే। అనుగంతుం గతిం శక్తాస్సర్వే లంకానివాసినః॥

உ௬. 𑌨 𑌹𑌿 𑌮𑍇 𑌸𑌂𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌸𑍍𑌯 𑌤𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍋 𑌨𑌯𑌤𑍋𑌽𑌙𑍍𑌗𑌨𑍇।
𑌅𑌨𑍁𑌗𑌨𑍍𑌤𑍁𑌂 𑌗𑌤𑌿𑌂 𑌶𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌲𑌙𑍍𑌕𑌾𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑌃॥

உ௬. நஹிமேஸம்ப்ரயாதஸ்யத்வாமிதோநயதோங்கநே।
அநுகந்தும்கதிம்ஶக்தாஸ்ஸர்வேலங்காநிவாஸிந:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹே அங்கநே	ஓ சரீரஸௌஷ்டவ முடையவளே?	கதிம்	கமனத்தை
இத:	இவ்விடத்திலிருந்து	அநுகந்தும்	அநுஸரிப்பதற்கு
த்வாம்-நயத:	தம்மை-எடுத்துக்கொண்டவனாய்	லங்காநிவாஸிந:-ஸர்வே-இலங்கையில் வஸிக்கிற-எல்லோரும்	
ஸம்ப்ரயாதஸ்ய	நன்றாகப்பிரயாணமாகிபோகுகின்ற	நஶக்தாஹி	சக்தியல்லரன்றோ.
மே	என்னுடைய		

தா-ம்.—திவ்வியலக்ஷணஸம்பன்னையாக விளங்கும் ஹே சோபனங்கி! உம்மை யிம்முதுகினில்வகித்து ஸ்ரீராகவஸன்னிதிக்குப் புறப்படு மடியேனுடைய கமனத்தையனுஸரித்துத் தடுப்பதற்கு இவ்விலங்கையில்வாழு மிக்ஷுத்திரவரக்கர் வல்லரோ? என்னுடைய கமனவேகமெங்கே, இவ்வல்பருடைய ஸாமர்த்தியமெங்கே! ஆகையால் ஹே தேவி! இவ்வரக்கரா லுபத்திரவம் நேரிடுமென்று யோசிக்கவேண்டாம்.

౨౭. యథైవాహమిహ ప్రాప్తస్తథైవాహమసంశయః। యాస్యామి పశ్య వైదేహి త్వాముద్యమ్య విహాయసమ్॥

உ௭. 𑌯𑌥𑍈𑌵𑌾𑌹𑌮𑌿𑌹 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌸𑍍𑌤𑌥𑍈𑌵𑌾𑌹𑌮𑌸𑌂𑌶𑌯𑌃।
𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 𑌪𑌶𑍍𑌯 𑌵𑍈𑌦𑍇𑌹𑌿 𑌤𑍍𑌵𑌾𑌮𑍁𑌦𑍍𑌯𑌮𑍍𑌯 𑌵𑌿𑌹𑌾𑌯𑌸𑌮𑍍॥

உ௭. யதைவாஹமிஹப்ராப்தஸ்ததைவாஹமஸம்ஶய:।
யாஸ்யாமிபஶ்யவைதேஹித்வாமுத்தம்யவிஹாயஸம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹே வைதேஹி-யதா	ஓ ஸீதே!-எப்படி	த்வாம்-உத்யம்ய	தம்மை-எடுத்துக்கொண்டு
அஹம்-இஹ-ப்ராப்த: - நான்-இங்கு-வந்தேனோ		விஹாயஸம்	ஆகாயத்தை (பற்றி)
ததைவ-அஹம்-அஸம்ஶய:-அப்படியே-யான்-நிச்சயமாக		யாஸ்யாமி-பஶ்ய	செல்லுகிறேன்-பாரும்.

தா-ம்.—விதேகத்தரசன்வம்சம்விளங்கவந்தவதரித்த ஹே பவித்ரே! அடியேனிப்பெருங்கடலைத்தாண்டி யெப்படி அனுஜ்ஞையிங்குவந்தேனோ அவ்வண்ணமே இம்முதுகிலும்மைவகித்து சிரமமடையாது ஆகாயத்தையளாவிச் செல்லுகிறேன் பார்க்கலாம். அல்லது ஆகாசமார்க்கமாயிக் கடல்தாண்டி இக்காமுழுதுஞ்சுற்றித்திரிந்து இராவணனுடைய புரமுழுதும் பரிசோதித்து இவ்வளவும் யாவர்கண்ணுக்கும் புலப்படாது செய்து இங்கெப்படிவந்து தெண்டன்ஸமர்ப்பித்தேனோ அவ்வண்ணமே உம்மையிம்முதுகினில்வகித்து யாவருமறியாது ஆகாயத்திற் கிளம்பிப்போய்விடுகிறேன். அல்லது, யானிங்குவருகையில் உம்மையெப்படி தரிசிப்பேனென்கிற சிந்தையால் உமது திவ்யமங்கள விக்கிரகத்தை மனதிலெழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்தேன். இப்பொழுதுமப்படியே அந்ததிவ்யமங்களவிக்கிரகத்தை முதுகினில்வகித்துப் போகிறேன். ஆனால் ஓர்வித்தியாஸமுண்டு. வருகையில் கவலையால்மனமுடைந்துவந்தேன். இப்பொழுதோ ஸர்வசோகநிவாரணசக்தையான தேவரீரைஸேவித்து ஸகலகவலைகளும் நீங்கினேன், உத்ஸாகத்தால் தேஜோபலவிர்த்தியடைந்தேன். முன்னிலுமதி தீவிரத்தோடு தேவியைவகித்து ஆகாசமார்க்கமாய்ச் செல்லமாட்டுவேன்.

౨౮. మైథిలీ తు హరిశ్రేష్ఠాచ్ఛ్రుత్వా వచనమద్భుతమ్। హర్షవిస్మితసర్వాంగీ హనుమంతమథాబ్రవీత్॥

உஅ. மைதிலீ து ஹரிஶ்ரேஷ்டாச்ச்ருத்வா வசநமத்புதம்।
ஹர்ஷவிஸ்மிதஸர்வாங்கீ ஹநுமந்தமதாப்ரவீத்॥

உஅ. மைதிலீதுஹரிஶ்ரேஷ்டாத்ச்ருத்வாவசநமத்புதம்।
ஹர்ஷவிஸ்மிதஸர்வாங்கீஹநுமந்தமதாப்ரவீத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அத-மைதிலீ து	பிறகு-பிராட்டியானவள்	ஹர்ஷவிஸ்மிதஸர்வாங்கீ	ஸந்தோஷத்தால் மயிர்க்குச்சறைந்தஸமஸ்த அவயவமுடையவளாக
ஹரிஶ்ரேஷ்டாத்	வானரசிரேஷ்டனிடத்திலிருந்து		
அத்புதம்-வசநம்	ஆச்சரியமான-வார்த்தையை	ஹநுமந்தம்	ஹனுமானைக் (குறித்து)
ஶ்ருத்வா	கேட்டு.	அப்ரவீத்	(பின்வருமாறு) மொழிந்தனள்.

தா-ம்.—இந்தவிதம் தேவரீரையிம்முதுகினிலெழுந்தருளப்பண்ணிக்கொண்டு அரக்கரனுகாவண்ணம் ஸோமார்க்கமண்டலங்கள் செல்லுமுன்னதமான ஆகாசவீதியையடைந்து அவ்வழியாலிக்கடல்தாண்டி நாதனிடம் சேர்ப்பிக்கிறேனென்று பயமின்றிச்சொல்லிய ஹநுமானுடைய தைரியவசனங்களைக்கேட்டபிராட்டி மிகவுமானந்தித்தாள், ஆச்சரியமடைந்தாள், இப்படி மஹாபராக்கிரமசாலியான வோர்வானரன் நமது பர்த்தாவுக்கு தாஸனுயமைந்தனனேயென்று தேகம்பூரித்து ஸந்தோஷபரவசையானாள். இவ்விதமானந்தஸாகரத்தில்மூழ்கியபிராட்டி ஹநுமானைக்குறித்துப் பின்வருமாறு பிரதியுரைக்கவாரம்பித்தனள்.

౨౯. హనుమన్ దూరమధ్వానం కథం మాం వోఢుమిచ్ఛసి। తదేవ ఖలు తే మన్యే కపిత్వం హరియూథప॥

உகூ. ஹநுமந் தூரமத்வாநம் கதம் மாம் வோடுமிச்சஸி।
ததேவ கலு தே மந்யே கபித்வம் ஹரியூதப॥

உகூ. ஹநுமந்தூரமத்வாநங்கதம்மாம்வோடுமிச்சஸி।
ததேவகலுதேமந்யேகபித்வம்ஹரியூதப॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹே ஹநுமந்	ஓ ஹனுமானே	ஹே ஹரியூதப	ஓ வானரத்தலைவனே
தூரம்-அத்வாநம்	தூரமான-வழியை	ததேவ	(ஆகையாலே) அதையே
மாம்-வோடும்	என்னை-எடுத்து (போக)	தே-கபித்வம்	உன்னுடைய-வானரச்செய்கையாக
கதம்-இச்சஸி	எப்படி-இச்சிக்கிறாய்	மந்யே	எண்ணுகிறேன்.

தா-ம்.—ஹேவானரர்ஷப! மஹாராக்ஷஸபரிபாலிதமான இக்நகரையும் இதன்கடுங்காவலையும் இராவணனது பீமவிக்கிரமத்தையும் இவ்வாழ்கடலின் சதயோஜன விஸ்தீர்ணத்தையுங்கண்டோ இவ்வார்த்தை சொன்னீர். இவ்வரக்கரினின்று தப்புவதெப்படி? இதுவுமென்ன கிஷ்கிந்தாராஜ்ஜியமென் றெண்ணினீரோ! அப்படி தப்பினும் தனியாய் யாதொருபாரமின்றிக்கே தாண்டவரிதான இவ்வபாரக்கடலை என்னைவகித்துக் கொண்டு தாண்டுவதெப்படி? ஒருகாதமிரண்டுகாதமோ! நூறுகாதமாயிற்றே! நீராவதுஎன்னைவகித்துக்கொண்டக் கரைசேருவதாவது! இதுதான் உங்கள் ஜாதிஸ்வபாவமான வானரபுத்தியென்கிறது. ஆகையால், ஹநுமன்! புத்திசாபல்யங்கொண்டு பலாபலத்தையோசியாது இவ்வித மொழிந்தீரென்றெண்ணுகிறேன்.

(அவதாரிகை.) நீரென்னை வகித்தேகும்படியான தேகத்தையுமக்குக் காணேமேயென்கிறாள்.

౩౦. కథం వాల్పశరీరస్త్వం మామితో నేతుమిచ్ఛసి। సకాశం మానవేంద్రస్య భర్తుర్మే ప్లవగర్షభ॥

௩0. கதம் வால்பஶரீரஸ்த்வம் மாமிதோ நேதுமிச்சஸி।
ஸகாஶம் மாநவேந்த்ரஸ்ய பர்துர்மே ப்லவகர்ஷப॥

௩0. கதம்வால்பஶரீரஸ்த்வம்மாமிதோநேதுமிச்சஸி।
ஸகாஶம்மாநவேந்த்ரஸ்யபர்துர்மேப்லவகர்ஷப॥

பதம்.	உரை.	பதம்	உரை.
ஹேப்லவகர்ஷப	ஓவானரோத்தம	மே-பர்துஃ-ஸகாஶம்	என்னுடைய நாயகனுடைய-ஸமீபத்
அல்பஶரீரঃ-த்வம்	சின்ன சரீரமுடைய-நீயானவன்	நேதும்	அடைவிப்பிக்கையை [தை
இதঃ-மாம்	இங்கிருந்து-என்னை	கதம்வா-இச்சஸி	எப்படிதான்-கோரினாய்.
மாநவேந்த்ரஸ்ய	நராதிபரான		

தா-ம்.—என்னை வகித்துக்கொண்டுபோகவல்லனென்றீரோ. ஹே வாநரோத்தம! கேவலம் ஸூக்ஷ்ம சரீரமுடைய நீரெப்படி என்னைக்கொண்டு அம்மனுஜேந்திரனை ஸ்ரீராகவனுடைய ஸன்னிதியில்சேர்க்க ஸமர்த்தராவீர்.

3౧. సీతాయా వచనం శ్రుత్వా హనుమాన్మారుతాత్మజః। చింతయామాస లక్ష్మీవాన్నవం పరిభవం కృతమ్॥

௩௧. ஸீதாயாவசநம்ஶ்ருத்வா ஹநூமாந்மாருதாத்மஜঃ।
சிந்தயாமாஸ லக்ஷ்மீவாந்நவம்பரிபவம்க்ருதம்॥

ஸ:ஹி	அந்த ஸ்ரீராகவனேயென்றல்	ஹேஜநகநந்திநி	ஓஜாநகி
ஸாகரபர்யந்தாம்-மஹீம்-கடலைமுடிவாயுடைய-பூமியை		த்வந்நிமித்த:	உம்முடையநிமித்தமாக
ஶாஸிதும்	இரக்ஷிப்பதற்கு	ராமஸ்ய-ஜய:	ஸ்ரீராகவனுக்கு-ஜயமானது
ஈஹதே	ஸமர்த்தராகிறர்	(பவிஷ்யதி)	(உண்டாகப்போகிறது.)

தா-ம்—ஸாகரபரியந்த வியாப்தமான இவ்வியனுலகை அகிலப்பிராணிகளு மானந்தமுறும்படி வொருகுடைக்கீழாளத் திறமைபூண்டவரொன்று ஸ்ரீராகவனேற்கனவே பிரஸித்தி பெற்றிருக்கிறர். இப்பொழுது, ஹே ஜனகநந்தினி! ஹே உத்தம்குலப்பிரஸூதே! பெற்றேர்க்குப் பேரானந்தம் விளைவிக்கும் பெண்ணரயகமே! தேவரீரது நிமித்தம், பார்வதிரமணனையே க்ஷணகால மசைத்தாடும்படி கைலையைப்பேர்த்துப் பந்தாடிய பிமவிக்கிரமனுன இராவணனை ஹரித்த விஜயராகவனென்கிற கீர்த்தியைப்பெறப்போகிறராக்காகுஸ்தன்.

౧౮. తస్యతద్వచనంశ్రుత్వాసమ్యక్సత్యంసుభాషితమ్। జానకీబహుమేనేథవచనంచేదమబ్రవీత్॥

௧௮. 𑌤𑌸𑍍𑌯𑌤𑌦𑍍𑌵𑌚𑌨𑌂𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌸𑌤𑍍𑌯𑌂𑌸𑍁𑌭𑌾𑌷𑌿𑌤𑌮𑍍।
𑌜𑌾𑌨𑌕𑍀𑌬𑌹𑍁𑌮𑍇𑌨𑍇𑌥𑌵𑌚𑌨𑌂𑌚𑍇𑌦𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥

௧௮. தஸ்யதத்வசநம்ஶ்ருத்வாஸம்யக்ஸத்யம்ஸுபாஷிதம்।
ஜாநகீபஹுமேநேதவசநம்சேதமப்ரவீத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அத-ஜாநகீ	பிறகு-ஸீதையானவள்	ஶ்ருத்வா	கேட்டு
ஸம்யக்-ஸத்யம்	நலமாயும்-யதார்த்தமாயும்	பஹுமேநே	ஆதரித்தனள்
ஸுபாஷிதம்	நன்றாகச்சொல்லப்பட்டதும்	இதம்	இனி வரப்போகிறதான
தத்	பூர்வோக்தமுமான	வசநம்ச	வார்த்தையையும்
தஸ்ய-வசநம்	அந்த(ஹநுமாருடைய) வார்த்தையை	அப்ரவீத்	சொன்னுள்.

தா-ம்—இவ்விதம் கர்ணனந்தகரமாயும் அதிநலமாயும் ஸத்தியபரமாயுமுள்ள ஹநுமானுடைய திடமொழிகளைப் பிராட்டி திருச்செவிசாற்றி மிகவும் பகுமானித்துப் பின்வருமாறு மொழிந்தனள்.

౧౯. తతస్తంప్రస్థితంసీతావీక్షమాణాపునఃపునః। భర్తృస్నేహాన్వితంవాక్యంసౌహార్దాదనుమానయత్॥

௧௯. 𑌤𑌤𑌸𑍍𑌤𑌂𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌂𑌸𑍀𑌤𑌾𑌵𑍀𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌾𑌪𑍁𑌨𑌃𑌪𑍁𑌨𑌃।
𑌭𑌰𑍍𑌤𑍃𑌸𑍍𑌨𑍇𑌹𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌂𑌵𑌾𑌕𑍍𑌯𑌂𑌸𑍌𑌹𑌾𑌰𑍍𑌦𑌾𑌦𑌨𑍁𑌮𑌾𑌨𑌯𑌤𑍍॥

௧௯. ததஸ்தம்ப்ரஸ்திதம்ஸீதாவீக்ஷமாணாபுந:புந:।
பர்த்ருஸ்நேஹாந்விதம்வாக்யம்ஸௌஹார்தாதநுமாநயத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ததஃ-ஸீதா	பிறகு-பிராட்டியானவள்	பர்த்ருஸ்நேஹாந்விதம்-பர்த்தாவினுடைய ஸ்நேகத்தோடு கூடின	
ப்ரஸ்த்திதம்-தம்	பிரயாணமான - அந்த (ஹநுமானை)	வாக்யம்	வாக்கியத்தை
புநஃபுநஃ	அடிக்கடி	ஸௌஹார்தாத்	ஸ்நேகத்தால்
வீக்ஷமாணா	பார்க்கிறவளாக	அநுமாநயத்	ஆதரித்தனள்.

தா-ம்—ஸீதாதர்சனர்த்த மிலங்கைக்கேகிய அவ்வானரோத்தமன், தாம் வந்த காரியம் நிறைவேறி, சூடாமணியையும் ஸ்ரீராமலக்ஷ்மணனுக்கு அபிவாதனகுசலங்களையும் அவளிடத்தினின்று பெற்று, அவ்வாரிய புத்திரர் ஸந்நிதியையடையப் புறப்படுகையில், பிராட்டி யவனை அடிக்கடி பார்த்து பர்த்திருகுணகீர்த்தனம பண்ணுகிற இந்த ஸாது போய்விடுகிறாரே, ஸ்ரீராகவகதாசிரவணத்தால் இனனம் சிறிதுகாலம் துக்கமின்றி வஸிக்கலாமே, என்றிவ்விதம் பர்த்திருஸ்னேகாதிசயத்தால் ஹநுமானுக்கு விடைகொடுக்க விருப்பமுறாதவளாய் மிகுந்த ஆதரத்துடன் ஸ்ரீராகவபரமான சிலவார்த்தைகளைப் பின்வருமாறு மொழிந்தனள்.

௨௰. యదివా మన్యసే వీర వసైకాహమరిందమ। కస్మింశ్చిత్సంవృతే దేశే విశ్రాంతశ్శ్వో గమిష్యసి॥

௨௰. 𑌯𑌦𑌿𑌵𑌾𑌮𑌨𑍍𑌯𑌸𑍇𑌵𑍀𑌰𑌵𑌸𑍈𑌕𑌾𑌹𑌮𑌰𑌿𑌨𑍍𑌦𑌮।
𑌕𑌸𑍍𑌮𑌿𑌂𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌸𑌂𑌵𑍃𑌤𑍇𑌦𑍇𑌶𑍇𑌵𑌿𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌃𑌶𑍍𑌵𑍋𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌸𑌿॥

௨௰. யதிவாமந்யஸேவீரவஸைகாஹமரிந்தம।
கஸ்மிம்ஶ்சித்ஸம்வ்ருதேதேஶேவிஶ்ராந்தஶ்வோகமிஷ்யஸி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அரிந்தம	பகைபாளியையொழிக்கவல்ல	ஸம்வ்ருதே-தேஶே	கொடிகள்முதலானவைகளால்மறைக்கப்பட்ட-ஸ்தலத்தல்
ஹேவீர	ஓ வீர	விஶ்ராந்தஃ	இளைப்பாறினவராக
மந்யஸேயதிவா	அநுப்புத்திரவேண்டுமென்று இச்சித்திராகில்	ஶ்வஃ-கமிஷ்யஸி	நாளையதினம்-போகக்கடவீர்
கஸ்மிஞ்ஶ்சித்	ஓரானொரு	யேகாஹம்-வஸ	ஒருநாள்-இரும்.

தா-ம்—ஹே பராக்கிரமசாலிந்! என்னிமித்தம் மிக சிரமப்பட்டீர். ஏகதினத்தில் ஒருராத்திரியில், இப்பெருநீர் கடந்து, இம்மாநகரில் திரிந்து படாதனபட்டுப் பெருங்காரியத்தை முடித்தீர். ஆகையால் மிக ஆயாஸமடைந்திருப்பீர். ஆயாஸங் கொஞ்சமாறிப் புறப்பட விருப்பமிருந்ததாயின், ஹே கபிஸத்தம! இவ் விநோதவனத்தில், கொடியிலைகள் சூழ்ந்து யாவர்க்கும் புலப்படாது விளங்குமோரேகாந்தஸ்தலத்தில் இன்றையதினமாத்திரந் தங்கியிருந்து நாளையதினம் புறப்பட்டுப்போகலாம். ஒருதினமாத்திரம் இவ்விடத்தில் வஸியும்.

௨௧. మమ చేదల్పభాగ్యాయాః సాన్నిధ్యాత్తవ వానర। అస్య శోకస్య మహతో ముహూర్తం మోక్షణం భవేత్॥

௨௧. 𑌮𑌮𑌚𑍇𑌦𑌲𑍍𑌪𑌭𑌾𑌗𑍍𑌯𑌾𑌯𑌾𑌃𑌸𑌾𑌨𑍍𑌨𑌿𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌵𑌵𑌾𑌨𑌰।
𑌅𑌸𑍍𑌯𑌶𑍋𑌕𑌸𑍍𑌯𑌮𑌹𑌤𑍋𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌂𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌂𑌭𑌵𑍇𑌤𑍍॥

௨௧. மமசேதல்பபாக்யாயாஸ்ஸாந்நித்யாத்தவவாநர।
அஸ்யஶோகஸ்யமஹதோமுஹூர்த்தம்மோக்ஷணம்பவேத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேவாநர	வாநீர்ஹநுமானே!	அஸ்ய-ஶோகஸ்ய	இந்த-துக்கத்தினுடைய
அல்பபாக்யாயாஃ-மம	ஸ்வல்பபாக்கியமுடையவளான-என்னுடைய	மோக்ஷணம்-பவேத்சேத்-விடுகையானது- உண்டாயிற்றாகில்	
மஹதஃ	பெரிதான	தவ-ஸாந்நித்யாத்	உம்முடைய-ஸன்னிதியிலிருந்து
		முஹூர்த்தம்	சீக்கிரமாக (உண்டாகவேண்டும்)

தா-ம்—வானரபுங்கவ! யான் பாக்கியசூன்னியை. பெருந்துயருக்கிலக்கானவள். இப்பெருந்துயரினின்று விடுபட்டு ஸ்ரீராகவஸந்நிதியை யடையும்படியான புண்ணியவிசேஷ மிவ்வேழைக் கிருக்குமாயின், ஹே ஹநுமன்! அது உம்முடைய ஸாந்நித்தியத்தாலேதான் த்வரையிலுண்டாகவேண்டும்.

௨௨. గతే హి హరిశార్దూల పునరాగమనాయ తు। ప్రాణానామపి సందేహో మమ స్యాన్నాత్ర సంశయః॥

௨௨. 𑌗𑌤𑍇𑌹𑌿𑌹𑌰𑌿𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲𑌪𑍁𑌨𑌰𑌾𑌗𑌮𑌨𑌾𑌯𑌤𑍁।
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑌾𑌮𑌪𑌿𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑍋𑌮𑌮𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌰𑌸𑌂𑌶𑌯𑌃॥

௨௨. கதேஹிஹரிஶார்த்தூலபுநராகமநாயது।
ப்ராணாநாமபிஸந்தேஹோமமஸ்யாந்நாத்ரஸம்ஶய:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹே ஹரிஶார்த்தூல	ஓ வானரசிரேஷ்டரே!	மம-ப்ராணாநாமபி	என்னுடைய-பிராணத்திற்கும்
கதே (ஸதி)	(நீர்) போனவராக [வில்)	ஸந்தேஹஃ-ஸ்யாத்	ஸந்தேகமானது-ஆகும்
புநஃ	மறுபடியும்	அத்ர-ஸம்ஶயஃ-ந	இதுவிஷயத்தில்-ஸந்தேகமானது-இல்லை.
ஆகமநாய	வருவதற்கு (எத்தனிக்கானின்றவள		

தா-ம்—ஹநுமன்! நீர் கிட்கிந்தைசேர்ந்து ஸ்ரீராகவனுக்கெனது நிலைமையறிவித்து மறுபடி யிங்கு திரும்புவதற்குள் எனது பிராணன் நிற்பது ஸந்தேகந்தான், அதற்கொரு ஸம்சயமுமில்லை. ஆகையால், எனது பிராணனுக்கு விபத்து வராமுன் ஸ்ரீராகவனிங்கெழுந்தருளும்படி செய்யும்.

௨௩. తవాదర్శనజశ్శోకో భూయో మాం పరితాపయేత్। దుఃఖాద్దుఃఖపరామృష్టాం దీపయన్నివ వానర॥

௨௩. தவாத³ர்ஶநஜஶ்ஶோகோ பூ⁴யோ மாம் பரிதாபயேத்।
து³:கா²த்³து³:க²பராம்ருஷ்டாம் தீ³பயந்நிவ வாநர॥

௨௩. தவாதர்சநஜச்சோகோபூயோமாம்பரிதாபயேத்।
துஃக்காதுஃக்கபராம்ருஷ்டாம்தீபயந்நிவவாநர॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹே வாநர	ஓ ஹநுமானே!	துஃக்கபராம்ருஷ்டாம்-மாம்	அதிகதுக்கத்தால் ஸ்பரிசிக்கப்பட்டிருக்கிற என்னை
தவ-அதர்சநஜஃ-சோகஃ-	உம்முடைய-பாராமையாலுண்டான-துக்கமானது	தீபயந்நிவ	கொளுத்துவதுபோல்
துஃக்காத்	முன் துக்கத்தைக்காட்டிலும்	பூயஃ-பரிதாபயேத்	மறுபடி-நன்றாய் பரிதபிக்கச்செய்யும்.

தா-ம்—ஹே வானரபுங்கவ! சற்றுநேரத்திற்குமுன் இவ்விராவணராக்ஷஸிகளுடைய ஹிம்ஸையாலும் ஸ்ரீராகவதர்சனாபாவத்தாலும் மனநொந்து கற்கதிக்கு ஹேதுகாணுது பிராணவினியோகஞ் செய்துகொள்ள இம்மரத்தடியில் ஸித்தமாயிருக்கையில், காளமேகவருஷம்போல் ஸ்ரீராகவ கதாமிருதத்தை வருஷித்துப் பிறகு உமது ஸந்தர்சனத்தா லானந்தந்தந்தீர். இப்பொழுது போய்விடுகிறீர். இனி பூர்வதுக்கமானது, மிகவும் விர்த்தியடைந்து தகிக்கு மக்கினிபோல், என்னைத் தபிக்கப்போகிறது. மத்தியில் கொஞ்சம் ஸுகமனுபவித்தவரைத் துக்கமதிகமாகப் பீடிக்குமாதலால் நீர் போய்விட்ட பிறகு நான் துக்கப்பிரளயத்தி லாழப்போகிறேன். ஆகையால், ஹநுமன்! இப்பொழுது கொஞ்சம் ஸுகந்தந்தது விசேஷமல்ல. ஸ்ரீராகவனைச் சீக்கிரம் எழுந்தருளச் செய்வீரா? நீர் மறுபடி திரும்புவீரா? எனது கவலையை ஒருமட்டாய்ப் போக்குவீரா? அப்பொழுதுதான் எனக்குபகாரஞ் செய்தவராவீர்.

அவதாரிகை—பிராட்டி தம்முடைய துக்காதிசயத்தால் மனமுளைந்து ஓர்ஸந்தேகத்தால் இக்காரிய மென்னமாகுமோவென்று கவலைகொண்டருளிச்செய்கிறுள்.

௨௪. అయం చ వీర సందేహస్తిష్ఠతీవ మమాగ్రతః। సుమహాంస్త్వత్సహాయేషు హర్యృక్షేషు హరీశ్వర॥

௨௪. அயம் ச வீர ஸந்தே³ஹஸ்திஷ்ட²தீவ மமாக்³ரத:।
ஸுமஹாம்ஸ்த்வத்ஸஹாயேஷு ஹர்ய்ருக்ஷேஷு ஹரீஶ்வர॥

௨௪. அயம்சவீரஸந்தேஹஸ்திஷ்டதீவமமாக்ரதஃ।
ஸுமஹாம்ஸ்த்வத்ஸஹாயேஷு ஹர்யர்க்ஷேஷு ஹரீஸ்வர॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேவீர-அயம்-ஸந்தேஹஃ-	ஓ சூர,-இந்த-ஸம்சயமானது	த்வத்ஸஹாயேஷு	உமக்குத் துணையாகவந்த
மம-அக்ரதஃ-திஷ்டதீவ-	என்னுடைய-முன்னே-(மூர்த்திகரித்து) நிற்பதுபோல் (இருக்கிறது)	ஹர்யர்க்ஷேஷு	வானரம், கரடி இவைகளிடங்களில்
ஹே ஹரீஸ்வர	ஓ வானரசிரேஷ்டனே!	ஸுமஹாந்	(ஸந்தேகமானது) மிகப் பெரியதா(யிருக்கிறது.)

தா-ம்—ஹே வானரோத்தம! உம்மைச்சேர்ந்த கரடி வானரஸைந்ய மநேகமிருப்பதாகச்சொன்னீரே. அவைகளைப்பற்றி ஓர்ஸம்சயம் என்மனதில் ஜனித்திருக்கிறது. என்ன ஸமாதானம் யோசித்தாலும் அது தீரவில்லை. அது என்மனதில் மிகவும் திடங்கொண்டிருக்கிறது, ஊர்ஜிதமாக வேர்கொண்டு நிற்கிறது. மூர்த்திகரித்து எதிரில் நிற்பதுபோ லவ்வளவு நிச்சயமாகத் தோற்றுகிறது. அது பெருத்த ஸந்தேகம்.

அவதாரிகை—முற்குறித்த ஸந்தேகத்தை விவரிக்கிறுள்.

௨௫. కథం ను ఖలు దుష్పారం తరిష్యంతి మహోదధిమ్। తాని హర్యృక్షసైన్యాని తౌ వా నరవరాత్మజౌ॥

௨௫. கத²ம் நு க²லு து³ஷ்பாரம் தரிஷ்யந்தி மஹோத³தி⁴ம்।
தாநி ஹர்ய்ருக்ஷஸைந்யாநி தௌ வா நரவராத்மஜௌ॥

௨௫. கதம்நுகலுதுஷ்பாரம்தரிஷ்யந்திமஹோததிம்।
தாநிஹர்யர்க்ஷஸைந்யாநிதௌவாநரவராத்மஜௌ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தாநி-ஹர்யர்க்ஷஸைந்யாநி-	அந்த - வானரம் கரடி முதலான ஸைன்னியங்கள்	கதம்நுகலு-தரிஷ்யந்தி-	எப்படிதான்-தாண்டும்
துஷ்பாரம்-மஹோததிம்-	அடைவதற்சசக்கியமான-பெருங்கடலை	தௌவா-நரவராத்மஜௌ-	நரசிரேஷ்டர்களான-அந்த இராமலக்ஷ்மணுள்தான்
		கதம்வா(தரிஷ்யதஃ)	எப்படிதான் (தாண்டுவார்கள்.)

தா-ம்—அந்த ஸந்தேகமென்னவென்கிறீரோ, ஹநுமன்? அபாரமாயகன்றிருக்கு மிம்மஹோததியை யக்கரடிகளும் வானரங்களும் எவ்விதந் தாண்டி யிலங்கைசேரும். அக்ராசிரேஷ்டரிருவரும் இக்கடலை யெவ்விதந் தாண்டி யிங்குவருவார். இங்கவர் வந்தாலன்றோ ஸீதாதுக்க விமோசனமாகும். இதுதான் அந்த பெருத்த ஸந்தேகமென்றனள்.

౨౬. త్రయాణామేవ భూతానాం సాగరస్యాస్య లంఘనే । శక్తిస్స్యాద్వైనతేయస్య తవ వా మారుతస్య వా ॥

௨௬. த்ரயாணாமேவ பூதாநாம் ஸாகரஸ்யாஸ்ய லங்கநே।
ஶக்திஸ்ஸ்யாத்வைநதேயஸ்ய தவ வா மாருதஸ்ய வா॥

௨௬. த்ரயாணாமேவபூதாநாம்ஸாகரஸ்யாஸ்யலங்கநே।
ஶக்திஸ்யாத்வைநதேயஸ்யதவவாமாருதஸ்யவா॥

பதம்.	உரை.	பதம்	உரை.
அஸ்ய-ஸாகரஸ்ய	இந்த-ஸமுத்திரத்தினுடைய	த்ரயாணாம்	இம்மூன்றுபேர்களான
லங்கநே	தாண்டுவதில்	பூதாநாமேவ	பிராணிகளுக்கே
வைநதேயஸ்ய	கருத்மானுக்கும்	ஶக்திஃ	ஸாமர்த்தியம்
தவவா-மாருதஸ்யவா	உமக்கும்-வாயுவுக்கும்	ஸ்யாத்	உண்டாகும்.

தா-ம்—வானரரும் ஏனையரும் இக்குவர ஏன் சக்தராகாரெனில், இம்மஹோததியைத் தாண்டவல்லோர் மஹாபுத்திமானான நீரும், அதிபலவானும் வினதாதேவிபுத்திரனுமான கருத்மானும், புவனத்தியசஞ்சாரியான வாயுபகவானும் ஆகிய இம்மூவருமே. மற்றவர் இந்த ஸாகராக்கிராந்தஞ்செய்ய சக்தராகார்.

౨౭. తదస్మిన్ కార్యనిర్యోగే వీరైవం దురతిక్రమే । కిం పశ్యసి సమాధానం త్వం హి కార్యవిదాం వరః ॥

௨௭. ததஸ்மிந் கார்யநிர்யோகே வீரைவம் துரதிக்ரமே।
கிம் பஶ்யஸி ஸமாதாநம் த்வம் ஹி கார்யவிதாம் வர:॥

௨௭. ததஸ்மிந்கார்யநிர்யோகேவீரைவம்துரதிக்ரமே।
கிம்பஶ்யஸிஸமாதாநம்த்வம்ஹிகார்யவிதாம்வர:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத்-ஹேவீர	ஆகையால்-ஓ சூர,	அஸ்மிந்-கார்யநிர்யோகே	இந்த-காரியஸங்கடனத்தில்
கார்யவிதாம்	காரியமறிந்தோருக்குள்	கிம்	என்ன
வர:-த்வம்ஹி	சிரேஷ்டரான-நீரேயென்றால்	ஸமாதாநம்	உபாயத்தை
ஏவம்-துரதிக்ரமே	இப்படி-துர்லபமான	பஶ்யஸி	பார்க்கிறீர்.

தா-ம்—ஹே வீர! யான் பிரஸ்தாபித்த ஸங்கடத்தை யறிகிறீரன்றோ? உமக்குத்தவிர மற்ற வானரர்க்கும் ஸ்ரீராமலக்ஷ்மணர்க்கும் துர்லபமான இக்கடல் தாண்டுவதை யெவ்விதம் நிறைவேற்ற யோசிக்கிறீர்? காரியஸித்தியைப் பெறுவதற்கு ஹிதோபாயங்களையறிந்து நிர்ணயிப்பதில் உம்மினும் புத்திமான் வேறொருவரில்லை. ஸ்ரீராகவகைங்கரியத்தி லிதுவரையில் செய்த உமது கிருத்தியங்களாலேயே உமது ஸாமர்த்தியவிசேஷத்தை விளம்பரஞ்செய்துவிட்டீர். ஆகையால், ஹே தீமன்! கடல் கடப்பதை யெவ்விதம் முடிக்கலாமென்று ஆலோசனை செய்திருக்கிறீர்?

அவதாரிகை—ஸாகராக்கிராந்த விஷயத்தைப்பற்றித் தர்க்கிக்கையில், ஸ்ரீராகவன்முதலானோர் இங்கேன் வரவேண்டும், யானொருவனே இப்பகைபாளியை முடிக்கவல்லவனென்று ஹநுமான் பிரதிசொல்லுவரோவென்று ஸம்சயித்து, அந்த ஸமாதான மொவ்வாதென்று பரிகரிக்கிறாள்.

౨౮. కామమస్య త్వమేవైకః కార్యస్య పరిసాధనే । పర్యాప్తః పరవీరఘ్న యశస్యస్తే బలోదయః ॥

௨௮. காமமஸ்ய த்வமேவைக: கார்யஸ்ய பரிஸாதநே।
பர்யாப்த: பரவீரக்ந யஶஸ்யஸ்தே பலோதய:॥

௨௮. காமமஸ்யத்வமேவைக:கார்யஸ்யபரிஸாதநே।
பர்யாப்த:பரவீரக்நயஶஸ்யஸ்தேபலோதய:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
பரவீரக்ந	பகையாளிகளை யடிக்கத்தக்கினவரே	காமம்-பர்யாப்த:	மிகவும்-ஸமர்த்தர் (இப்படி செய்கையில்)
அஸ்ய-கார்யஸ்ய	இந்த-காரியத்தினுடைய	பலோதய:	சக்தியின் உதயமானது
பரி-ஸாதநே	நன்றாய்-ஸாதிப்பதில்	தே	உமக்கு
த்வம்-ஏகஏவ	நீர்-ஒருவரே	யஶஸ்ய:	கீர்த்தியை யுண்டுசெய்கிறது.

தா-ம்—இவ்வரக்கரையு மிவ்விராவணனையும் ஹரிக்க ஸ்ரீராகவனெழுந்தருளவேண்டுமோ, மசகப்பிராயரான இவ்விராக்ஷதரை முடிக்க யானொருவன் போதாதோவென்கிறீரோ, ஹே ரிபுநாசக! சத்துரு வீரியபக்னஞ்செய்வதில் உமக்கு இணையில்லா ஸாமர்த்தியமுண்டு, இக்காரியத்தை முடிக்க நீரொருவரே போதும், யுத்தாங்கத்தினின்று விஜயலக்ஷ்மியோடு திரும்புவீரென்பதற் கையமில்லை. ஆனாலொரு விரோதமுண்டு.

இவ்விஷயத்தில் பலோதயத்தை உமது விக்கிரமத்தினுலேமாத்திர மடைக்தோமாயின் உமக்கு தேஜஸ்கரமாகும். பத்தினியைப் பரிகொடுத்த ராகவனுக்கு ஹநுமான் கைகொடுத்தான், இல்லாவிடில் கஷ்டமான ஸீதைலபித்துவிடுவளோவென்று ஸ்ரீராகவனுக் கபக்கியாதியுண்டாகும். அதனுலெனக்கும் யசஸ்ஸுக் தாழ்வுவரும். அது சேரிடாவண்ணம் உபாயம் யோசிக்கப் பிரார்த்திக்கிறேன்.

౨౯. బలైస్సమగ్రైర్యది మాం రావణం జిత్య సంయుగే। విజయీ స్వపురీం యాయాత్తత్తు మే స్యాద్యశస్కరమ్॥

௨௯. 𑌬𑌲𑍈𑌸𑍍𑌸𑌮𑌗𑍍𑌰𑍈𑌰𑍍𑌯𑌦𑌿𑌮𑌾𑌂𑌰𑌾𑌵𑌣𑌂𑌜𑌿𑌤𑍍𑌯𑌸𑌂𑌯𑌗𑍁𑌗𑍇।
𑌵𑌿𑌜𑌯𑍀𑌸𑍍𑌵𑌪𑍁𑌰𑍀𑌂𑌯𑌾𑌯𑌾𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍁𑌮𑍇𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌶𑌸𑍍𑌕𑌰𑌮𑍍॥

௨௯. பலைஸ்ஸமக்ரைர்யதிமாம்ராவணம்ஜித்யஸம்யுகே।
விஜயீஸ்வபுரீம்யாயாத்தத்துமேஸ்யாத்யஶஸ்கரம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
விஜயீ	ஜயசீலரான (ஸ்ரீராகவன்)	மாம்-க்ருஹீத்வா	என்னை-அழைத்துக்கொண்டு
ஸமக்ரை:-பலை:	ஸம்பூர்ணமான-ஸைன்னியங்களால்	ஸ்வபுரீம்	தம்பட்டணத்தைக்(குறித்து)
ராவணம்	இராவணனை	யாயாத்யதி	போவாராகில் [ருமையாக-ஆகும்.
ஸம்யுகே-ஜித்ய	யுத்தத்தில்-ஜயித்து	தத்து-மே-யஶஸ்கரம்-ஸ்யாத்	அதுவன்றோ-எனக்கு-பெ

தா-ம்—உமது பாகுபலத்தாலன்றி ஸ்ரீராகவன் தானே ஸைந்நியஸஹிதராயெழுந்தருளிப் பகையாளியான இராவணனையும் அவனை யொட்டிய பந்து ஸைந்நியவர்க்கங்களையும் தர்மயுத்தத்தில் ஸம்ஹரித்துப் பிறகு என்னையடைந்து ஜயஸ்ரீமானுய்த் தன்னகரம் புகினன்றோ எனக்கும் எங்களது குலத்திற்கும் பெருமையாகும். இதுதான் க்ஷத்திரியதர்மம். இதுதான் ஸ்ரீராகவனுக்கு மழகு.

౩౦. శరైస్తు సంకులాం కృత్వా లంకాం పరబలార్దనః। మాం నయేద్యది కాకుత్స్థస్తత్తస్య సదృశం భవేత్॥

௩௦. 𑌶𑌰𑍈𑌸𑍍𑌤𑍁𑌸𑌂𑌕𑍁𑌲𑌾𑌂𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌂𑌪𑌰𑌬𑌲𑌾𑌰𑍍𑌦𑌨𑌃।
𑌮𑌾𑌂𑌨𑌯𑍇𑌦𑍍𑌯𑌦𑌿𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑌸𑍍𑌯𑌸𑌦𑍃𑌶𑌂𑌭𑌵𑍇𑌤𑍍॥

௩௦. ஶரைஸ்துஸங்குலாம்க்ருத்வாலங்காம்பரபலார்தந:।
மாம்நயேத்யதிகாகுத்ஸ்தஸ்தத்தஸ்யஸத்ருஶம்பவேத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
பரபலார்தந:	சத்துருவின்பலத்தை யழிப்பவரான	க்ருத்வா	செய்து
காகுத்ஸ்த:	ஸ்ரீராகவன்	மாம்-நயேத்யதி	என்னை-எடுத்துக்கொண்டு போனுரா
லங்காம்	இலங்கையை	தத்-தஸ்ய	அதுவானது-அந்த ராமனுக்கு [இல்
ஶரை:-ஸங்குலாம்	பாணங்களால்-வியாப்தமாக	ஸத்ருஶம்-பவேத்	ஸமானமாக-ஆகும்.

தா-ம்—ஹே வானரோத்தம! பிரதிகூலிகளைப்போக்கி யனுகூலிகளை ரக்ஷிக்கிற மகத்வம்சத்திற் பிறந்தவரும் சத்துருபலாபஹாரியென்று ஸ்வபாவ பிரஸித்த கீர்த்தியுடையவருமான ஸ்ரீராகவன் தனக்குப் பிரத்தியக்ஷவிரோதியான இவ்விலங்காதிபதியை உம்மாலன்றித் தானே இங்கெழுந்தருளி சத்துரு வாஸஸ்தலமான இம்மாநகரை ஸ்ரீராமநாமாங்கிதங்களான தனது சரங்களால் பொடியாக்கி, இராவணனையும் மகுடசிரங்களுடன் மண்ணைக் கவ்விக்கிடக்கச்செய்து என்னை யடைந்தாராயின், அதுதான் வீரலக்ஷணமாகும். அது என்னுடைய யசஸ்ஸை விர்த்திசெய்வதுமன்றி ஸ்ரீராகவயசஸ்ஸையும் பிரகாசிக்கச்செய்யும். அவ்விதமடைவதுதான், ஹே வானரபுங்கவ! ஸ்ரீராகவனது குலப்பெருமைக்கும் ஆத்மக்கியாதிக்கும் ஒவ்வினதாகும்.

౩౧. తద్యథా తస్య విక్రాంతమనురూపం మహాత్మనః। భవేదాహవశూరస్య తథా త్వముపపాదయ॥

௩௧. 𑌤𑌦𑍍𑌯𑌥𑌾𑌤𑌸𑍍𑌯𑌵𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌮𑌨𑍁𑌰𑍂𑌪𑌂𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌭𑌵𑍇𑌦𑌾𑌹𑌵𑌶𑍂𑌰𑌸𑍍𑌯𑌤𑌥𑌾𑌤𑍍𑌵𑌮𑍁𑌪𑌪𑌾𑌦𑌯॥

௩௧. தத்யதாதஸ்யவிக்ராந்தமநுரூபம்மஹாத்மந:।
பவேதாஹவஶூரஸ்யததாத்வமுபபாதய॥

பதம்.	உரை	பதம்.	உரை.
தத்-மஹாத்மந:	ஆகையால்-பெரிய மனமுடையவரும்	யதா-பவேத்	எந்தவிதத்தில்-உண்டாகுமோ
ஆஹவஶூரஸ்ய	யுத்தத்தில் ஶூரருமான	ததா	அப்படி
தஸ்ய	அந்த (ஸ்ரீராகவனுக்கு)	த்வம்	நீர்
அநுரூபம்-விக்ராந்தம்-	தகுந்ததான-பராக்கிரமமானது	உபபாதய	செய்யும்.

தா-ம்—ஹே வானரோத்தம! உமது கிருத்தியத்தால்மாத்திரம் யான் ஸ்ரீராகவஸந்நிதியையடையின், திரிலோகவிக்கியாதனை ஸ்ரீராகவனுடைய யசஸ்ஸுக்கோர் தாழ்வும் அதனுலெனது பெருமைக்குக் குறைவுமுண்டாகிறதாதலின் அவ்வழிபுகாது, வீரியசௌரியாதிகளில் மிக்கோனுன அப்புருஷோத்தமனது பராக்கிரமம் அவருடைய கௌரவத்திற்கனுரூபமாக எவ்விதத்தில் விளங்குமோ அவ்விதம் யோசித்து இக்காரியத்தைப் பூர்த்திபண்ணும்.

౩౨. తదర్థోపహితం వాక్యం సహితం హేతుసంహితమ్। నిశమ్య హనుమాన్ శ్రేష్ఠం వాక్యముత్తరమబ్రవీత్॥

௩௨. 𑌤𑌦𑌰𑍍𑌥𑍋𑌪𑌹𑌿𑌤𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌸𑌹𑌿𑌤𑌂 𑌹𑍇𑌤𑍁𑌸𑌂𑌹𑌿𑌤𑌮𑍍।
𑌨𑌿𑌶𑌮𑍍𑌯 𑌹𑌨𑍁𑌮𑌾𑌨𑍍 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥

௩௨. ததர்த்தோபஹிதம்வாக்யம்ஸஹிதம்ஹேதுஸம்ஹிதம்।
நிஸம்யஹநுமாக்ஶ்ரேஷம்வாக்யமுத்தரமப்ரவீத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹநுமாக்	வாயுபுத்திரர்	வாக்யம்	(ஸீதையின்) வாக்கியத்தை
அர்த்தோபஹிதம்	அர்த்தத்தோடு கூடினதும்	நிஸம்ய	கேட்டு
ஸஹிதம்	ஒன்றுக்கொன்று சேர்ந்திருக்கிறதும்	ஶ்ரேஷ்டம்	மீதியான
ஹேதுஸம்ஹிதம்	யுக்தியோடு கூடியிருக்கிறதுமான	உத்தரம்-வாக்யம்	பதிலான-வார்த்தையை
தத்	(அப்படிப்பட்ட) அந்த	அப்ரவீத்	சொன்னார்.

தா-ம்—இவ்வித மப்பிராட்டி பூர்வோத்தரஸந்தர்ப்பங்களுக் கிசைந்ததும் அர்த்தவிசேஷமுடையதும் யுக்தியுக்தமானதுமான வார்த்தையையருள, அதைக்கேட்ட ஹநுமான், தானிதுவரையிலுரையாத வோர் விஷயத்தை அவ்வாக்கியத்திற்குப் பிரதியுத்தரமாக விண்ணப்பம் செய்தனர்.

౩౩. దేవి హర్యృక్షసైన్యానామీశ్వరః ప్లవతాం వరః। సుగ్రీవః సత్త్వసమ్పన్నస్తవార్థే కృతనిశ్చయః॥

௩௩. 𑌦𑍇𑌵𑌿 𑌹𑌰𑍍𑌯𑍃𑌕𑍍𑌷𑌸𑍈𑌨𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 𑌪𑍍𑌲𑌵𑌤𑌾𑌂 𑌵𑌰𑌃।
𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌃 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌤𑌵𑌾𑌰𑍍𑌥𑍇 𑌕𑍃𑌤𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃॥

௩௩. தேவிஹர்யர்க்ஷஸைந்யாநாமீஸ்வர:ப்லவதாம்வர:।
ஸுக்ரீவஸ்ஸத்வஸம்பந்நஸ்தவார்த்தேக்ருதநிஸ்சய:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹே தேவி	ஹே ராமபத்தினி,	ஸத்வஸம்பந்ந:	பலத்தோடு கூடினவருமான
ஹர்யர்க்ஷஸைந்யாநாம்-	வானரம் கரடி இவைகளுடைய ஸை ன்னியங்களுக்கு	ஸுக்ரீவ:	மகாராஜர்
ஈஸ்வர:	பிரபுவும்	தவ-அர்த்தே	தம்முடைய-பிரயோஜனத்தில்
ப்லவதாம்-வர:	தாண்டுவோருக்கு-சிரேஷ்டரும்	க்ருதநிஸ்சய:	செய்யப்பட்ட நிச்சயமுடையவராக (இருக்கிறார்)

தா-ம்—ஹே பரதேவதே! ஸ்ரீராகவனிங்கெப்படி யெழுந்தருளப்போகிறார், எனது துக்கமெப்படி விலகப்போகிறது, என்கிற கிலேசம் தேவரீருக்கு வேண்டாம். இந்த துக்கம் தேவரீரைப் பிடித்ததுமுண் டோவென்னும்படி இருந்தவிடமும் புகுந்தவிடமுந் தெரியாதொழியப்போகிறது. இவ்விஷயத்தி லுமக்கென் ன அவ்வளவு உறுதியென்கிறீரோ, ஹே ராகவப்பிரியே! யானோரல்பவானரன், கேவலமோர் தூதனுகமாத்தி ர மிங்கு வந்தனன், எனது பலம் பலமெனத்தகுமோ? அனந்தகோடி கரடி வானரவீரர்க்கதிபதியும் மஹாப லவானும், தைரியவானும், கொண்ட பிரதிக்கினை நிறைவேற்றவல்ல ஸத்வவானுமான வெங்கள் மஹாராஜா கிஷ்கிந்தாதிபதி ஸுக்கிரீவனிருக்கிறாரே, அந்த ஸாக்ஷாத் ஸுக்கிரீவமஹாராஜர் ஸ்ரீராகவனோடு அக்கினி ஸாக்ஷிகமாக ஸக்கியஞ்செய்தது தேவியை எப்படியாவது ரக்ஷிக்கிறதென்கிற ஸங்கல்பஞ்செய்துவிட்டார். அந் த ஸங்கல்பம் மாறாத ஸங்கல்பம், விக்கினங்காளாலுடைபடாத ஸங்கல்பம். ஸுக்கிரீவாக்கியைக்கும் ஸுக் கிரீவஸங்கல்பத்திற்கு எதிருண்டோ. அவர் மஹாபுத்திமானும் ஸத்வவானும் அனேக வெள்ள வானரவீரர் க்கதிபதியுமாதலால், இவ்விஷயத்தை ஸ்ரீராகவனுக்கும் தேவரீருக்கும் குறைவுநேரிடாதபடி, கடலோ ஆகா சமோ, எதுவோ, தனக்கு விரோதமாயிருப்பதையெல்லாம் தனதாணைக்குள்ளடக்கி அஸாத்தியத்தை ஸாத் தியமாகச்செய்து எவ்விதத்திலாவது நிறைவேற்றிவிடுவார். தேவரீர் சிந்தைகொள்ளவேண்டாம்.

౩౪. స వానరసహస్రాణాం కోటీభిరభిసంవృతః। క్షిప్రమేష్యతి వైదేహి రాక్షసానాం నిబర్హణః॥

௩௪. 𑌸 𑌵𑌾𑌨𑌰𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌕𑍋𑌟𑍀𑌭𑌿𑌰𑌭𑌿𑌸𑌂𑌵𑍃𑌤𑌃।
𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌮𑍇𑌷𑍍𑌯𑌤𑌿 𑌵𑍈𑌦𑍇𑌹𑌿 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑌾𑌂 𑌨𑌿𑌬𑌰𑍍𑌹𑌣𑌃॥

௩௪. ஸவாநரஸஹஸ்ராணாம்கோடீபிரபிஸம்வ்ருத:।
க்ஷிப்ரமேஷ்யதிவைதேஹிராக்ஷஸாநாம்நிபர்ஹண:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸ:	அந்த (ஸுக்கிரீவமகாராஜா)	ராக்ஷஸாநாம்	அரக்கர்களுக்கு
வாநரஸஹஸ்ராணாம்	வானரங்களின் (ஆயிரங்களுடைய)	நிபர்ஹண:	நாசகராக
கோடீபி:	அனேகங்களால்	க்ஷிப்ரம்	சீக்கிரம்
அபிஸம்வ்ருத:	சூற்றப்பட்டவராக	ஏஷ்யதி	வரப்போகிறார்.

தா-ம்—ஹே வைதேஹி! இக்காரியத்தி லவ்வளவு திடமாகத் தீக்ஷித்திருக்கிற ஸுக்கிரீவமஹாராஜா, ஸங்கியைக் கதீதமான ஸைந்நியங்களோடு, இவ்வரக்கர்க்கோர் மிருத்தியுதேவன்போல் அதித்வரையிலிங்கு வரப்போகிறார்.

அவதாரிகை—வானரமுங் காடியுமோ இவ்வரக்கரோடு பொருந்துவதென்கிற பிராட்டியின் சங்கையைப் பரிகரிக்கிறாள்.

౩౫. తస్య విక్రమసంపన్నాస్సత్త్వవంతో మహాబలాః। మనస్సంకల్పసంపాతా నిదేశే హరయస్స్థితాః॥

౩౬. యేషాం నోపరి నాధస్తాన్న తిర్యక్సజ్జతే గతిః। న చ కర్మసు సీదంతి మహత్స్వమితతేజసః॥

௩௫. [illegible]
[illegible]

௩௬. [illegible]
[illegible]

௩௫. தஸ்யவிக்ரமஸம்பந்நாஸ்ஸத்த்வவந்தோமஹாபலா:।
மநஸ்ஸங்கல்பஸம்பாதாநிதேசேஹரயஸ்ஸ்திதா:॥

௩௬. யேஷாம்நோபரிநாதஸ்தாந்நதிர்யக்ஸஜ்ஜதேகதி:।
நசகர்மஸுஸீதந்திமஹத்ஸ்வமிததேஜஸ:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
விக்ரமஸம்பந்நா:	பராக்கிரமத்தோடு கூடினவர்களும்	யேஷாம்-கதி:	எவர்களுடைய-கமனமானது
ஸத்த்வவந்த:	அந்தஸ்ஸாரமுடையவர்களும்	உபரி-அத:ஸ்தாத்-திர்யக்	மேலும்-கீழும்-குறுக்கும்
மஹாபலா:	வெகு பலமுடையவர்களும்	நஸஜ்ஜதே	ஆலஸ்யமாகாதோ
மநஸ்ஸங்கல்பஸம்பாதா:	மனதினுடைய கமனம்போன்ற கமனமுடையவர்களுமான	தே-அமிததேஜஸ:	அப்படிப்பட்ட-மிதமில்லாத் தேஜஸ்ஸுடையவர்கள் (ஆகையால்)
ஹரய:	வானரர்கள்	மஹத்ஸு	பெரியதான
தஸ்ய-நிதேசே	அம்மஹாராஜருடைய-ஆஜ்ஞையில்	கர்மஸு	காரியங்களிலும்
ஸ்த்திதா:	இருப்பவர்கள்	நஸீதந்தி	சிரமத்தையடையார்.

౩౭. అసకృత్తైర్మహోత్సాహైస్ససాగరధరాధరా। ప్రదక్షిణీకృతా భూమిర్వాయుమార్గానుసారిభిః॥

౩౮. మద్విశిష్టాశ్చ తుల్యాశ్చ సంతి తత్ర వనౌకసః। మత్తః ప్రత్యవరః కశ్చిన్నాస్తి సుగ్రీవసన్నిధౌ॥

௩௭. [illegible]
[illegible]

௩௮. [illegible]
[illegible]

௩௭. அஸக்ருத்தைர்மஹோத்ஸாஹைஸ்ஸஸாகரதராதரா।
ப்ரதக்ஷிணீக்ருதாபூமிர்வாயுமார்காநுஸாரிபி:॥

௩௮. மத்விசிஷ்டாஸ்சதுல்யாஸ்சஸந்திதத்ரவநௌகஸ:।
மத்த:ப்ரத்யவர:கஸ்சிந்நாஸ்திஸுக்ரீவஸந்நிதௌ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மஹோத்ஸாஹை:	வெகு ஸந்தோஷமுடையவர்களும்	மத்-விசிஷ்டாஸ்ச	என்னைக்காட்டிலும்-அதிகர்களும்
வாயுமார்காநுஸாரிபி:	வாயுவின்மார்க்கத்தை யனுஸரித்தவர்களுமான	துல்யாஸ்ச	ஸமமானவர்களுமான
		வநௌகஸ:	வானரர்கள்
தை:	அந்த (வானரர்களால்)	தத்ர	அந்த இடத்தினிடையில்
ஸஸாகரதராதரா	ஸமுத்திரத்தோடும் பருவதத்தோடும் கூடின	ஸந்தி	இருக்கிறார்கள்
		ஸுக்ரீவ-ஸந்நிதௌ	ஸுக்கிரீவனுடைய-ஸந்நிதியில்
பூமி:-அஸக்ருத்	பூமியானது-அடிக்கடி	மத்த:-ப்ரத்யவர:	என்னைக்காட்டிலும்-குறைந்தவர்கள்
ப்ரதக்ஷிணீக்ருதா	பிரதக்ஷிணம் செய்யப்பட்டது	கச்சித்-நாஸ்தி	ஒருவரும்-இல்லை.

౩౯. అహం తావదిహ ప్రాప్తః కిం పునస్తే మహాబలాః। న హి ప్రకృష్టాః ప్రేష్యంతే ప్రేష్యంతే హీతరే జనాః॥

௩௯. [illegible]
[illegible]

௩௯. அஹம்தாவதிஹப்ராப்த:கிம்புநஸ்தேமஹாபலா:।
நஹிப்ரக்ருஷ்டா:ப்ரேஷ்யந்தேப்ரேஷ்யந்தேஹீதரேஜநா:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அஹம்-தாவத்	நான்-இப்பொழுது	ப்ரக்ருஷ்டா:	பலமுடையவர்கள்
இஹ-ப்ராப்த:	இங்கு-வந்தவனாக (ஆனேன்)	நப்ரேஷ்யந்தேஹி	(முன்பு) அனுப்பப்படமாட்டார்கள்
மஹாபலா:-தே	மிக பலமுடைய அந்த-வானரர்கள்	இதரேஜநா:	(பலமில்லா) வேறுஜனங்கள் [வா?
கிம்புந:	கேட்கவேண்டுமோ	ப்ரேஷ்யந்தே	அனுப்பப்படுகிறார்கள்.

౪౦. తదలం పరితాపేన దేవి శోకో వ్యపైతు తే। ఏకోత్పాతేన తే లంకామేష్యంతి హరియూథపాః॥

௪௦. ததலம் பரிதாபேந தேவி ஶோகோ வ்யபைது தே।
ஏகோத்பாதேந தே லங்காமேஷ்யந்தி ஹரியூதபா:॥

௪௦. ததலம்பரிதாபேநதேவிஶோகோவ்யபைதுதே।
ஏகோத்பாதேநதேலங்காமேஷ்யந்திஹரியூதபா:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத்-ஹேதேவி	ஆகையால்-ஓ ஸீதே,	தே-ஹரியூதபா:	அந்த-வானராதிபதிகள்
பரிதாபேந-அலம்	துக்கத்தால்-போதும் [ட்டும்	ஏகோத்பாதேந	ஒரேயெழும்பால்
தே-ஶோக:-வ்யபைது-தம்முடைய-வியஸனமானது-போக		லங்காம்-ஏஷ்யந்தி	இலங்கைக்கு-வரப்போகிறுர்.

(௩௫-மு-௪௦-ல்) தா-ம்.—மஹாராஜர்வந்தால்தானென்ன, வானர கரடி ஸைந்யங்கள்தான் வந்தாலென்ன, வானரருங் கரடிகளுமோ இப்பீமவிக்கிரமரோடு போர்புரியவல்லவரொன்று ஸம்சயிக்கிறீரோ, ஹே தேவி! அவர்களது விக்கிரமத்தையும் அவர்கள் ஸுக்ரீவாக்ஞையைக்குள்ளடங்கி நடப்பதையுங்குறித்துச்சொல்லுகிறேன்,கொஞ்சந் திருச்செவிசாற்றீர். அவர்களெல்லோரும் மஹாவீரர், மஹாபலவான்கள், மிகுந்த ஸத்வமுடையவர், இடைவிடாது சிரகாலயுத்தஞ்செய்தாலு மிளையாதவர், பசிதாகநித்திரையின்மை வெயில் காற்று இவைகளுக்கு வாடாதவர், மனோவேகதுல்லியமாகச்செல்பவர், தசதிக்குகளிலும் தடையுந் தாமஸமுமின்றி நினைத்தமாத்திரம் கமனஞ்செய்யவல்லவர். எப்பேர்ப்பட்ட யுத்தங்களிலும் பிரயாணங்களிலும் சிரமஸாத்தியமான மற்ற கிருத்தியங்களிலும் சிரமமும் சோர்வும் அதைரியமுமடைந்து பின்வாங்காது,நிலைநின்று போராடுபவர். இப்பேர்ப்பட்ட வீரரான அவர்களெல்லோரும் மஹாராஜராக்ஞையை மீறாதவர். அவர் வகுத்த கோட்டைத் தாண்டாதவர். எப்பொழுதும் மஹோத்ஸாகத்தோடு விளங்குபவர். வாயுஸஞ்சாரயோக்கியமான ஆகாசமார்க்கத்தில் ஸஞ்சரிப்பவர். கிரிகளுங் கடல்களும் நிறைந்த இவ்வியனுலகை வானிடைவழியாகச்சென்று பலமுறை பிரதக்ஷிணஞ்செய்திருப்பவர். அவ்வானரருள் அநேகர் பலத்திலும் பராக்கிரமத்திலு மெனக்கு மேலானவர். சிலர் எனக்கு ஸமானர். எனக்குத் தாழ்ந்தவர் அந்த ஸுக்ரீவஸந்நிதியில் கிடைக்கவே கிடையாது: யான்தான் கடைப்பட்டவன். கேவலம் பலஹீனனென்று தள்ளுண்டவன். இப்படி ஸாமான்யனுன அடியேனே இக்கடல்தாண்டி இலங்கையில் தேவரீரைத்தேடித் தண்டன் ஸமர்ப்பிக்கச் சக்தனுயின் என்னினு மதிப்பிரபலரான மற்ற வானரவீரர் எப்பேர்ப்பட்ட கிருத்தியஞ்செய்யார்? அவர்களுடைய திறத்தையும் தைரியத்தையும்பற்றிப் பிரச்னிக்கவும் வேண்டுமோ? இக்கடலை யொருதாண்டாகத்தாண்டி இவ்வரக்கர் பூண்டைக் கிள்ளியெறிந்து தேவரீரது கிலேசத்தைப் பற்றற வொழிக்கப்போகிறுர்கள். அப்படிப்பட்ட பலவான்கள் வாஸ்தவத்திலிருந்தனராயின், அவர்களுள் ஒருவரோ விங்கு வரக்கூடாது, அபலவானுன நீயோன் வரவேண்டுமென்கிறீரோ, அம்ம! சத்துருபலத்தை யறியுநிமித்தம் பிரதமத்தில் பிரபலவான்கள் வெளிவரார்கள், ஓர் ஸாதாரணனை முன்னனுப்பி அவனுல் சத்துருவீரிய மிவ்வளவென்று தெரிந்துகொண்டு பிறகு பலவான்களை யனுப்புவது இராஜதந்திரரீதியாதலால் அடியேன் முன் விடுக்கப்பட்டனன். இக்காரணங்களால், ஹே ஜனகாத்மஜே! வானர கரடி ஸைந்ய மிங்குவந்து சேருவது அஸாத்தியமென்று தேவரீர் ஸ்வப்னத்திலும் ஸம்சயிக்கவேண்டாம்.

౪౧. మమ పృష్ఠగతౌ తౌ చ చంద్రసూర్యావివోదితౌ। త్వత్సకాశం మహాసత్త్వౌ నృసింహావాగమిష్యతః॥

௪௧. மம ப்ருஷ்டகதௌ தௌ ச சந்த்ரஸூர்யாவிவோதிதௌ।
த்வத்ஸகாஶம் மஹாஸத்த்வௌ ந்ருஸிம்ஹாவாகமிஷ்யத:॥

௪௧. மமப்ருஷ்டகதௌதௌசசந்த்ரஸூர்யாவிவோதிதௌ।
த்வத்ஸகாஶம்மஹாஸத்வௌந்ருஸிம்ஹாவாகமிஷ்யத:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
உதிதௌ-சந்த்ரஸூர்யாவிவ	உதயமான-சந்திரஸூரியாள் போல் (இருப்பவர்களும்)	தௌ	அந்த (இராமலக்ஷ்மணர்கள்)
		மம-ப்ருஷ்டகதௌ	என்னுடைய-முதுகை யடைந்தவர்க[ளாக
மஹாஸத்வௌ	மிக பலமுடையவர்களும்	த்வத்ஸகாஶம்	தம்முடைய ஸமீபத்திற்கு
ந்ருஸிம்ஹௌ	புருஷசிரேஷ்டர்களுமான	ஆகமிஷ்யத:	வரப்போகிறுர்கள்.

౪౨. తతో వీరౌ నరవరౌ సహితౌ రామలక్ష్మణౌ। ఆగమ్య నగరీం లంకాం సాయకైర్విధమిష్యతః॥

௪௨. ததோ வீரௌ நரவரௌ ஸஹிதௌ ராமலக்ஷ்மணௌ।
ஆகம்ய நகரீம் லங்காம் ஸாயகைர்விதமிஷ்யத:॥

௪௨. ததோவீரௌநரவரௌஸஹிதௌராமலக்ஷ்மணௌ।
ஆகம்யநகரீம்லங்காம்ஸாயகைர்விதமிஷ்யத:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத: வீரௌ	பின்பு-பராக்கிரமமுடையவர்களும்	லங்காம்-நகரீம்	இலங்கையென்கிற-பட்டணத்திற்கு
நரவரௌ	புருஷசிரேஷ்டர்களுமான	ஆகம்ய	வந்து
தௌ-ராமலக்ஷ்மணௌ-அந்த-இராமலக்ஷ்மணர்கள்		ஸாயகை:	பாணங்களால்
ஸஹிதௌ	ஒன்றுசேர்ந்தவர்களாக	விதமிஷ்யத:	நசிக்கக்கடவர்கள்.

౪౩. సగణం రావణం హత్వా రాఘవో రఘునందనః। త్వామాదాయ వరారోహే స్వపురం ప్రతియాస్యతి॥

௪௩. ஸகணம் ராவணம் ஹத்வா ராகவோ ரகுநந்தந:।
த்வாமாதாய வராரோஹே ஸ்வபுரம் ப்ரதியாஸ்யதி॥

சரு. ஸகணம்ராவணம்ஹத்வாராகவோரகுநந்தந:।
த்வாமாதாயவராரோஹேஸ்வபுரம்ப்ரதியாஸ்யதி:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹே வராரோஹே	ஓ உத்தமாங்கி!	ராவணம்	இராவணனை
ரகுநந்தந:	ரகுக்களுக்கு ஸந்தோஷத்தை யுண்டு பண்ணுகிற	ஹத்வா	கொன்று
		த்வாம்-ஆதாய	தம்மை-எடுத்துக்கொண்டு
ராகவ:	ஸ்ரீராகவன்	ஸ்வபுரீம்	ஸ்வகியமான பட்டணத்திற்கு
ஸகணம்	இராக்ஷஸக் கூட்டத்தோடுகூடின	ப்ரதியாஸ்யதி	திரும்பிச் செல்லக்கடவர்.

౪౪. త్వామశ్వసిహి భద్రం తే భవత్వం కాలకాంక్షిణీ। నచిరాద్ద్రక్ష్యసే రామం ప్రజ్వలంతమివానలమ్॥

சச. ததாஶ்வஸிஹி பத்ரம் தே பவத்வம் காலகாங்க்ஷிணீ।
நசிராத்த்ரக்ஷ்யஸே ராமம் ப்ரஜ்வலந்தமிவானலம்॥

சச. ததாஶ்வஸிஹிபத்ரந்தேபவத்வம்காலகாண்க்ஷிணீ।
நசிராத்த்ரக்ஷ்யஸேராமம்ப்ரஜ்வலந்தமிவாநலம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத்-ஆஶ்வஸிஹி	ஆகையாலே-பொருத்துக்கொள்ளும்	ப்ரஜ்வலந்தம்-அனலமிவ -	எறிந்துகொண்டிருக்கும்-அக்கினி போல்
தே-பத்ரம்	தமக்கு-மங்களம் (உண்டாகும்)		
த்வம்-காலகாண்க்ஷிணீ-பவ-	தேவரீர்-நற்காலத்தைக் கோரின வராக-ஆகும்	ராமம்-நசிராத்த்ரக்ஷ்யஸே	ஸ்ரீராகவனை-சீக்கிரமாக பார்க்கப்போகிறீர்.

౪౫. నిహతే రాక్షసేంద్రేऽస్మిన్ సపుత్రామాత్యబాంధవే। త్వం సమేష్యసి రామేణ శశాంకేనేవ రోహిణీ॥

சரு. நிஹதே ராக்ஷஸேந்த்ரேऽஸ்மின் ஸபுத்ராமாத்யபாந்தவே।
த்வம் ஸமேஷ்யஸி ராமேண ஶஶாங்கேனேவ ரோஹிணீ॥

சரு. நிஹதேராக்ஷஸேந்த்ரேஸ்மிந்ஸபுத்ராமாத்யபாந்தவே।
த்வம்ஸமேஷ்யஸிராமேணஶஶாங்கேநேவரோஹிணீ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸபுத்ராமாத்யபாந்தவே -	புத்திரர்களோடும் மந்திரிகளோடும் பந்துக்களோடும் கூடின	ஶஶாங்கேந-ரோஹிணீவ-	மதியோடு-ரோகிணிதேவிபோல்
		த்வம்	தேவரீர்
அஸ்மிந்-ராக்ஷஸேந்த்ரே-இந்த-இராவணன்		ராமேண	ஸ்ரீராகவனோடு
நிஹதே (ஸதி)	கொல்லப்பட்டவனாக ஆனவளவில்	ஸமேஷ்யஸி	சேரப்போகிறீர்.

౪౬. క్షిప్రం త్వం దేవి శోకస్య పారం యాస్యసి మైథిలి। రావణం చైవ రామేణ నిహతం ద్రక్ష్యసేऽచిరాత్॥

சகூ. க்ஷிப்ரம் த்வம் தேவி ஶோகஸ்ய பாரம் யாஸ்யஸி மைதிலி।
ராவணம் சைவ ராமேண நிஹதம் த்ரக்ஷ்யஸேऽசிராத்॥

சகூ. க்ஷிப்ரம்த்வம்தேவிஶோகஸ்யபாரம்யாஸ்யஸிமைதிலி।
ராவணம்சைவராமேணநிஹதம்த்ரக்ஷ்யஸேசிராத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேதேவி-த்வம்	ஓ ஸீதே! தேவரீர்	ராமேண-நிஹதம்	ஸ்ரீராகவனால்-அடிக்கப்பட்ட
ஶோகஸ்ய-பாரம்	துக்கத்தினுடைய-கரையை	ராவணம்சைவ	இராவணனையும் கூட
க்ஷிப்ரம்-யாஸ்யஸி	சீக்கிரமாய்-அடையப்போகிறீர்	அசிராத்	சீக்கிரமாகவே
ஹே மைதிலி	வாராய் ஜனகபுத்ரி!	த்ரக்ஷ்யஸே	பார்க்கப்போகிறீர்.

(சக-மு-சகூ-ல்) தா-ம்—ஸர்வாங்கலக்ஷணமுள்ள ஹே திவ்விய ஸுந்தரி! வானரர்தான் கடல்தாண்டி வந்துவிடுகிறுர்கள். ஸ்ரீராமலக்ஷ்மணர்வந்து சேருவதெவ்விதமென்கிறீரோ, மிக பலவான்களும் அதிதேஜஸ்விகளும் நிரசிரேஷ்டருமான அவ்விருவரையும், ஏககாலத்தி லுதயகிரியையடைந்த ஸோமார்க்க மண்டலங்களைப்போல, அடியேன் முதுகின்மீதெழுந்தருளச்செய்துகொண்டு இக்கடலை யொருதாண்டாகத்தாண்டி இவ்விலங்கையில் தேவரீருக்கு ஸமீபத்தில் கொண்டு சேர்த்துவிடுகிறேன். அக்ரபுங்கவர் இங்கு வந்தவுடன் இலங்கையென்னு மிப்பெருநகரைத் தங்களது சரங்களால் படுசூர்ணமாக்கிப் பிறகு ஸ்ரீராகவன் தம்மைத்திருடிவந்த இந்த இராவணனைத் தனது சக்திவிசேஷத்தால் வென்று தேவரீரையடைந்து தம்முடைய வயோத்தியை அடையப்போகிருர். ஹே வரானனே! கொஞ்சகாலம் பொறுமையோடு வீற்றிரும். தேவரீருக்கு நற்காலம் ஸமீபித்துவிட்டது. மஹோத்ஸவமுண்டாகப்போகிறது. தேவரீரருளிய இரண்டுமாதகாலத்தைக் கணக்கிட்டுக்கொண்டு அநந்தரம் தேவரீருக்குண்டாகப்போகிற மஹாமங்களத்தைக்கோரிக்கொண்டு கிலேசமுறாது எழுந்தருளியிரும், இன்னம் ஸ்வல்பகாலத்தில் அபராதியான இராவணன்மீது சீற்றத்தால் பிரளயாக்கினிபோல் ஜ்வலித்து நிற்கிற ஸ்ரீராகவனை யிங்கே காணப்போகிறீர். அப்பகையாளியை புத்திரமித்திர மந்திரிவர்க்கத்துடன் ஸம்ஹரித்தபிறகு சீற்றம் விலகிப் பிரஸன்னமான திருமுகத்துடன் தேவரீரிடமெழுந்தருளுகிற ஸ்ரீராகவனைச் சந்திரனோடு ரோஹணிதேவிபோலடைந்து பேரானந்தமடையப் போகிறீர். ஹே நித்தியமங்களே! இத்துயர்க்கடலினது கரையைச் சீக்கிரத்தில் காணப்போகிறீர். தேவரீரை ஹிம்ஸிக்கிற இராவணனும் இராமபாணத்தாற் பொத்துண்டு படுகளத்தில் வீழ்ந்துகிடக்கப் பார்க்கப்போகிறீர். இவ்விதம் இத்துயர் நீங்கி இச்சத்துருவர்க்கந் தொலைந்து ஸ்ரீராகவன்பக்கல் சேர்ந்து பேரானந்தவாழ்க்கை புரியப்போகிறீர், இதற்கு ஸந்தேகமில்லை.

౪౭. ఏవమాశ్వాస్య వైదేహీం హనూమాన్మారుతాత్మజః। గమనాయ మతిం కృత్వా వైదేహీం పునరబ్రవీత్॥

௪௭. 𑌏𑌵𑌮𑌾𑌶𑍍𑌵𑌾𑌸𑍍𑌯 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌂 𑌹𑌨𑍂𑌮𑌾𑌨𑍍𑌮𑌾𑌰𑍁𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑌃।
𑌗𑌮𑌨𑌾𑌯 𑌮𑌤𑌿𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌂 𑌪𑍁𑌨𑌰𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥

௪௭. ஏவமாஶ்வாஸ்யவைதேஹீம்ஹநுமாந்மாருதாத்மஜ:।
கமநாயமதிம்க்ருத்வாவைதேஹீம்புநரப்ரவீத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மாருதாத்மஜ:-ஹநுமாந்	வாயுபுத்திரனான-ஹநுமான்	கமநாய-மதிம் க்ருத்வா	போவதையும்பொருட்டு- புத்தியை- [செய்து
வைதேஹீம்-ஏவம்-ஆஶ்வாஸ்ய	இந்தவிதம்-பிராட்டியை ஸமாதானித்து	வைதேஹீம்	பிராட்டியைக்(குறித்து)
		புந:-அப்ரவீத்	மறுபடி-விண்ணப்பம் செய்தனர்.

தா-ம்—இவ்விதமவ்வாயுபுத்திரன் துக்கபீடிதையான பிராட்டியை ஸ்ரீராகவன் மனதைப்பற்றிய நல்வார்த்தையால் ஸமாதானித்து, பிரயாணிச்சிதராயிருக்கையில், ஜானகிக்கு இனனம் திடமும் நம்பிக்கையுமுண்டாகுகிமித்தம் பின்வருமாறு மொழிந்தனர்.

౪౮. తమరిఘ్నం కృతాత్మానం క్షిప్రం ద్రక్ష్యసి రాఘవమ్। లక్ష్మణం చ ధనుష్పాణిం లంకాద్వారముపస్థితమ్॥

௪௮. 𑌤𑌮𑌰𑌿𑌘𑍍𑌨𑌂 𑌕𑍃𑌤𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑌿 𑌰𑌾𑌘𑌵𑌮𑍍।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌂 𑌚 𑌧𑌨𑍁𑌷𑍍𑌪𑌾𑌣𑌿𑌂 𑌲𑌙𑍍𑌕𑌾𑌦𑍍𑌵𑌾𑌰𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍॥

௪௮. தமரிக்நம்க்ருதாத்மாநம்க்ஷிப்ரம்த்ரக்ஷ்யஸிராகவம்।
லக்ஷ்மணம்சதநுஷ்பாணிம்லங்காத்வாரமுபஸ்திதம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
க்ருதாத்மாநம்	செய்யப்பட்ட பிரயத்தினமுடையவ	தநுஷ்பாணிம்-தம்-ராகவம்-தநுஸ்ஸை கையிலுடையவருமான-அந்த-ஸ்ரீராகவனையும்	
அரிக்நம்	பகையாளிகளைக்கொல்லுபவரும்[ரும்	லக்ஷ்மணம்ச	இலக்ஷ்மணனையும்
லங்காத்வாரம்-உபஸ்த்திதம்-இலங்கையினுடைய வாசலை அடைந்தவரும்		க்ஷிப்ரம்-த்ரக்ஷ்யஸி	சீக்கிரம்-பார்க்கப்போகிறீர்.

தா-ம்—ஹேபவித்ரே! இவ்விஷயத்தில் கொஞ்சமேனும் ஸம்சயம்வேண்டாம், இன்னம் ஸ்வல்பகாலத்தில் பாந்தபஞன ஸ்ரீராகவன் இராவணவதார்த்தம் ஸகல பிரயத்தனங்களையு முடித்துக்கொண்டு பெருங்கடலைத்தாண்டி யுத்தஸந்நத்தராய் இளையவரோடு இலங்காத்வாரத்தில் வந்துநிற்கக் காணப்போகிறீர்.

౪౯. నఖదంష్ట్రాయుధాన్వీరాన్సింహశార్దూలవిక్రమాన్। వానరాన్వారణేంద్రాభాన్ క్షిప్రం ద్రక్ష్యసి సంగతాన్॥

௪௯. 𑌨𑌖𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌯𑍁𑌧𑌾𑌨𑍍𑌵𑍀𑌰𑌾𑌨𑍍𑌸𑌿𑌂𑌹𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌾𑌨𑍍।
𑌵𑌾𑌨𑌰𑌾𑌨𑍍𑌵𑌾𑌰𑌣𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌭𑌾𑌨𑍍𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑌿 𑌸𑌙𑍍𑌗𑌤𑌾𑌨𑍍॥

௪௯. நகதம்ஷ்ட்ராயுதாந்வீராந்ஸிம்ஹஶார்தூலவிக்ரமாந்।
வாநராந்வாரணேந்த்ராபாந்க்ஷிப்ரம்த்ரக்ஷ்யஸிஸங்கதாந்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
நகதம்ஷ்ட்ராயுதாந்	நகங்களையும் பற்களையும் ஆயுதங்களாயுடையவர்களும்	வாரணேந்த்ராபாந்	யானைசிரேஷ்டத்தின் காந்திபோன்ற காந்தியுடையவர்களும்
வீராந்	சூரர்களும்	ஸங்கதாந்	ஒன்றுசேர்ந்தவர்களுமான
ஸிம்ஹஶார்தூலவிக்ரமாந்	சிங்கமென்ன, புலியென்ன, இவைகளுடைய பராக்கிரமம் போன்ற பராக்கிரம முடையவர்களும்	வாநராந்	வானரர்களை
		க்ஷிப்ரம்	சீக்கிரமாய்
		த்ரக்ஷ்யஸி	பார்க்கப்போகிறீர்.

౫౦. శైలాంబుదనికాశానాం లంకామలయసానుషు। నర్దతాం కపిముఖ్యానామార్యే యూథాన్యనేకశః॥

௫௦. 𑌶𑍈𑌲𑌾𑌮𑍍𑌬𑍁𑌦𑌨𑌿𑌕𑌾𑌶𑌾𑌨𑌾𑌂 𑌲𑌙𑍍𑌕𑌾𑌮𑌲𑌯𑌸𑌾𑌨𑍁𑌷𑍁।
𑌨𑌰𑍍𑌦𑌤𑌾𑌂 𑌕𑌪𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑌾𑌰𑍍𑌯𑍇 𑌯𑍂𑌥𑌾𑌨𑍍𑌯𑌨𑍇𑌕𑌶𑌃॥

௫௦. ஶைலாம்புதநிகாஶாநாம்லங்காமலயஸாநுஷு।
நர்ததாம்கபிமுக்யாநாமார்யேயூதாந்யநேகஶ:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேஆர்யே	ஓ பூஜ்யே,	நர்ததாம்	சப்திப்பவருமான
ஶைலாம்புதநிகாஶாநாம்-பருவதத்தோடும் மேகத்தோடும்	[ஸமானமானவர்களும்	கபிமுக்யாநாம்	வானரசிரேஷ்டர்களுடைய
லங்காமலயஸாநுஷு	இலங்கையினுடைய மலய பருவதத்தின் தாழ்வரையில்	அநேகஶ:-யூதாநி	அதிகமான-ஸமூகங்களை
		(த்ரக்ஷ்யஸி)	(பார்க்கப்போகிறீர்.)

தா-ம்—ஸூக்ஷ்மமானரூபமுடைய அக்கரோந்திரர்க் குதவிபுரியுனிமித்தம் எனது ஜாதியான அனேகவானரரைக்காணப்போகிறீர், அவர்களென்னைப்போல் ஸாமான்னிய குரங்குகளல்ல, ஆகிருதியில் பர்வதங்களுக்கு ஸமானர், நிறத்தில் மேகத்திற்குத்துல்லியர், மத்தகஜம்போல் மதித்த நடையுடையவர். வீரியத்தில் சிம்மவியாக்கிரங்களுக்கு ஸமானர். எல்லோரும் மகாவீராள், இரணதீராள், அஸகாயசூராள், அவர்களெல்

லோருமொன்றுசேர்ந்து ஒரேகாரியத்தை யுத்தேசித்தவராய் தாசரதியை முன்னிட்டுக்கொண்டு இம்மலய பர்வதத்தில் வந்திறங்கி கோஷிக்கப்போகிறார்கள்.

౫౦. స తు మర్మణి ఘోరేణ తాడితో మన్మథేషుణా। న శర్మ లభతే రామః సింహార్దిత ఇవ ద్విపః॥

௫௰. 𑌸 𑌤𑍁 𑌮𑌰𑍍𑌮𑌣𑌿 𑌘𑍋𑌰𑍇𑌣 𑌤𑌾𑌡𑌿𑌤𑍋 𑌮𑌨𑍍𑌮𑌥𑍇𑌷𑍁𑌣𑌾।
𑌨 𑌶𑌰𑍍𑌮 𑌲𑌭𑌤𑍇 𑌰𑌾𑌮𑌃 𑌸𑌿𑌂𑌹𑌾𑌰𑍍𑌦𑌿𑌤 𑌇𑌵 𑌦𑍍𑌵𑌿𑌪𑌃॥

௫௰. ஸதுமர்மணிகோரேணதாடிதோமந்மதேஷுணா।
நஸர்மலபதேராமஸ்ஸிம்ஹார்திதயிவத்விப:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸ:-ராமஸ்து	அந்த-ஸ்ரீராகவனேவென்றால்	ஸிம்ஹார்தித:	சிங்கத்தால் பீடிக்கப்பட்ட
கோரேண-மந்மதேஷுணா -	பயங்கரமான-மன்மதனுடைய பாணத்தினல் [வராக	த்விபஇவ	யானைபோல்
		ஸர்ம	ஸுகத்தை
மர்மணி-தாடித:	மர்மஸ்தானங்களில் - அடிக்கப்பட்ட	நலபதே	அடையாமலிருக்கிறார்.

தா-ம்—ஹே ஜனகாத்மஜே! அந்கரபுங்கவரான ஸ்ரீராகவன் தேவரீரைப்பிரிந்த துக்கமாற்றாது மன்மதபாணத்தாற்புண்பட்டு மிகவுநொந்து சிங்கத்தின்வாயிற்பட்ட கஜசிரேஷ்டம்போல் கிலேசமுற்று வருந்துகிறார்.

౫౧. మా రుదో దేవి శోకేన మా భూత్తే మనసోఽప్రియమ్। శచీవ పత్యా శక్రేణ భర్త్రా నాథవతీ హ్యసి॥

௫௧. 𑌮𑌾 𑌰𑍁𑌦𑍋 𑌦𑍇𑌵𑌿 𑌶𑍋𑌕𑍇𑌨 𑌮𑌾 𑌭𑍂𑌤𑍍𑌤𑍇 𑌮𑌨𑌸𑍋𑌽𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑍍।
𑌶𑌚𑍀𑌵 𑌪𑌤𑍍𑌯𑌾 𑌶𑌕𑍍𑌰𑍇𑌣 𑌭𑌰𑍍𑌤𑍍𑌰𑌾 𑌨𑌾𑌥𑌵𑌤𑍀 𑌹𑍍𑌯𑌸𑌿॥

௫௧. மாருதோதேவிஸோகேநமாபூத்தேமநஸோப்ரியம்।
ஸசீவபத்யாஸக்ரேணபர்த்ராநாதவதீஹ்யஸி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேதேவி	ஓஸீதே!	பத்யா-ஸக்ரேண	பதியான-இந்திரனேடு
ஸோகேந-மாருத:	துக்கத்தால்-அழவேண்டாம்	ஸசீவ	சசிதேவிபோல் (தேவரீர்)
தே-மநஸ:	தம்முடைய-மனதிற்கு	பர்த்ரா	பதியான ஸ்ரீராகவனாலே
அப்ரியம்-மாபூத்	அநிஷ்டம்-வேண்டாம்	நாதவதீ-அஸி	பர்த்தாவையுடையவளாக-ஆகிறீர்.

தா-ம—ஸ்ரீராகவனவசிய மிங்கெழுந்தருளி தேவரீரது கவலைகளைப்போக்கப் போகிறாராதலால், ஹேதேவி! இனி நீர் துக்கிக்கவேண்டாம், பயமுறவேண்டாம், ஸம்சயத்தால் மனமுழலவேண்டாம், கிருபைநிறைந்த இத்திருக்கண்களில் நீர் சொரியவேண்டாம், சிறிதுகாலம் பதியைப்பிரிந்திருந்து பிறகு பதியோடு சேர்ந்த சசிதேவிபோல், ஸ்ரீராகவனைப்பிரிந்திருக்குந் தேவரீர் அப்புருஷோத்தமனைச் சீக்கிரத்திலேயே அடைந்து பேரானந்தமுறப்போகிறீர்.

౫౨. రామాద్విశిష్టః కోఽన్యోఽస్తి కశ్చిత్సౌమిత్రిణా సమః। అగ్నిమారుతకల్పౌ తౌ భ్రాతరౌ తవ సంశ్రయౌ॥

௫௨. 𑌰𑌾𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌃 𑌕𑍋𑌽𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌸𑍌𑌮𑌿𑌤𑍍𑌰𑌿𑌣𑌾 𑌸𑌮𑌃।
𑌅𑌗𑍍𑌨𑌿𑌮𑌾𑌰𑍁𑌤𑌕𑌲𑍍𑌪𑍌 𑌤𑍌 𑌭𑍍𑌰𑌾𑌤𑌰𑍌 𑌤𑌵 𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑍌॥

௫௨. ராமாத்விஸிஷ்ட:கோந்யோஸ்திகஸ்சித்ஸௌமித்ரிணாஸம:।
அக்நிமாருதகல்பௌதௌப்ராதரௌதவஸம்ஸ்ரயௌ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராமாத்-விஸிஷ்ட:	ஸ்ரீராகவனைக் காட்டிலும்-அதிகமானவன்	அக்நிமாருதகல்பௌ	அக்கினிக்கும் வாயுவுக்கும் ஸமானர்களாயிருக்கிற
அந்ய:-க:-அஸ்தி	இதரன்-எவன்-இருக்கிறான்	தௌ-ப்ராதரௌ	அந்த பிராதாக்களான இராமலக்ஷ்மணர்கள்
ஸௌமித்ரிணா	இலக்ஷ்மணனோடு		
ஸம: கஸ்சித்	ஸமமானவன் எவன்-(இருக்கிறான்)	தவ-ஸம்ஸ்ரயௌ	தமக்கு-ஆதாரர்களாயிருக்கிறார்கள்.

தா-ம்—ஹேஜானகி! உமக்கென்ன குறைவிருக்கிறது, ஸ்ரீராகவனுக்கு மேலானபுருஷன் எவ்வுலகிலுளன், இலக்ஷ்மணனுக்கு ஸமானனான பராக்கிரமசாலி எங்காவதிருக்கின்றனனே, இப்பேர்ப்பட்ட நரவியாக்கிரர் உமக்கு இரக்ஷகர், அக்கினியும் வாயுவுமொன்று சேர்ந்தாற்போல் ஸ்ரீராமலக்ஷ்மண ரிருவரும் கோதண்டத்தைவளைக்கின் பிரளயாக்கினிபோ லுலகமுழுதையுந் தகித்துவிடாரோ? ஹேதேவி! அந்கரபுங்கவர் இவ்வரக்கனைவென்று தேவரீரை யிரக்ஷிப்பாரென்பதற்கு யாதொருஸம்சயமுமில்லை.

౫౩. నాస్మింశ్చిరం వత్స్యసి దేవి దేశే రక్షోగణైరధ్యుషితేఽతిరౌద్రే। న తే చిరాదాగమనం ప్రియస్య క్షమస్వ మత్సంగమకాలమాత్రమ్॥

௫௩. 𑌨𑌾𑌸𑍍𑌮𑌿𑌂𑌶𑍍𑌚𑌿𑌰𑌂 𑌵𑌤𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 𑌦𑍇𑌵𑌿 𑌦𑍇𑌶𑍇 𑌰𑌕𑍍𑌷𑍋𑌗𑌣𑍈𑌰𑌧𑍍𑌯𑍁𑌷𑌿𑌤𑍇𑌽𑌤𑌿𑌰𑍌𑌦𑍍𑌰𑍇।
𑌨 𑌤𑍇 𑌚𑌿𑌰𑌾𑌦𑌾𑌗𑌮𑌨𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌕𑍍𑌷𑌮𑌸𑍍𑌵 𑌮𑌤𑍍𑌸𑌙𑍍𑌗𑌮𑌕𑌾𑌲𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑍍॥

௨௪. நாஸ்மிம்ஶ்சிரம்வத்ஸ்யஸிதேவிதேஶேரக்ஷோகணைரத்யுஷிதேதிரௌத்ரே।
நதேசிராதாகமநம்ப்ரியஸ்யக்ஷமஸ்வமத்ஸங்கமகாலமாத்ரம்॥

இதி ஸ்ரீமத்ஸுந்தரகாண்டே - ஏகோநசத்வாரிம்ஶ: ஸர்க்க:.

பதம்.	உரை.
ஹேதேவி	ஓ ஸீதே!
ரக்ஷோகணை:அத்யுஷிதே-	அரக்கருடைய ஸமூகங்களால்-வஸிக்கப்பட்டதாகையால்
அதிரௌத்ரே	மிகபயங்கரமான
அஸ்மிந்-தேஶே	இந்த-தேசத்திலே
சிரம்-நவத்ஸ்யஸி	(தேவரீர்) பஹுகாலம்-இருக்கப்போகிறதில்லை

பதம்.	உரை.
தே	தம்முடைய
ப்ரியஸ்ய	பர்த்தாவினுடைய
ஆகமநம்	வரவானது
சிராத்-ந	வெகுநாள் செல்லாது
மத்ஸங்கமகாலமாத்ரம்-	என்னுடைய ஸம்பந்தகாலத்தைமாத்திரம்
க்ஷமஸ்வ	(கொஞ்சம்) பொறுத்துக்கொள்ளும்.

தா-ம்—ஹே பவித்ரே! அதிகவிளம்பரமேன், இராக்ஷஸபூயிஷ்டமான இந்த அதர்மப்பிரதேசத்தில் தேவரிருக்கின்னம் ஸ்வல்பகாலந்தான்வாஸம், ஸ்ரீராகவனிங்கெழுந்தருளுவதற்கும் இன்னம் ஸ்வல்பகாலந்தானுளது. தேவரீர் சிரகாலம் ஸங்கடப்படவேண்டுவதில்லை, அடியேன் திரும்பிச்சென்று ஸ்ரீராகவனுக்குத் தண்டன்ஸமர்ப்பித்து இவ்விருத்தாந்தங்களை விக்கியாபிக்கு மவ்வளவு கிருபைசெய்யுவேண்டும். உத்தரக்ஷணத்திலேயே ஸ்ரீராகவன் புறப்பட்டுவந்து ரக்ஷிக்கப்போகிறா ரென்றிவ்விதம் ஹநுமான் தேவியினிடத்தில் விக்கியாபித்தனர்.

ஸங்மநோரஞ்ஜநீநாமத்திராவிட வ்யாக்யாநஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்

முப்பத்தொன்பதாவதுஸர்க்கம் - முற்றிற்று.

நாற்பதாவது ஸர்க்கம்.

౧. శ్రుత్వాతు వచనంతస్య వాయుసూనోర్మహాత్మనః। ఉవాచాత్మహితం వాక్యం సీతా సురసుతోపమా॥

௧. ஶ்ருத்வாது வசநம் தஸ்ய வாயுஸூநோர்மஹாத்மந:।
உவாசாத்மஹிதம் வாக்யம் ஸீதா ஸுரஸுதோபமா॥

௧. ஶ்ருத்வாதுவசநம்தஸ்யவாயுஸூநோர்மஹாத்மந:।
உவாசாத்மஹிதம்வாக்யம்ஸீதாஸுரஸுதோபமா॥

பதம்.	உரை.
ஸுரஸுதோபமா-ஸீதா-	தேவகன்னிகைக்கு நிகரான-பிராட்டி
மஹாத்மந:	சிலாக்கியமானபுத்தியையுடையவரும்
வாயுஸூநோ:-தஸ்ய	வாயுபுத்திரருமான-அந்த (ஹநுமானுடைய)

பதம்.	உரை.
வசநம்-ஶ்ருத்வா	வார்த்தையை-கேட்டு
ஆத்மஹிதம்	தமக்கு ஹிதமான
வாக்யம்	வார்த்தையை
உவாச	சொன்னள்.

தா-ம்—தேவகன்னிகைக்கு நிகரான வடிவழகையுடைய வப்பிராட்டி, ஸ்ரீராமலக்ஷ்மணர் வானரஸமேதராய் இலங்கைக்கெழுந்தருளுவதற்குப் பெருங்கடலொன்று பிரதிபந்தகமாக நிற்கிறதே, அதைக்கடக்கயாது யுக்தி செய்திருக்கிறீரென்று தான் வினவியதற்கு, மஹாபுத்திமானும் பலவானும் பவனாத்மஜனுமான ஹநுமான் பிரதியுரைத்த வாக்கியமுழுதையும் நன்றாகச்செவியுற்று, ஸந்தேகம் தீர்ந்து, துக்கமற்றவளாய்த் தனது ஹிதத்தைக்குறித்த சில நன்மொழிகளை யுரைத்தனள்.

౨. త్వాందృష్ట్వాప్రియవక్తారం సంప్రహృష్యామివానర। అర్ధసంజాతసస్యేవ వృష్టింప్రాప్యవసుంధరా॥

௨. த்வாம் த்ருஷ்ட்வா ப்ரியவக்தாரம் ஸம்ப்ரஹ்ருஷ்யாமி வாநர।
அர்த்தஸஞ்ஜாதஸஸ்யேவ வ்ருஷ்டிம் ப்ராப்ய வஸுந்தரா॥

௨. த்வாம்த்ருஷ்ட்வாப்ரியவக்தாரம்ஸம்ப்ரஹ்ருஷ்யாமிவாநர।
அர்த்தஸஞ்ஜாதஸஸ்யேவவ்ருஷ்டிம்ப்ராப்யவஸுந்தரா॥

பதம்.	உரை.
ஹேவாநர	வானரரான ஹே ஹநுமன்!
ப்ரியவக்தாரம்	இஷ்டத்தைச்சொல்லுகிற
த்வாம்-த்ருஷ்ட்வா	உம்மை-பார்த்து
வ்ருஷ்டிம்	மழையை

பதம்.	உரை.
ப்ராப்ய	அடைந்து
அர்த்தஸஞ்ஜாதஸஸ்யா-	பாதிமுளைத்திருக்கிற பயிரையுடைய
வஸுந்தரா இவ	பூமிபோல் (யான்)
ஸம்ப்ரஹ்ருஷ்யாமி	ஸந்தோஷமடைகிறேன்.

தா-ம்—ஹே வானரோத்தம! பாதிவிர்த்தியடைந்து பல கர்ப்பமாகும் ஸமயத்தில் வருஷமற்றுக் காய்ந்து தீய்ந்துபோகிற பயிருக்கு பகவத்ஸங்கல்பத்தால் திவ்விய வருஷமுண்டாகி யதாபூர்வம் பசுமை

யும் செழுமையுமடைந்து ஸுந்தரமாக விளங்கும் பூமிபோல், ஸ்ரீராகவனோடு வாழ்ந்த அங்கிரதிசயானந் தம் விலகி காலவித்தியாஸத்தால் விரகம்நேர்ந்து இத்தேசத்தில் துக்கித்து ஜீவனையொழிக்க யான் யத்தனிக்கும் ஸமயத்தில், தேவாமிருதத்தைப் பழிக்கும்படியாக உமது அமலவாக்கால் ஸ்ரீராகவகதாமிருதத்தை ஏராளமாகப்பொழிந்து, பிறகு ஸஞ்சீவிக்கு நிகரான உமது திவ்விய தரிசனத்தையுந்தந்து, துக்கவிடாய் தீர்த்து என்னை ஆனந்தபரிதையாக்கினீர். ஹே பவனாத்மஜ! உமது நல்வரவால் கண்ட கதமான வென் பிராணனது மறுபடியும் ஸ்திரமடைந்து யானும் ஸந்தோஷங்கொண்டவளாயினன்.

௩. యథా తం పురుషవ్యాఘ్రం గాత్రైః శోకాభికర్శితైః। సంస్పృశేయం సకామాహం తథా కురు దయాం మయి॥

௩. யதா தம் புருஷவ்யாக்ரம் காத்ரை: சோகாபிகர்சிதை:।
ஸம்ஸ்ப்ருசேயம் ஸகாமாஹம் ததா குரு தயாம் மயி॥

௩. யதாதம்புருஷவ்யாக்ரம்காத்ரைஶ்ஶோகாபிகர்ஶிதைஃ।
ஸம்ஸ்ப்ருஶேயம்ஸகாமாஹம்ததாகுருதயாம்மயி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸகாமா-அஹம்	மிகவன்போடுகூடின-யான்	யதா	எப்படி
ஶோகாபிகர்ஶிதைஃ	துக்கத்தால் இளைத்திருக்கிற	ஸம்ஸ்ப்ருஶேயம்	தொடுவேனோ
காத்ரைஃ	அவயவங்களால்	ததா-மயி-தயாம்-குரு	அப்படி - என்னிடத்தில்- தயையை செய்யும்.
புருஷவ்யாக்ரம்-தம்	புருஷசிரேஷ்டனை-அந்த (ராமனை)		

தா-ம்— ஹே ஹநுமந்! நெடுநாள் நாயகனைப் பிரிந்திருக்கும் யான் மன்மதபாணத்தால் மிகவும் பிணியுண்டு, ஸர்வாங்கசோபையிழந்து மிகவும் கிருசித்திருக்கின்றனன். கார்முகில்வண்ணனும், புருஷசிரேஷ்டனுமான அந்த ஸ்ரீராகவனது திருமேனியை ஆலிங்கனஞ்செய்து விரகதாபசமனஞ் செய்துகொள்ளப் பேராவலுற்றிருக்கின்றனன். இவ்வபீஷ்டப்பிராப்தி யெனக்குக் கிடைக்கும்படி, ஹே மஹாபாக! என்னிடத்திற் கிருபைசெய்யும்.

௪. అభిజ్ఞానం చ రామస్య దత్తం హరిగణోత్తమ। క్షిప్తామిషీకాం కాకస్య కోపాదేకాక్షిశాతనీమ్॥

௪. அபிஜ்ஞாநம் ச ராமஸ்ய தத்யா ஹரிகணோத்தம।
க்ஷிப்தாமிஷீகாம் காகஸ்ய கோபாதேகாக்ஷிஶாதநீம்॥

௪. அபிஜ்ஞாநம்சராமஸ்யதத்யாஹரிகணோத்தம।
க்ஷிப்தாமிஷீகாம்காகஸ்யகோபாதேகாக்ஷிஶாதநீம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹே ஹரிகணோத்தம	ஹே வானரமுக்ய!	இஷீகாம்	திருணத்தை
கோபாத்-க்ஷிப்தாம்	சினத்தால்-விடப்பட்ட	அபிஜ்ஞாநம்ச	அடையாளத்தையும்
காகஸ்ய-ஏகாக்ஷிஶாதநீம்-	காகத்தினுடைய-ஒருகண்ணைப்போக்கடிக்கத்தக்கின	ராமஸ்ய	ஸ்ரீராகவனுக்கு
		தத்யாஃ	கொடும்.

௫. మనఃశిలాయాస్తిలకో గండపార్శ్వే నివేశితః। త్వయా ప్రణష్టే తిలకే తం కిల స్మర్తుమర్హసి॥

௫. மநஶ்ஶிலாயாஸ்திலகோ கண்டபார்ஶ்வே நிவேஶித:।
த்வயா ப்ரணஷ்டே திலகே தம் கில ஸ்மர்துமர்ஹஸி॥

௫. மநஶ்ஶிலாயாஸ்திலகோகண்டபார்ஶ்வேநிவேஶிதஃ।
த்வயாப்ரணஷ்டேதிலகேதம்கிலஸ்மர்த்துமர்ஹஸி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
திலகே-ப்ரணஷ்டே(ஸதி)-	திலகமானது-அழிந்தவளவில்	கண்டபார்ஶ்வே	கன்னத்தின் ஸமீபத்தில்
மநஶ்ஶிலாயாஃ	இரத்தவர்ணமான தாதுவிசேஷத்தினுடைய	த்வயா-நிவேஶிதஃ	உம்மால-வைக்கப்பட்டது
		தம்-ஸ்மர்தும்	அதை-ஸ்மரிக்குதைக்கு [ல்லும்.)
திலகஃ	திலகமானது	அர்ஹஸிகில	தகுந்தவராகிறீரன்றோ (என்று சொ

(௪-மு-௫-ல்) தா-ம்—ஹே வானராதிபதே! முன் காகாஸுரவிருத்தாந்தத்தில் சினங்கொண்ட தன்னால் விடுக்கப்பட்டு அக்காகத்தின் வலக்கண்ணை ஹரித்த திருணத்தை யடையாளமாகச்சொல்லும். இன்னமும், யாங்களிருவருமோர் பர்வதத்தில் விஹரித்திருக்குங்கால், எனது திலகமழிய வப்பொழுது, தான் மனச்சிலையென்கிற இரத்தவர்ணமுள்ள கைரிகதாதுவினால் என்னுடைய கன்னத்தில் திலகமிட்ட விநோதவிர்த்தாந்தத்தை யோரடையாளமாகச் சொல்லும்.

௬. స వీర్యవాన్ కథం సీతాం హృతాం సమనుమన్యసే। వసంతీం రక్షసాం మధ్యే మహేంద్రవరుణోపమః॥

௬. ஸ வீர்யவாந் கதம் ஸீதாம் ஹ்ருதாம் ஸமநுமந்யஸே।
வஸந்தீம் ரக்ஷஸாம் மத்யே மஹேந்த்ரவருணோபம:॥

௬. ஸவீர்யவாந்கதம்ஸீதாம்ஹ்ருதாம்ஸமநுமந்யஸே।
வஸந்தீம்ரக்ஷஸாம்மத்யேமஹேந்த்ரவருணோபம:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மஹேந்த்ரவருணோபம:-	இந்திரனுக்கும் வருணனுக்கும் ஸமானமானவரும்	ஹ்ருதாம்	அபஹரிக்கப்பட்டவளும்
வீர்யவாந்-ஸ:	பராக்கிரமசாலியுமான-அந்த (ஸ்ரீராகவன்)	ரக்ஷஸாம்-மத்யே	அரக்கருடைய-நடுவில்
		வஸந்தீம்-ஸீதாம்	வஸித்துக்கொண்டிருக்கிற - ஸீதையை
		கதம்-ஸமநுமந்யஸே	என்-உபேக்ஷிக்கிறீர்.

தா-ம்—ஹே பவனாத்மஜ! புஜபலபராக்கிரமாதிகளில் வருணேந்திரனுக்கு நிகரான ஸ்ரீராகவன் இராவணனாலபகரிக்கப்பட்டு இலங்கையில் இராக்ஷஸர்மத்தியில் ஸங்கடப்படுகிறவென்னை இக்காலவரையிலே னிரக்ஷிக்காமலிருக்கிறானென்று கேளும்.

౭. ఏష చూడామణిర్దివ్యో మయా సుపరిరక్షితః। ఏతం దృష్ట్వా ప్రహృష్యామి వ్యసనే త్వామివానఘ॥

எ. 𑌏𑌷 𑌚𑍂𑌡𑌾𑌮𑌣𑌿𑌰𑍍𑌦𑌿𑌵𑍍𑌯𑍋 𑌮𑌯𑌾 𑌸𑍁𑌪𑌰𑌿𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌃।
𑌏𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌹𑍃𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌵𑍍𑌯𑌸𑌨𑍇 𑌤𑍍𑌵𑌾𑌮𑌿𑌵𑌾𑌨𑌘॥

எ. ஏஷசூடாமணிர்திவ்யோமயாஸுபரிரக்ஷித:।
ஏதம்த்ருஷ்ட்வாப்ரஹ்ருஷ்யாமிவ்யஸநேத்வாமிவாநக॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹே அநக	பாபரஹிதனான ஹே ராம,	வ்யஸநே-த்வாமிவ	துக்கத்தில்-உம்மைப்போலே
திவ்ய:-ஏஷ:-சூடாமணி:	-சிரேஷ்டமான-இந்த-சிரோரத்தினம்	ஏதம்-த்ருஷ்ட்வா	இதை-பார்த்து
மயா-ஸுபரிரக்ஷித:	என்னால்-நன்று யிரக்ஷிக்கப்பட்டது	ப்ருஹ்ருஷ்யாமி	நன்று யாநந்தமடைகிறேன்.

தா-ம்—“பரமபவித்திரனான ஹே ராகவ! உத்தமோத்தமலக்ஷணமுள்ள இச்சிரோரத்தினம் தேவரீர் திருவுள்ளமுகந்துகொண்டாடியதாகையால், அதை வெகுஜாக்கிரதையாக இரக்ஷித்து விரககாலத்தில் தேவரீரது முகாரவிந்தத்தைப் பார்ப்பதுபோலதைப்பார்த்துக் கொஞ்சம் துக்கசமனமடைந்து வருகிறேன்,” எனறு, ஹே ஹநுமன்! என்னுடைய நாயகனுக்குச்சொல்லும்.

౮. ఏష నిర్యాతితశ్శ్రీమాన్ మయా తే వారిసంభవః। అతః పరం న శక్ష్యామి జీవితుం శోకలాలసా॥

அ. 𑌏𑌷 𑌨𑌿𑌰𑍍𑌯𑌾𑌤𑌿𑌤𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌮𑌯𑌾 𑌤𑍇 𑌵𑌾𑌰𑌿𑌸𑌂𑌭𑌵𑌃।
𑌅𑌤𑌃 𑌪𑌰𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌜𑍀𑌵𑌿𑌤𑍁𑌂 𑌶𑍋𑌕𑌲𑌾𑌲𑌸𑌾॥

அ. ஏஷநிர்யாதிதஶ்ரீமாந்மயாதேவாரிஸம்பவ:।
அத:பரம்நஶக்ஷ்யாமிஜீவிதும்ஶோகலாலஸா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸ்ரீமாந்-வாரிஸம்பவ:	ப்ரசஸ்தமான காந்தியுடையதும்-ஜலத்திலுண்டானதுமான	அத:-தே-ஶோகலாலஸா-ஆகையால்-உம்முடைய-துக்கத்தால் வருந்துகிற (யான்)	
ஏஷ:	இந்த (சூடாமணி)	பரம்	ஓர்மாதத்திற்கு (மேலே)
மயா-நிர்யாதித:	என்னால் அனுப்பப்பட்டது	ஜீவிதும்-நஶக்ஷ்யாமி	பிழப்பை-ஸகியேன்.

தா-ம்—“இரத்தினாகரமென்கிற மஹார்ணவத்தில் ஜனித்ததும், அதிஸ்வச்சமான காந்தியுள்ளதுமான இச்சிரோபூஷணத்தைத் தேவரீரது ஸந்நிதிக்கனுப்பியிருக்கிறேன். தேவரீருகந்த இப்பூஷணவிசேஷத்தை அடிக்கடி பார்த்து அதனால் இதுவரையில் இவ்விரகாக்கினிதாபத்தை ஸகித்துவந்தேன். இனி யித்துக்கபாரத்தைத்தாங்க யான் சக்தையல்ல. யான் வரையிட்ட அக்காலத்திற்குள் தேவரீர் திருமுகம் காண்பிக்காவிடில் அதற்கப்புறம் க்ஷணகாலமாயினும் ஜீவியேன்,” என்று ஹநுமன்! ஸ்ரீராகவனுக்கு யான் சொன்னதாகச் சொல்லும்.

౯. అసహ్యాని చ దుఃఖాని వాచశ్చ హృదయచ్ఛిదః। రాక్షసీనాం సుఘోరాణాం త్వత్కృతే మర్షయామ్యహమ్॥

கூ. 𑌅𑌸𑌹𑍍𑌯𑌾𑌨𑌿 𑌚 𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑌿 𑌵𑌾𑌚𑌶𑍍𑌚 𑌹𑍃𑌦𑌯𑌚𑍍𑌛𑌿𑌦𑌃।
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌨𑌾𑌂 𑌸𑍁𑌘𑍋𑌰𑌾𑌣𑌾𑌂 𑌤𑍍𑌵𑌤𑍍𑌕𑍃𑌤𑍇 𑌮𑌰𑍍𑌷𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍॥

கூ. அஸஹ்யாநிசதுக்காநிவாசஸ்சஹ்ருயச்சித:।
ராக்ஷஸீநாம்ஸுகோராணாம்த்வத்க்ருதேமர்ஷயாம்யஹம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அஸஹ்யாநிச-துக்காநி	ஸகிக்கமுடியாத-துக்கங்களையும்	ஹ்ருதயச்சித:	மார்பைப் பிளக்கும்படியான
ஸுகோராணாம்-ராக்ஷஸீநாம்-	வெகு பயங்கரர்களான - இராக்ஷஸிகளுடைய	வாசஸ்ச-அஹம்	வார்த்தைகளையும்-யான்
		த்வத்க்ருதே-மர்ஷயாமி-	உன்பொருட்டு-ஸகிக்கிறேன்.

தா-ம்—“ஹே ராம! மஹாப்பிரளயத்திற்கு நிகரான துக்கபரம்பரையை அனுபவித்தேன். மஹாதிரமுள்ள பெருமனதையும் பிளக்கும்படியான இக்கோரஸ்திரீகளின் குரூரமொழிகளையெல்லாம் ஸகித்தே

ன். தேவரீரை யடையலாம், யதாபூர்வம் பாக்கியவதியாகலாம், என்கிற வோர் கோரிக்கையா லிவ்வளவு துஸ்ஸகமான துக்கங்களை ஸகித்துவருகிறேன்" என்று சொல்லும்.

౧౦. ధారయిష్యామి మాసం తు జీవితం శత్రుసూదన। మాసాదూర్ధ్వం న జీవిష్యే త్వయా హీనా నృపాత్మజ॥

௧௦. 𑌧𑌾𑌰𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌾𑌸𑌂 𑌤𑍁 𑌜𑍀𑌵𑌿𑌤𑌂 𑌶𑌤𑍍𑌰𑍁𑌸𑍂𑌦𑌨।
𑌮𑌾𑌸𑌾𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌨 𑌜𑍀𑌵𑌿𑌷𑍍𑌯𑍇 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌹𑍀𑌨𑌾 𑌨𑍃𑌪𑌾𑌤𑍍𑌮𑌜॥

௧௦. தாரயிஷ்யாமி மாஸந்துஜீவிதம்ஶத்ருஸூதந।
மாஸாதூர்த்வம்நஜீவிஷ்யேத்வயாஹீநாந்ருபாத்மஜ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேஶத்ருஸூதந	ஓ சத்துருநாசக	த்வயா-ஹீநா	தம்மால்-சூன்னியையாக
மாஸந்து	மாஸமாத்திரமோவென்றால்	மாஸாத்	மாஸந்தைக்காட்டிலும்
ஜீவிதம்-தாரயிஷ்யாமி	பிராணனை-தரிக்கக்கடவேன்	ஊர்த்வம்	மேலே
ஹேந்ருபாத்மஜ	ஓ தசரதபுத்திர! (யான்)	நஜீவிஷ்யே	பிழைக்கமாட்டேன்.

தா-ம்—"ஹே ரிபுநாசக, ஹே தாசரதே! இன்ன மொருமாஸகாலந்தான் தேவரீரின்றி யான் ஜீவிப்பேன். அதற்கப்புறம் க்ஷணகாலமாவது தேவரீரையடையாது ஜீவதாரணஞ்செய்யேன். இந்த ஜன்மம் வீணேயொழியாது என்னை யிரக்ஷிக்கக் கிருபைபுரியவேணடும்" என்று சொல்லும்.

౧౧. ఘోరో రాక్షసరాజోయం దృష్టిశ్చ న సుఖా మయి। త్వాం చ శ్రుత్వా విషజ్జంతం న జీవేయమహం క్షణమ్॥

௧௧. 𑌘𑍋𑌰𑍋 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌰𑌾𑌜𑍋𑌽𑌯𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌶𑍍𑌚 𑌨 𑌸𑍁𑌖𑌾 𑌮𑌯𑌿।
𑌤𑍍𑌵𑌾𑌂 𑌚 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌷𑌜𑍍𑌜𑌨𑍍𑌤𑌂 𑌨 𑌜𑍀𑌵𑍇𑌯𑌮𑌹𑌂 𑌕𑍍𑌷𑌣𑌮𑍍॥

௧௧. கோரோராக்ஷஸராஜோயம்த்ருஷ்டிஶ்சநஸுகாமயி।
த்வாம்சஶ்ருத்வாவிஷஜ்ஜந்தம்நஜீவேயமஹம்க்ஷணம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அயம்-ராக்ஷஸராஜ:	இந்த-இராக்ஷதப்பிரபு	அஹம்-விஷஜ்ஜந்தம்	நான்-ஆலஸ்ஸியம் செய்கிறவராக
கோர:	குரூரன்	த்வாம்	உம்மை
மயி-த்ருஷ்டிஶ்ச	என்னிடத்தில் - (இவனுடைய) பார்வையுங்கூட	ஶ்ருத்வா	கேட்டு
		க்ஷணம்	ஓர் நிமிஷமுங்கூட
ஸுகா-ந	ஸுகமாக-ஆகாது	நஜீவேயம்	ஜீவிக்கமாட்டேன்.

தா-ம்—"ஹே பிராணபந்தோ! இவ்விராவணன் மஹாக்குரூரன், அதிபயங்கரமான ரூபமுள்ளவன், அவனது தரிசனத்தையும் யான் ஸகியேன். ஆகையால் தேவரீர் கொஞ்சம் தாமஸஞ்செய்வதாகக்கேள்வியுற்றேனாகில் யான் ஜீவிக்கமாட்டேன்" என்று சொல்லும்.

౧౨. వైదేహ్యా వచనం శ్రుత్వా కరుణం సాశ్రుభాషితమ్। అథాబ్రవీన్మహాతేజా హనూమాన్మారుతాత్మజః॥

௧௨. 𑌵𑍈𑌦𑍇𑌹𑍍𑌯𑌾 𑌵𑌚𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍁𑌣𑌂 𑌸𑌾𑌶𑍍𑌰𑍁𑌭𑌾𑌷𑌿𑌤𑌮𑍍।
𑌅𑌥𑌾𑌬𑍍𑌰𑌵𑍀𑌨𑍍𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌹𑌨𑍂𑌮𑌾𑌨𑍍𑌮𑌾𑌰𑍁𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑌃॥

௧௨. வைதேஹ்யாவசநம்ஶ்ருத்வாகருணம்ஸாஶ்ருபாஷிதம்।
அதாப்ரவீந்மஹாதேஜாஹநூமாந்மாருதாத்மஜ:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அத-மஹாதேஜா:	பின்பு-வெகு தேஜஸ்ஸுடையவரும்	பாஷிதம்	சொன்ன
மாருதாத்மஜ:-ஹநூமாந்	வாயுபுத்திரருமான-ஹநுமான்	வைதேஹ்யா:-வசநம்	பிராட்டியினுடைய-வார்த்தையை
கருணம்-ஸாஶ்ரு	தீனமாயும் கண்ணீரோடு கூடியிருக்கும்படி	ஶ்ருத்வா	கேட்டு
		அப்ரவீத்	பதில் வார்த்தை சொன்னார்.

தா-ம்—இவ்வித மப்பிராட்டி தனது தைன்னியத்தையும் துக்கத்தையும் வெளியிட்டுக் கண்ணீர்பெருகப் பிரலாபித்துச்சொல்லிய வசனங்களைக்கேட்டு மிக தேஜோவானுன அவ்வாதாத்மஜன் பின்வருமாறு பிரதி விண்ணப்பஞ்செய்தனர்.

౧౩. త్వచ్ఛోకవిముఖో రామో దేవి సత్యేన తే శపే। రామే దుఃఖాభిభూతే తు లక్ష్మణః పరితప్యతే॥

౧౪. కథంచిద్భవతీ దృష్టా న కాలః పరిశోచితుమ్। ఇమం ముహూర్తం దుఃఖానామంతం ద్రక్ష్యసి భామిని॥

౧౫. తావుభౌ పురుషవ్యాఘ్రౌ రాజపుత్రావరిందమౌ। త్వద్దర్శనకృతోత్సాహౌ లంకాం భస్మీకరిష్యతః॥

౧౬. హత్వా తు సమరే క్రూరం రావణం సహబాంధవమ్। రాఘవస్త్వాం విశాలాక్షి స్వాం పురీం ప్రాపయిష్యతి॥

௧௩. 𑌤𑍍𑌵𑌚𑍍𑌛𑍋𑌕𑌵𑌿𑌮𑍁𑌖𑍋 𑌰𑌾𑌮𑍋 𑌦𑍇𑌵𑌿 𑌸𑌤𑍍𑌯𑍇𑌨 𑌤𑍇 𑌶𑌪𑍇।
𑌰𑌾𑌮𑍇 𑌦𑍁𑌃𑌖𑌾𑌭𑌿𑌭𑍂𑌤𑍇 𑌤𑍁 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌃 𑌪𑌰𑌿𑌤𑌪𑍍𑌯𑌤𑍇।

கச. [illegible]
[illegible]

கரு. [illegible]
[illegible]

கசு. [illegible]
[illegible]

கங. த்வச்சோகவிமுகோராமோதேவிஸத்யேநதேஶபே।
ராமேதுக்காபிபூதேதுலக்ஷ்மணஃபரிதப்யதே।

கச. நகஶ்சித்பவதீத்ருஷ்டாநகாலஃபரிஶோசிதும்।
இமம்முஹூர்த்தம்துக்காநாமந்தம்த்ரக்ஷ்யஸிபாமிநி॥

கரு. தாவுபௌபுருஷவ்யாக்ரௌராஜபுத்ராவரிந்தமௌ।
த்வத்தர்ஶநக்ருதோத்ஸாஹௌலங்காம்பஸ்மீகரிஷ்யதஃ॥

கசு. ஹத்வாதுஸமரேக்ரூரம்ராவணம்ஸஹபாந்தவம்।
ராகவௌத்வாம்விஶாலாக்ஷிஸ்வாம்புரீம்ப்ராபயிஷ்யதஃ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹே தேவி-ராமஃ	ஓ ஸீதே-ஸ்ரீராகவன்	த்ரக்ஷ்யஸி	பார்க்கப்போகிறீர்
த்வச்சோகவிமுகஃ	தம்முடைய துக்கத்தினால் பராங்முகராக (இருக்கிறார்)	அரிந்தமௌ	பகையாளிகளை முடிக்கத்தக்கவர்களும்
ஸத்யேந	பிரமாணத்தால் (வாஸ்தவத்தால்)	புருஷவ்யாக்ரௌ	புருஷசிரேஷ்டர்களும்
தே-ஶபே	உமக்கு-ஆணையிட்டுக்கொள்ளுகிறேன்	ராஜபுத்ரௌ	இராஜகுமாரர்களும்
ராமே	ஸ்ரீராகவன்	உபௌ-தௌ	இரண்டுபேர்களுமான-அந்த (ராமலக்ஷ்மணர்கள்)
துக்காபிபூதே(ஸதி)	துக்கபீடிதராயிருக்கையில்	த்வத்தர்ஶநக்ருதோத்ஸாஹௌ	தம்மைப்பார்ப்பதில் செய்யப்பட்ட உத்ஸாஹமுடையவர்களாக
லக்ஷ்மணஶ்ச	இளையவரும்	லங்காம்-பஸ்மீகரிஷ்யதஃ	இலங்கையை-பஸ்மமாகச்செய்யப்போகிறார்கள்
பரிதப்யதே	பரிதபிக்கிறார்,	ஹே விஶாலாக்ஷி	அகன்ற கண்களையுடைய ஹே ஸீதே!
ஹே பாமிநி	வாராய் ஸீதே!	ராகவௌ-த்வாம்	இராமலக்ஷ்மணர்-தம்மை
பவதீ	(பூஜ்யரான) தேவரீர்	க்ரூரம்	குரூரனும்
கதம்சித்-த்ருஷ்டா	அதிப்பிரயாஸத்தால்-பார்க்கப்பட்டவராக ஆனீர் (இனிமேல்)	ஸஹபாந்தவம்-ராவணம்	பந்துக்களோடும் கூடின இராவணனை
பரிஶோசிதும்	துக்கிப்பதற்கு	ஸமரே-ஹத்வா	யுத்தத்தில்-கொன்று
நகாலஃ	காலமல்ல	த்வாம்-ஸ்வாம்-புரீம்	தம்மை-சொந்தமான-பட்டணத்தை (குறித்து)
இமம்-முஹூர்த்தம்	இந்த-முஹூர்த்தத்தில் (ஸப்தமியர்த்தத்தில் த்விதீயை)		
துக்காநாம்-அந்தம்	வியஸனங்களுடைய-முடிவை	ப்ராபயிஷ்யதஃ	அடைவிக்கப்போகிறார்.

(கங-மு-கசு-ல்) தா-ம்.—ஹேதேவி! ஸ்ரீராகவன் என்விஷயத்தில் விமுகராயிருக்கின்றனர், இத்துக்கத்தினின்று விலக ஹேதுவைக் காணேனென்றிவ்விதம் ஸம்சயித்துத் துயருறவேண்டாம். ஸ்ரீராகவனுடைய துக்கத்தைப்பற்றியும், அவர் தேவரீர்விஷயத்திற்செய்திருக்கிற பிரயத்தனத்தைப்பற்றியும் அடியேன்முன்னமே சபதபூர்வகமாக விண்ணப்பஞ்செய்தனன், தேவரீருக்கு ஸம்சயஸம்பந்தம் பற்றறவொழிந்து திடநிச்சயம் வேர்கொள்ளுகிமித்தம் இன்னமோர்தடவை சபதஞ்செய்து விக்கியாபிக்கின்றனன். ஸ்ரீராகவன் தேவரீர் நிமித்தமாக மஹாசோகத்தை யடைந்திருக்கின்றனர். அவர்சோகிக்கையில் அவரதுபுஷ்பசரீரமும் காம்பீரியஹிருதயமும் துவளுவதுகண்டு ஸகியாது இலக்ஷ்மணனும் துக்கப்பிரவாகத்தி லழுந்துகின்றனர். இந்நரசிரேஷ்டர் இவ்விதம் துககந்திற் காளாவானேனெனில் தேவரீரதிருப்பிடந் தெரியாததோஷந்தான். தேவரீரிவ்விடத்திலெழுந்தருளியிருப்பதை யறிந்தனராயின் ஸ்வல்பகாலமும் தாமஸியார். அடியேன் ஸ்ரீராகவஸந்நிதிக்கு இந்தக்ஷணத்திற்சென்று விக்கியாபித்தவளவில் இம்முஹூர்த்தத்திற்குள்ளேயே இங்கெழுந்தருளி தேவரீரது குமுதவதனத்திற்பெருகும் துக்கநீரைத் துடைக்கப்போகிறார். ஹே திவ்யஸுந்தரி! ஸம்சயமென்பது கொஞ்சமும் வேண்டாம், துக்கத்தினுடைய லேசமும்வேண்டாம். பராக்கிரமத்தி லப்பிரதித்துவந்துவரான அவ்விராஜதனயரிருவரும் தேவரீரைத்தரிசிப்பதில் உத்ஸாகமுடையவராயிங்கெழுந்தருளப்போகிறார்கள். குதூகலநிறைந்த இம்மாநகரை அக்கினிக்கிரையாகத்தந்து பஸ்மமாக்கப்போகிறார்கள். அதர்மிஷ்டனை இவ்வரக்கனைப் புத்திரமித்திரபந்துகுலத்துடன் யுத்தத்தில் கோரவதமடைவிக்கப்போகிறார்கள். அரக்கருடைய விழவையும் இராவணநாசத்தையும் தேவரீர் இராக்ஷஸிகளுடைய ரோதனத்தாலறிந்து அகமகிழ்ந்து அம்மகிழ்ச்சிதோற்றத் திருமுகமலர்ந்து திருக்கண்கள் விசாலித்து, விஜயராகவனுடைய விக்கிரமாதிசயத்தைநினைத்து மதியைப்பழிக்கு முருவல்கிலாவோ டெழுந்தருளியிருக்கையில், வித்யுந்மாலாலங்கிருதமான மேகம்போல் இலக்ஷ்மணஸகிதரான ஸ்ரீராகவன், யுத்தரங்கக் கிரீடாசின்னங்களுடன் தேவரீருக்குத் தரிசனந்தந்து, அக்கோலத்தில் விஜயலக்ஷ்மியை யடைவதுபோல் தேவரீரையடைந்து, பொன்னகரமெய்தும் புரந்தரனைப்போ

த்பொலிந்து, தன்னகரமான அயோத்தியையடையப்போகிறார். ஹேவானரனே! இதுநிச்சயம், இது ஸத்தியம், இதுதான்நடக்கப்போகிறது, ஒருமுறை இருமுறை மும்முறையுஞ்சொன்னேன். ஸ்வப்னமெனப் பராமரிக்கவேண்டாம். முகோல்லாஸார்த்தம் சொன்னேனெனத் தள்ளவேண்டாம். என்மீதும் எனக்கருமையாயுமுள்ள ஸமஸ்தவஸ்துக்களின்மீது மாணையிட்டுச் சொன்னேன். மாரனுக்குநிகரான அவ்விராஜகுமாரரைக் காணப்போகிறீர், இராவணன்முடிசிதறி விழப்பார்க்கப்போகிறீர், ஸ்ரீராகவன் திருவங்கத்தை மேவப்போகிறீர், அயோத்தியில் பெருவாழ்வுபுரியப்போகிறீர், வியஸனிக்கவேண்டாமென்றனர்.

౧౭. యత్తు రామో విజానీయా దభిజ్ఞానమనిందితే। ప్రీతిసంజననం తస్య భూయస్త్వం దాతుమర్హసి॥

கஎ. யத்துராமோவிஜாநீயாதபிஜ்ஞாநமநிந்திதே।
ப்ரீதிஸஞ்ஜநநம்தஸ்யபூயஸ்த்வம்தாதுமர்ஹஸி॥

கஎ. யத்துராமோவிஜாநீயாதபிஜ்ஞாநமநிந்திதே।
ப்ரீதிஸஞ்ஜநநம்தஸ்யபூயஸ்த்வம்தாதுமர்ஹஸி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹே அநிந்திதே	வாராய் நிந்திக்கப்படாதவளே!	ப்ரீதிஸஞ்ஜநநம்	(அப்படிப்பட்ட) ஸந்தோஷத்தை யுண்டுபண்ணும்படியான (அடையாளத்தை)
ராம:	ஸ்ரீராகவன்		
யத்	எந்த	தஸ்ய	அவருக்கு
அபிஜ்ஞாநம்	அடையாளத்தை	த்வம்	தேவரீர்
விஜாநீயாத்	நன்றாயறிவரோ	பூய:-தாதும்-அர்ஹஸி	மறுபடி-கொடுப்பதற்கு-அர்ஹராகிறீர்.

தா-ம்.—ஹேபரமபவித்திரே! எதைத்தரிசித்தமாத்திரம் தாமஸமும் யோசனையுமின்றி தேவரீரை ஸ்ரீராகவனறிந்துகொள்ளுவரோ அப்படிப்பட்ட உத்தமோத்தமமான அபிக்கியானமேதாவதுளதாயின் தந்தருளுமென்று ஹநுமான்கேட்டனர்.

౧౮. సాబ్రవీద్దత్తమేవేతి మయాభిజ్ఞానముత్తమమ్। ఏతదేవ హి రామస్య దృష్ట్వా మత్కేశభూషణమ్॥
శ్రద్ధేయం హనుమన్వాక్యం తవ వీర భవిష్యతి।

கஅ. ஸாப்ரவீத்தத்தமேவேதிமயாபிஜ்ஞாநமுத்தமம்।
ஏததேவஹிராமஸ்யத்ருஷ்ட்வாமத்கேஶபூஷணம்॥
ஶ்ரத்தேயம்ஹநுமந்வாக்யம்தவவீரபவிஷ்யதி।

கஅ. ஸாப்ரவீத்தத்தமேவேதிமயாபிஜ்ஞாநமுத்தமம்।
ஏததேவஹிராமஸ்யத்ருஷ்ட்வாமத்கேஶபூஷணம்॥
ஶ்ரத்தேயம்ஹநுமந்வாக்யம்தவவீரபவிஷ்யதி।

பதம்.	உரை	பதம்.	உரை.
ஹேஹநுமந்	ஓ ஹநுமானே!	வீர	ஓ வீர!
மயா-உத்தமம்-அபிஜ்ஞாநம்-என்னால்-சிறந்ததான-அடையாளம்		வாக்யம்	(இந்த) வாக்கியம்
தத்தமேவ	கொடுக்கப்பட்டதே	ஶ்ரத்தேயம்	உமக்கு நம்பத்தக்கதாக
ராமஸ்ய	ஸ்ரீராகவன் (பிரதமைக்கு ஷஷ்டி)	பவிஷ்யதி	ஆகக்கடவது (என்கிற வசனத்தை)
ஏதத்-மத்கேஶபூஷணமேவ- இந்த-சிரோபூஷணத்தையே		ஸா-அப்ரவீத்	அந்த-(பிராட்டி) சொன்னாள்.
த்ருஷ்ட்வா	பார்த்து (நம்புவர்)		

